உ

கணபதி துணை

# கல்வளை அந்தாதியும்

# கல்வளைப் பிள்ளையார் கோவில் வரலாறும்



தற்போதைய மூலமூர்த்தி

**கல்வளைப் பிள்ளையார் கோவில்**

**தர்மகர்த்தா சபை வெளியீடு**

தாரண வருடம் ஐப்பசி மாதம்

2004

அன்புடையீர்,

இப்புத்தகத்தை மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் தேடி எடுத்துப் பதிப்பித்துள்ளோம். சண்டிலிப்பாயில் பிறந்து வளர்ந்த ஒவ்வொருவர் வீட்டிலும் மேலும் தமிழ் அன்பர்கள் வீடுகளிலும் இப்புத்தகம் இருக்க வேண்டிய அதியுயர்ந்த பொக்கிசமாகும். முக்கியமாக உங்கள் சந்ததியினர் ஒரு கல்வளை அந்தாதிப் புத்தகத்தை தங்கள் வீடுகளில் வைத்திருந்தால் அவர்களுக்கு மிக்க பெருமையும் கல்வளையான் அருளும் கிட்டும்.

ஆகவே ஒவ்வொருவரும் தங்கள் சந்ததி மகிழ்ச்சிக்காகவும், அவர்கள் உயர்விற்கும் கௌரவத்திற்கு மாக தங்களால் இயன்ற அதிகூடிய அன்பளிப்பைத் தந்து ஒன்றோ, இரண்டோ, புத்தகங்களைப் பெற்று மகிழ்ச்சி யடையுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**கல்வளைப்பிள்ளையார் கோவில்**
**தர்மகர்த்தா சபை.**

நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்

இயற்றியது

பரமானந் தக்கன் மழைமாரி காத்திடும் பைங்கனகாம்
பரமானந் தக்கந் தரவிந்தி ராணி பதியயனும்
பரமானந் தக்கல் வளையத்த னுத்தம பத்தர்சித்தன்
பரமானந் தப்பிள்ளை யார்துணைச் சேவடிப் பங்கயமே



பல நூற்றாண்டு காலங்களுக்கு முன் மூலஸ்தானத்தில்
எழுந்தருளியிருந்த தான்தோன்றிப் பிள்ளையார். இத்தான் தோன்றிப்
பிள்ளையார் மீது இற்றைக்கு முந்நூறு ஆண்டுகளுக்கு முன்
வரகவி சின்னத்தம்பிப் புலவர் அவர்களால் கல்வளை அந்தாதிப்
பாடல்கள் பாடப்பெற்றது

உ

# கல்வளையந்தாதி

நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்

இயற்றியது

இஃது

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப்போதகாசிரியரும்
"இந்து சாதன" பத்திராசிரியருமாகிய

## ம.வே. திருஞானசம்பந்தப்பிள்ளை

எழுதிய

பதவுரை, கருத்துரை, விசேடவுரை,
நூலாசிரியர் வரலாறு

என்னுமிவைகளுடன்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால்

தமது

சைவப்பிரகாச யந்திரசாலையில்

அச்சிடப்பெற்றது

கலாபூஷணம், சைவப்புலவர். திரு. சு. செல்லத்துரை
அவர்களின் பதப்பிரிப்பு, கொண்டுகூட்டு, பதப்பொருள்,
என்பவற்றுடன் 2004ம் ஆண்டு ஐப்பசி
மாதம் வெளியிடப்பெற்றது.

பவவருடம் வைகாசி மாதம்
1934

# நூற் பதிப்புத் தரவுகள்


நூல் : கல்வளை அந்தாதி

ஆக்கியவர் : நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்

நூல் பதிப்பு : 2004

பிரதிகள் : 1000

வெளியீடு : கல்வளைப் பிள்ளையார் கோவில்
தர்மகர்த்தாசபை,
சண்டிலிப்பாய்.

அச்சகம் : தயா அச்சகம். 138, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. 2881

பக்கங்கள் : 146

விலை : **200/=**

# பதிப்புரை

கல்வளைப் பதியில் எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் விநாயகப் பெருமான்மீது கி.பி 1700 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் யாழ்ப்பாணத்து நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பட்டது கல்வளையந்தாதி என்னும் இப்பிரபந்தம். இது அந்தாதிப் பிரபந்த இலக்கணத்துக்கு அமைவாக (முதற்பாடலின் அந்தம் அடுத்த பாடலின் தொடக்கமாக வரத்தக்கதாக) யமக அந்தாதியாகப் பாடப்பட்டது. யமகம் எனப்படுவது ஒரே வகையான தொடர் வெவ்வேறு விதமான பொருள்தரக் கூடிய வகையில் அமைவது. யமகம் பாடுவது எல்லாப் புலவர்க்கும் முடியக் கூடியதல்ல. சின்னத்தம்பிப்புலவரின் கவித்துவத்தின் ஆழ அகலத்தை இந்நூல் உணரவைக்கிறது.

இக்கல்வளையந்தாதி சொன்னயம், பொருள் நயம் மிக்கதென அறிஞர் உலகினால் பாராட்டப்படுவது. இந்நூலுக்கு வல்வை.வைத்திலிங்கம் பிள்ளை அவர்கள் செய்த உரை ஒன்றுண்டு என அறிகிறோம்.

அதுவும் சாதாரண மொழியறிவுடையார்க்கு விளங்கிக் கொள்வது சிரமமெனக் கருதி யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் 1934இல் "பிரபல்யம்" பெற்ற உரையாசிரியர் ம.வே திருஞானசம்பந்தப்பிள்ளை மூலம் இலகுவான உரை யெழுது வித்து வெளியிட்டனர்.

அப்பதிப்பினை நாம் மீண்டும் பதிப்பிக்கக்கருதினோம். எங்கள் கல்வளைப் பெருமானின் பெருமையை மட்டுமல்லக் கல்வளைத் தலத்தின் பெருமையையும் அக்காலத்தில் இருந்த சிறப்பையும் இன்று வாழ்பவரும் இனிவாழப்போகின்றவர்களும் தெரிந்து கொள்வதற்கு இந்நூல் தக்க சாதனமாக அமையும்.

பாடல்கள் ஒவ்வொன்றும் யாப்பமைதிக்கு ஏற்றவண்ணம் முன்னைய பதிப்பில் உள்ளபடி சீர்பிரித்து, கொண்டுகூட்டுச் செய்து பொருள் தரப்பட்டுள்ளது. எனினும் பாடல்களை அப்படியே வாசிப்பது இக்காலத்தவர்க்கு மிகச்சிரமமாக இருக்கும் ஆதலால் பாடல்களின் சீர்களைச் சொற்களாகப் பிரித்து எழுதிப் பதிப்பித்தால் வாசிப்பவர்க்கு இலகுவாக இருக்கும் எனக் கருதினோம்.

இப்பணியை நாம் கேட்டதற்கிணங்க இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய முன்னாள் அதிபர் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் மனமுவந்து செய்து தந்துள்ளார்கள். அத்துடன் அருஞ் சொற்களுக்குப் பொருளும் எழுதித் தந்துள்ளார்கள்.

இவ்வந்தாதிப் பாடல்களின் சொற்சுவையும், பொருட்சுவையும், பக்திச்சுவையும், இலக்கிய நயமும் படிப்போர் உள்ளத்தை உவகையுறச் செய்யவல்லன.

படித்துச் சுவைத்துக் கல்வளையானின் நல்லருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

**செ. நித்தியானந்தம்**
**தலைவர்**
**தர்மகர்த்தா சபை**
**கல்வளைப் பிள்ளையார் கோவில்**

# நன்றி நவிலல்

கலாபூஷணம் சைவப்புலவர் திரு. சு.செல்லத்துரை ஓய்வு பெற்ற அதிபர் அவர்களை. நானும், தலைவர் அவர்களும் சந்தித்து சின்னத்தம்பிப்புலவர் அவர்களால் இயற்றப்பெற்ற கல்வளை அந்தாதிச் செய்யுள்களை இலக்கண நுண்ணறிவு உள்ளோர் அன்றி அவ்வாற்றல் சிறிது மற்றோரும் சிறப்பாகக் கற்று நன்குணர்ந்து ஓதத்தக்க முறையில், இலகு முறையில் எழுதித்தரும்படி கேட்டுக் கொண்டோம்.

எதற்கும் அவன் சித்தம் சிறப்புற இருந்தால் எல்லாம் சிறப்புற நடைபெறும் எனக்கூறி வழமையான புன்சிரிப்போடும் உளமகிழ்வோடும் இருகரங்களையும் நீட்டி கல்வளை அந்தாதிப் புத்தகத்தைத் தலைவர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள்.

கல்வளை யமக அந்தாதிக்குரிய சீர், தளை சிதைவுறாமலும், கருப்பொருள் மாறுபடாமலும். யாப்பு அமைதி பிறழாமலும் யாவரும் எளிதில் பொருள் மயக்கமின்றிக் கற்றுக் கொள்ளக்கூடிய மிக இலகுவான முறையில் பதங்களைப் பிரித்தும் ஒன்றுகூட்டியும் சிறப்புற எழுதித்தந்துள்ளார்கள்.

அவர்கள்; இப்பிரதிகளை முதல் முறை அச்சிட்டு மூலப் பிரதிகளோடு ஒப்பிட்டு (புறுப்) பார்த்து வேண்டிய திருத்தங்களையும் செய்து உதவியதுமல்லாமல் மீண்டும் இத்திருத்தங்களைத் திருத்தி அச்சிட்ட பின்பும் இரண்டாவது தடவையும் மூலப்பிரதிகளுடன் ஒப்பிட்டுப் பார்வையிட்டுத் தந்துள்ளார்கள்.

இச்சீரிய தொண்டை எவ்வித கைங்கரியத்தையும் எதிர்பாராமல் பல்வகைச் சிரமங்களினூடும் மனத்தளர்வின்றி உளமகிழ்வோடு செய்து தந்த சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை அதிபர் அவர்களுக்கு கல்வளைப் பிள்ளையார் உடலுள பலத்துடன் நீண்ட நல்லாயுளையும் வழங்க வேண்டுமென அவன்தாளை இறைஞ்சி வழுத்துவதோடு எங்களது உளமார்ந்த நன்றியறிதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**க. செல்லையா**
செயலாளர்
கல்வளைப் பிள்ளையார் கோவில்
தர்மகர்த்தா சபை

# நூன்முகம்

யாழ்ப்பாணத்து நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் இயற்றிய இக்கல்வளையந்தாதி சொன்னயம் பொருணயம் வாய்ந்துள்ள தென அறிஞர் எவராலும் பாராட்டப்படுவது. இதன் அருமை நோக்கி யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் தாம் நடாத்தும் பாலபண்டித பரீக்ஷைக்கு இதனை ஒரு பாடமாக விதித்துள்ளது. இவ்வந்தாதிக்கு இயற்றமிழ்ப் போதகாசிரியராக விளங்கிய வல்வை: ச. வைத்தியலிங்கபிள்ளை செய்த பதவுரை ஒன்று உளது. அதுவே பழைய உரையென வழங்குவது. அவ்வுரை திட்ப நுட்பம் வாய்ந்ததேனும், தமிழ்க்கல்வி அருகி வரும் இக்காலத்து மாணாக்கர்கட்கு உபாத்தியாயர் உதவியின்றிப் பயின்று கொள்வதற்கு அமைந்ததன்றாதலின், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரின் கேள்விப்படி இவ்வந்தாதிக்கு, அந்தப் பழைய உரையைத் தழுவி, அற்ப கல்வியறிவுடையவர்களும் இலகுவில் விளங்கத் தக்கதாக ஒரு விரிவான உரையை எழுதியுள்ளேம். நிரம்பாக்கல்வியுடைய எம்போல்வார்க்கு இவ்வரிய நூலுக்கு உரை எழுதத் துணிவு போதாதாயினும், அக்கல்வளைப் பெருமானாருடைய திருவடிகளைச் சிந்தித்தவண்ணமே இத்தொண்டைச் செய்தோமாதலின் இப்புத்துரை நாம் கருதியவாறு பயன்படு மென்பது எமது நம்பிக்கை. இவ்வுரையை எழுதும்போது எமக்குத் துணைபுரிந்த நண்பர்களாகிய வித்துவான் ஸ்ரீ ந.சுப்பையபிள்ளை, பண்டிதர் ஸ்ரீ சி. கணபதிப்பிள்ளை என்னுமிருவரிடத்தும் நன்றிபாராட்டுகின்றோம். இவ்வுரையின்கண் யாதும் திருத்தற்பாலன வுளவேல் அறிஞர் அதனை எமக்குத் தெரிவிப்பின் அடுத்த பதிப்பில் நன்றியறிதலோடு திருத்திவைப்பேம். நமது யாழ்ப்பாணத்து விளங்கிய சிறந்த புலவரால் இந்நூல் இயற்றப்பெற்ற காரணம்பற்றித் தமிழகத்தாரனைவரும் இதனை அபிமானித்து ஆதரிப்பரென்பது எமது எண்ணம்.

**வண்ணார்பண்ணை,**

**இந்துசாதனாலயம்.** **மா.வே.திருஞானசம்பந்தன்.**

23.5.34




**கோவில் முன்புறத்தில் கல்வளையானைப் பார்த்துக் கொண்டு கல்வளையந்தாதி எழுதிக் கொண்டி ருக்கும் கோலத்தில் சின்னத்தம்பிப் புலவர்**

# நூலாசிரியர் வரலாறு

இக் கல்வளையந்தாதியை இயற்றிய வரகவியாகிய சின்னத்தம்பிப் புலவர் இற்றைக்கு இருநூறு வருடங்கட்கு முன்னர், ஒல்லாந்தர் இந் நாட்டை ஆண்ட காலத்தில், யாழ்ப்பாணத்து நல்லூரில் வாழ்ந்த வில்லவராய முதலியா ரென்னும் பிரபுவின் புதல்வராவர். வில்லவராயமுதலியார் உயர்குடிப்பிறப்பு, கல்வியொழுக்கம், செல்வம், செல்வாக்கு, அதிகாரம் முதலிய சுகுணங்களோடும் நற்செயல்களோடும் கூடியவர். இம்முதலியாருடைய கல்வித் திறமையையும் நற்குண நற்செய்கை செல்வம் செல்வாக்கு என்னும் இவைகளையும் அறிந்த ஒல்லாந்த அரசினர் தேசவழமையை எழுதுவதற்கு அக்காலத்து விளங்கிய அறிஞர் பன்னிருவரை, ஒரு சபையாகக்கூட்டி அச்சபைக்கு வில்லவராய முதலியாரையே தலைவராக நியமனஞ் செய்தனர். இச்சபையார் எழுதிய தேசவழமையே இப்பொழுதும் கையாளப்பட்டு வருவதாகும். அருளம்பலமுதலியார், சந்திரசேகரமானாமுதலியார், மனப்புலி முதலியார், வன்னியரா யமுதலியார், சயம்புநாதமுதலியார், சேனாதிராசமுதலியார், இராசரத்தின முதலியார் முதலிய பிரபுக்கள் நமது வில்லவராய முதலியாரின் தலைமையில் அச்சபையிலிருந்து தேசவழமையை எழுதியுள்ளார்கள்.

1707ம் ஆண்டு ஏப்பிரல் மீ 5ந் தேதி இவர்கள் தேசவழமையை எழுதி முடித்தவுடன், ஒல்லாந்த தலைவருக்கு எழுதிய கடிதம். தேசவழமைப்பிரதியிற் காணப்படுகின்றது.

இப்படியான அறிவிற் சிறந்த வில்லவராயமுதலியா ருடைய புத்திரராகிய இவர் சிறுபராயத்திற் கல்வி கற்றலை அலட்சியஞ் செய்து விளையாட்டிலேயே தம் சிந்தை செல்லப் பெற்றிருந்தாரென்றும், இங்ஙனம் மாடுமேய்க்குஞ் சிறுவருடன் கலந்து தெருவில் விளையாடிக்கொண்டு நிற்குஞ் சமையத்தில், இவரது தந்தையாராகிய முதலியாரைக் காணும்படி இந்தியாவிலிருந்து இங்கே வந்த தமிழ்ப் புலவரொருவர், “முதலியாருடைய வீடு எவ் விடத்ததோ” என்று இவரைக் கேட்க, அப்பொழுது ஏழுவயசுப் பராயமுடையவராகிய இவர் வசனத்தில் அப்புலவருக்கு விடை சொல்லாமல்,

"பொன்பூச் சொரியும் பொலிந்தசெழுந் தாதிறைக்கும்
நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலாம் - மின்பிரபை
வீசுபுகழ் நல்லூரான் வில்லவரா யன்கனக
வாசலிடைக் கொன்றை மரம்."

என விடையிறுத்தனரென்றுஞ் சொல்வர். அதன்பின்பே இவர் வரகவியென்பது உலகோர்க்குப் புலனாயிற்று. இவர் வரகவி யென்பதற்கு ஆதாரமாக இன்னும் பல ஐதிகங்கள் உண்டு. அவற்றுள் ஒன்றை மாத்திரம் இங்கே எடுத்துக் காட்டுகின்றோம். இப் புலவர் பால்யத்திற் கல்வி கல்லாது விளையாட்டிலேயே மனஞ்செல்வாராய்த் திரிவதைக் கண்ட தகப்பனார் பலமுறை புத்தி புகட்டியும் கடிந்தும் தண்டித்தும் இவரைத் திருத்த முயன்று இயலாமை கண்டு தம்வீட்டைவிட்டு அகற்றிவிட்டனர். தந்தையார் இவ்வண்ணஞ் செய்தாரேனும், "பொல்லாத சேயெனில் தாய் தள்ள நீதியோ, புகலிடம் பிறிதுமுண்டோ" என்றவாறாய் இவர் தாயார் தம்பிள்ளையை முதலியார் இல்லாத சமையம்பார்த்து வீட்டிற்குவந்து உண்டுவிட்டுப் போகும்படி இரகசியமாக ஒழுங்குசெய்திருந்தார். இப்படித் தினந்தோறும் கரவாக வீட்டிற்கு வந்து தாயிடம் உண்டு சென்ற இவர், ஒருதினம் கூரையின் உட்புறத்தே ஒரு வெள்ளேடு சொருகி யிருப்பக் கண்டு அதனை எடுத்துப் பார்த்தபோது, தமது பிதாவின் கையெழுத்தில் ஒரு அந்தாதிச் செய்யுளில் இரண்டு அடிகள் மாத்திரம் வரையப்பட்டிருத்தலைக் கண்டு, மற்றை இரண்டு அடிகளையும் எழுதி அச்செய்யுளைப் பூரணமாக்கி ஏட்டினைப் பழையபடி சொருகிவிட்டு விளையாடப் போய்விட்டார். அன்று சிறிது நேரஞ்செல்லத் தம் வீட்டிற்கு மீண்டு வந்த முதலியார் தாம் பாடிக் குறையில் வைத்த செய்யுளை நிரப்பும்படி அந்த ஏட்டை எடுத்துப் பார்த்தபோது ஈற்றடியிரண்டும், தாம் எண்ணியிருந்ததினும்பார்க்க அதிக சொற்சுவை பொருட் சுவைகளோடு வரையப்பட்டிருத்தலைக் கண்டு அற்புதங்கொண்டு "இங்கு யார் நான் இல்லா நேரத்தில் வந்தார்" என்று தம் மனைவியாரை வினவ, அவர் சிறிது யோசித்து விட்டுப் பின்னர் "உங்கள் மகனைத் தவிர வேறு எவரும் இங்கே வரவில்லை" என்று தெரிவிக்க, முதலியார் அடங்கா மகிழ்ச்சி கொண்டு தன்மகனைக் கூப்பிடுவித்து அன்புபாராட்டி வித்தை கற்பித்து வந்தனர். நமது புலவர் வரகவியாயிருந்ததோடு மாத்திரம் அமையாது இலக்கண

இலக்கியங்களைச் சந்தேக விபரீதமற ஆசானிடத்திற் கிரமமாகப் பயின்றுள்ளாரென்பது, அவர் இயற்றிய நூல்களை ஆராய்வார்க்குத் தெற்றெனப் புலப்படும்.

மேலும் நமது புலவர் புராணேதிகாசங்களை நன்கு ஆராய்ந்து அவற்றின்கணுள்ள நுண்பொருளையுணர்ந்துள்ளா ரென்பது கீழ் வரும் ஐதிகத்தால் இனிது விளங்கும். ஒல்லாந்தர்காலத்தில் உத்தியோகம் அரசசந்மானம் என்னுமிவைகளோடு வாழ்ந்த கணேசையர் என்பவர் தமது இல்லத்திற் பல வித்துவான்களை அழைத்து நாள்தோறும் இராமாயணத்திற்கு அர்த்தஞ் சொல்லுவித்துவந்தாரென்றும், ஒருதினம் அவ்வித்துவான்கள் கம்பசூத்திர மொன்றிற்குப் பொருள்காணவியலாது மயங்கியவிடத்து, இப்புலவர் அதன் பொருளை அச்சபையிலுள்ளார்க்குத் தெள்ளிதில் விளக்கிச் சபையோரை அற்புதமுறச்செய்தாரென்றும், அதற்கு மகிழ்ந்து கணேசையர் நல்லூரிலுள்ள பண்டாரக்குளம் என்னும் வயலைப் புலவருக்குச் சந்மானமாகக் கொடுத்தாரென்றும் வரலாறுண்டு.

சின்னத்தம்பிப்புலவரவர்கள் இயற்றிய நூல்கள் மறைசையந்தாதி, கல்வளையந்தாதி, கரவை வேலன்கோவை, பறாளை விநாயகர் பள்ளு என்னுமிவைகளாம். இவற்றுள் முதனின்ற மறைசையந்தாதியை, நமது புலவர், சிதம்பரம் வேதாரணியம் முதலாம் சிவஸ்தலங்கட்கு யாத்திரை சென்ற காலத்து வேதாரணியேசுவரர் மீது பாடினரென்ப. அவ்வந்தாதிக்கு உடுப்பிட்டி, அ.சிவசம்புப் புலவரும், மதுரை மகாவித்துவான் சபாபதிமுதலியாரும் தனித்தனி உரை இயற்றியுள்ளனர். அவ்வந்தாதி சிவசம்புப் புலவருடைய உரையோடு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் அச்சிடப்பெற்றுள்ளது.

இரண்டாவதாகவுள்ள கல்வளையந்தாதி சண்டிருப்பாயி லுள்ள புராதன தலமாகிய கல்வளைப்பதியில் எழுந்தருளிய விநாயகர்மீது பாடப்பெற்றதாகும். சிவசம்புப்புலவரவர்களின் மாணாக்கரும் இயற்றமிழ்ப் போதகாசிரியருமாகிய வல்வை; ச.வைத்தியலிங்கபிள்ளையவர்கள் இவ்வந்தாதிக்கு ஒரு நுட்பமான உரையெழுதிப் பல வருடங்கட்கு முன்னர் அச்சிடுவித்து வெளிப்படுத்தியுள்ளார். அந்த உரையையே "பழைய உரை" என்னும் பெயரோடு சென்னை எஸ். அநவரதவிநாயகம்பிள்ளையவர்கள் பரிசோதித்து "ரிப்பன்"

அச்சியந்திரசாலையில் அச்சிடுவித்து வெளியிட்டுள்ளார். வைத்தியலிங்கபிள்ளையவர்கள் எழுதிய உரையைத் தழுவியே இப்பொழுது இவ்விரிவுரை எழுதப்பெற்றதாகும்.

மூன்றாவதாகவுள்ள கரவைவேலன்கோவை வடமராட்சி யைச் சேர்ந்த கரவெட்டியில் வாழ்ந்த வேலாயுதபிள்ளை என்னும் பிரபுவின் மேற் பாடப்பெற்றதாகும். இக்கோவையிலுள்ள சில கவிகள் செந்தமிழ்ப் பத்திரிகையில் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் எழுதிய உரையுடன் வெளிவந்துள்ளன. அவற்றுள் ஒரு செய்யுளை உரையுடன் இங்கு எடுத்துக் காட்டுதும்;

**“முத்தம் பொதியும் பவளந் திறந்து முறையினும்பேர்**
**துத்தம் பயின்மொழி யாற்சொல்லுஞ் சால்வழிச் சூல்பெருகும்**
**நத்தம் பயிலுங் கரவையில் வேலனன் னாட்டிலுங்கள்**
**சித்தம் பயில்பதி சொல்லா திருக்குந் தெரிவையரே”**

தெரியவையரே! நும் பெயர் சொல்லும் என முடிக்க. முத்தம் பொதியும் பவளந் திறந்து என்பது உருவகவுயர்வு நவிற்சியணி. வாயைத்திறந்து எனப் பொருள்படும். முத்தம் என்றது பற்களை, பவளம் என்றது வாயினை, துத்தம் பயில்மொழி - பாலினை யொத்த சொல். சூல் பெருகும் நத்தம் - கரு முதிர்ந்த சங்கு. சித்தம் பயில்பதி - மனம் பயின்ற ஊர்.

இந்நூல் முழுவதும் அகப்பட்டுள்ளதெனவும், இது விரைவில் அச்சாகி வெளிவருமெனவும் அறிந்து மகிழ்ச்சியுறுகின்றோம்.

இறுதியிற் சொல்லப்பட்ட பறாளை விநாயகர் பள்ளு, சுழிபுரத்தைச் சேர்ந்த பறாளை (பறளாய்) என்னுந் தலத்திற் கோயில் கொண்டருளிய விநாயகக்கடவுள் மேற் பாடப்பெற்றது; சொற்சுவை, பொருட்சுவை மலிந்தது. இது மலாய - சுழிபுர ஐக்கிய சங்கத்தின் பொருளுதவிகொண்டு, வித்தியாபி மானியாகிய திருமயிலை சே.வெ. ஜம்புலிங்கம்பிள்ளையால் பரிசோதித்து அச்சிடுவிக்கப்பெற்று வெளி வந்திருக்கின்றது.

இவர் காலத்தில் விளங்கிய தமிழ்ப்புலவர்கள், கூழங்கைத் தம்பிரான், சித்தாந்த சரபம் சொக்கலிங்க தேசிகர், சிவராத்திரி புராணம், ஏகாதசிபுராணம் முதலியவற்றை இனிது பாடிய வரதராஜகவிராசர், புலியூரந்தாதி, யாழ்ப்பாண வைபவம்

என்னும் இவைகளை இயற்றிய மாதகல் மயில்வாகனப்புலவர் முதலியவர்களாவர். வரதராஜகவிராசர் இயற்றிய சிவராத்திரி புராணத்திற்கு, இச்சின்னத்தம்பிப்புலவரும் மாதகல் மயில்வாகனப் புலவரும் பாயிரம் பாடியுள்ளனர். இவற்றால் ஒல்லாந்தர் நமது யாழ்ப்பாணத்தைப் பரிபாலித்த காலத்தில் தமிழ்மொழி பெரிதும் விருத்தியடைந்த தென்பதும், பல அரிய நூல்கள் தமிழிற் செய்யப்பட்டன என்பதும், இந்த ஆங்கில பரிபாலன காலத்திலேயே தமிழ்மொழி அதோகதி யடையலாயிற்றென்பதும் நன்கு புலப்படும்.

இவை இங்ஙனமாக, இப்புலவரது வரலாற்றை எழுதிய சரித்திர நூலாசிரியர்கள் சிலர், இவரது தந்தையாராகிய வில்லவராய முதலியாரையும் பிற்காலத்திலிருந்த வில்லவ தாசமுதலியார் என்பவரையும் ஒருவரென மயங்கி எழுதியிருப்பக் காணப்படுகின்றது. வில்லவராய முதலியார் நல்லூரை ஜெந்மஸ்தானமாகக் கொண்டவர்; இவர் தேசவழமைச் சங்கத்தில் தலைமை வகித்துத் தேசவழமையை எழுதி முற்றுவித்த தினம் 1707ம் ஆண்டு ஏப்ரல்மாசம் 5ந் தேதி என்பதை மேலே காட்டியுள்ளேம்; இனி மற்ற வில்லவதாச முதலியார் காலம் இம்முதலியாருக்கு 140 வருடம் வரையிற் பிந்தியதாகும். இத்தாச முதலியாரின் இயற்பெயர் தாமோதரர் சிற்றம்பலமாகும். இவர் சங்கானை மடப்பத்தைச் சேர்ந்தவர்; ஜெந்மவூருஞ் சங்கானையாகும். பெண்கொண்டு வசித்த ஊர் சண்டிருப்பா யென்பர். சென்ற 1849ம் ஆண்டு மே மீ 25உ இவ்வில்லவதாச முதலியார் தமது கைச்சாத்தோடு முடித்துக் கொடுத்த நன்கொடை உறுதிச் சாதனமொன்றை நாம் நேரிற்பார்த்துள்ளேம். இவரை நேரில் அறிந்த காலங்கண்ட முதியோர் சிலர் இப்பொழுதும் உள்ளனர். சண்டிருப்பாயில் "முதலியார் வளவு" என வழங்கும் காணியும் இவருடையதே யாகும். இந்த ஆதாரங்களால் நல்லூர் வில்லவராய முதலியார் வேறு, சண்டிருப்பாய் வில்லவதாச முதலியார் வேறு என்பது ஆசங்கையின்றி இனிது விளங்கக்கிடக்கின்றது.

உ
சிவமயம்

# சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோவில் வரலாறு

## திருத்தலம் அமைவிடம்

ஈழநாட்டின் வடபகுதியில் பிள்ளையார் கோவில்கள் இல்லாத கிராமங்களே இல்லை எனலாம். அவற்றுள் பழமையானதாக கருதப்படும் கோவில்களில் சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோவிலும் ஒன்றாகும். இப் பிள்ளையார் மேல் வரகவி சின்னத்தம்பி புலவர் அவர்களால் கல்வளை அந்தாதி பாடப்பட்டது.

இத் திருத்தலம் ஈழநாட்டின் வடபகுதியின் வலிகாமம் தென்மேற்கு பிரதேசத்தின் சண்டிலிப்பாய் கிராமத்தில் கல்வளை என்னும் குறிச்சியில் அமையப்பெற்றதாகும். கல்வளை என்னும் பெயர் ஓர் நீர் நிலையத்தின் பெயராகும். உ+ம் முள்ளியவளை, கண்டாவளை, ஆழியவளை, கும்பழாவளை, கழுதாவளை, ஆவளை போன்றவை உதாரணமாகும். இக் கல்வளை என்னும் நீர் நிலை ஓர் பெரிய திருக்குளம் ஆகும். காலத்தால் மிக மிக பழமை யானது.

இத்தலம் பண்டைய அரசர்களின் காலத்துடன் சம்பந்தப்பட்டதாகும். இக் கோவில் யாழ்பாணத்தை ஆட்சி செய்த ஆரியச்சக்கரவர்த்திகளுடன் தொடர்புடையதாகும். யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த பரராசசேகரனுக்கும். பாண்டிய மழவன் மரபில் வந்த அரசகேசரியின் புத்திரி ஆகிய வள்ளியம்மைக்கும் பரநிருபசிங்கன் பிறந்தான். பரராசசேகரன் பரநிருபசிங்கத்திற்கு கல்வியங்காடு, சண்டிலிப்பாய், அராலி,



பழைய மூலமூர்த்தி 1995 இல்



1995 இல் மகா கும்பாபிஷேகத்தின் போது பிரதான
கும்ப ஆராதனை நிகழ்வு



1995 இல் மகா கும்பாபிஷேகத்தின் போது 9 குருக்கள்மார்
திருக்குளத்தில் பூஜை செய்யும் காட்சி

அச்சுவேலி, உடுப்பிட்டி, கச்சாய், மல்லாகம் என்னும் ஏழு கிராமங்களையும் தாமிர சாசனம் செய்து கொடுத்து அக்கிராமங்களுக்கு அதிபதியாக்கி அநேக இராஜ வரிசைகளும் ஈந்தான்.

1620ம் ஆண்டளவில் போர்த்துக்கேயர் பரநிருப சிங்கத்திற்கு அவனுக்கு சொந்தமாக உள்ள ஏழு கிராமங்களுடன் நல்லூர், மாதகல் என்னும் இரண்டு கிராமங்களையும் மந்திரி உத்தியோகத்தையும் கொடுத்து அவன் குமாரன் பரராஜசிங்கத்துக்கு கிராம அதிகாரத்தையும் கொடுத்தார்கள்.

1629ம் வருடத்தில் பரநிருபசிங்கன் சிவபதமடைந் தான். அதன்பின் பரநிருபசிங்கத்தின் மகனும் பரராசசேகர மகாராசாவின் பேரனும் ஆகிய பரராசசிங்கத்தை பறங்கியர் அரசாட்சி ஆலோசனைத் தலைவனாக்கி பரராசசிங்கமுதலி என்றும் அவன் குலத்திற்கு மடப்பள்ளி என்றும் பட்டம் சூட்டி அவனை கௌரவப்படுத்தினார்கள்.

பரராசசிங்கமுதலிக்கு மரண காலம் சமீபித்த பொழுது அவன் தன் குமாரர்கள் ஏழு பேரையும் அழைத்து தனது ஆஸ்திகளை பங்கிட்டு நல்லூரையும் கல்வியங்காட்டையும் அழகாண்மைவல்பமுதலி எனும் மகனுக்காக்கி அவனை நல்லூரில் உள்ள தன் மாளிகையில் இருத்தினான். மற்ற தனது குமாரர்களில் தனபாலசிங்க முதலிக்கு மல்லாகத்தையும் வெற்றிவேலாயுத முதலிக்கு சண்டிலிப்பாயையும் கொடுத்தான். சண்டிலிப்பாய் கிராமம் பல குறிச்சிகளாக பிரிக்கப்பட்டிருந்தமை அவற்றின் இடப்பெயர்களால் அறியப்படுகின்றது. இதில் ஒரு பகுதி சண்டிலிப்பாய் நடுக்குறிச்சியைச் சேர்ந்த கல்வளை ஆகும்.

கல்வளைப் பகுதி கீரிமலையில் இருந்து அராலிக்கடல் வரை செல்லும் ஆழமான வழுக்கை ஆற்றின் கரையின் மேற்குப் பக்கமாக அமைந்துள்ளது. இதனால் இப்பகுதி வயல் சார்ந்த மருத நிலமாக விளங்குகின்றது. அத்துடன் அக்காலத்தில் தமிழ் நாட்டுடன் தமிழ் மக்கள் போக்குவரத்து வாணிபம் என்பவற்றில் ஈடுபட இது ஒரு நீர் வழிப்பாதையாக முக்கியம் பெற்றிருந்தது. கல்வளைப் பகுதியும் வழுக்கை ஆற்றுடன் அண்டி இருந்ததினால் பிரபல்யம் பெற்றிருந்தது. தமிழகத்து பிரபல்யம் வாய்ந்த ஆற்றங்கரை திருத்தலங்களைப் போல இத்தலமும் எழப்பெற்றது. ஆதி திராவிடரின் நாகவழிபாடும் வழுக்கை ஆற்றின் கரையோரமாக இங்கு பரவியது குறிப்பாக, கல்வளையில் நாகதம்பிரான் வழிபாடு முதன்மையாக கருதப்பட்டது. இக்கோவிலில் நாகதம்பிரான் பொங்கல் பங்குனி கடைசி வெள்ளிக்கிழமையில் மிக விமரிசையாக நடந்தமைக்கும் அயல் கிராமங்களில் இருந்தும் (சண்டிலிப்பாய், சங்குவேலி, மாகியம்பிட்டி) மக்கள் வந்து நூற்றுக்கணக்கான பானைகளில் பொங்கல் நடந்தமைக்கு சான்றுகள் (தோம்பு) உண்டு.

கல்வளையில் பிள்ளையார் கோவில் தோன்றியதைப் பற்றி ஓர் புராதன கதையுண்டு. கந்த வழிபாட்டை அனுஷ்டித்த மாருதபுரவீகவல்லி என்னும் சோழ அரசிளங்குமாரி தன் வழிபாட்டில் பூரண நிறைவு காணாது விக்கினம் தீர்க்கும் விநாயகரை வணங்கி பல கோவில்களை வழுக்கை ஆற்றுக்கரை ஓரமாக அமைத்தார் என்றும், அதிகமாக ஏனைய கோவில்களும் வழுக்கை ஆற்றுக்கு மேற்கு கரையோரமாக அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று கல்வளைப் பரமானந்தப் பிள்ளையார் கோவில் ஆகும். இவரால் ஸ்தாபிக்கப்பட்ட மற்றக் கோவில்களைப் போல் கலைப் பாணியில் குளமும் கோட்டமும் ஆக பொலிந்து விளங்குகின்றது. ஒரு காலத்தில் புகழுடன் இருந்த இச் ஷேத்திரங்கள் போர்த்துக்கேயர்

இதற்குச் சான்று அளவெட்டி அருகிலுள்ள கும்பளாவளைப் பிள்ளையார் கோவில் வரலாறு.

ஆட்சியில் அழிக்கப்பட்டன. இவ்விதம் சிதைந்த கோவில்கள் மீண்டும் புதுப்பிக்கப் பட்டுள்ளன.

இதற்கமைய பரராசசிங்க முதலியால் தனது மகனான வெற்றிவேலாயுதமுதலிக்கு கொடுக்கப்பட்ட சண்டிலிப்பாயில், வெற்றிவேலாயுதமுதலி குடும்பத்தினரால் தங்கள் கல்வளை என்னும் நிலத்தில் அமைந்திருந்த கல்வளை பரமானந்தப் பிள்ளையார் கோவிலை மீண்டும் நிறுவி தங்கள் குல தெய்வமாக வழிபட்டார்கள். அத்துடன் பொதுமக்களும் வழிபட வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அவரின் வழித்தோன்றல்கள் கல்வளை எனும் காணியில் எழுந்தருளியுள்ள பரமானந்தப் பிள்ளையார் கோவிலை பராமரித்து வந்தனர்.

குலோத்துங்க முதலியாரின் புரோகிதர்களினால் (பிராமணர்கள்) இக் கோவில் பூஜை செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர்களின் வழித்தோன்றல்களால் பூஜை செய்யப்பட்டு வந்துள்ளது. அண்ணன் அழகாண்மை வல்லப முதலி தம்பி வெற்றிவேலாயுத முதலியிடம் வரும் பொழுது கல்வளை விநாயகரை தரிசித்து வணங்கிச் செல்வது வழக்கம். கல்வளைப் பிள்ளையார் மேல் மிகுந்த பக்தி கொண்டு கல்வளைப் பிள்ளையார் திருவூஞ்சல் என்னும் திருவூஞ்சல் பாடலை பாடி மகிழ்ந்தார். இவரின் காலம் 17ம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். இந்நிகழ்வுகளுக்கு பல ஆண்டுகளுக்குப் பின் அதாவது ஒல்லாந்தர் ஆண்ட காலத்தில் இற்றைக்கு ஏறக்குறைய 300 வருடங்களுக்கு முன் வில்லவராயமுதலியார் தோன்றினார். அவரும் கல்வளை பிள்ளையார் மேல் மிகுந்த பக்தியுடையவராய் விளங்கினார். இதனால் கல்வளைப் பிள்ளையார் பெயரில் ஓர் அந்தாதி பாடத்தொடங்கி காப்பின் முதல் இரண்டு வரிகளான

**"தார்கொண்ட பூ மல்லிகைச் சேக்கையில் தும்பி சாலப்பம்பும்**
**சீர் கொண்ட கல்வளை அந்தாதி பாடத் திரைகடல் சூழ்"**

என்ற இரண்டு வரிகளையும் ஏட்டில் குறித்த பின்னர் மேற்கொண்டு எழுதுவதற்கு சிறிது சிரமம் உண்டாகவே ஏட்டையும் எழுத்தாணியையும் தமது வீட்டில் விட்டுச் சென்று செய்யுளை முடிக்குந் திறன் வேண்டி விநாயகரை வணங்குவதற்காக ஆலயம் சென்றுவிட்டார். தந்தையார் இல்லாத நேரம் தாயிடம் வரும் மகன் சின்னத்தம்பி அங்கிருந்த ஏட்டைப்பார்த்து இரண்டு வரிகள் மட்டும் எழுதப்பட்டிருந்த செய்யுளை பார்த்து மிகுதி இரண்டு வரிகளான

"பார் கொண்ட பல்லுயிர்க்கு ஆனந்த மும்மதம் பாயும் கும்பக்
கார் கொண்ட கம்பக் களியானை முன்னின்று காப்பதுவே"

என எழுதிச் செய்யுளை பூர்த்தி செய்துவிட்டுச் சென்றுவிட்டார். பின்பு தந்தையாராகிய வில்லவராய முதலியார் தனது மகன் சின்னத்தம்பியின் திறமையைக் கண்டு அவரை அழைத்து "இக் கல்வளை அந்தாதியை பாடி முடிப்பாயாக" என்று பணித்தார். இக் கல்வளை அந்தாதி சண்டிலிப்பாயில் உள்ள புராதன கல்வளைப் பகுதியில் எழுந்தருளியுள்ள பரமானந்தப் பிள்ளையார் மீது பாடப்பெற்றதாகும். சின்னத்தம்பிப் புலவருடைய இயற்பெயர் செயதுங்கமாப்பாணமுதலி என்பதாகும். பின்பு இவர் புலவர் வரிசையில் இடம் பெற்றார். விநாயகர் அருளால் சிறு வயதில் இருந்தே வரகவியாக விளங்கினார்.

கல்வளை அந்தாதியில் நிறைய இடம்பெறும் தாழைமரம், தாழம் பூ முதலியவற்றை குறிப்பிடும் "தாழையடி" என்ற பகுதியும் வில்லவன் தாழ்குளம் எனக் குறிப்பிடும் குளமும் கல்வளைப் பிள்ளையார் கோவிலுக்கு முன் அமைந்து இருக்கின்றன.

இக் கோயில் பற்றி சில குறிப்புக்கள் 1883 புரட்டாதி மாதம் யாழ்ப்பாணம் கச்சேரியினால் தயாரிக்கப் பட்ட கோவில்களின் பதிவு இடாப்பில் இக் கோவில் 1770 இல் கட்டப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 1883 இற்கு பின்பு சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஏரம்பஐயர், நாகேந்திர ஐயர், கார்த்திகேசு ஐயர், சுப்பையர் ஆகியோர்களால் பூசை கள் செய்யப்பட்டு வந்துள்ளன.

இக் கோவில் 1873ம் ஆண்டளவில் இல: ற கூ உ (19-11-1873) எழுதப்பட்ட கோவில் திருத்திக் கட்டுவதற்காக செய்யப்பட்ட ஒப்பந்த உறுதியாகும்:-

இல: 192 - 19-11-1873

**சண்டிருப்பாய் குடி வினாயகர் ஆறுமுகமும் அராலி மேற்குக்குடி மயிலப்ப ஆசாரி சித்திரவேலு ஆசாரியுமாகிய நாங்கள் உடன்படிக்கை உறுதி எழுதிக்கொண்டவகை. 2ம் பேர்வழிகளான சித்திரவேலு ஆசாரியாகிய நான் சண்டிருப்பாய் இறைக்குச் சேர்ந்த கல்வளைப் பதியிலெழுந்தருளியிருக்கும் பரமானந்தப் பிள்ளையார் கோயில் திருப்பணி கெற்பக்கிருக மண்டபம், அர்த்த மண்டபம் இவைகள் இரண்டையும் இப்போதிருக்கிற அத்திபாரத்தை நான்தானே என்பொறுப்பில் இடித்து சுண்ணாம்பு மாத்திரம் குறித்த ஆறுமுகம் தரவும் மற்றும் சகல சாமான்களும் என் பொறுப்பாகவும் அந்தவிடத்தில் மறுபடி புதிதாக அத்திபாரம் போட்டு முன்னிருந்த கல்லுகளில் குறித்த வேலைக்கு உபயோகமான கல்லுகளை மாத்திரம் எடுத்துக் கொண்டு மிகுதம் வேண்டிய கல்லுகளை என்பொறுப்பாகவும் தேடி மட்டம் சரிவெட்டிப் பொளிந்த வயிரக் கல்லுகளைக் கொண்டு வானவரி துவக்கம் யாளவரி வரைக்கும் சல்லிக்கல்லுச் செருகாமல் வயிர வேலையாகவும் யாளவரி தொடக்கம் பண்டிகைத் தூபி வரைக்கும் இப்போவிருக்கிற செங்கல்லுகளில் பழுதில்லாத செங்கல்லுகளை மாத்திரம் சேர்த்துக் கொண்டு மிகுதி என்பொறுப்பாகவும் நீளம் அகலம் தேவமாடங்கள் முதலாகப் பண்டிகைத் தூபி பரியந்தம் சாத்திரப் பிரகாரம் சரியாகவும்**

மட்டசுத்த வேலையாகவும் அடித்தளவரிசை வயிரக்கல்லுத் தளுவிசையாகவும் இதனடுத்த ஒன்றேகால் வருஷத் தவணைக்குள்ளாக வேலை முடித்துச் சரிவர ஒப்புக்கொடுக்கும்படி சம்மதித்துப் பொருந்திக் கொண்ட ரூபா 500 இந்த ரூபா அஞ்நூற்றில் இப்போ நான் பற்றிக்கொண்ட ரூபா 60 மிகுதி 440 ஐயும் வானவரி வைத்ததன்பின் ரூபா 40ம் கோமுகை மட்டம் வரையில் வேலை முடித்து ரூபா 80ம் போதிகை வரையில் வேலை முடித்து ரூபா 80ம் யாளவரி மட்டம் வரையில் வேலை முடித்து ரூபா 80ம் பண்டிகை வேலை முடித்து ரூபா 80ம் பூச்சுவேலை முதலாகச் சகல வேலைகளிலும் யாதொரு குறைவில்லாமல் முடிப்பப் பண்ணி ஒப்புக் கொடுத்தவுடன் ரூபா 80ம் இந்தவகையாகப் பற்றிக் கொண்டு அந்தந்த இறுப்பனவுக்குப் பற்றுச் சீட்டுக் கொடுக்கவும் சம்மதித்துக் கொண்டது. இந்தப்படி குறித்த தவணைக்குள் வேலை முடிபு பண்ணி ஒப்புக் கொடுக்கத் தவறினால் இதற்குத் தண்டமாக ரூபா நூற்றைம்பதும் பற்றின பணமும் எனது நிலைமை உடைமைகளில் நின்று குறித்த ஆறுமுகம் தானே அறவிட்டுக் கொள்ளவும். இதற்குப் பிணை அராலி மேற்குக்குடி அப்பா ஆசாரி சுவாமினாத ஆசாரியாகிய நானும் பிணைக்காறனாகவுடன் பட்டு இவ்வுறுதியிற் கையொப்பம் வைத்துவிட்டது. 1ம் பேர்வழிக்காறன் ஆறுமுகமாகிய நான் மேற் சொல்லியபடி பகுதிபகுதியாக வேலைமுடித்தவுடன் பணம் கொடுத்துப் பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்வேனாகவும் இந்தப்படி செய்யத் தவறினால் இதற்குத் தெண்டமாக ரூபா நூற்றைம்பது குறித்த இரண்டாம் பேர்வழிக்காறனுக்கு இறுப்பேனாகவும், இந்தப் படிக்கு இருதிறத்தாரும் சம்மதித்து இவ்வுறுதி எழுதிக்கொண்டதற்குச் சாட்சி சண்டிருப்பாய் குடி வெற்றிவேலர் குமார சூரியர் மேற்படி வெற்றிவேலர் முருகேசர் மேற்படி வல்லிபுரம் தம்பிநாதபிள்ளை மேற்படி சண்முகம் பொன்னம்பலம் இவர்கள் சாட்சியாகச் சங்கானை யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நொத்தாரிசு அமரசிங்கம் குலசேகரம் பிள்ளை முகதாவில் குறித்த நொத்தாரிஸ் வீட்டிலிருந்து இந்த உறுதி எழுதிக் கையொப்பம் வைக்கிறோம்.

**1873 கார்த்திகை 19ம் திகதி**

**ஒப்பம் - வி.ஆறுமுகம்**

**ஒப்பம் - சித்திரவேலு**

**ஒப்பம் - விளக்கமில்லை**

**சாட்சி ஒப்பம் விளக்கமில்லை**

**சாட்சி ஒப்பம் விளக்கமில்லை**

**சாட்சி ஒப்பம் விளக்கமில்லை**

**சாட்சி ஒப்பம் ச.பொன்னம்பலம்**

**நொத்தாரிசுவாகிய நான் குறித்த கையொப்பகாரர் களனைவருக்கும் குறித்த உறுதியை வாசித்துக் காண்பித்தபின் என்முகதாவிலும் அவர்களொருவருக்கொருவர் முகதாவிலும் குறித்த இடத்திலும் கையொப்பம் வைத்தார்களென்றும் இவர்களில் குறித்த சுவாமினாத ஆசாரி எனக்கறிமுக மில்லாதவரென்றும் மற்றவர்களை நான் அறிவேனென்றும் இணைப்பிரதிகளுக்கு ரூபா 25 முத்திரை ஒட்டி எழுதினதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.**

**ஒப்பம் விளக்கமில்லை**
**பிரசித்த நொத்தாரிசு**

இவ் ஒப்பந்தத்தின் படி இக்கோயிலின் தற்போது உள்ள மூலஸ்தானம் 1875ம் ஆண்டளவில் கட்டப்பெற்ற தாகும். இன்றும் அதே மூலஸ்தானமும் பண்டிகையும் காலத்திற்கு காலம் திருத்தப்பட்டு, வர்ணம் பூசப்பட்டு வருகின்றது. இன்றும் நல்லநிலையில் உள்ளது. இதன் வயது 125 வருடங்களைத்தாண்டிவிட்டது. இவ் ஒப்பந்தத்தின் படி முன்பு இருந்த கர்ப்பக்கிருக மண்டபத்தையும் அர்த்த மண்டபத்தையும் அகற்றி அதில் நல்ல நிலையில் உள்ள செங்கற்களை பாவிப்பதற்கு இவ் ஒப்பந்தம் வழி செய்துள்ளது. இதன் படி பின்நோக்கினால் முன்பு இருந்த கர்ப்பக்கிருகம் மேலும் 150-200 வருடங்கள் பழமை வாய்ந்த தாக கருதலாம். இக் கூற்று இக் கோவிலின் தொன்மை யைத் தொளிவுபடுத்துகின்றது.

இவ் ஒப்பந்தத்தின் படி குறிக்கப்பட்டுள்ள விநாயகர் ஆறுமுகத்தினால் ஆரம்பிக்கப்பட்டு அவருடைய கைம்பெண் விசயலக்சுமியினால் 1883ல் பூர்த்தி செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்று இரு காலப் பூஜைகள் நடைபெற்றது. விநாயகர் ஆறுமுகத்தின் மறைவிற்குப் பின்பு மகன் ஆறுமுகம் சுப்பையா அவர்கள் இக்கோவிலை பராமரித்து வந்துள்ளார். பல வருடங்களுக்குப் பின்பு 1913ம் ஆண்டளவில் திரு. ஆ. சுப்பையா அவர்கள் தனக்குப் பின் சந்ததி இல்லாமையினாலும் தனது முதுமை காரணமாகவும் இக்கோயிலை பராமரிப்பதற்கு தனது மருமகள் இராசம்மாவின் கணவர் கதிரவேலு முத்துக் குமாருக்கு இக்கோவிலை பராமரிப்பதற்கு ஓர் பராமரிப்பு தத்துவ உறுதியை எழுதிக்கொடுத்துள்ளார்.

இதே காலப்பகுதியில் நவாலி சண்முகம்பிள்ளை பரராசசிங்கம் என்பவர் தன்னுடைய முதுசமான இக்கோவிலும் கல்வளை என்னும் திருக்குளமும் உள்ளடக்கிய சுமார் 30பரப்பு நிலமான கல்வளை எனும் காணியில் தனது பங்கை 1913ம் ஆண்டு மாசி மாதம் 1ம் திகதி தர்மசாசனமாக எழுதிக்கொடுத்துள்ளார். அத்துடன் அதே உறுதியில் தனக்குசொந்தமான நவாலியில் உள்ள பிச்சிப்பள்ளம் என்னும் 7பரப்பு நெல்வயலையும் கல்வளைப்பிள்ளையார் கோவிலுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

மேலும் இக்கோவிலுக்கு உரியனவும் என்று 1947ம் ஆண்டு 1541ம் இலக்க வழக்கில் யாழ்மாவட்ட நீதிமன்றத்தி னால் வழங்கப்பட்டதீர்ப்பில் குறிக்கப்பட்டுள்ள காணிகளான. பிள்ளையார் பிரிவு, தாழைமான் ஓடை, தாழ்வுச் சிட்டி, சேமன் தோட்டம் என்னும் காணிகளை நன்கொடையாக வழங்கிய வர்களின் பெயர்கள் அறியப்படவில்லை. மேலும் இராசம்மா முத்துக்குமாரும் பங்காளரும் மோதர்வளவு எனும் 2 பரப்பு காணியை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

இம் மணிக்கூட்டுக் கோபுரம் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் திரு. சாளம்பை நாயர் என்பவரால் கட்டப் பெற்றது.

அதன் பின்பு இராசம்மாவின் கணவர் கதிரவேலு முத்துக்குமாருவினால் கர்ப்பக்கிருக கட்டிடதிருத்தமும் வர்ணம் பூசுதலும் மணிக்கூட்டுக்கோபுரவேலைகளும் கும்பாபிஷேகமும் 1899-1902ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் செய்யப்பட்டன. 1901ம் ஆண்டு திரு ~~இளையதம்பி~~ அ. கணபதிப் பிள்ளை. வேலுப்பிள்ளை என்பவர் தற்போது இருக்கும் ஓர் பாரிய கண்டாமணியை அன்பளிப்பு செய்துள்ளார்.

பின்பு கோவில் நிர்வாகத்தில் ஏற்பட்டகுழப்பங்கள் காரணமாக 1932ல் இருந்து இக் கோவிலில் திருவிழாக்கள் நடைபெறவில்லை. 1942ம் ஆண்டு சித்திரை மாதத்தில் இருந்து தம்பிராசா இராசையா என்பவர் பொறுப்பாக இருந்து இக்கோவிலை பராமரித்தார்.

இக்கோவிலை தனிப்பட்டவர்களின் பராமரிப்பு உரிமையில் இருந்து மீட்டு பொதுமக்கள் சொத்தாக்குவதற்கு யாழ்மாவட்டநீதிமன்றத்தில் வழக்கு இல:1541 தாக்கல் செய்யப்பட்டது. நீண் கால விசாரணைக்குப் பின் 10.03.1947ல் நீதி மன்றத்தீர்ப்பினால் 7பேர் கொண்ட தர்மகர்த்தா சபையிடம் கோவிலும், அதன் சொத்துக்களும் பராமரிப்பதற் காக ஒப்படைக்கப்பட்டன. (1.கணபதிப்பிள்ளை சோமசுந்தரம், 2. ஆறுமுகம் பொன்னுத்துரை, 3. சதாசிவம் சாம்பசிவம், 4. இளையதம்பி கந்தையா, 5. சின்னையா குமாரசூரியர், 6. தம்பிராசா இராசையா இவர்கள் அறுவரும் சண்டிலிப் பாயைச் சேர்ந்தவர்கள் 7.நாவலி சண்முகம் பரராசசிங்கம் இவ் 7 பேரும் ஆயுட்காலம் வரை தர்மகர்த்தாசபையில் அங்கத்தவர்களாக இருக்க அனுமதிக்கப்பட்டனர். கோவிலுக் குரிய காணிகளும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.அத்துடன் இக்கோவிலை நிர்வகிக்கும் படிமுறையும் இத்தீர்ப்புடன் வழங்கப்பட்டது.

இக்கோவிலின் தெற்கு வீதியில் குமாரு ஐயர் பஞ்சாட்சரக்குருக்கள் குடும்பமும் வடக்கு வீதியில் சுப்பையா

குருக்கள் குடும்பத்தினரும் வாழ்ந்து பரம்பரை உரிமையின் பெயரில் கோவில் பூசைகள் செய்துவந்தனர்.

1952ல் இருந்த தர்மகர்த்தாசபையினருக்கும் சுப்பை யா குருக்கள் குடும்பத்தினருக்கு உரிய உரிமை பெற்ற அன்னரத்தினம் அம்மாவிற்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கி னால் பூசகர்களினால் வழக்கு ஒன்று இல: 94 யாழ்மாவட்ட நீதிமன்றத்தில் 28-04-1952ல் தாக்கல் செய்யப்பட்டது. பின்பு 10-03-1953ல் இருபகுதியினருக்கும் இடையில் ஏற்பட்ட சமரசத்தின்படி தீர்ப்பு வழங்கப்பட்டது. கோவிலும் கோவிலைச் சார்ந்த சொத்துக்கள் யாவும் தர்மகர்த்தா சபையின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. பரம்பரை பூசை உரிமை கோவிலில் இதுவரை காலமும் பூசை செய்துவந்த பூசகர் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டது. இதன் பிரகாரம் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 1ம் திகதியில் இருந்து பூசகர் குடும்பங்கள் பூசைசெய்யும் உரிமையை மாற்றிப் பெற்றுக்கொள்வார்கள்.

மேலும் வேறு சில பிரச்சினைகளினாலும் சில ஆண்டுகள் வழக்கினாலும் மூலமூர்த்தி ஆகிய தான்தோன்றி பரமானந்தப்பிள்ளையாரும் வேறுசில பொருட்களும் களவாடப்பட்டதாலும் கோவில் பாழடைந்துகிடந்தது. பின்பு இக்கோவிலின் கட்டிடத்தில் சிலதிருத்தங்கள் செய்து 08-07-1953ல் கும்பாபிஷேகமும், மண்டலாபிஷேகமும் அச்சு வேலி சிவ ஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கால கட்டத்தில் மிக மிகப் பழைமையான தான்தோன்றிப் பிள்ளையார் விக்கிரகம் தேய்ந்து பழுதுற்றிருந்தபடியால் புதிய பிள்ளையார் விக்கிரகத்தை கர்ப்பக்கிருகத்தில் பிரதிஷ்டை செய்து பழைய பிள்ளையாரை மகாமண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப் பெற்றது. அக் கும்பாபிஷேக காலத்தில் தர்மர்கத்தா சபையில் திருவாளர்கள் ம.செல்லையா தலைவராகவும் ச.சாம்பசிவம் காரியதரிசியாகவும் க.சோமசுந்தரம் தனாதிகாரியாகவும் க.துரைச்சாமி

சி.குமாரசூரியர், நா.தம்பிராசா. ச.நாகராசா ஆகியோர் உறுப்பினர்களாகவும் இருந்தனர். கும்பாபிஷேகத்தை தொடர்ந்து வருடாந்த உற்சவங்கள் நடைபெற்று வந்தன.

நாளடைவில் தர்மகர்த்தா சபையினரின் செயற் பாடுகளில் தேக்கம் ஏற்பட்டதினால் இரு பூசகர் குடும்பங்களும் உபயங்களுக்கு உபயகாரர்களை ஒழுங்குபண்ணியும் கோவில் பூசைகளை தவறாது செய்து வந்தனர். குறிப்பாக பஞ்சாட்சரக்குருக்களின் மருமகன் இரத்தினசபாபதிக் குருக்கள் தனது தள்ளாத காலத்திலும் கோயில் கிரியைகளில் மிக கரிசனைகாட்டி வந்தார். இக்காலப் பகுதியில் கிராமத்தில் இருந்த சில குடும்பத்தினர்கள் நிதி உதவியும் பொருள் உதவியும் செய்துவந்தனர்.

பல வருடங்களாக வருடாந்த உற்சவங்கள் இல்லாமல் பொலிவிழந்து இருந்த காலத்தில் திரு. ஐ.குமாரசுவாமி அவர்கள் வருடம்தோறும் சங்காபிஷேகம் பெரும் பொருட்செலவில் செய்வித்து விநாயகரை வீதிவலம் வரச்செய்தார்.மீண்டும் காலப்போக்கில் கோவில் கட்டிடங்களிலும் மண்டப கொட்டகைகளிலும் பழுதுகள் ஏற்பட்டன. கல்வளையை பிறப்பிடமாக கொண்டவரும் மலேசியாவில் பெரும் உத்தியோகம் வகித்து ஓய்வுபெற்று நாயன்மார்கட்டில் 100வயது வாழ்ந்தவருமான திரு.இ.நாகரத்தினம் என்னும் பெரியார் கல்வளையான் அருளால் கல்வளையானை தரிசிப்பதற்காக 1964ம் ஆண்டளவில் வந்து கோவில் இருந்த நிலையைக் கண்டு மனம்வருந்தி, அக்காலத்தில் பெயரளவில் இருந்த தர்மகர்த்தா சபையினருடன் தொடர்புகொண்டு கோவிலின் திருப்பணி வேலைகளில் ஈடுபட முன்வந்தார். இக்காலத்தில் மகா சபைக்கான அங்கத்தவர்களை சேர்ப்பதில் அன்றைய நிர்வாகிகள் ஆர்வம் காட்டினார்கள். அத்துடன் 05-02-1967ல் திரு. க. துரைசாமியின் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் திரு. இ. நாகரத்தினம் அவர்கள் செயலாளராக

ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். அன்றில் இருந்து அவர் கோவிலின் வளர்ச்சிக்காக மற்றைய ஊர் பிரமுகர்களுடன் சேர்ந்து ஒத்துழைத்து வந்தார். அத்துடன் அடியவர்கள் அவருக்கு தேவையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் பூரணமாக வழங்கினர். அப்பொழுது திரு. செ.தியாகராசா அவர்கள் பொருளாளராக இருந்து கோவிலின் வளர்ச்சிக்காகவும் அடுத்துவரும் கும்பாபிஷேகத்திற்காகவும் அரும்பாடுபட்டார். இக் காலத்தில் கோவில் மண்டபதிருப்பணிகளும் கர்ப்பகிருக திருத்தம், வர்ணம் பூசும் வேலைகளும் வெகுவிரைவாக நடைபெற்றன.

திருப்பணி வேலைகளில் ஸ்தம்ப மண்டபம் மற்றும் கொட்டகை வேலைகள் திரு. இ.நாகரத்தினம் அவர்களின் சொந்தச் செலவில் திருத்தி அமைக்கப்பட்டன. வைரவர் மண்ட பத்தை திரு. ம.சுந்தரம் குடும்பத்தினர்(கொட்டாவத்தை)பொறுப் பேற்று செய்தனர். வசந்தமண்டபம் திரு. வி. பொன்னுத்துரை அவர்களாலும் குடும்பத்தினராலும் திருத்தவேலைகள் செய்யப்பட்டது. தெற்குவாசல் மண்டபம் திருமதி. பாக்கியலட்சுமி செல்வராஜா (கனகமணி) அவர்களால் செய்யப்பட்டது. யாக சாலை திரு. சீனியர் பொன்னுத்துரை அவர்களால் செய்யப்பட்டது. நாதம்பிரான் கோவில் பழைய இடத்தில் இருந்து தற்பொழுது இருக்கும் இடத்திற்கு மாற்றப்பட்டது. இதை திரு. சின்னத்துரை குடும்பத்தினர் பொறுப்பேற்றனர். அவர்களே தற்போதும் பராமரித்து வருகின்றனர்.

16-11-1967 இல் கூடிய மகா சபை கூட்டத்தில் நீதிமன்றக் கட்டளைப்படி ஒரு உபசபையும் (பனல்) தெரிவு செய்யப்பட்டது. திருப்பணிச் சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

10.05.1974ம் ஆண்டு அஷ்ட பந்தன சம்புரோக்ஷண மகாகும்பாபிஷேகம் பிரதிஷ்டா சிரோன்மணி பிரம்ம ஸ்ரீ சாமி

விஸ்வநாதக்குருக்கள் (நவாலி) அவர்களால் நிறைவேற்றப் பட்டது. தொடர்ந்து 45 தினங்கள் அபிஷேகங்கள் நடைபெற்று, 23.06.1974 இல் மண்டலாபிஷேகம் நடைபெற்றது. இவ் விழாக்காலத்தில் தர்மகர்த்தா சபையில் திருவாளர்கள் இ. நாகரத்தினம் தலைவராகவும் க.தம்பாப்பிள்ளை காரியதரிசி யாகவும் செ.தியாகராசா பொருளாளராகவும் செயற்பட்டு வந்தனர்.

மண்டலாபிஷேகம் முடிவடைந்தபின் திரு.இ.நாகரத்தினம் அவர்கள் இராஜினாமா செய்தார் திரு. க.துரைசாமி அவர்கள் ஓய்வு பெற்றார். 24.07.1974 இல் நடைபெற்ற தர்மகர்த்தா சபை கூட்டத்தில் திரு ஐ.குமாரசுவாமி அவர்கள் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். பலவருடங்களாக இடம் பெறாமல் இருந்த வருடாந்த திருவிழாக்கள் முன்பு செய்தவர்களின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டு இன்றும் சிறப்பாக நடைபெறுகின்றன. முன்பு இருந்த இருகால பூசைகள் மூன்று கால பூசைகளாக இன்றும் நடைபெற்று வருகின்றன.

நீதிமன்றத்தீர்ப்பின் பிரகாரம் ஒவ்வொரு ஜனவரி 1ம் திகதியும் பூசை மாற்றங்கள் இரு ஐயர் குடும்பங்களுக்கிடையில் மாற வேண்டி இருந்தமையும் பூசகர்கள் மாறியமையும் கோவில் பொருட்கள் கைமாற்றிகொடுக்க வேண்டி இருந்தமை போன்றவைகளால் உபயகாரர்களுக்கும் வழிபடுவோருக்கும் கஷ்டநிலைமை தோன்றியமையால் அப்போதைய தலைவர் திரு. ஐ.குமாரசுவாமி அவர்கள் தங்களுக்கிடையே பகையாளி களாக இருந்த இரு ஐயர் குடும்பத்தினருக்கும் இடையில் ஒரு சமரச நிலையை ஏற்படுத்தி அவர்களின் பூரண ஒத்துழைப்புடன் தமிழுக்கு தை மாதம் 1ம் திகதியில் இருந்து (தைப்பொங்கல்) பூசை உரிமையை அவர்களுக்கிடையில் மாற்றுவதற்கு ஆவன செய்தார். அத்துடன் இரு ஐயர் குடும்பங்களிலும் பூசை செய்ய ஆட்கள் இல்லாத பட்சத்தில் வெளியில் இருந்து ஒரு ஐயர் நிரந்தரமாக பூசை செய்வதற்கு நியமிக்க ஒத்துழைப்பு வழங்கும்

படி கேட்டார். அவர்கள் மறுத்த படியால் அவர்களே நியமிக்கும் வெவ்வேறு பூசகர்களிடம் கோயில் பொருட்கள் சபையின் ஊடாக மாற்றி கொடுக்கப்பட்டது. பூசகருக்கு தர்மகர்த்தா சபையே வேதனத்தை வழங்கினார்கள். 1974ம் ஆண்டு கும்பாபிஷேகத்தின் பின் குறிப்பாக பிரம்ம ஸ்ரீ இ.சோமாஸ் கந்தக்குருக்கள் பூசகராக இருந்த காலத்தில் கிரியைகளும் விழாக்களும் பெருகி சிறப்பாக நடைபெற்றன.

இக்காலத்தில் தலைவர் திரு. ஐ.குமாரசுவாமி அவர்கள் கொழும்பில் கோவில் பெயரில் ஒரு திருப்பணி கிளையை ஆரம்பித்து அதற்கும் தலைவராக இருந்து நிதி சேகரிப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். இக்காலத்தில் திரு. நா. அமிர்தராஜன் அவர்கள் பொருளாளராக செயல்பட்டு கோவிலில் நித்தியபூசைகள், சதுர்த்தி, திருவெம்பாவை, உற்சவங்கள் நடைபெற பெரும் பங்காற்றினார்.

23.01.1980 இல் திரு. ஐ. குமாரசுவாமி அவர்கள் இயற்கை எய்தியதின் பின் திரு. சுந்தரம் கந்தசாமி தலைவர் ஆனார். இக்காலத்தில் கல்வளையில் பிறந்து வசித்தவரும் நைஜீரியாவில் கணக்காளராக இருந்தவருமான திரு. சபாபதி பொன்னம்பலம் அவர்கள் கல்வளையானை தரிசிப்பதற்கு கல்வளைக்கு வந்தார். அப்பொழுது தலைவர் திரு. சு. கந்தசாமி அவர்களினதும் திரு. நா.அமிர்தராஜன் அவர்களினதும் விடா முயற்சியினால், நீண்ட காலமாக தேவைப்பட்ட சித்திரத் தேரையும் அதற்குரிய தேர் முட்டியையும் திரு. சபாபதி பொன்னம்பலம் அவர்கள் தானே தனியாக தன் பொறுப்பில் அமைத்து தந்து நீண்டகால கனவை நிறைவேற்றினார். இத்தேர் சிற்பக்கலாமணி அறுமுகம் ஜீவரட்ணம் குழுவினரால் உருவாக்கப்பட்டது. புதிய சித்திரத் தேர் 30.06.1985 இல் வெள்ளோட்டம் நடத்தப்பெற்றது. அத்துடன் திரு. ச.பொன்னம் பலம் அவர்களின் உபயமாக நடைபெற்று வரும் கார்த்திகை மாதப் பூசை, கார்த்திகை மாதச் சதுர்த்தி,

ஆகியவற்றின் உபயச் செலவுகளுக்காக குருந்தன் வயல் 19 பரப்பையும் மற்றும் இரு காணிகளையும் கோவிலுக்கு தந்துள்ளார்.

இவ்விதம் 1974இல் கும்பாபிஷேகத்திற்கு பின்பு கோவில் பூசைகள் சிறப்பாக நடைபெற்றன. கோவிலும் பொலிவுடன் உள்ளது. இக்காலகட்டத்தில் 8ம் திருவிழா உபயகாரர் சபையினர் கோவில் வெளிக்கொட்டகையின் இருபுறமும் பத்திகள் அமைத்து நிலத்திற்கு சீமெந்தும் போட்டும் உதவினார்கள்.

இதே வேளையில் கோவிலுக்கு நீதிமன்றம் மூலம் உரிமையாக்கப்பட்ட காணிகளில் ஒன்றை ஒருவர் ஒற்றி (ஈடு)வைத்தார். இன்னொரு காணியை இன்னொருவர் தனக்கு உரிமையாக்கிக் கொண்டார். மற்றைய காணி கேட்பார் அற்றகாணியாக மாறிவிட்டது. இக்காணிகளின் பராமரிப்பு தொடர்பாகவும் அங்கத்துவத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்றும் தர்மகர்த்தா சபை அங்கத்துவம் பரவலாக்கப்பட வேண்டும் என்றும் கோவில் பூசகர் நியமனத்தில் திடமான முடிவு எடுக்கப்பட வேண்டும் என்றும் விரும்பிய கல்வளைப் பிள்ளையார் கோவில் வழிபடும் அங்கத்தவர்களில் 77பேர் மேற்படி வேண்டுகோளை தர்மகர்த்தா சபையிடம் 07-09-1982 திகதி இடப்பட்ட விண்ணப்பத்தை சமர்பித்திருந்தனர். சபையினர் எந்த விதமான நடவடிக்கையையும் எடுக்காதபடியால் விண்ணப்பதாரிகள் அரசாங்க அதிபரின் உதவியை நாடினர். இதன் விளைவாக உதவி அரசாங்க அதிபர்களினால் விசாரணை 1985ம் ஆண்டு நடுப்பகுதி வரை நீடித்தது.

சட்டத்தரணி திரு.கு.விநோதன் அவர்கள் இரு பகுதியினர்களுடனும் ஆலோசித்து ஓர் சமரசமுடிவை உண்டு பண்ணினார். இதற்கு இணங்க அன்று தர்மகர்த்தா சபையில் இருந்த அங்கத்தவர்கள் இராஜினாமா செய்வது என்றும்

அவ்விடங்களுக்கு மாற்றம் வேண்டி விண்ணப்பித்தவர்கள் மத்தியில் இருந்து சிலரை தெரிவு செய்வது என்றும் முடிவு ஏற்ப்பட்டது. இதன்படி 21-07-1985ம் ஆண்டு உதவி அரசாங்க அதிபர் (சண்டிலிப்பாய்) திரு. க. சண்முகநாதன் அவர்கள் கல்வளைப் பிள்ளையார் கோயில் மகாசபை கூட்டத்தை கூட்டினார்.அங்கு முன்பு தீர்மானிக்கப்பட்ட சமரச முடிவை உதவி அரசாங்க அதிபர் ஆலோசனையாக கூறினார். அதை சபை ஏகமனதாக எற்றுக்கொண்டதும் அன்று இருந்த தாப்மகர்த்தா சபை அங்கத்தவர்கள் அனைவரும் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்தனர். நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்ட படிமுறைக்கு அமைய மகாசபையினரால் 7பேர் கொண்ட ஓர் உபசபை (பனல்) தெரிவு செய்யப்பட்டது. பின்பு இந்த 7பேரும் தர்மகர்த்தா சபையின் புதிய உறுப்பினர்களாக நியமனம் பெற்றார்கள். இதன் பயனாக கல்வளைப் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தா சபைக்கு திரு. வ. நடராஜா அவர்கள் தலைவராகவும் திருமதி. வி. சிவச்சந்திரன் அவர்கள் செயலாள ராகவும் திரு. நா. அமிர்தராஜன் பொருளாளராகவும் திருவா ளர்கள் க. மகேந்திரன், த.கோபாலசிங்கம் செ.நித்தியானந்தம், க.செல்லையா ஆகியோர் அங்கத்தவர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

21-07-1985ம் ஆண்டு பொறுப்பேற்ற புதிய நிர்வாக சபையினர் புதிதாக உபயங்களை ஏற்படுத்தி அவற்றிக்குரிய உபயகாரர்களையும் தெரிவு செய்து விஷேடவிழாக்கள் அபிஷேகங்கள் ஆகியவற்றை செயற்படுத்தினர். 1987ம் ஆண்டு பிற்பகுதியில் இந்திய அமைதிப்படையினரால் ஏவப்பட்ட எறிகணை வீச்சால் கோவிலில் தஞ்சம் அடைந்திருந்த நால்வர் கடும் காயத்திற்கு உள்ளானார்கள் அவர்களை யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு ஏற்றிச்சென்ற வாகனமும் கூட்டிச்சென்ற வரும் ஆக மொத்தம் 6பேர் நவாலியில் இந்திய அமைதிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். அத்துடன் கோவில் மகாமண்டபம் கிழக்குப்பக்கச் சுவர் எறிகணை வீச்சு

அதிர்ச்சியினால் பாரிய வெடிப்புக்குள்ளாகி இருகூறாக பிளந்துவிட்டது.

09-04-1988ல் கோவில் கதவுகள் உடைக்கப்பட்டு மூலஸ்தான விக்கிரகம் பெயர்க்கப்பட்டதையடுத்து பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. இதையடுத்து 27-07-1988ல் கோவில் திருப்பணிவேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. திருப்பணி ஆலோசனையின் பொழுது சுமார் 150 - 200 வருடங்களுக்கு மேற்பட்ட மூலஸ்தான பண்டிகை முழுக்க சுறண்டி புதுப்பிப்பது எனவும் மற்றைய அர்த்தமண்டபம் மகாமண்டபம் தரிசன மண்டபம் ஆகியவற்றின் நிலம் பழுதடைந்தும் சுவர்களில் கறையான் புற்றெடுத்தும் அழியும் நிலையில் இருந்தபடியால் மண்டபங்களை அத்திவாரத்துடன் முற்றுமுழுதாக எடுத்து புதிதாக கொங்கிறீற்றினால் கட்டுவது எனவும் கூரையை மணிமண்டப அமைப்பில் மூடு சாந்து போடுவது எனவும் இதற்குரிய செலவுகளை பொதுமக்களிடம் இருந்து பெறுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானத்தின் பிரகாரம் பல கோவில் கட்டிட ஒப்பந்தகாரரிடம் இருந்து வரைபடமும் அதற்குரிய மதிப்பீடும் கோரப்பட்டு கிடைத்தவற்றைப் பரிசீலனை செய்யப்பட்ட போது சித்தன்கேணி கலைநகரை சேர்ந்த ஆசிரியர் திரு.வே.கந்தசாமி (J.P) அவர்களின் வரைபடமும் மதிப்பீடும் ஏற்புடையதாக இருந்தபடியால் அவரே இக்கோவிலை இடித்து புதிதாக அமைத்துத் தரும்படி வேண்டப்பட்டார்.

27-08-1988ல் புதிதாக அத்திவாரம் இடப்பட்டது. கொழும்பில் இயங்கிய திருப்பணிக் குழு நிதி சேகரித்து உதவியது. திரு. குமாரசுவாமி விநோதன் அவர்கள் இரண்டு பகுதியாக இரண்டு லொறி இரும்புக்கம்பிகளை தந்து உதவினார்கள். மஸ்கன்ஸ் ஸ்தாபனத்தினர் 100பைக்கற் சிமெந்தை தந்துதவினார்கள். அத்துடன் தர்மகர்த்தா சபை

செயலாளர் திருமதி. வி. சிவச்சந்திரன் அவர்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களால் நடிக்கப் பெற்ற "காத்தவராயன் கூத்து" என்னும் நாடகத்தை ஒழுங்கு செய்து தானே முன் வந்து நடத்தி சுமார் ரூபா 30,000/- பணம் வரை சேர்த்துதவினார். இக்காலகட்டத்தில் பொருளாளர் திரு. நா.அமிர்தராஜன் அவர்கள் இடம்பெயர்ந்து கொழும்பு சென்றபடியால் திரு. க. மகேந்திரம் அவர்கள் பதில் பொருளா ளராக நியமிக்கப்பட்டார். இக்காலகட்டத்தில் 1990ம் ஆண்டில் யுத்தநிலைமை மோசமானதினால் சீமெந்து எடுக்க முடியாத நிலமை தோன்றியதினால் மண்டப கூரை மூடு சாந்து வேலைகள் முடித்து கட்டிட வேலைகள் நிறுத்தப்பட்டன.

1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் இறுதிப்பகுதியில் கோவில் வடக்கு மதிலில் இலங்கை விமானப்படையின் குண்டுவீச்சு மாலை 4.00மணியளவில் இடம்பெற்றது. இதனால் கோவிலின் வசந்த மண்டபம் ஏனையகொட்டகைகள் திருமஞ்சனக்கிணறு ஆகியன சேதமுற்றன. மீண்டும் 1992ம் ஆண்டு யூன் மாதம் 10ம் திகதி இரண்டாவது முறையாக இலங்கை விமானப்படையின் குண்டுவீச்சுக்கு இலக்கானது. அப்பொழுது சுற்றுமதில் வசந்தமண்டபக்கூரை கொடிஸ்தம்ப மண்டபம் ஆகியன சேதமாயின.

பின்பு பொருளாளராக கடமையாற்றிய திரு.க. மகேந்தி ரம் அவர்கள் தன்னுடைய பொறுப்பில் இருந்து விலகிக்கொண்ட தால் அவர்களின் இடத்திற்கு திரு.சு.திருநாவுக்கரசு அவர்கள் நியமிக்கப்பட்டார்.

இக்காலப்பகுதியில் கோயிலில் எந்தவிதமான கட்டிட வேலைகளும் நடைபெறவில்லை. ஆனால் சுவாமி பாலஸ்தாபனத்தில் இருந்தாலும் கொடியேற்றத்திருவிழாவை தவிர மற்றும் பூசைகள், விழாக்கள், படிப்புக்கள் ஆகியன மிகச் சிறப்பாக நடைபெற்றன. கோவில் பூசைகளுக்கு நிரந்தரமாக

ஒரு பூசகரை நியமிப்பதற்கு பல கூட்டங்களையும் நடத்தி இரு ஐயர் வீட்டினரும் வருடா வருடம் தாங்கள் நியமிக்கும் வேறு வேறு பூசகர் தான் பூசை செய்ய வேண்டும் எனவும் தர்மகர்த்தா சபை அவர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும் என்றும் மாறுபட்ட கருத்துக்களை கூறியதால் தர்மகர்த்தா சபையினர் தாங்களே நிரந்தரமாக ஒருபூசகர் பிரம்ம ஸ்ரீ சு.வெங்கடேஸ்வரக் குருக்களை நியமித்தனர். அவரே 1995ம் ஆண்டு யூலை மாதம் 15ம் திகதி வரை பூசை செய்தார். 09.07.1995ம் ஆண்டு நடைபெற்ற "முன்னேறிப்பாய்தல்" இராணுவநடவடிக்கையின் போது கோவிலில் கொடியேற்றம் தொடங்கி 8ம் திருவிழா அன்று மக்கள் ஊரை விட்டு இடம் பெயர்ந்துவிட்டார்கள். அப்போது கோவிலில் தஞ்சம் அடைந்தவர்கள் உட்பட வீதியால் போக்குவரத்துச் செய்தவர்கள் சுமார் 120 பேரை இராணுவத்தினர் கோவிலுக்குள் அடைத்து வைத்து வெளியில் காவல் இருந்தார்கள். இவர்களின் உணவுக்காக கோவிலின் அன்னதானத்திற்கும் பிள்ளையார் தண்ணீர் பந்தலுக்கும் கோவில் திருவிழா தேவைகளுக்கும் வேண்டி வைத்திருந்த உணவுப்பொருட்கள் உபயோகிக்கப்பட்டன.

நியமிக்கப்பட்ட திரு. சு. திருநாவுக்கரசு அவர்கள் கால மானதி னால் அவரின் இடத்திற்கு பொருளாளராக திரு. இ. கஜமுகன் அவர்கள் 19.12.1993இல் நியமிக்கப்பட்டார். தலைவராக இருந்த திரு. வ.நடராஜா அவர்கள் கொழும்பிற்கு இடம்பெயர்ந்து சென்றதால் அவரின் இடத்திற்கு திரு. செ.நித்தியானந்தம் அவர்கள் தலைவராகவும், திரு. செ.மாணிக்கவாசகர் உபதலைவராகவும் 07.11.1993 இல் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். செயலாளராக இருந்த திருமதி வி. சிவச்சந்திரன் அவர்கள் வசதியீனம் காரணமாக பதவி விலகிக்கொண்டதால், உபசெயலாளராக இருந்த திரு. க. செல்லையா அவர்கள் செயலாளராகவும், திரு. ச. சிறிஸ்கந்தராசா அவர்கள் உபசெயலாளராகவும் நிய

மிக்கப்பட்டார்கள். திரு. நா.கணபதிப்பிள்ளை அவர்கள் சபை உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

1993 1994 இல் கோவிலில் வருடாந்த மகோற்சவங்கள் நடைபெறவேண்டிய காலப்பகுதியில் திருவிழாவிற்கு பதிலாக விஷேச அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. 1994ம் ஆண்டு நாட்டின் நிலமை சீரற்று இருந்தாலும் தர்மகர்த்தா சபையின் புதிய தலைவர் திரு. செ.நித்தியானந்தம் அவர்களின் தலைமையில் கோவிலின் திருப்பணி வேலைகள் புது உத்வேகத்துடன் நடைபெறத்தொடங்கின. இதன் பயனாக ஆரம்பிக்கப்பட்ட திருப்பணி வேலைகள் பூர்த்தியடைந்ததும் அல்லாமல் புதிய வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. பல காலமாக பாழடைந்து இருந்த கல்வளை எனும் பாரிய கேணியும் பெரும் பணச்செலவிலும் சிரமதானத்தின் மூலமும் பழுதுபார்க்கப்பட்டு புது மெருகூட்டப்பட்டது. அந்திரான் சின்னத்தம்பி குடும்பத்தின் உபயமாக திருக்குளத்தை அண்டி ஒரு அழகான தீர்த்த மண்டபமும். கல்வளை இராமன் குடும்பத்தின் உபயமாக மடைப்பள்ளிக்கு அருகாமையில் ஒருபாரிய நீர்த்தாங்கியும் அமைக்கப்பட்டன.

கோவிலில் புதிய கட்டிடங்கள் தோன்றியதும் அல்லாமல் புதிய மூர்த்திகளும் இடம்பெற்றுள்ளன. தனிக்கோவிலின் மூலஸ்தானத்தை பார்த்தபடி சண்டேஸ்வரர் கோயில் அமைக்கப்பட்டது. பல காலமாக இயந்திரமுறையில் இருந்து வந்த மனோன்மணி அம்மனுக்கு தாமிர விக்கிரகம் ஒன்றை திரு. வே. அரசகுலசூரியர் செய்துதந்துள்ளார்.

கல்வளைப் பிள்ளையார் கோவில் இன்று என்றும் இல்லாத வகையில் கண்ணையும் உள்ளத்தையும் கவரும் விதத்தில் சகல பொலிவும் பெற்றும் தோற்றம் அளிக்கின்றது. இப் பெரும் கைங்கரியம் எறிகணைவீச்சுக்கள் விமானத் தாக்குதல்களுக்கு மத்தியிலும் இலகுவாக கைகூடியதிற்கு

கல்வளை ஐங்கரன் அருளால் அடியார்கள் (உள்ளூர், வெளியூர் இடம்பெயர்ந்த மக்களும், வெளிநாட்டில் வாழும் சண்டிலிப்பாய் மக்களும்) முன்வந்து தாராளமாக வழங்கிய பெரும் நிதியும் தர்மகர்த்தா சபையின் கௌரவ உத்தியோகத்தர்களின் அயராத முயற்சிகளும் கல்வளைவாழ் இளைஞர்களின் பயன் கருதா அரும்பெரும் தொண்டுகளும் சிறப்பான சேவையும் உதவின.

இவை எல்லாவற்றிக்கும் சிகரம் வைத்தாற் போல் மகா குடமுழுக்குக்கு ஆயத்தமாக 31-03-1995இல் இருந்து 04-04-1995 வரை நவகுண்ட பூர்வாங்க கிரியைகளும் 05-04-1995 இல் மகா கும்பாபிஷேக பெருவிழாவும் பிரம்ம ஸ்ரீ சோ.சந்திர காந்தக்குருக்கள் தலைமையில் பல சிவச்சாரிகளினால் சிறப்பாக நடைபெற்றது. உடனே பெரும் மழையும் பொழிந்தது. குடமுழுக்கு அன்று நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஸ்ண ஐயரும் (யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர்) சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி (j.p) அவர்களும் ஆசியுரைகள் வழங்கி வைபவத்தை மேலும் சிறப்பித்தனர். அதனைத்தொடர்ந்து 48நாட்கள் மண்டலாபி ஷேகமும் அதனைத் தொடர்ந்து 1008சங்காபிஷேகமும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

# செய்யப்பட்ட திருப்பணி வேலைகள்

1. மூலஸ்தான ஸ்தூபி ஒரு பகுதி அகற்றி, முழுப்பகுதியும் திருத்தி அமைக்கப்பட்டது.
2. அர்த்தமண்டபம், மகா மண்டபம், தரிசன மண்டபம் ஆகியன அகற்றி புதியதாக அமைக்கப்பட்டன.
3. தெற்கு வாசல் எழுந்தருளி விக்கிரகங்கள் இருக்கும் இடத்திற்கு மேலாக அழகான மூன்று கலசங்கள் கொண்ட புதிய ஸ்தூபி அமைக்கப்பட்டது.
4. இவற்றுக்குரிய பாரிய புதிய கதவுகளும் அமைக்கப்பட்டது.
5. பழைய தான்தோன்றி பரமானந்த பிள்ளையாருக்கு தரிசன மண்டபத்திற்குள் தென்மேற்கு மூலையில் அழகிய சிறிய கோயில் அமைக்கப்பட்டு சுவாமி பிரதிஷ்டை செய்யப் பெற்றது.
6. தரிசன மண்டப முகப்பில் கண்ணைக் கவரும் வகையில் மிகஅழகான மகரதோரணம் அமைக்கப்பெற்றது.
7. ஸ்தம்ப மண்டப பழுதடைந்த நிலம் உயர்த்தி திருத்தி அபிஷேக நீர் வெளியே செல்லும் வகையில் வாய்க்காலுடன் அமைக்கப்பட்டது.
8. விமான தாக்குதலினால் சேதமுற்ற மதில்கள், கதவுகள் புதிதாகவும் திருத்தியும் சுவர்பூச்சு வேலைகளும் செய்யப்பட்டது.
9. இரண்டாவது தடவை நடைபெற்ற விமான தாக்குதலினால் சேதமுற்ற திருமஞ்சனக்கிணறு திருத்தி அமைக்கப்பட்டது.
10. மூலஸ்தான அபிஷேகநீர் கோமுகை வழியாக வெளியே செல்வதற்கு வாய்க்கால்கள் அமைக்கப்பட்டது.
11. மண்டபக்கூரைகளில் இருந்து மழைநீர் வெளியேறுவதற்குரிய நீர்த்தாரையும் வாய்க்கால்களும் அமைக்கப்பட்டது.
12. குருக்கள் வாசஅறை, களஞ்சிய அறை, மடப்பள்ளியறை, கிணற்றுஅறை ஆகியன திருத்தம் செய்யப்பட்டது.
13. பழைய காலத்து பாரிய தூண்கள் பூச்சுவேலைகள் செய்யப்பட்டது.

14. சண்டேஸ்வரருக்கு ஓர் ஆலயம் அமைக்கப்பட்டு சண்டேஸ் வரர் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.
15. நாகதம்பிரான் ஆலயம் திருத்தி அமைக்கப்பட்டது.
16. 102 வருடங்கள் பழைமை வாய்ந்த மணிக்கூட்டு கோபுரம் திருத்தி அமைக்கப்பட்டது.
17. சிதைந்து அழிந்து இருந்த கல்வளை எனும் திருக்குளம் பாரிய செலவில் திருத்தி அமைக்கப்பட்டது.
18. தீர்த்த மண்டபம், நீர்த்தாங்கி புதியதாக அமைக்கப்பட்டது.
19. வெளிவீதியின் மேற்கு பக்கத்தில் பெரிய பிள்ளையார் சிலை அழகான மண்டபத்துடன் வீதியால் செல்வோர் வணங்கு வதற்கு ஏதுவாக உண்டியலுடன் அமைக்கப்பட்டது.
20. வரகவி சின்னத்தம்பி புலவருக்கு (செயதுங்க மாப்பாண முதலி) ஓர் அழகான திருவுருவம் அமைக்கப்பெற்றது. (1995 யூலை மாதத்தில் சில விசமிகளால் சிலை சேத மாக்கப்பட்டுவிட்டது.)

சங்காபிஷேகம் நடைபெற்றதில் இருந்து மூன்றுகால நித்திய பூஜைகளும் நடைபெறத்தொடங்கின. தொடர்ந்து 02-07-1995ம் நாள் வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பம் ஆகியது. முதல்முறையாக 6ம் திருவிழா அன்று திருக்குளத்தில் மின்சார அலங்காரங்களுடன் வசந்த உற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெற்றமை கண்கொள்ளக்காட்சியாக இருந்தது. 8ம் திருவிழா (09-07-1995) வெகு விமர்சையாக ஆரம்பமான பொழுது அளவெட்டி பகுதியில் இருந்து "முன்னேறிப் பாய்தல்" என்ற பெயருடன் எறிகணைகள் சண்டிலிப்பாய் பகுதியில் வந்து விழத்தொடங்கின. மக்கள் பயத்தில் கிலி கொண்டு சிதறி மானிப்பாய் பகுதியை நோக்கி ஓடத்தொடங்கினார்கள். இவ்எறிகணை வீச்சில் சிலர் கொல்லப் பட்டார்கள். பலர் காயப்பட்டார்கள். பல வீடுகள் சேதம டைந்தன. கல்வளைப்பிள்ளையார் கோயிலில் தஞ்சமடைந்து இருந்த சுமார் 120 மக்களை இலங்கை இராணுவம் கோவிலுக்குள் விட்டு பூட்டி காவல் இருந்தார்கள். மேலதிகமாக

வீதியால் ஓடிக்கொண்டிருந்த மக்களையும் அழைத்து வந்து கோயிலுக்குள் விட்டார்கள் இதனால் வருடாந்த உற்சவம் பாதிப்பு அடைந்தது. கடைசி 4 திருவிழாவிற்கும் சுவாமி வீதியுலா வரவில்லை. தேர் ஓடவில்லை. தீர்த்த உற்சவமும் கொடியிறக்கமும் உள்கோயிலுக்குள்ளேயே நடைபெற்றன. கொடியிறக்கம் நடைபெறும் பொழுது பிரதி பாதுகாப்பு அமைச்சர் மேஜர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த கோவிலுக்கு விஜயம் செய்து அருச்சினை செய்வித்தார். மறுதினம் அமைச்சர் உடுகம்பாவும் கோவிலுக்கு விஜயம் செய்து அடைக்கப் பட்டிருந்த மக்களை பார்வையிட்டார். சிலநாட்கள் சென்ற பின்பு "புலிப் பாய்ச்சல்" நடவடிக்கையினால் இலங்கை இராணுவம் பெரும் உயிர் இழப்புக்களுடன் சண்டிலிப்பாய் பகுதியை விட்டு தப்பி ஓடிவிட்டார்கள். இதனை தொடர்ந்து கோயிலில் அடைக்கப்பட்டிருந்த குருக்கள், பூசகர், மற்றும் மக்கள் அனைவரும் தமது இடங்களுக்கு சென்றார்கள். கோவிலின் நித்திய பூசகர் பிரம்ம ஸ்ரீ சு. வெங்கடேஸ்வரக்குருக்கள் இடம் பெயர்ந்து வன்னிக்கு சென்றுவிட்டார்.

இக்காலப்பகுதியில் கோவிலில் தீட்டுத்துடக்குகள் ஏற்பட்ட படியாலும் பூசகர்கள் இடம்பெயர்ந்த படியாலும் பூசைகள் நடைபெறவில்லை. கோவிலும் பூட்டப்பட்டுவிட்டது. பின்பு 1995 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணம் வலிகாமம் பகுதியில் உள்ள அனைத்து மக்களும் ஒரே நாளில் இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வன்னி ஆகிய பகுதிகளுக்கு சென்றுவிட்டார் கள். இதன் பின் சில மாதங்கள் கழிந்த பின்பு 20-04-1996ல் இப்பகுதி மக்கள் மீளக்குடி அமர்ந்தார்கள். தர்மகர்த்தா சபையினர் எடுத்த முயற்சியாலும் பொதுமக்களின் ஆதரவினாலும் 05-06-1996இல் சீரணி நாகபூசணி அம்மன் தேவஸ்தான பிரதம குரு. பிரம்ம ஸ்ரீ சி.பாலசண்முகக்குருக்கள் பிராயசித்த அபிஷேகம் செய்து நித்திய பூசைகளையும் தொடக்கி வைத்தார். பிரம்ம ஸ்ரீ பா.மனோரஞ்சிதசர்மா அவர்கள்

நித்திய பூசகராக நியமிக்கப்பட்டார். 05-06-1996இல் இருந்து கோவிலில் நித்திய, நைமித்திய உற்சவங்கள் இன்று வரை சிறப்பாக நடைபெறுகின்றன. 2000 ஆண்டளவில் வைரவர் கோவிலுக்கு முன்புறமாக ஓர் பெரிய கொட்டகை அமைத்து நிலத்திற்கு சீமெந்து போடப்பட்டது. இக்காலகட்டத்தில் பிரம்ம ஸ்ரீ பா.மனோரஞ்சிதசர்மா அவர்கள் திருகோணமலைக்கு சென்றுவிட்டார். பின்பு நாவற்குழியில் இருந்து இடம்பெயர்ந்து கட்டுடைபிள்ளையார் கோவிலில் பூசகராக இருக்கும் பிரம்ம ஸ்ரீ புஸ்பராசசர்மா அவர்கள் சுமார் 7மாதகாலமாக பூசை செய்து விலகிக்கொள்ள தற்பொழுது பிரம்ம ஸ்ரீ முரளிக் குருக்கள் அவர்களும் மருமகனும் நித்திய பூஜைகளையும் அபிஷேக ஆராதனைகளையும் செய்து வருகிறார்கள்.

தற்பொழுது சேதமுற்றிருக்கும் மடைப்பள்ளி அறை, களஞ்சிய அறை ஆகியன முற்றாக அகற்றி புதிய மடைப்பள்ளி, வசந்த மண்டபத்திற்கு நேராக சுருக்குகேற்றுடன் கூடிய புதிய தெற்குவாசல், பூசகர் தங்கும் அறை களஞ்சிய அறையும், குருக்கள்மார்கள் தங்குவதற்கு இரண்டு அறைகளும், கழிவறையும் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விமானத்தாக்குதலினால் சேதமுற்ற வசந்த மண்டபத்தையும் புதிப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு கட்டிமுடிக்கப் பட்டுள்ளன.

மேலே உள்ள வரலாறு எமக்கு கிடைத்த ஆவணங்களைக் கொண்டும் மற்றும் புத்தக வெளியீடுகள் நேரடியாக தெரிந்த சம்பவங்களைக்கொண்டும் இவ் வரலாற்றை எழுதியுள்ளோம். இன்னும் சேர்க்கப்படவேண்டிய தகவல்கள் யாருக்கேனும் தெரிந்தால் அவற்றை எமக்கு தெரிவித்தால் எதிர்வரும் காலங்களில் சேர்த்துக்கொள்ளலாம்.

## தற்போதைய தர்மகர்த்தா சபை

| | | |
|---|---|---|
| திரு. செ.நித்தியானந்தம் | - | தலைவர் |
| திரு. க. செல்லையா | - | செயலாளர் |
| திரு. க. தம்பாப்பிள்ளை | - | பொருளாளர் |
| திரு.ச. சிறீஸ்கந்தராசா | - | உப பொருளாளர் |
| திரு. ஆ கதிரவேலு | - | உறுப்பினர் |
| திரு. த. தர்மரத்தினம் | - | உறுப்பினர் |
| திரு. செ.செல்வராசா | - | உறுப்பினர் |

நன்றி

கல்வளைப்பிள்ளையார் கோவில்
தர்மகர்த்தா சபை

கல்வளை
சண்டிலிப்பாய்
02-01-2003

சுபம்



1995 இல் ஸ்தூபிகளுக்கு கும்பாபிஷேகம் நடைபெறும் காட்சி



1995ம் ஆண்டு ஆறாம் திருவிழாவின் போது திருக்குளத்தில் நடைபெற்ற
வசந்த உற்சவக் காட்சி



01.07.2004 தேர்த்திருவிழா



பல நூற்றாண்டுகளுக்கு முன்
கல்வளையந்தாதி பாடிய
சின்னத்தம்பி புலவர்

உ

சிவமயம்

# க ல் வ ளை ய ந் தா தி

## மூலமும் உரையும்

காப்பு.

**தார்கொண்ட பூமல் லிகைச் சேக்கை யிற்றும்பி சாலப்பம்புஞ்**
**சீர்கொண்ட கல்வளை யந்தாதி பாடத் திரைக்கடல்சூழ்**
**பார்கொண்ட பல்லுயிர்க் கானந்த மும்மதம் பாயுங்கும்பக்**
**கார்கொண்ட கம்பக் களியானை முன்னின்று காப்பதுவே.**

**தார் கொண்ட பூமல்லிசைச் சேக்கையில் தும்பி சாலப்பம்பும்**
**சீர்கொண்ட கல்வளை அந்தாதி பாடத் திரைக்கடல்சூழ்**
**பார் கொண்ட பல்லுயிர்க்கு ஆனந்த மும்மதம் பாயும் கும்பக்**
**கார் கொண்ட கம்பக் களியானை முன்னின்று காப்பதுவே.**

தார் - நிரை, சேக்கை- படுக்கை, தும்பி- வண்டு, பம்பும் - ஒலிசெய்யும், கும்பம் -மத்தகம்.

**இதன் பதப்பொருள்: தார் கொண்ட மல்லிகைப் பூச் சேக்கையில்-** நிரை நிரையேயுள்ள மல்லிகைப் பூக்களாகிய படுக்கையில், **தும்பி சாலப் பம்பும் சீர் கொண்ட-** வண்டுகள் மிகவும் ஒலியைச் செய்யும் சிறப்பையுடைய, **கல்வளை அந்தாதி பாட-** கல்வளை யென்னும் திருப்பதியிற் கோயில்கொண்டருளிய விநாயகக் கடவுளின்மேல் அந்தாதியாகிய தோத்திரப்பிர பந்தத்தைத் தமியேன் பாடுவதற்கு, **திரைக் கடல் சூழ் பார்கொண்ட பல்லுயிர்க்கு-** திரைகள் மலிகின்ற சமுத்திரஞ் சூழ்ந்த இப்பூவுலகம் தன்னகத்துட்கொண்ட பல்வகையான ஆன்மகோடிகட்கு, **ஆனந்த மும்மதம் பாயும்-** பேரானந்த வெள்ளமாகிய மூவகை மதசலம் பெருகும், **கார்கொண்ட கும்பம் -** கரிய நிறத்தையுடைய மத்தகத்தினையும், **களி-** களிப்பினையும் உடைய, **கம்பயானை முன்னின்று காப்பது-** தறியிற் கட்டப்பட்டுள்ள யானையாகிய விநாயகக்கடவுள் (எவ்வகை இடையூறும் வாராவண்ணம்) முன்னின்று காத்தருளுவர் என்றவாறு,

முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. ஆனந்தத்தைச் செய்வதை ஆனந்தமென்று காரணத்தைக் காரியமாக உபசரித்தார். யானை என்று உபசரித்ததற் கேற்பக் கம்பத்திற் கட்டப்படுதல் கூறப்பட்டது. அடியாருடைய உள்ளமாகிய கம்பத்திற் கட்டப்படுதலைக் குறித்தவாறு, கார் - இனஅடை, ஏ- ஈற்றசையோடு தேற்றமுமாம். இது, ஆசிரியர் தாம் பாடும்படி எடுத்துக் கொண்ட நூல் எவ்வகையான இடையூறுமின்றி இனிது முற்றும்வண்ணம் தமது குலதெய்வமும், பாட்டுடைத் தலைவரும், தம்மை வழிபடுவோர்க்கு வரும் விக்கினங்கள் எவற்றையும் நீக்கியருளுபவரும் ஆகிய கல்வளைப் பிள்ளையாரை வாழ்த்தியவாறாம்.

**நாம் பாடத் தொடங்கிய கல்வளை யந்தாதி இனிது முற்றும்வண்ணம் அந்தக் கல்வளைப் பதியில் எழுந்தருளிய விநாயகப் பெருமானே காத்தருளுவர் என்றபடி.**

**ஒன்றா யிருசுடர் முத்தொழி னான்மறை யோதுமைந்தாய்**
**நன்றாய வாறங்கம் யாவுக்குங் காரண நாதனுமாய்**
**நின்றாய்நின் கல்வளை யந்தாதி பாடவென் னெஞ்சகத்துப்**
**பொன்றா வருள்புரி வாயானை மாமுகப் புங்கவனே.**

**ஒன்றாய் இருசுடர் முத்தொழில் நால்மறை ஓதும் ஐந்தாய்**
**நன்றாய ஆறங்கம் யாவுக்கும் காரண நாதனுமாய்**
**நின்றாய் நின் கல்வளை அந்தாதி பாட என் நெஞ்சகத்துப்**
**பொன்றா அருள் புரிவாய் யானை மாமுகப் புங்கவனே.**

பொன்றா – குறையாத,

**இ-ள: ஒன்றாய்** - ஏகமூர்த்தியாயும், **இரு சுடா(ஆய்)-** சூரிய சந்திரர் என்னும் இரு சுடர்களாயும், **முத்தொழில் (ஆய்)-** படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் தொழில்களைச் செய்யும் பிரம விஷ்ணு உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளாயும், **நான்மறை(யாய்)-** இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களாயும், **ஓதும் ஐந்தாய்** - சொல்லப்படுகின்ற நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம் ஆகிய

பஞ்ச பூதங்களாகியும், **நன்றாய ஆறு அங்கம்(ஆய்)-** நன்மையாகிய மந்திரம் வியாகரணம் நிகண்டு சந்தோபிசிதம் நிருத்தம் சோதிடம் என்னும் வேதாங்கம் ஆறுமாய், **யாவுக்கும் காரணநாதனுமாய்-** எல்லாவற்றிற்கும் காரணகருத்தாவுமாய், **நின்றாய்-** நின்றருள்பவரே, **யானை மா முகப் புங்கவனே-** மேன்மை பொருந்திய யானை முகப்பெருமானே, **நின் கல்வளை அந்தாதி பாட** – தேவரீர் எழுந்தருளியிருக்கும் கல்வளைப் பதியின் மகத்துவத்தை விளக்கும் இந்த யமக அந்தாதியைத் தமியேன் இடையூறின்றி இனிது பாடும்வண்ணம், **பொன்றா அருள் என் நெஞ்சத்துப் புரிவாய்-** அடியேன் மனத்திற் கெடுதலில்லாத திருவருளைத் தேவரீர் பாலித்தருளல் வேண்டும் எ– று.

ஒன்று, ஐந்து, முத்தொழில் ஆகுபெயர்கள், இச்செய்யுளில் ஒன்று முதல் ஆறு வரையிலுள்ள எண்கள் முறையே வருதலின் சிறப்பை நோக்குக. சிவத்திற்கும் விநாயகப்பெருமானுக்கும் பேதமில்லையாதலின், "ஒன்றாய் ........ ............நாதனுமாய் நின்றாய்" எனச் சிறப்பித்துக் கூறப்பட்டது. சிறியேன் தேவரீர் மீதே பிரபந்தம் பாடத் துணிந்தேன் ஆதலின் அந்த அபிமானம் பற்றியேனுந் தமியேனுக்கு அனுக்கிரகஞ் செய்யவேண்டு மென்பார் " நின் கல்வளை யந்தாதி பாட.......... பொன்றா அருள்புரி...." என்றார். இதுவும் விநாயக வணக்கங் கூறியவாறாம்.

**ஏகமாய் எல்லாமாய் நின்ற விநாயகப் பரம்பொருளே தேவரீர்மீது கல்வளை யந்தாதி யென்னுந் தோத்திரப் பிரபந்தத்தைப் பாடுவதற்குத் தேவரீரே தமியேனுக்கு அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்றபடி..**

## நூல்.

**கற்பக நாடர் பதின்சதக் கண்ணனெண் கண்ணன்றொழுங்**
**கற்பக வஞ்சி யிடக்கண்ணன் றந்தமுக் கண்ணனன்றிற்**
**கற்பக வேலெறி வேடுணை வன்கல் வளைப்பதிவாழ்**
**கற்பக நன்னிழல் சேர்ந்தார் கருக்கரை கண்டவரே. (1)**

**கற்பக நாடர் பதின்சதக்கண்ணன் எண்கண்ணன் தொழும்**
**கற்புஅக வஞ்சி இடக்கண்ணன் தந்த முக்கண்ணன் அன்றில்**
**கல்பக வேல் எறி வேள் துணைவன் கல்வளைப் பதிவாழ்**
**கற்பக நன்னிழல் சேர்த்தார் கருக் கரை கண்டவரே.**

பதின்சதக்கண்ணன்- ஆயிரம் கண்உடைய இந்திரன், கற்பக- கல்பக- கிரவுஞ்சமலை பிளக்கும்படியாக.

**இ-ள்: கற்பக நாடர்**- கற்பக விருக்ஷத்தையுடைய விண்ணாடராகிய தேவரும், **பதின்சதக் கண்ணன்**- ஆயிரங்கண்ணனாகிய இந்திரனும், **எண் கண்ணன்** - பிரமதேவனும், **தொழும்** - வணங்கும், **கற்பு அக வஞ்சி இடக்கண்ணன் தந்த முக்கண்ணன்**- கற்பையுடைய திருவுளத் தைக்கொண்ட வஞ்சிக்கொம்பு போலும் உமாதேவியாரை வாமபாகத்தில் உடையராகிய சிவபெருமான் பெற்றருளிய முக்கண்ணரும், **அன்றில் கல் பக வேல் எறி வேள் துணைவன்**- அன்றிற் பறவையின் பெயராகிய கிரௌஞ்சம் என்னும் மலை பிளக்க வேலாயுதத்தை எறிந்த முருகக் கடவுளது துணைவருமாகிய, **கல்வளைப் பதிவாழ் கற்பக நல்நிழல் சேர்ந்தார் கரு கரை கண்டவரே** –கல்வளைப் பதியில் எழுந்தருளியிருக்கின்ற கற்பக விநாயகரது நல்ல திருவடி நிழலைத் தியானித்தவர் பிறவி யென்னுங் கடலின் கரையை அடைந்தவராவர்.

அன்றிற்கல் ஒரு குறிப்புமொழி. சேர்தல்- இடையறாது சிந்தித்தல். ஆதலின், சேர்ந்தார் என்பதற்குத் தியானித்தவர் எனப் பொருள் கொள்ளப்பட்டது. கரை யென வருதற்கியைய, பிறவி கடலெனப்பட்டது. இனி கற்பக நன்நிழல் என வருதல்பற்றிப் பிறவியாகிய வெய்யிலின் எனப் பொருள் கோடலுமொன்று, திருவடி வருவிக்கப்பட்டது. கண்டவரே யென்பது துணிவு பற்றிவந்த இறந்தகாலம், " நஞ்சுண்டாயோ செத்தாய்" என்பது போல்.

**பிரமா இந்திரன் முதலாந் தேவர்களால் வணங்கப் படும் பரமசிவனுடைய திருக்குமாரராயுள்ள கல்வளைப் பதி விநாயகப் பெருமானாருடைய திருவடிகளைத் தியானிப்போர் பிறவித் துன்பத்தை யடையார் என்றபடி.**

**கண்டலம் போதைப் புளினமென் றோர்ந்துகங் கம்பதுங்கிக்
கண்டல மர்ந்து சிறகாற்றுங் கல்வளைக் கற்பகநின்
கண்டல மூன்று மெனையாள்பொற் பாதமுங் காணவிண்ணா
கண்டலன் போற்கண் படைத்திலன் வாசக் கமலத்தனே. (2)**

**கண்டலம் போதைப் புள்ளினமென் றோர்ந்து கங்கம் பதுங்கிக்
கண்டல் அமர்ந்து சிறகாற்றும் கல்வளைக் கற்பக நின்
கண்தலம் மூன்றும் எனைஆள் பொற்பாதமும் காண விண் ஆ
கண்டலன் போல் கண்படைத்திலன் வாசக் கமலத்தனே.**

கண்டல்- தாளைமரம், கங்கம்- பருந்து, ஆகண்டலன் - இந்திரன்

இ-ள் : **கங்கம் கண்டலம்போதை புள் இனம் என்று ஓர்ந்து-** பருந்து தாழம்பூக்களைத் ( தான் பக்ஷித்தற்கு உரிய ) பறவை இனம் என்று கருதி, **கண்டல் பதுங்கி அமர்ந்து சிறகு ஆற்றும்-** (அவற்றைக் கவரவென்று) கண்டன் மரத்திற் பதுங்கியிருந்து சிறகை ஆற்றப்பெறும், **கல்வளைக் கற்பக** - கல்வளைப் பதியில் எழுந்தருளியிருக்குங் கற்பக விநாயகரே, **நின் கண்டலம் மூன்றும்-** நுமது கண்கள் மூன்றையும், **எனை ஆள் பொன் பாதமும் காண-** என்னை ஆண்டருளுகின்ற பொன்போலுந் திருவடியையும் (யான்) காண, **வாசக் கமலத்தன்-** வாசனை பொருந்திய தாமரைப் பூவிலிருக்கின்ற பிரமதேவன், **விண் ஆகண்டலன் கண்போல்** - சுவர்க்கலோகத்திலுள்ள இந்திரனது ஆயிரங் கண்களைப் போல், **படைத்திலன்-**(எனக்குப்) படைத்தானல்லன் எ-று.

புள்ளினம் புளின மென ள கரம் தொக்கது.

**கல்வளைத்தலத்தில் எழுந்தருளிய கற்பகப் பிள்ளையாரே. தேவரீருடைய அருளொழுகுந் திருவிழி களையும் ஆண்டருளுந் திருவடிகளையும் தமியேன் கண்ணால் தரிசித்தற்கு இந்திரனுக்குப் போல ஆயிரங் கண்களைப் பிரமன் தமியேனுக்குப் படைத்திலனே யென்றபடி.**

கவானரம் பையஞ் சுரும்பு விரும்பு கருங்குழற்போ
கவானரம் பைக்குலம் போற்றிட வாழ்தல்கண் ணேனினிச்சங்
கவானரம் பைந்கத லிக்கனி சிந்திடுங் கல்வளைப்புங்
கவாநரம் பைத்திகழ் யாழ்க்கூற் றுமையருள் காதலனே (3)

கவான் அரம்பை அம்சுரும்பு விரும்பு கருங்குழல் (போ)
போக வான் அரம்பைக்குலம் போற்றிட வாழ்தல் கண்ணேன்இனிச்(ச
சங்க வானரம் பைங்கதலிக் கனிசிந்திடும் கல்வளைப் (புங்)
புங்கவா நரம்பைத்திகழ் யாழ்க் கூற்று உமையருள் காதலனே

கவான் - தொடை, அரம்பை - வாழை, கண்ணேன்- மதிக்க மாட்டேன்.

இ-ள்: சங்க வானரம் - கூட்டமான குரங்குகள், **பைங்கதலிக் கனி சிந்திடும்**- பசிய வாழைகளின் கனிகளைச் சிதைக்கின்ற, **கல்வளைப்புங்கவா**-கல்வளைத் தலத்திற் கோயில் கொண்டருளிய பெருமானே, **நரம்பு திகழ் யாழ்க்கூற்று உமை அருள் காதலனே**- நரம்புகள் பொருந்திய யாழின் ஓசையை ஒத்த இனிய வார்த்தையை யுடைய உமாதேவியார் பெற்றருளிய மூத்த திருக்குமாரரே, **கவான் அரம்பை**- தொடையாகிய வாழைத்தண்டையும், **சுரும்பு விரும்பு அம் கருங்குழல்**- வண்டுகள் விரும்புகின்ற அழகிய கரிய கூந்தலையும் உடைய, அரம்பைக் குலம் போற்றிட- தேவமகளிர் கூட்டம் துதிக்க, **போக வான் வாழ்தல்**- போகங்களை அனுபவித்தற்கு இடமாகவுள்ள விண்ணுலகத்தில் வாழ்தலையும், **இனி கண்ணேன்** - இனி ஒரு போதும் பெரும் பேறென மதிக்கமாட்டேன். எ– று,

அரம்பை போகம், யாழ் என்பன ஆகுபெயர்கள். வாழ்தல் என்பதில் சிறப்பும்மை விகாரத்திற் றொக்கது. நரம்பைத் திகழ் என்றவிடத்து ஐ சாரியை.

**சகல செல்வங்களும் பொருந்திய கல்வளைப் பதியில் எழுந்தருளிய பெருமானே, இந்திரபோகத்தையும் வேண்டேன்; தேவரீருடைய திருவடிப் பேற்றையே வேண்டிநிற்கின்றேன் என்றபடி.**

**அருளத்த னந்து சிலைகதை வாள்சுட ராழிகொள்ளை**
**யருளத்த னந்தந் தெரியா வகைநிற்கு மைம்முகனீன்**
**றருளத்த னந்த வனஞ்சூழுங் கல்வளை யண்ணலடி**
**யருளத்த னந்தரம் வாழ்வானென் றால்வினை யஞ்சிடுமே.** (4)

**அருள் அத்தன் நந்துசிலை கதை வாள் சுடர் ஆழிகொள் ஐ**
**யருளத்தன் அந்தம் தெரியா வகை நிற்கும் ஐம்முகன் ஈன்று**
**அருள்அத்தன் நந்தவனம் சூழும் கல்வளை அண்ணல் அடியர்**
**உளத்து அனந்தரம் வாழ்வான் என்றால் வினை அஞ்சிடுமே.**

நந்து- சங்கு, ஆழி- சக்கரம்

**இ-ள்: அருள் அத்தன்-** அருட்செயலையுடைய அபயம் வரத மாகிய திருக்கரங்களையுடையவரும், **நந்து சிலை கதை வாள் சுடர் ஆழி கொள் ஐயர் உள** –சங்கு வில் தண்டு வாள் ஒளிபொருந்திய சக்கரம் என்னும் பஞ்சாயுதங்களைக் கொண்ட தலைவராகிய மகாவிஷ்ணுதேட, **தன் அந்தம் தெரியா வகை நிற்கும்-** தமது அடி அந்தவிஷ்ணுவுக்குப் புலப்படா வண்ணம் பரஞ்சோதியாய் நின்றருளிய, **ஐம்முகன் ஈன்று அருள் அத்தன்-** ஐந்து திருமுகங்களையுடைய சிவபெருமான் தோற்றுவித்தருளிய தெய்வம், **நந்தவனம் சூழுங் கல்வளை அண்ணல்-** பூந்தோட்டங்கள் சூழ்ந்துள்ள கல்வளைப்பதியிற் கோயில்கொண்ட பெருமான், **அடியர் உளத்து அனந்தரம் வாழ்வான்-** அடியார் மனத்தில் அநுதினமும் வசிப்பவர், **என்றால்-** என்று (இப்படித் ) துதித்தால், **வினை அஞ்சிடும்** - அங்ஙனந் துதிப்போரைத் தீவினை அணுகுதற்குப் பயப்படும்.

உள்ள என்பது உளவெனவும், தன்னந்தம் தனந்த மெனவும், நந்தனவனம் நந்தவனமெனவும் தொக்கு வந்தன. அருள் அத்தன் என்பதற்குத் திருவருளோடு கூடிய பரமபிதா எனினுமாம், ஐம்முகன்- ஈசானம் தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் ஐந்து திருமுகங்களைக் கொண்ட சிவன்.

**திருமால் தேடி யறியாத சிவபிரானின் திருக்குமாரரே கல்வளைப் பெருமானே என்று துதிப்பவரைத் தீவினை யணுகாதென்றபடி.**

அஞ்சத் திரத்தன் முழுவென வேகொதித் தார்த்துரப்பி
யஞ்சத் திரத்தந் தகன்வரும் போதுன் னபயநடை
யஞ்சத் திரத்த வடிவா ணயனந் தமலைபெற்ற
வஞ்சத் திரத்தன் றுணைவாதென் கல்வளை யானந்தனே. (5)

அஞ்சத்து இரத்தன் முழுவெனவே கொதித்து ஆர்த்து உரப்பி
அஞ்சத் திரத்து அந்தகன் வரும்போது உன் அபயநடை
அஞ்சு அத்திரத்தன் வடிவாள் நயனத்து அமலை பெற்ற
அம்சத்திரத்தன் துணைவா தென் கல்வளை ஆனந்தனே.

அஞ்சத்து- அன்னத்து, அஞ்சு அத்திரத்தன்- பஞ்சபாணமுடைய மன்மதன், சத்திரத்தன் -வேற்படையுடையோன்.

இ-ள்: **அஞ்சத்து நடை-** அன்னத்தின் நடையையொத்த நடையினையும், **இரத்த வடி வாள் நயனத்து -** இரத்தந் தோய்ந்த கூரிய வாள் போன்ற கண்ணையும் உடைய, **அமலை பெற்ற-** நிர்மலையாகிய உமாதேவியார் பெற்றருளிய, **அம் சத்திரத்தன் துணைவா-** அழகிய வேற்படையைக் கொண்ட முருகக்கடவுளின் சகோதரரே, **தென்கல்வளை ஆனந்தனே-** அழகு பொருந்திய கல்வளைப்பதியில் எழுந்தருளிய ஆனந்தமூர்த்தியே , **திரத்து அந்தகன் -** வலிமையுடைய யமன், **அஞ்சு அத்திரத்தன் முழவு எனவே கொதித்து-**பஞ்ச பாணங்களைக் கொண்ட மன்மதனுடைய முரசாகிய சமுத்திரம் போலக் கொதித்து, **ஆர்த்து உரப்பி -** ஆரவாரஞ்செய்து உரப்பி, **அஞ்ச வரும்போது-** அடியேன், பயப்படும்படி வரும் அந்திய காலத்திலே, **உன் அபயம்-** தமியேன் தேவரீருக்கு அடைக்கலம் எ-று.

ஈற்றடியிலுள்ள அஞ்சு ஐந்து என்பதன் போலி.

**உமை புத்திரராகிய சுப்பிரமணியக்கடவுளுக்கு மூத்த வரே, கல்வளைப் பெருமானே, என்னுயிரைக்கவரும் வண்ணம் யமன் வரும்போது தமியேனைக் காத்தருள வேண்டுமென்றபடி.**

**தனந்தனந் தந்தி மருப்பன்ன மாதர் தரைவிருப்பு**
**தனந்தனந் தந்திகழ் தண்டுறை தோறுமென் சஞ்சரிகந்**
**தனந்தனந் தந்திமி யென் கல்வளையன் சங்கக்குழைக்கா**
**தனந்தனந் தந்தமொன் றானென்று நெஞ்சந் தனிலுன்னுமே. (6)**

**தனம் தனம் தந்தி மருப்பு அன்ன மாதர் தரை விரும்புதல்**
**நந்த நந்தந்திகழ் தண் துறை தோறும் மெல் சஞ்சரிகம்**
**தனந்தனந் தந்திமி என் கல்வளையன் சங்கக் குழைக்காதன்**
**நந்தன் அம் தந்தம் ஒன்றான் என்று நெஞ்சத்தனில் உன்னுமே.**

தனம்- பொன், நந்தம் - சங்கு, சஞ்சரிகம்- வண்டுகள்.

**இ-ள்: தனம்-** பொன்னையும், **தந்தி மருப்பு அன்ன தனமாதர்-** யானையின் கோட்டினையொத்த தனங்களையுடைய பெண்ணையும், **தரை** - மண்ணையும், **விரும்புதல் நந்த** – விரும்புதல் கெட, **நந்தம் திகழ் தண் துறை தோறும்** - சங்குகள் விளங்கும் குளிர்மையாகிய நீர்த்துறைகளில், **மெல் சஞ்சரிகம்** - மிருதுவாகிய வண்டுகள், **தனந்தனந் தந்திமியென்-** தனந்தனந் தந்திமியென்று ரீங்காரஞ்செய்யும், **கல்வளையன்** - கல்வளைத்தலத்து விநாயகக்கடவுள், **சங்கம் குழை காதன் நந்தன்** - சங்கக் குண்டலத்தைத் தரித்த திருச்செவிகளையுடைய பரமசிவனது திருக்குமாரர், **அம் தந்தம் ஒன்றான்-** அழகிய ஒற்றைக் கொம்பினையுடையவர், **என்று நெஞ்சந் தனில் உன்னும்** - என்று வாக்கினாற் சொல்லி மனத்திலே தியானிக்குதிர் எ-று.

புதல்வன் என்னும் கருத்துடைய நந்தனன் நந்தன் எனத் தொக்கு வந்தது.

**உலகத்தீரே, பொன்னாசை பெண்ணாசை, மண்ணாசையென்னும் மூன்றும் கெடும் வண்ணம் கல்வளைப் பெருமானைத் துதித்துத் தியானிக்குதிர் என்றபடி.**

**சந்தன மின்னுபொற் கச்சணி பாரத் தனதடம்ப**
**சந்தன மின்னிடைப் பூவஞ்சிக் கொம்பன தையலுட்க**
**சந்தன மின்னலுற் றாள்கல் வளையன் றனதிடம்போஞ்**
**சந்தன மின்னம் வரக்கண்டி லேமென்ன தாமதமே. (7)**

**சந்தனம் மின்னும் பொற் கச்சணி பாரத் தனதடம்ப**
**சந்தன மின் இடைப் பூவஞ்சிக் கொம்பன்ன தையல் உட்க-**
**சந்து அன்னம் இன்னல் உற்றாள் கல்வளையன் தனது இடம்போம்**
**சந்து அன்னம் இன்னம் வரக்கண்டிலேம் என்ன தாமதமே.**

சந்து –தூது, உட்கசந்து – வெறுத்து

**இ-ள்: மின் அன இடை வஞ்சி பூ கொம்பு அன தையல்**- மின்னலை நிகர்த்த இடையினையுடைய வஞ்சிப் பூங்கொம்பை யொத்த தலைவியானவள், **சந்தனம் மின்னு பொன் கச்சு அணி பாரம் தனதடம் பசந்து** - சந்தனத்தையுடைய விளங்கு கின்ற பொற்கச்சணியப்பட்ட பாரமாகிய தனங்கள் பசலையுற, **அனம் மனம் கசந்து**- அன்னத்தையுள் வெறுத்து, **இன்னல் உற்றாள்**- துன்பமுற்றாள், **கல்வளையன் றனது இடம் சந்து போம் அனம்** - கல்வளைப் பதியையுடையராகிய விநாயகரி டத்துத் தூது சென்ற அன்னம், **இன்னும் வரக் கண்டிலேம்** - இன்னமும் வரக்கண்டிலேன், என்ன **தாமதம்** - யாது தாமதம் எ-று.

அன்ன, அன்ன, அன்னம், அன்னம், என்பவற்றில் னகரங்கள் இடைக்குறையாயின. சந்தனமின்னு என்றதற்கு, சந்தனம் விளங்கப் பெற்ற என்று பொருளுரைப்பினு மமையும்.. பசந்து- பசக்கவென்பதன் றிரிபு..

**இது புறப்பொருளில் கடவுண்மாட்டு மானுடப்பெண்டிர் நயந்த பக்கத்தில், தலைவியுடைய வருத்தத்தைக் குறித்துத் தூதனுப்பிய அன்னத்தைக் காணாது வருந்துந் தோழியர் தம்முட் கூறுங் கூற்று.**

**தாமதிக் காந்தச் சிலைபோன் மனத்தினைத் தந்தசைகா**
**தாமதிக் காந்தகை மென்மொழிப் பூமின் றலைமகன்வே**
**தாமதிக் காந்தர மாகிநின் றோன்மைந்த தண்ணிதழித்**
**தாமதிக் காந்தம் புகழ்தல் வளையநின் றாட்கஞ்சமே. (8)**

**தாமதிகாந்தம் சிலைபோல் மனத்தினைத் தந்த அசை கா -**
**தாமது இக்கு ஆம் தகை மெல்மொழிப் பூமின் தலைமகன்**
**வேதா மதிக்க அந்தரமாகி நின்றோன் மைந்த தண் இதழித்**
**தாம, திக்கு அந்தம் புகழ் கல்வளைய நின்தாள் கஞ்சம் (தா)**

மது - தேன், இக்கு- கரும்பு, தாம – மாலையையுடையவரே.

**இ-ள் : அசை காதா-** அசைகின்ற காதையுடையவரே, **மது இக்கு ஆம் தகை மெல்மொழி பூமியின் தலைமகன்-** தேனுங்கரும்பும் (நிகர்) ஆகும். (மதுரமாகிய) தன்மையை யுடைய மென்மையாகிய மொழியினைப் பேசும் இலக்குமிக்கு நாயகராகிய விஷ்ணுவும், **வேதா** – பிரமனும், **மதிக்க அந்தர மாகி நின்றோன் மைந்த** – தேட மறைவாய் நின்றவராகிய பரமசிவனுடைய திருக்குமாரரே, **தண் இதழித் தாம** – குளிர்மையாகிய கொன்றைப் பூமாலையை யுடையவரே, **திக்கு அந்தம் புகழ் கல்வளைய** – அட்ட திக்குகளின் முடிவு வரைக்கும் புகழப்படுகின்ற கல்வளைப் பதியையுடையவரே, **மதிகாந்தம் சிலைபோல் மனத்தினை தந்து** – சந்திரகாந்தக் கல்லை யொத்த உருகும் மனத்தை முன்னர்த் தந்து (நுமக்கன்பனாக்கி ), **நின் தாள் கஞ்சம் தா** – நுமது திருவடித் தாமரைப்பூவைப் பின்னர்த் தந்தருளுவீர் எ-று.

இச்செய்யுள் பூட்டுவிற்பொருள்கோள், பூவின்றலைமகன் என்று பாடமாயின் பூமிதேவிக்கு நாயகர் என்று பொருளுரைக்க. மதிக்காந்தரம் என்பது மரூஉமொழி. திக்காந்தம் நீட்டல் விகாரம் பெற்றது. இதழி, கஞ்சம்: ஆகுபெயர்கள். மேல் இவ்வாறு பெருவழக்காவரும் ஆகுபெயர்களை உய்த்துணர்ந்து கொள்க.

**அரிபிரமர் தேடிக்காண முடியாத பரமசிவனது திருக்குமாரரே, தேவரீரிடத்து இடையறாப் பத்தி பாராட்டுதற்கான மனத்தைத்தந்து, பின்னர் உமது திருவடி நீழலிற் சேர்த்துக்கொள்ள வேண்டுமெனப் பெருமானை இரந்தவாறும்,**

**கஞ்சக் கரந்தனின் மூவிலை வேல்கும்பங் கார்முகஞ்சங்**
**கஞ்சக் கரங்கதை மாதுள மேந்தி கவின்களம்பூ**
**கஞ்சக் கரம்பயில் வேல்வல வைக்கொரு காந்தன்பொன்னா**
**கஞ்சக் கரப்புவி கும்பிடுங் கல்வளைக் கைவரையே.** (9)

**கஞ்சக் கரந்தனில் மூவிலை வேல் கும்பம் கார்முகம் சங்கு**
**அம்சக்கரம் கதை மாதுளம் ஏந்திக் கவின் களம் பூகம்**
**சக்குஅரம் பயில் வேல் வலவைக்கு ஒரு காந்தன் பொன்னாகம்**
**சக்கரப் புவிகும்பிடும் கல்வளைக் கைவரையே.**

கஞ்சம் - தாமரை, கார்முகம் - வில்லு, பூகம் - கமுகு சக்கு– கண்,

**இ-ள்: கஞ்சக் கரந்தனில்** - தாமரை மலர் போன்ற கைகளில், **மூவிலைவேல்** - சூலாயுதத்தையும், **கும்பம்** - பூரணகலசத்தை யும், **கார்முகம்** - கரும்புவில்லையும், **சங்கு** - சங்கினையும், **அம் சக்கரம்** - அழகிய சக்கராயுதத்தையும், **கதை** - தண்டாயுதத்தையும், **மாதுளம்** - மாதுளங் கனியையும், **ஏந்தி** - தரித்தவர், **கவின் களம்பூகம்** - அழகிய கழுத்து கமுகு, **சக்கு அரம்பயில் வேல்** - கண்கள் அரத்தால் அராவப்பட்ட வேல்கள் என்று கூறத்தக்க, **வலவைக்கு** - வல்லபாம்பிகைக்கு, **ஒரு காந்தன்** - ஒப்பற்ற நாயகர், **பொன்நாகம் சக்கரப்புவி கும்பிடும்** - பொன்னுலகத்தாரும் பாதாளலோகத்தாரும் வட்டமாகிய பூவுல கத்தாரும் வணங்குகின்ற, **கல்வளைக் கைவரை** - கல்வளைப் பதியிலெழுந்தருளியிராநின்ற ஆனை முகக்கடவுள் எ-று.

கல்வளைக் கைவரை ஏந்தி, காந்தன் என மாற்றி யியைக்க. இப்பெருமான் சூலம் முதலியவற்றை ஏந்தியுள்ளா ரென்பதனை விநாயக சகஸ்ர நாமத்துக் காண்க. சக்கு - **சக்ஷு** என்னும் வடமொழிச் சிதைவு. களம் பூகம், சக்கு வேல் என்பன உருவகவணி. நாகம் - பாதாள லோகம். பொன் முதலிய மூன்றும் ஆகுபெயராய் அவ்வவ் வுலகத்தினரைக் குறித்து நின்றன.

**கல்வளைப் பதியில் எழுந்தருளிய விநாயகப் பெருமான் மூவுலகத்தாராலும் வணங்கப்பெற்றவர், சூலம் முதலாயினவற்றைத் தரித்தவர், வல்ல பாம்பிகைக்கு நாயகராயுள்ளார் என்றபடி.**

**வரையாரம் பாலன்ன தோணகை வாணி வலவைகண**
**வரையாரம் பார்சடை யார்கல் வளைவெற்ப வண்ணமுத்தேன்**
**வரையாரம் பாளிதப் பூட்கொங்கை மீது வயங்குதொய்யில்**
**வரையாரம் பால விழியா ளிடையின் வறுமைகண்டே. (10)**

**வரை ஆரம் பால் அன்ன தோள் நகை வாணி வலவை கணவர்**
**ஐ ஆர் அம்பு ஆர் சடையர் கல்வளை வெற்ப வண்ணமுத்து ஏன்**
**வரை ஆரம் பாளிதம் பூண் கொங்கை மீது வயங்கு தொய்யில்**
**வரையார் அம்பு ஆல் விழியாள் இடையின் வறுமை கண்டே**

ஐ – அழகிய, பாளிதம் - பச்சைக் கருப்பூரம்

**இ-ள்: வரை ஆரம்பால் அன்ன தோள் நகை வாணி வலவை கணவர்** - மூங்கிலும் முத்தும் பசுப்பாலும் போன்ற தோள்களும் பற்களும் வார்த்தையும் முறையே உடைய வல்லவையென்னுந் தேவிக்குத் தலைவரும், **ஐ ஆர் அம்பு ஆர் சடையார்** - அழகிய ஆத்திப் பூமாலையும் கங்கையும் விளங்கும் சடையினை உடையவருமாகிய விநாயகக் கடவுளுடைய, கல்வளை வெற்ப - கல்வளைப்பதியில் வசிக்கும் பொருப்பனே, **அம்பு ஆல விழியாள் இடையின் வறுமை கண்டு** – அம்பையும் நஞ்சையும் ஒத்த கண்ணையுடைய தலைவியினது இடையின் மெலிவை மதித்து, **பூண் கொங்கை மீது** – ஆபரணம் படிந்த அவளுடைய தனங்களில், **பாளி தம் வரை ஆரம் வயங்கு தொய்யில் வரையார்** - (செவிலித்தாயர்) பச்சைக் கருப்பூரம் விரவிய மலை இடமாய சந்தனக்குழம்பு அப்புதலையும் விளங்குகின்ற தொய்யில் எழுதலையுஞ் செய்திலர், வண்ணம் முத்து என் - அங்ஙனமாக நீ கையுறையாகக் கொண்டு வந்த வெண்ணிறமான முத்துமாலை அவளுக்கு எதன்பொருட்டு எ–று.

இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. வறுமை, சிறுமை என்னும் பொருளில் வருதலை "வறிது நகை தோற்றல்" என்பதிற் காண்க. இ∴து அகப்பொருளில் பாங்கி கையுறை மறுத்தற் கிளவியாகும்.

**மெலிவடைந்த தலைவியின் மருங்குல் இற்று விடுமென்ற அச்சத்தினால் அன்னையர் சந்தனக்குழம்பு முதலிய வற்றை அவள் மார்பில் அப்பாதொழிந்தனர். அங்ஙனமாக தலைவனாகிய நீ கொண்டு வந்த கையுறையாயுள்ள முத்தாரம் இவளுக்கு எதன் பொருட்டு எனப் பாங்கியர் மறுத்தனரென்றபடி**

**மைக்கண்ட னேறிய தேரச் சறுக்கும் வரதன்வெந்தீ**
**மைக்கண்ட நம்மையொட் டாவைங் கரத்தண்ணல் வாழுமிடம்**
**மைக்கண் டவள நகையார் குடையு மடுவினின்மா**
**மைக்கண்ட னீழலிற் சங்கீனுந் தென்கல் வளைப்பதியே. (11)**

**மைகண்டன் ஏறியதேர் அச்சு அறுக்கும் வரதன் வெம்தீ -**
**-மைக்கு அண்ட நம்மை ஒட்டா ஐங்கரத்து அண்ணல் வாழும் இடம்**
**மை கண் தவளம் நகையார் குடையும் மடுவினில்**
**மாமை கண்டல் நீழலில் சங்கு ஈனும் தென் கல்வளைப் பதியே**

தவளம் - வெள்ளிய, மடு - தடாகம், மாமைகண்டல் - அழகிய தாழை

**இ-ள்: மை கண்டன் ஏறிய தேர் அச்சு அறுக்கும் வரதன்** - திருநீலகண்டராகிய பரமசிவன் எழுந்தருளிய தேரின் அச்சு ஒடியும்படி செய்தருளிய வரதமூர்த்தியும், **வெம் தீமைக்கு அண்ட நம்மை ஒட்டா ஐங்கரத்து அண்ணல்** - கொடிய தீநெறிக்கண் அடியேமைச் செல்லவொட்டாது தடுத்தருளும் எமது தலைவருமாகிய விநாயகப்பெருமான், **வாழும் இடம்** - கோயில் கொண்டருளிய தலம், (எதுவென்னில்); **மை கண் தவளம் நகையார் குடையும் மடுவினில்** - அஞ்சனந் தீட்டப்பெற்ற கண்களையும் வெள்ளிய பற்களையுமுடைய மகளிர் புனலாடுந் தடாகத்தில், **மாமை கண்டல் நீழலில்** - அழகாகிய தாழை மரநீழலில், **சங்கு ஈனும் தென்கல்வளைப் பதியே** - சங்குகள் முத்துக்களை ஈனும் சிறப்புடைய கல்வளை என்னுந் திருத்பதியாகும். எ-று.

அரிபிரமேந்திராதி தேவர்களின் வேண்டுகோளுக்கு இசைந்து பரமவேசுவரன், பூமியைத் தேராகவும் சந்திர சூரியர்களைச் சிற்களாகவும் வேதங்களைப் பரிகளாகவும் பிரமதேவரைப் பாகனாகவும் மேருமலையை வில்லாகவும் திருமாலை அம்பாகவும் கொண்டு திரிபுர தகனஞ் செய்யும்படி புறப்பட்டபொழுது, அத்தேர் உருள்தலின்றி அச்சு ஒடிந்துவிட, இ∴து ஐங்கரக் கடவுளை அலட்சியஞ் செய்தமையினால் அப்பெருமான் செய்த இடையூறாகு மெனத் தேவர்கள் உணர்ந்து அவரைப் பூசித்து வேண்ட, சிவபிரானும் தமது மூத்த திருக்குமாரருக்குப் பல வரங்களை உதவ, தேர் இடையூறு நீங்கி விரைந்து சென்றதென்பது சரித்திரம். இதன் விரிவை விநாயக புராணம், உபதேசகாண்டம் முதலிய நூல்களுட் காண்க. மாமை அழகைக்குறிக்கும் ஒருசொல். வெந்தீமைக்கு என்பதில் கு உருபு கண்ணுருபின் திரிபாகும்.

**திருநீலகண்டராகிய பரமேசுவரன் எழுந்தருளிய தேரின் அச்சினை இறச்செய்து பின்னர்த் தேவர் வேண்டு கோளின்படி அந்த இடையூற்றை நீக்கியருளிய கணபதி கோயில் கொண்டருளிய திருப்பதி, தாழைமா நீழலிற் சங்குகள் முத்தீனும் நீர்வளம் பொருந்திய கல்வளை யென்னுந் தலமாம் என்றபடி.**

**கல்வளை யாத விரும்புநெஞ் சேகைய ரோடுறவா**
**கல்வளை யார்சுனை வாயரக் காம்பல்செங் காவியின்பக்**
**கல்வளை யார நிலாவீச விள்ளுங் கழனிசுற்றுங்**
**கல்வளை யானங் குசபாச மேந்துங் கரன்புகழே** (12)

**கல்வளையாத இரும்பு நெஞ்சே கையரோடு உறவு ஆ-**
**கல்வளை ஆர் சுனைவாய் அரக்காம்பல் செங்காவியின் பக் -**
**கல்வளை ஆரம் நிலாவீச விள்ளும் கழனி சுற்றும்**
**கல்வளையான் அங்குச பாசம் ஏந்தும் கரன்புகழே**

வளை - காப்பு, அரக்காம்பல் - சேதாம்பல், செங்காவி - செங்கழுநீர்

**இ-ள்: வளையாத இரும்பு நெஞ்சே** - இலகுவில் இளகுதலில் லாத இரும்பை யொத்த கடினமான மனமே, **கையரோடு உறவு ஆகல்** - கீழ் மக்களுடன் நட்பு கொள்ளற்க, **வளை ஆர் சுனைவாய்** - வள்ளைக்கொடி படர்ந்த நீர்ச்சுனையின்கண், **அரக்காம்பல் செம் காவியின் பக்கல்** - சேதாம்பல் செங்கழுநீர் என்னுமிவைகளின் அயலேயுள்ள, **வளை ஆரம் நிலா வீச** - சங்கீன்ற முத்துக்கள் நிலவைப்பரப்ப, **விள்ளும்** - அந்நிலவைக் கண்டு அவை இரண்டும் மலரும், **கழனி சுற்றும்** - வயல்கள் சூழப்பெற்ற, **கல்வளையான்** - கல்வளைப்பதியில் எழுந்தருளிய வரும், அங்குசம் பாசம் ஏந்துங் **கரன்** - அங்குசம் பாசம் என்னுமிவைகளைப் பரித்த திருக்கரங்களை உடையவருமாகிய பிள்ளையாரின், **புகழே கல்** - கீர்த்திப்பிரவாகமாயுள்ள தோத்தி ரங்களையே ஓது எ-று.

உரவாகல், என்பதில் ஆகல் எதிர்மறை வியங்கோள், வள்ளையார் என்பது வளையார் எனத் தொக்கு வந்தது.

**கசிவற்ற மனமே, கீழ்மக்கள் சகவாசத்தை விடுத்துக் கல்வளைப் பெருமாள் திருப்புகழைச் சிந்திப்பாயாக என்றபடி.**

**கரும்பனை யத்தனைப் பூவே ழிடந்தசெங் கண்விடைப்பா**
**கரும்பனை யத்துவக் கீர்த்துடல் போர்த்த கடவுண்மொழிக்**
**கரும்பனை யத்தர்கை மாங்கனி வாங்கிய கல்வளைமா**
**கரும்பனை யத்தனை யான்மற வேன்புன் கவிதைகொண்டே..(13)**

**கரும்பனை அத்தனைப் பூ ஏழ் இடந்த செங்கண் விடைப்பா-**
**-கர் உம்பல் நையத்துவக்கு ஈர்த்து உடல்போர்த்த கடவுள் மொழி**
**கரும்பு அனை அத்தர் கை மாங்கனி வாங்கிய கல்வளை மா-**
**கர் உம்பனை அத்தனை யான் மறவேன் புன் கவிதை கொண்டே**

உம்பல் - கயாசுரன், துவக்கு - தோல்

**இ-ள்: கரும்பனை அத்தனை** - கருமையாகிய பனையை ஒத்த திருக்கரத்தையுடையவரும், **ஏழ் பூ இடந்த செம் கண் விடைப் பாகர்** - கீழ் ஏழு உலகங்களையும் பன்றி வடிவாக அகழ்ந்து சென்ற செந்தாமரைப் பூப்போலுங் கண்களையுடைய திருமாலாகிய இடபத்தை வாகனமாகக் கொண்டவர். **உம்பல் நையத் துவக்கு ஈர்த்து** - கயாசுரனென்னும் யானையானது வேதனையுற அதன் தோலினை யுரித்து, **உடல் போர்த்த கடவுள்** - தமது திருமேனியிலே போர்த்தருளிய தெய்வம், **கரும்பு மொழி அனை அத்தர் கை** - கரும்பு ரசம் போன்ற தித்திக்கும் மொழியினையுடைய உலகமாதாவாகிய உமாதேவியாரை வாமபாகத்திற்கொண்ட பரமசிவனுடைய திருக்கரத்திலுள்ள, **மாங்கனி வாங்கிய** - மாம்பழத்தைப் பெற்ற, **கல்வளை மாகர் உம்பனை** - கல்வளைப் பதியில் எழுந்தருளிய தேவதேவனை, **அத்தனை** - பரமபிதாவை, **புன்கவிதை கொண்டே** - புல்லிய நரஸ்துதி பாடுவதில் ஈடுபட்டு (அதனால்), **யான் மறவேன்** - தோத்திரஞ் செய்வதை நான் ஒரு போதும் மறக்கமாட்டேன். எ-று.

முன்னொரு காலத்திற் சோதிவடிவாய்த் தோன்றிய பரமேசுவரனுடைய திருவடியைக் காணுவான்வேண்டித் திருமால் சுவேதவராக (வெண்ணிறமான பன்றி) வடிவுகொண்டு கீழ் ஏழ் உலகத்தையும் அகழ்ந்து சென்றமையின், "பூவேழிடந்த செங்கண் விடை" எனப்பட்டது. திருமால் தவங்கிடந்து பரமேசுவரனுக்கு வாகனமான வரலாற்றைக் கந்தபுராணம் - ததீசி யுத்தரப்படலம் முதலியவற்றுட் காண்க. யானை வடிவங்கொண்ட கயன் என்னும் அசுரன் முனிவர்களை வருத்த, அவர்கள் காசிக்ஷேத்திரத்திற் சென்று விசுவநாதப் பெருமானாரைச் சரணடைய, பெருமானார் அக்கயாசுரனைக் கொன்று தோலை உரித்துத் தரித்தருளின ரென்பது சரித்திரம். மொழிக் கரும்பனை யென்பதில், அன்னை, அனை யெனத் தொக்குவந்தது. அத்தர் - பரமசிவன்: இதனை "அத்தர் தந்த அருட்பாற்கடல்...." எனப் பெரிய புராணத்திற் காண்க.

முன்னொரு காலத்திற் சிவபிரான் ஒரு திருவிளையாடலைத் திருவுளத்திற்கொண்டு தமது திருக்கரத்தில் ஒரு மாங்கனியைக் கொண்டவராய், விநாயகர் சுப்பிரமணியர் என்னும் இருதிருக்குமாரர்களையும் நோக்கி "உங்களுள் எவர் விரைவில் இப்பூவுலகை வலஞ்செய்து வருவீரோ அவருக்கே இந்த மாங்கனியை உதவுவேம்" என்று திருவாய்மலர்ந்தருள, பாலசுப்பிரமணியப் பெருமான் உடனே மயின்மீது எழுந்தருளிப் பூவுலகை வலஞ்செய்யும் வண்ணம் புறப்பட, விநாயகப் பெருமான், "எல்லா வுலகமுமானாய் நீயே" என்றபடி, பரம சிவனை வலம்வரின் சகல உலகங்களையும் வலஞ்செய்த மைக்குச் சமமாகுமெனத் திருவுள்ளத்திற் கொண்டு அப்படியே உபயமாக அப்பெருமானை வலஞ்செய்து முந்தி வந்து மாங்கனியைப் பெற்றாராதலின், "மாங்கனி வாங்கிய கல்வளை மாகரும்பனை......." என்றார். "பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவிர்காள்" என்று பெரியாரும் பணித்தமையின், "யான் மறவேன் புன்கவிதை கொண்டே" என்பதற்கு, நரஸ்துதி பாடுவதில் ஈடுபட்டுத் தேவரீரைப் பாட மறக்கமாட்டேன் எனப் பொருள் கொள்ளப்பட்டது.

**சிவபிரானிடத்தில் மாங்கனிவாங்கிய கல்வளைப் பெருமானே, தேவரீரைப் பாடுதலாகிய திருத்தொண்டைத் தமியேன் ஒருகாலத்தும் மறவேன் என்றபடி.**

**கவிநா யகன்றிடு வாய்க்கிரைப் பண்டங் கறையிரத்தக்**
**கவினாய கன்மக் குடம்பையை வீக்கியென் கண்டபயன்**
**கவிநா யகன்றொழும் ராமன் கொலைப்பவங் காய்ந்திடுதுங்**
**கவிநா யகதிருக் கல்வளை வாழுங் கணபதியே. (14)**

**கவிநாய் அகன்றிடு வாய்க்கு இரைப்பண்டம் கறை இரத்தம்**
**கவின் ஆய கன்மக் குடம்பையை வீக்கி என் கண்டபயன்**
**கவிநாயகன் தொழும் இராமன் கொலைப்பவம் காய்ந்திடும் துங்**
**- கவி நாயக திருக்கல்வளை வாழும் கணபதியே**

கவி - குரங்கு, கவி - கௌவி,

**இ-ள்: கவிநாயகன் தொழும்** - குரங்குகளுக்குத் தலைவனாகிய அனுமன் வணங்கும், **ராமன் கொலைப்பவம் காய்ந்திடும்** - இராம பிரானுடைய பிரமகத்தி தோஷத்தை ஒழித்தருளிய, **துங்க**

**விநாயக** - நிர்மலமான வீரகத்தி விமோசனரே, **திருக்கல்வளை வாழும் கணபதியே** - சிறப்போடு கூடிய கல்வளைப் பதியிற் கோயில் கொண்டருளிய கணேசப் பெருமானே, **நாய் கவி அகன்றிடு வாய்க்கு இரைப்பண்டம்** - நாயானது கௌவிக் கொண்டு ஓடும்போது அதன் வாய்க்கு உணவுப் பொருளா யுள்ளதும், **கறை இரத்தம் ஆய கன்மக் குடம்பை** - கறையாகிய இரத்தத்தினால் அழகுபெற்ற கன்மக் கூடாகிய உடலை, **வீக்கி** - பருக்கச் செய்து, **கண்ட பயன் என்** - பாவியேன் எடுத்த பலன்தானென்னை எ-று

கவ்வி கவியெனத் தொக்கது, கறை இரத்தம், இருபெயரொட்டு, என் என்னும் விகுதி எதிர்மறைப் பொருளில் வந்தது, பயன் ஏதுமில்லை என்றபடி, கவிநாயகன் என்பதற்கு குரங்கரசனாகிய சுக்கிரீவன் எனக் கொள்ளினுமாம். கொலைப்பவங் காய்ந்திடு துங்கவிநாயகர் - வீரகத்தி (விமோசன)ப் பிள்ளையார். இராவணன் புலத்திய முனிவர் வழித்தோன்றலாதலின் அவனைச் சம்மாரஞ் செய்தவுடன் பிரமகத்தி தோஷம் இராமபிரானைப் பீடித்து வருத்த, அவர் இராமலிங்கப் பிரதிட்டைசெய்து பூசித்து அத்தோஷம் நீங்கப் பெற்றனரென்பது சேது புராணம்.

**ஸ்ரீராமரும் வணங்கும் வீரகத்தி விநாயகரே, கல்வளைக் கணேசமூர்த்தியே, தேவரீருக்குத் தொண்டு செய்தற்கின்றி இவ்வுடலை போஷித்து வளர்ப்பதினால் நான் அடையக் கூடிய பயன் யாதுமில்லை என்றபடி.**

**கணத்தலை வன்குழ விப்பிறைக் கோட்டன் கதிர்மணிப்பைக்**
**கணத்தலை வன்னச் சராக்கச் சரையன் களமரில்லங்**
**கணத்தலை வன்ன வளையூருங் கல்வளை காணிலரைக்**
**கணத்தலை வற்பகை முன்பனி மானுங் கருகிடினே. (15)**

**கணத்தலைவன் குழவில் பிறைக் கோட்டன் கதிர்மணிப்பை**
**கணத்தலைவன் வல் நச்சு அராக் கச்சு அரையன் களமர் இல் அங்-**
**- கணத்தலைவன்ன வளைஊரும் கல்வளை காணில் அரைக்**
**கணத்து அலைவல்பகை முன்பனி மானும் கருதிடினே.**

கணத்தலைவன் - பூதகணத்தலைவன், பைகணத்தலைவன் - பாம்புக் கணத்தலைவன்.

**இ-ள்: கணத் தலைவன்** - பூத கணங்களுக்குத் தலைவரும், **குழவிப் பிறைக் கோட்டன்** - இளமையாகிய பிறைச்சந்திரனை யொத்த கொம்பினையுடையவரும், **கதிர் மணி பை கணத் தலை வல் நச்சு அராக் கச்சு** - ஒளியுடைய இரத்தினத்தையும் படத்தினையும் பல தலைகளையும் கொடிய விஷத்தையும் உடைய பாம்பைக் கச்சாகத் தரித்த, **அரையன்** - திருவரையை யுடையவருமாகிய விநாயகப்பெருமான் (கோயில்கொண்டருளிய), களமர் இல் அங்கணத்தலை வன்ன வளை ஊரும் கல்வளை காணில் - வேளாளர் வீட்டு முற்றத்தில் அழகிய சங்குகளூ ருகின்ற கல்வளைப்பதியைத் தரிசித்தால், அலைவு - அப்படித் தரிசிப்பவரது துன்பம், கருதிடில் - ஆராயுங்கால், அரைக் கணத்து - அரைக்கண நேரத்துள், அற்பகைமுன் பனி மானும் - சூரியன் முன்னிலையிற் பனி நீங்குதல் போல நீங்கி விடும் எ-று.

அரைக்கணம், ஈண்டு அற்ப நேரத்தைக் குறித்து நின்றது.

**விநாயகக் கடவுள் கோயில்கொண்டருளிய கல்வளைப் பதியைத் தரிசிப்போரை, அவர் தீவினை விரைவில் விட்டகலு மென்றபடி**

**கரியா னனத்தன் றொழுபதம் வேண்டிக்கண் ணார்பவஞ்சங்**
**கரியான னத்த மவர்க்கிழைப் பான்கடற் காசினிக்கோர்**
**கரியா னநத்தம் புரைகோட்டுக் கல்வளைக் கன்னமத**
**கரியா னனத்தன் புகழ்பாடி யுள்ளங் கசிந்திடுமே.** **(16)**

**கரியான் அனத்தன் தொழும் பதம் வேண்டிக் கண் ஆர்பவம் சங்-**
**- கரியான் அத்தம் அவர்க்கு இழைப்பான் கடல் காசினிக்கு ஓர்**
**கரியான நத்தம் புரை கோட்டுக் கல்வளைக் கன்னமத**
**கரியான நத்தன் புகழ்பாடி உள்ளம் கசிந்திடுமே**

அனத்தன் - அன்னத்தன் - பிரமா, சங்கரியான் - களையாதவன்

**இ-ள்: கரியான் அனத்தன் தொழும்** - மேகவர்ணராகிய திருமாலும் அன்ன வாகனத்தை யுடைய பிரமாவும் வணங்கு கின்ற, **பதம் வேண்டிக் கண் ஆர் பவம் சங்கரியான்** - தமது திருவடிகளைப் பக்தி பூர்வமாகத் தியானஞ் செய்யாதவர் களுடைய பிறவியைக் களையாதவரும், **அவர்க்கு அனத்தம் இழைப்பான்** - அங்ஙனம் வணங்காதவர்க்கு இடரை

ஆக்குபவரும், **கடல் காசினிக்கு ஓர் கரியான கல்வளை** - கடலினாற் சூழப்பெற்ற இப் பூமிக்கு ஒரு சாட்சியாக (ஆதாரமாக) விளங்குகின்ற கல்வளைப் பதியில் எழுந்தருளிய **நத்தம் புரை கோட்டுக் கன்ன மதகரி ஆனனத்தன்** - சங்கினை ஒத்த வெள்ளிய திருமருப்பையும் கன்ன மதத்தையும் பொருந்திய யானை முகத்தையுடையவருமாகிய விக்கிநேசுவரக் கடவுளது, **புகழ்பாடி உள்ளம் கசிந்திடுமே** - கீர்த்திப்பிர பாவத்தை ஸ்தோத்திரமாகப் பாடி மன முருகுவீராக எ -று.

தம்மை வழி படுவோர்க்கு விக்கினங்களை நீக்கி வழிபடார்க்கு விக்கினங்களை யாக்குதலின் விநாயகக் கடவுளுக்கு விக்கிநேசுவரன் எனவும் ஒரு திருநாமம் உண்டு. தம்மை வழிபடார்க்கு விக்கினங்களை யாக்குதல் இறைவனுக்கு முறையாகு மோவெனின்; அற்றன்று; பாசத்தினாற் பந்திக்கப்பட்ட ஆன்மாக்களை ஈடேற்றுவதற்கு அப்பெருமான் இயற்றியருளும் மறக்கருணை முறை அதுவாகும்.

**உலகத்தீரே! தம்மை வழிபடுவோர்க்கு வருந்துன் பங்களை நீக்குபவரும், வழிபடாதார்க்குத் துன்பங்களை ஆக்குபவருமாகிய கல்வளை விக்கிநேசுவரனைப் பத்தியோடு தோத்திரஞ் செய்து கடைத் தேறுதீர் என்றபடி.**

**சிந்தா மணிதென்ற லன்றி நிலாப்பகை செய்யவணி**
**சிந்தா மணிமுலை வாடின ளேழு செகமளந்த**
**சிந்தா மணிதுள வன்றேடு கல்வளைச் செய்யவருட்**
**சிந்தா மணிவரக் காணோம் பயோதரச் செல்லினமே. (17)**

**சிந்து ஆ மணி தென்றல் அன்றில் நிலா பகை செய்ய அணி**
**சித்தா மணி முலை வாடினள் ஏழு செகம் அளந்த**
**சிந்து ஆம் அணி துளவன் தேடு கல்வளைச் செய்யஅருள்**
**சிந்தாமணி வரக்காணோம் பயோதரச் செல் இனமே.**

ஆ- பசு. சிந்து - வாமனவடிவம், துளவன் - துளசிமாலையன்

இ-ள்: **சிந்து ஆ மணி தென்றல் அன்றில் நிலா** - கடலும் பசுவிற் கட்டப்பட்ட மணியும் தென்றலும் அன்றிற்பறவையும் சந்திரனும், **பகை செய்ய** - பகையைச் செய்ய (வருத்த), **மணிமுலை அணி சிந்தா வாடினள்** - அழகிய ஸ்தனங்களை யுடைய தலைவி தன் அழகு முழுவதும் கெடும்படி

வாட்டமடைந்தாள், **பயோதரச் செல்லினமே** - சூற்கொண்ட முகிற்கூட்டங்களே, **ஏழு செகம் அளந்த** - சத்த தீவுகளைக் கொண்ட இப்பூமியை ஒரு அடியால் அளந்த, **சிந்து ஆம் அணி துளவன் தேடு** - வாமன வடிவங் கொண்ட துளசிப் பூமாலையை அணிந்த திருமாலுந் தேடுகின்ற, **கல்வளைச்** செய்ய அருள் சிந்தாமணி வரக்காணோம் - கல்வளைப்பதியிற் கோயில் கொண்டருளிய செவ்விய அருளோடு கூடிய சிந்தாமணி விநாயகப்பெருமான் இன்னமும் வரக் கண்டிலேம். எ-று.

நிலா ஏழு சிந்தாமணி என்பன ஆகுபெயர்கள். மணிமுலை - அன்மொழித்தொகை. புன்மேய்ந்துவிட்டு மாலைக் காலத்தில் மீண்டு வரும் பசுவிற் கட்டப்பட்ட மணியின் ஓசையும் விகாரத்தை ஆக்குமென்பது பொருணூல். அன்பர்கள் நினைத்தவற்றை அருளுதல் பற்றி, சிந்தாமணிபோலும் எனப்பட்டது.

**தலைவன் பிரிவினால், தலைவியானவள், கடல் தென்றல் அன்றில் சந்திரன் என்னுமிவற்றால் வருந்த, பாங்கியர் அவள் வருத்தத்தை முகிலினங்களுக்கு எடுத்துரைத்தபடி.**

**தரங்க வளக்க ரொலிவே யிசைநனி தாக்கத்துப்ப**
**தரங்க வளக்கரிக் கொங்கைக் குதவிலன் றாரை நிரந்**
**தரங்க வலைப்பட வென்னை விடாமத தந்திசொல்லாந்**
**தரங்க வளக்கல் வளைப்பதி மேவிய தற்பரனே. (18)**

**தரங்க அளக்கர் ஒலி வேய் இசை நனி தாக்கத் துப்பு அ-**
**- தரம் கவளக் கரிக் கொங்கைக்கு உதவிலன் தாரை நிரந் -**
**- தரம் கவலைப்பட என்னை விடாமத தந்தி சொல் ஆந் -**
**- தரங்க வளக் கல்வளைப்பதி மேவிய தற்பரனே.**

தரங்கம் - திரை, அதரம் - இதழ், ஆந்தரங்க - உசிதமான

**இ-ள்: தரங்க அளக்கர் ஒலி வேய் இசை நனி தாக்க** - திரையையுடைய கடலொலியும் வேய்ங்குழலோசையும் (எமது தலைவியை) மிகவுந் தாக்க, (அதனை யாமனுப்பிய தூதாலறிந்தும்) **துப்பு அதரம் கவளக் கரிக்கொங்கைக்கு** - பவளம் போலும் அதரத்தினையும் கவள உணவைக் கொள்ளுகின்ற

யானைக்கோடுபோலுந் தனத்தினையுமுடைய அத்தலைவிக்கு, **நிரந்தரம் கவலைப்பட என்னைவிடா மத தந்தி** - எப்பொழுதும் கவலைப்பட என்னைவிடாத மதயானையும், **சொல் ஆந்தரங்க வளக் கல்வளைப்பதி மேவிய தற்பரன்** - (புகழ்ந்து) சொல்லப்படுகின்ற உச்சிதமாகிய வளத்தினையுடைய கல்வளைப் பதியில் வாழும் ஆன்மநாயகருமாகிய விநாயகக் கடவுள், **தாரை உதவிலன்** - (தமது) மாலையைக் கொடுக்கின்றிலர் (அவரது திருவுள்ளம் இருந்தபடி யென்னை?) எ-று.

வேய், ஆகுபெயர், அதரங்கவளம், மெலிக்கும் வழி மெலித்தல், யானை மான் ஆதிய சில பொருள்களின் ஒவ்வோருறுப்பு மகளிரது ஒவ்வோர் உறுப்புக்கு நிகராகவும், முதல் சினைகளின் ஒற்றுமைபற்றி அம்முதற்பொருள்களை உவமைப் பொருள்களாக வழங்கலும் புலவர் வழக்காதலிற் கரிக்கொங்கை யெனப்பட்டது; ஆகுபெயரெனினுமாம்.

**இதுவும் மேற்படி மானுடப்பெண்டிர் நயத்தபக்கத்தில். தலைவிக்கு மாலையைக் கொடாத தலைவனாகிய விநாயகக் கடவுளது நெஞ்சத்தின் வன்மையைத் தோழியர் தம்முட் கூறியபடி.**

**பரசங்க முத்தமிழ் கல்லா வெனையனைப் பாவிதிகம்**
**பரசங் கரவென்று மெய்ந்நொந்து பெற்ற பலனன்றுதா**
**பரசங் கமவுயி ருக்குயி ராய பரஞ்சுடரே**
**பரசங்க மாறந் தணர்போற்றுங் கல்வளைப் பண்ணவனே. (19)**

**பரசங்க முத்தமிழ் கல்லா எனை அனைப்பாவி திகம் -**
**- பர சங்கர என்று மெய்ந்நொந்து பெற்ற பலனன்று தா -**
**பர சங்கம உயிருக்கு உயிர் ஆய பரஞ்சுடரே**
**பரசு அங்க ஆறு அந்தணர் போற்றும் கல்வளைப் பண்ணவனே**

திகம்பரம் - திக்குஆகாயம், தாபர - அசரம், சங்கம - சரம், பரசு - துதிக்கப்படும்.

**இ-ள்: தாபர சங்கம உயிருக்கு உயிர் ஆய பரஞ்சுடரே** - அசரமுஞ் சரமுமாகிய இருவகை உயிர்களுக்கும் உயிராகிய பரஞ்சோதியே, **பரசு ஆறு அங்க அந்தணர் போற்றும் கல்வளைப் பண்ணவனே** - துதிக்கப்படுகின்ற வேதாங்கங்கள்

ஆறையும் உணர்ந்த மறையவர்கள் போற்றும் கல்வளைப் பதியில் எழுந்தருளியிருக்கின்ற விநாயகத்தெய்வமே, **பரசங்க முத்தமிழ் கல்லா எனை** - மேலான சங்கப் புலவரால் ஆராயப்பட்ட முத்தமிழ் நூல்களைக் கல்லாத என்னை, **பாவி அனை** - பாவியாகிய என் அன்னை, **திகம்பர சங்கர** என்று **மெய் நொந்து பெற்ற பலன் நன்று** - திகம்பரரே சங்கரரே யென்று துதித்து வயிறு நொந்து பெற்ற பலன் நல்லது எ-று.

சங்கம், தமிழ்: ஆகுபெயர்கள். முத்தமிழ்: இயல், இசை, நாடகம். என்னை என்பதில் னகரந் தொகுத்தது. மூடப்பிள்ளையைப் பெற்றமையாற் பாவியன்னை யென்றார். அனை இடைக்குறை. நன்று, தீது என்னும் பொருளில் வந்தது. திகம்பரன், திக்கை ஆடையாகத் தரித்தவன். சங்கரன் - உயிர்களுக்கு இதத்தைச் செய்பவன்.

**சராசரங்களுக்குத் தலைவராயுள்ள சோதிசொருபரே, வேதாங்கம் ஆறும் உணர்ந்த அந்தணர் போற்றும் கல்வளைப் பெருமானே, கல்வி யறிவும் தேவரீரிடத்து அன்புமில்லாத என்னை என் தாய் வருந்திப் பெற்றதனால் அடைந்த பயன் யாதுமில்லை என்றபடி.**

**அவலம் புரிமுக் குறும்பைந்து பூத மடக்கிமென்றூ**
**யவலம் புரிமலர் தூய்த்தொழு தேத்த வருண்மெய்யர்மெய்**
**யவலம் புரிமருப் புத்தக ரூரு மறுமுகன்முன்**
**னவலம் புரிவயற் கல்வளை யாலயத் தாதிக்கனே. (20)**

**அவலம்புரி முக்குறும்பு ஐந்து பூத மடக்கி மெல்தூ -**
**-ய வலம்புரி மலர் தூய் தொழுது ஏத்தஅருள் மெய்யர்மெய் -**
**-ய வலம்புரி மருப்புத் தகர் ஊரும் அறுமுகன் முன்ன**
**-ன வலம்புரி வயல் கல்வளை ஆலயத்து ஆதிக்கனே.**

தகர் - ஆட்டுக்கடா

**இ-ள்: மெய்யர் மெய்ய** - மெய்யர்க்கு மெய்யனே, **வலம்புரி மருப்புத்தகர் ஊரும் அறுமுகன் முன்ன** -வெற்றியைத் தருகின்ற கொம்பினையுடைய ஆட்டுக்கடாவை வாகனமாகச் செலுத்திய சண்முகப்பெருமானுக்கு மூத்தவரே, **வலம்புரி வயல் கல்வளை ஆலயத்து ஆதிக்கனே** - சங்குகள் சஞ்சரிக்கும் வயல்சூழ்ந்த

கல்வளைப் பதியில் எழுந்தருளிய தலைவரே, **அவலம் புரி முக்குறும்பு ஐந்து பூத மடக்கி** -துன்பத்தை ஆக்குகின்ற காமம் வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களையும் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐம்புலன்களையும் அடக்கி, **மெல் தூய வலம்புரி மலர் தூய்** - மிருதுவாகிய பரிசுத்தமுள்ள நந்தியாவர்த்த மலர்களைக் கொண்டு அர்ச்சனை செய்து, **தொழுது ஏத்த அருள்** - தேவரீரை வணங்கித் தோத்திரஞ் செய்ய அடியேனுக்கு அருள்புரிவீராக எ-று.

நாரதமுனிவர் செய்த யாகாக்கினியிற் றோன்றி உயிர்கட்கு அநர்த்தம் விளைத்த ஆட்டுக்கடாவை முருகக்கடவுள் அடக்கித் தமக்கு வாகனமாகக் கொண்டருளினராதலின், தகர் ஊரும் அறுமுகன் என்றார். இதன் விரிவைக் கந்தபுராணம் - தகரேறு படலத்திற் காண்க. முன்னவ என்பது முன்ன என வந்தது. அவனருளாலே அவன்றாள் வணங்க வேண்டுமாதலின், மலர்தூய்த் தொழுது ஏத்த அருள் என்றார். புலன்களைப் பூதம் என்று காரண காரிய ஒற்றுமை நயம்பற்றி உபசரிக்கப்பட்டது.

**அறுமுகத் தெய்வத்துக்கு மூத்தவரே, தமியேன் முக்குறும்பெறிந்து ஐம்புலன் அடக்கித் தேவரீரை அர்ச்சித்து வழிபட்டுத் தோத்திரஞ் செய்தற்கு தேவரீரே அடியேனுக்கு அனுக்கிரகஞ் செய்ய வேண்டும் என்றபடி.**

**திக்குடை யானடி யைப்போற்றிப் பூவலஞ் சென்றுசெஞ்சோ**
**திக்குடை நீழலின் மேவந்த ணீர்செப்பு வீரென்றன்பத்**
**திக்குடை யான்கல் வளையான் சிலம்பினிற் றேன்பண்ணையோ**
**திக்குடை யோதிச்செங் காலியுங் காளையுஞ் சென்றதுவே. (21)**

**திக்கு உடையான் அடியைப் போற்றிப் பூவலஞ் சென்று செம்சோ-**
**-திக் குடை நீழலின் மேவும் அந்தணீர் செப்புவீர் என்றுன் பத் -**
**திக்குடையான் கல்வளையான் சிலம்பினில் தேன் பண்ணை ஓ-**
**திக் குடை ஓதிச் செம்காலியும் காளையும் சென்றதுவே.**

செங்காலி - சிவந்த அடிகளையுடையவர்

**இ-ள்: திக்கு உடையான் அடியைப் போற்றி** - திக்கை ஆடையாகவுடைய பரமசிவனுடைய திருவடிகளைப் போற்றி, **செம் சோதிக் குடை நீழலில் பூவலம் சென்று மேவும் அந்தணீர்-**

செவ்வொளியோடு கூடிய குடைநீழலில் பூமியைப் பிரதக்ஷணம் செய்கின்ற அழகிய தண்ணளியை யுடையவர்களே, **என்றன் பத்திக்குடையான்** - தமியேன் பத்திசெய்தற் குரியவரும், **கல்வளையான்** - கல்வளைப்பதியில் எழுந்தருளிய வருமாகிய பிள்ளையாரின், **சிலம்பினில்** - மலையில், **தேன்பண்ணை ஓதிக்குடை** - வண்டுகள் இசையைப் பாடிக்கொண்டு கிண்டப்பெறும், **ஓதிச் செம்காலியும்** - கூந்தலையும் சிவந்த அடிகளையு முடையவளாகிய தலைவியும், **காளையும்** - தலைவனும், **சென்றது செப்புவீர்** - கூடிச் சென்றதைக் கண்டீரோ சொல்லுங்கள் எ-று.

இ∴து ஆற்றிடை முக்கோற் பகவரை வினாவியபடி

**வேதா ரணிய முறைவேயின் முத்தருள் வேழமுய்ய**
**வேதா ரணியம்பொ னாடேத்து கல்வளை வெற்பன்னமே**
**வேதா ரணிய மலைதிருக் கோயில் விளங்கநின்பால்**
**வேதா ரணியந்த காரநம் பாலில் விதித்தனனே.** **(22)**

**வேதாரணியம் உறை வேயின் முத்து அருள் வேழம் உய்ய -**
**வேதாரணியம் பொன் நாடு ஏத்து கல்வளை வெற்பு அன்னமே**
**வேதா இரணிய மலை திருக்கோயில் விளங்க நின்பால்**
**வேய்தார் அணி அந்தகாரம் நம்பாலில் விதித்தனவே.**

வே-மூங்கில், தாரணி - பூவுலகு

**இ-ள்: வேதாரணியம் உறை வேயின் முத்து அருள் வேழம் -** திருமறைக்காடு என்னுந் தலத்தில் எழுந்தருளிய மூங்கிலிற் றோன்றிய முத்தராகிய ஈசுவரன் பெற்றருளிய யானைமுகக் கடவுளுடைய, **தாரணி அம் பொன் நாடு உய்யவே ஏத்து கல்வளை வெற்பு அன்னமே** - மண்ணுலகத்தாரும் அழகிய விண்ணுலகத்தாரும் தாம் ஈடேறும் வண்ணம் துதிக்கின்ற கல்வளைப்பொருப்பில் வாழும் அன்னம் போன்றவளே, **வேதா** - பிரமதேவர், **இரணிய மலை திருக்கோயில் நின்பால் விளங்க -** பொன்மலையாகிய தனமும் இலக்குமிக்கு இடமாயுள்ள செந்தாமரைப் பூவாகிய முகமும் உன்னிடத்தில் விளங்கவும், **தார் வேய் அணி அந்தகாரம் நம்பால் விதித்தனன்** - மாலை தரித்த அடர்ந்த இருளாகிய கூந்தலை (நான் காணும்படி) என் பக்கல் விதித்தார் எ -று.

தாரணி, பொன்னாடு, அன்னம், இரணியமலை, திருக்கோயில், அந்தகாரம் என்னுமிவை ஆகுபெயர்கள். இ∴து இடையூறு கிளத்தற்கிளவியின் பாற்று. (வேதாரணியேசுவரரிடத்து இவ்வாசிரியர் விசேடபக்தியுள்ளவரென்பது இச்செய்யுளாலும், இவர் அவ்வீசுவரர் மீது மறைசை யந்தாதி பாடியமையினாலும் புலப்படக்கிடக்கின்றது.)

**அன்னமே, நின் அழகிய முகத்தையும் தனத்தையுங் காண்பதற்கு நினது கூந்தல் இடையூறாக விருக்கின்றதெனத் தலைவன் இடையூறு கிளர்த்தியபடி**

தனையா யுதவிய தந்தையில் வாழ்க்கை தணந்தருட்சிந்
தனையா யுதகந் தனினின்று செய்யுந் தவத்திர்வெண்டந்
தனையா யுததி யகிலம் படைக்குஞ் சதுர்விதவே
தனையா யுதன்றொழுங் கல்வளை யானைச் சரண்புகுமே. (23)

தனை ஆய் உதவிய தந்தை இல்வாழ்க்கை தணந்து அருள்
சிந்தனையாய் உதகந் தன்னில் நின்று செய்யுந் தவத்தீர் வெண்
தந்தனை ஆய் உததி அகிலம் படைக்கும் சதுர்வித வேதன்
ஐயாயுதன் தொழும் கல்வளையானைச் சரண்புகுமே.

இ-ள்: **தனை ஆய் உதவிய தந்தை இல்வாழ்க்கை தணந்து** - பிள்ளையாகப் பெற்றெடுத்த பிதாவையும் இல்லறத்தையும் துறந்து, **அருள் சிந்தனையாய்** - திருவருளைப் பெறுதலையே விசாரமாகக் கொண்டு, **உதகந் தன்னில் நின்று செய்யுந் தவத்தீர்** - நீரில் நின்று செய்யுந் தவத்தையுடைய துறவிகளே, (அங்ஙனஞ் செய்தலை விடுத்து); **வெண் தந்தனை** - வெள்ளிய கொம்பினையுடையவரும், **ஆய் உததி அகிலம் படைக்கும் சதுர்வித வேதன்** - ஆராய்ந்து கடலையும் உலகத்தையும் சிருட்டிக்கும் நான்கு வேதங்களையுணர்ந்த பிரமா, **ஐயாயுதன்** - பஞ்சாயுதங்களை யுடையராகிய திருமால், **தொழும்** - வழிபடும், **கல்வளையானைச் சரண் புகும்** - கல்வளைப் பதியிற் கோயில் கொண்டருளிய பிள்ளையாரிடம் அடைக்கலம் புகுதிர் எ-று.

ஆய், ஆகவென்பதின் றிரிபு. ஆயுததி என்பதில் ஆய் 'வரிப்புனை பந்து' என்பதிற் போல வினையெச்சப் பொருளில் வந்தது. மகன் துறவியாகில், பிதா வணங்க வேண்டுமெனவும்,

ஆனால் துறவியான மகனும் தாயை வணங்கவேண்டுமெனவும் நூல்கள் கூறுதலானும், பட்டினத்தடிகள் போன்ற மகா துறவிகள், பெற்ற தாயின் மரணத்தின் பின்பே துறவறத்தைக் கொண்டமையினாலும், தாயின் அந்தியகாலத்தில் அவ்வடிகள் பெரிதும் வருந்தினாரென்ற காரணம் பற்றியும் துறத்தல் விஷயத்தில் தாயை யொழித்து "உதவிய தந்தை இல்வாழ்க்கை தணந்து" என ஆசிரியர் ஈண்டுக் கூறினர்.

**நீர் முதலியவற்றில் நின்று அருந்தவஞ்செய்யுந் துறவிகளே, அச்செயலை விடுத்து, பிரமா விஷ்ணு, தொழுங் கல்வளைப் பெருமானைச் சரணாக அடையுங்கள் என்றபடி.**

**சரந்தண் டருமலர் வேண்மைத் துனன்செந் தமிழ்க்கலைபஞ்**
**சரந்தண் டலையிற் கிளிதேருங் கல்வளை தங்கிடுகுஞ்**
**சரந்தண்ட பாணி யழகினைக் காணப்பொற் றாமரைவா**
**சரந்தண் டர்போல விமையாத பார்வையைத் தந்திலரே. (24)**

**சரம் தண் தரும் மலர் வேள் மைத்துனன் செம்தமிழ்க்கலை**
**பஞ்சரம் தண்டலையிற் கிளி தேரும் கல்வளை தங்கிடும்**
**குஞ்சரம் தண்டபாணி அழகினைக் காணப் பொற்றாமரை வாசர்**
**அந்த அண்டர் போல இமையாத பார்வையைத் தந்திலரே**

**இ-ள்: தண் தரும் மலர் சரம் வேள் மைத்துனன் -** குளிர்ச்சியைத் தரும் பூக்களைப் பாணமாகக்கொண்ட மன்மதனுக்கு மைத்துனரும், **செம்தமிழ்க்கலை தண்டலையில் பஞ்சரக்கிளி தேரும் -** செந்தமிழ் நூல்களைச் சோலையின் கண்ணே கூட்டிலிருந்து கிளிகள் செப்பும், **கல்வளை தங்கிடு குஞ்சரம் -** கல்வளைப் பதியைத் தமக்கு இடமாகக் கொண்ட யானையும், **தண்டபாணி -** தண்டாயுதத்தைத் திருக்கரத்தில் ஏந்தியவருமாகிய விநாயகக் கடவுளின், **அழகினைக் காண -** திருக்கோலத்தைத் தமியேன் தரிசித்தற்கு, **பொன் தாமரை வாசர் -** பொற்றாமரை மலரிலிருக்கின்றவராகிய பிரமதேவர், **அந்த அண்டர் போல இமையாத பார்வையைத் தந்திலர் -** (விண்ணுலக வாசிகளாகிய) அத் தேவர்களுக்குக் கொடுத்தவாறு இமைத்தலில்லாக் கண்களைத் தமியேனுக்கு உதவிலர் எ-று.

சரத்தண், பஞ்சரத்தண்டலை யென்பன சரந் தண், பஞ்சரந் தண்டலை யென மெலிந்து நின்றன. அந்தண்டர் போல என்பதில் அந்த என்பதின் ஈற்று அகரந் தொக்கது. விநாயகப்பெருமான் கொண்ட திருமூர்த்தங்களுள் ஒரு மூர்த்தம் தண்டாயுதத்தையும் பரித்துள்ளதாதலின் "தண்டபாணி" என்றார். விநாயக மூர்த்தங்களின் வரலாற்றையும் விரிவையும் விநாயக பராக்கிரமம் முதலிய நூல்களிற் காண்க. விநாயகப் பெருமானாரது பேரழகை இடையறாமற் றரிசிப்பதற்கு, கண்ணிமைத்தல் இடையூறாயிருத்தலின் அண்டர்கட்குப் போல் இமையா நாட்டத்தைத் தந்திலரே யெனப் பிரம தேவரை நொந்து கூறியவாறு.

**கல்வளைப்பெருமானாரை இடையறாது தரிசித்தாலும் கண் தெவிட்டாதென்றபடி.**

**தந்தனந் தாமரை வெற்பிரு ணேரிடை சாய்நடைபா**
**தந்தனந் தார்க்குழல் யாமள கோமள சாமளப்பெண்**
**தந்தநந் தாபணை நெல்விளை கல்வளை தன்னிலொற்றைத்**
**தந்தநந் தாவிளக் கேயெனப் போமிருட் சம்பந்தமே. (25)**

**தந்து அனம்தாமரை வெற்பு இருள் நேர் இடைசாய் நடைபாதம்**
**தனந் தார்க்குழல் யாமள கோமள சாமளப் பெண்**
**தந்த நந்தா பணை நெல்விளை கல்வளை தன்னில் ஒற்றைத்**
**தந்த நந்தாவிளக்கே எனப்போம் இருட்சம்பந்தமே**

தந்து - நூல், அனம் - அன்னம், வெற்பு - மலை, தார் - மாலை, குழல் - கூந்தல், யாமள, கோமளம் - இளமை, சாமளம் - பசியநிறம், நந்தா - குமாரரே, பணை - பண்ணை-வயல், நந்தாவிளக்கு - ஒளிகுன்றாத விளக்கு.

**இ-ள்: தந்து அனம் தாமரை வெற்பு இருள்** - நூல் அன்னம் தாமரைப் பூ மாலை இருள்; **நேர் இடை சாய் நடை பாதம் தனம் குழல்**- (என்னுமிவைகளை முறையே) நிகர்த்த இடையினையும் நடையினையும் பாதங்களையும் தனங்களையும் மாலையணிந்த கூந்தலையுமுடைய **யாமள கோமள சாமளப்பெண்** - இளமையாகிய பசிய நிறத்தையுடைய உமாதேவியார், **தந்த நந்தா** - பெற்றருளிய திருக்குமாரரே, **நெல் விளை பண்ணை கல்வளை தனில்** - நெல்விளையும்

வயல்கள் பொருந்திய கல்வளைப்பதியில் எழுந்தருளிய, **ஒற்றைத் தந்த** - ஏக தந்தரே, **நந்தா விளக்கே** - எக்காலத்தும் ஒளிகுன்றாத தீபத்தை யொத்தவரே; **என**- என்று துதிக்க, **இருள் சம்பந்தம் போம்** - மலத் தொடர்பு நீங்கிவிடும்.

அனம், பணை என்பன தொகுத்தல் விகாரம், யாமள கோமளம், ஒருபொருட் பன்மொழி

**ஈசுவரி புத்திரரே, ஏக தந்தரே, அருளொளி விளக்கே என்பன போன்ற திருநாமங்களைச் சொல்லித் துதிப்போரைப் பிடித்த வினை அகலுமென்றபடி.**

**சம்பந்த மாவினைத் தென்னவற் கீந்தவன் றாங்கு மருட்**
**சம்பந்த மாமுனி பாமாலை சூடி தருபொருண்மா**
**சம்பந்த மாலம் புனைசூழுங் கல்வளைத் தந்திவெம்பா**
**சம்பந்த மாயையென் பானீக்கி வாழ்வுசம் பாதிப்பனே. (26)**

**சம்பு அந்த மாவினைத் தென்னவற்கு ஈந்தவன் தாங்கும் அருள்**
**சம்பந்த மாமுனி பாமாலை சூடித் தருபொருள் மா**
**சம்பு அம்தமாலம் புனை சூழும் கல்வளைத் தந்தி வெம்பா**
**சம்பந்த மாயை என்பால் நீக்கி வாழ்வு சம்பாதிப்பனே.**

சம்பு - நரி, மா - குதிரை, தென்னவன் - அரிமர்த்தன பாண்டியன், சம்பு - நாவல், தமாலம் - பச்சிலைமரங்கள், தந்தி - யானை முகக்கடவுள், வெம்பாசம் - கொடிய பாசம்.

**இ-ள்: சம்பு அந்த மாவினைத் தென்னவற்கு ஈந்தவன்** - நரிகளை அழகிய குதிரைகளாக்கி அரிமர்த்தனபாண்டியனுக்கு உதவியவரும், **அருள் தாங்கும் மாசம்பந்த முனி பாமாலை சூடி** -மூன்றாம் வயசிலேயே திருவருட்பிரசாதத்தை வகித்த திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் பாடியருளிய தேவாரங்களைச் சூடி (ஏற்று) அருளியவருமாகிய சிவபிரான், **தரு பொருள்** - பெற்றருளிய பிள்ளையாராகிய, **மா சம்பு அம் தமாலம் புனை சூழும் கல்வளைத் தந்தி** - மாமரங்களும் நாவல்களும் அழகிய பச்சிலைமரங்களும் புன்னைகளும் சூழப்பெற்ற கல்வளைப் பதியில் எழுந்தருளிய யானைமுகக் கடவுள், **பந்த வெம்மாயை பாசம்** -கட்டாகிய கொடிய மாயா பாசத்தை, **என்பால் நீக்கி** -

தமியேனிடமிருந்து அகற்றி, **வாழ்வு சம்பாதிப்பன்** - தமியேனுக்கு மோட்ச வாழ்க்கையைத் தேடிவிடுவார். எ-று.

அந்தம் - அழகு, நரியைப் பரியாக்கி ஈந்தருளியமை மாணிக்க வாசகசுவாமிகள் பொருட்டாம். பொருள் - பிள்ளை; "தம்பொரு ளென்ப தம்மக்கள்" ஆதலின். புனை - புன்னை, தொகுத்தல் விகாரம். பரமபிதாவாகிய சிவபிரான் தமது அடியாராகிய மாணிக்கவாசகசுவாமிகள் பொருட்டு நரியைப் பரியாக்கியும், ஆளுடையபிள்ளையாரை மூன்றாம் வயசில் அடிமைகொண்டும் ஈடேற்றியருளினராதலின், தந்தை குணம் மைந்தர்க்குமுண்டு என்றபடி அப்பெருமானுடைய மூத்த திருக்குமாரராகிய விநாயகப்பெருமானும் தமியேனை ஈடேற்றி வைப்பரென்பதாம்.

**கல்வளைப்பெருமான் தமியேனுடைய பாச பந்தங்களைத் தவிர்த்துத் தமியேனையும் ஈடேற்றி வைப்பர் என்றபடி.**

**பாலை வனத்தத்தைத் கியாரளிப் பாரென்று பன்னினளைம்**
**பாலை வனத்தடங் கார்கண்டு வெட்கும் படிவந்தமின்**
**பாலை வனத்தகன் றாள்கல் வளைப்பர மானந்தன்றன்**
**பாலை வனத்தள வும்மன்பி லாரிற் பதைபதைத்தே. (27)**

**பாலை வனத் தத்தைக்கு யார் அளிப்பாரென்று பன்னினள் ஐம்**
**பாலை வனத் தடங் கார் கண்டு வெட்கும்படி வந்த மின்**
**பாலை வனத்து அகன்றாள் கல்வளைப் பரமானந்தன் தன்**
**பால் ஐவனத்து அளவும் அன்பிலாரில் பதை பதைத்தே.**

தத்தை - பஞ்சவன்னக்கிளி, பன்னினள் - சொன்னாள், ஐம்பாலை - கூந்தலை, கார் - மழைமுகில், ஐவனம் - நெல்.

**இ-ள்: ஐம்பாலை வனத் தடம் கார் கண்டு வெட்கும்படி வந்த மின்** - தன்கூந்தலை நீர் கொண்ட பெரிய முகில் கண்டு நாணும் வண்ணந் தோன்றிய எனது மகள், **வனத் தத்தைக்கு யார் பாலை அளிப்பார் என்று பன்னினள்**- தான் வளர்க்கும் பஞ்சவன்னக்கிளிக்கு இனிமேல் யார் பாலை ஊட்டப்போகின்றார் என்று (நேற்றுச்) சொன்னாள். **கல்வளைப் பரமானந்தன் பால்** -

கல்வளைப்பதியி லெழுந்தருளியிருக்கும் பரமானந்தகுணத் தராகிய பிள்ளையார் மீது, **ஐவனத்து அளவும் அன்பிலாரில் பதைபதைத்து** - ஒரு மலை நெல்லளவேனும் அன்பில்லாதவர் போலத் துரிதப்பட்டு, **பாலை வனத்து அகன்றான்** - வேறொரு தலைவன் பின்னே பாலைவனத்திற் போயினாள் எ-று.

"வனத் தத்தைக்கு யார் பாலை அளிப்பவர்" என்று அவள்நெருனற் பன்னியபோது, அவண்மேற் சந்தேகங்கொண்டு அவளைப் பாதுகாத்திருக்க வேண்டியது என் கடனாக, நான் குறிப்பறியாது வாளாவிருந்தேனே யெனச் செவிலித்தாய் பச்சாத்தாபமடைந்தவாறு. **வன்னத் தத்தை** - வனத் தத்தை யெனத் தொக்குவந்தது.

**இது செவிலி தன் அறிவின்மையை யுணர்ந்து பச்சாத்தாபமடைந்தபடி.**

**தைக்கும் பகழி யுடல்பாய் தறுகட் சயிலம்வந்த**
**தைக்கும் பகன தனத்தீர் கண்டீரெனிற் சாற்றிடுமே**
**தைக்கும் பகனன்முன் னோனைப் பந்தாடித் தகர்த்துரஞ்சி**
**தைக்கும் பகவன்றென் கல்வளை வான் றடமலைக்கே. (28)**

**தைக்கும் பகழி உடல்பாய் தறுகண் சயிலம் வந்த**
**தைக் கும்பகனதனத்தீர் கண்டீர் எனில் சாற்றிடும்மே**
**தைக் கும்பகனன் முன்னோனைப் பந்தாடித் தகர்த்து உரம்சி**
**தைக்கும் பகவன் தென்கல்வளை வாசன் தட மலைக்கே.**

பகழி - பாணம், சயிலம் - மலை, கும்பம் - குடம், கனதனம் - கனத்தமார்பு, மேதை - அறிவுடையோன், உரம் - மார்பு, பகவன் - தெய்வம்.

**இ-ள்: கும்ப கன தனத்தீர்** - குடத்தை நிகர்த்த கனத்த தனங்களையுடையீர், **மேதைக் கும்பகனன் முன்னோனை** - நல்ல அறிவினையுடைய கும்ப கன்னனுக்குத் தமயனாகிய இராவணனை, **பந்து ஆடி தகர்த்து உரம் சிதைக்கும் பகவன்** - பந்துபோல எறிந்து விளையாடி அவன் மார்பிற் புடைத்து வலிமையைக் கெடுத்த தெய்வமாகிய, **தென் கல்வளை வாசன்** - அழகிய கல்வளைப் பதியில் எழுந்தருளும் விக்கினேசுவரரது, **தடமலைக்கு** - விசாலமாகிய மலையில், **தைக்கும் பகழி பாய்**

**உடல் தறுகண் சயிலம்** - எனது இலக்குத் தப்பாத பாணம் ஏறுண்ட உடலோடு தறுகண்மை பொருந்தியதாகிய மலைபோலும் யானை ஒன்று, **வந்ததைக் கண்டீர் எனில் சாற்றிடும்** - இங்கே வந்தமையைக் கண்டீராயின் சொல்லுங்கள் எ-று.

தடமலைக்கு என்றதில் குவ்வுருபு கண்ணுருபின் றிரிபாகும். அரக்கர் குலத்திற் பிறந்தானாயினும் கும்பகன்னன் நீதியுடையவனாதலால் "மேதைக் கும்பகனன்" என்றார். கும்பகன்னன் முன்னோனைப் பந்தாடித் தகர்த்து உரஞ்சிதைக்கும் பகவன் என்பதன் வரலாறு:- பூர்வத்தில் இராவணன் அருந்தவஞ் செய்து கைலாசபதியிடம் ஒரு சிவலிங்கத்தைத் தந்தருளும்படி வேண்ட அப்பெருமானார் அங்ஙனம் அவனுக்கு ஒரு இலிங்கத்தை உதவி இவ்விலிங்கத்தை நிலத்தில் வைத்தால் பேர்த்து எடுத்தல் முடியாது என்று கூறியருளினார், இராவணன் அவ்விலிங்கத்தைப் பெற்றுத் தன் கரங்களில் ஏந்தியவனாய் இலங்கையை நோக்கி வருவானாயினன், இதற்கிடையில் அவ்விலிங்கத்தை இராவணன் கொண்டு போய் இலங்கையில் ஸ்தாபித்துப் பூசிப்பனேல் அவனை வெல்வது அசாத்தியமென்று அஞ்சிய அரிபிரமேந்திராதி தேவர்கள் உடனே விநாயகப்பெருமானைப் பூசித்து, "எம்பெருமானே, கொடியவனாகிய இராவணன் பரமேசுவரனிடத்திற் பெற்றுச் செல்லும் இலிங்கத்தை அவன் தன் பட்டினத்திற் கொண்டு போய்ச் சேர்க்க வொட்டாது தடுத்தருள வேண்டும்" என்று பிரார்த்திக்க, விநாயகக் கடவுள் அதற்கிசைந்து ஒரு பிராமணச் சிறுவனாகி, இராவணன் வரும் மார்க்கத்திற் சென்று நின்றார். அப்பொழுது ஆவசியகம் சலவிமோசனம் செய்ய வேண்டியவனாய், இராவணன், மார்க்கத்திலே நின்ற பிராமணச் சிறுவனைப் பார்த்து; "அப்பா, இச்சிவலிங்கத்தை நிலத்தில் வைக்கவொண்ணாதாதலால் நான் சிறுநீர் விடுத்து வரும் வரைக்கும் இதனை உன்கையில் ஏந்திக்கொள்" என்று கொடுக்க, அதனை வாங்கிக்கொண்டு அப்பிராமணச் சிறுவன், "அரசனே, இது மிகவும் பாரமானது, நீடித்த நேரம் இதனைப் பரித்தல் என்னால் முடியாது ஆதலால் உன்னை மும்முறை கூப்பிடுவேன்; நீ வர நேரந் தாழ்த்தால்

நிலத்தில் வைத்து விடுவேன் " என்று சொல்ல, இராவணனும் அதற்கு இசைந்து சென்றான். செல்வதற்கிடையில் பிராமணச் சிறுவர் மும்முறை இராவணா என்று கூப்பிட்டு விட்டு, சிவலிங்கத்தை நிலத்தில் வைத்து நின்றனர். விரைந்து மீண்ட இராவணன் அதனைக் கண்டு சீற்றங் கொண்டானாய் அச்சிவலிங்கத்தைப் பெயர்த்தெடுக்க முயன்றும் அஃதியலாமையினால் இது "மகாபெலம்" என்றான். அதனால் மகாபெல இலிங்கம் என்னுங் காரணத் திருநாமம் அதற்கு ஏற்பட்டது. பின்னரும் அதனைப் பெயர்த்தெடுக்க அரக்கன் முயன்ற காலை அது பசுவின் செவிபோலக் குழைந்தமையின், அதற்குத் திருக்கோகர்ணம் என்னும் காரணப்பெயரும் வாய்ந்தது. சிவலிங்கப்பெருமானை மண்ணிலிருந்து எடுத்தல் இயலாதெனக் கண்ட இராவணன் அடங்காச் சீற்றமடைந்தானாய், முன்னின்ற மறைப்பிள்ளையின் சிரத்திற் குட்டக் கருதித் தன் இருபது கரங்களையும் கபித்தமாகப் பிடித்துக்கொண்டு காற்றென விரைந்து தாக்க முயலுதலும், ஐங்கரத்தெந்தை உடனே பரமேசுவரத் திருக்கோலங் கொண்டு இராவணனைப் பற்றிப் பந்துபோல் மேலே எறிந்தெறிந்து ஏந்தித் திருவிளையாடல் புரிந்தார். தன்னுடன் திருவிளையாடல் புரிபவர் ஆனைமுகத்தையன் என்பதையுணர்ந்த இராவணன் பதைபதைத்து,

**"மறையோனென் றுனைநினைத்த மடைமையினால் ஈதிழைத்தேன்**
**பிறையோங்கு மணிமகுடப் பெருங்களிறே! பிழை செய்தேன்:**
**இறையோனே! பொறுப்பதுனக் கியல்" பென்றென் றேத்துதலும்,**
**பொறையோடும் உமை புதல்வன் புவியில் அரக்கனை விடுத்தான்.**

"எம்பெருமானே, தேவரீர் செய்யும் மாயையுள் அகப்பட்ட சிறியேன் அறியாமையினால் தேவரீரை உண்மையிற் பிராமணச் சிறுவனென்று மதித்துப் பெரும் பிழைசெய்தேன்; அடியேன் அறியாமையினாற் செய்த பிழையனைத்தும் பொறுத்து என்னை ரட்சித்தல் வேண்டுமென்று முட்டியாகப் பிடித்த இருபது கரங்களாலும் தன் பத்துச் சிரங்கள்மீதும் படபடெனக் குட்டுதலும் விநாயகப் பெருமான் அந்த இராவணனுக்குத் திருவருள்செய்தார்.

இஃது வேழம் வினவியபடி.

**மலைவல் லியம்பிரி யாத்தில்லைக் கானுறை மாமதங்கி**
**மலைவல் லியம்பிள நீரின் பயோதரி வானிமய**
**மலைவல்லி யம்பிகை கான்முளை கல்வளை வாணன்பொங்க**
**மலைவல் லியம்பர வையானெய் யாமுன் வரவில்லையே. (29)**

**மலை வல்லியம் பிரியாத் தில்லைக்கான் உறை மா மதங்கி**
**மலை வல் இயம்பு இளநீரின் பயோதரி வான் இமய**
**மலை வல்லி அம்பிகை கான்முளை கல்வளை வாணன்பொங்க**
**மலை வல் இயம் பரவையான் எய்யாமுன் வரவில்லையே.**

வல்லியம்- வலியபுலிகள், மாமதங்கி – தவமுதல்வி, பயோதரி – தனத்தை உடையவள், கான்முளை – மகன், கமலை – சத்தம், பரவை – கடல், இயம் - முரசு.

**இ-ள்: மலை வல்லியம் பிரியாத் தில்லைக்கான் உறை மா மதங்கி** - மாறுபடுகின்ற புலிகள் நீங்காத தில்லைக் காடாகிய சிதம்பரத்திலே எழுந்தருளிய மேலான தவமுதல்வியும், **வல் இளநீர் மலை இயம்பு இன் பயோதரி** - சூதாடு கருவியையும், குரும்பையையும் ஒப்புச் சொல்லத்தக்க நல்ல தனங்களை யுடையவளும், **வான் இமயவல்லி-** மேலான இமய மலையிற் றோன்றிய கொடியை நிகர்த்தவளும் (பர்வத வர்த்தனியும்), **அம்பிகை-** எங்கள் தாயுமாகிய உமாதேவியாருடைய, **கான்முளை** – திருக்குமாரராகிய, **கல்வளை வாணன்** - கல்வளைப் பதியில் எழுந்தருளிய தலைவர், **பொங்கு வல் கமலை இயம் பரவையான் எய்யாமுன்** – மிக்க பெரிய சத்தத்தைக் கொண்ட கடலாகிய முரசையுடைய மன்மதன் மலர்ப்பாணங்களை என் மீது எய்தற்குமுன், **வர இல்லையே** – வரவில்லையே ( இதற்கு யான் என் செய்வேன்) எ -று

கான்முளை, இருபெயரொட்டு, வாழ்நன் வாணனென வந்ததென்பர்; தலைவன், இச்சொல், அம்பலவாணன், ஏகம்பவாணன், கலைவாணன் எனச் சேர்ந்து வருதலன்றித் தனியே வருதல் அரிது. ஏ, ஈற்றசையோடு கழிவிரக்கமுமாம்.

**இது விரக வேதனையுற்ற தலைவி தன் தலைவன் வரவில்லையேயென வருந்தியபடி.**

**வரம்பல வன்பருக் கீவா ரெனக்குமெய் வாழ்வுதரு**
**வரம்பல வன்கொன்றை மாலிகை யாத்தி வனைந்தகற்ற**
**வரம்பல வன்பெற்ற மாதங்க வானனர் மள்ளர்செய்யும்**
**வரம்பல வன்குண் டலர்மூடுங் கல்வளை வானவரே. (30)**

**வரம் பல அன்பருக்கு ஈவார் எனக்குமெய் வாழ்வு தரு**
**வர் அம்பலவன் கொன்றை மாலிகை ஆத்தி வனைந்த கல்த**
**வர் அம்பலவன் பெற்ற மாதங்க ஆனனர் மள்ளர் செய்யும்**
**வரம்பு அலவன் குண்டு அலர் மூடும் கல்வளை வானவரே.**

மாலிகை – மாலை , கல்தவர் - சூடியவர் , மாதங்கம் - யானை, மள்ளர் - உழவர், அலவன் - நண்பு , குண்டு – பொந்து, அலர் -பூ

**இ -ள் : அம்பு அலவன் கொன்றை மாலிகை ஆத்தி வனைந்த கல்தவர் அம்பலவன்** - கங்கையையும் பிறைச்சந்திரனையும் கொன்றைமாலையையும் திருவாத்திப்பூவையும், சூடியவரும் மேருமலையை வில்லாகவுடையவருமாகிய பொன்னம்பலவர், **பெற்ற மாதங்க ஆனனர்** - பெற்றருளிய யானை முகக்கடவுளும், **மள்ளர் செய்யும் வரம்பு அலவன் குண்டு அலர் மூடும் கல்வளை வானவர்** - மள்ளர்கள் அமைத்த வரம்பிலுள்ள நண்டின் பொந்துகளைப் பூக்கள் மூடியுள்ள கல்வளைப்பதியில் எழுந்தருளிய தேவதேவருமாகிய விநாயகப்பெருமான், **அன்பருக்கும் பல வரம் ஈவார்**- தமது அடியவர்களுக்கு வேண்டியபல வரங்களைக் கொடுப்பார். **எனக்கும் மெய் வாழ்வு தருவர்** - தமியேனுக்கும் நிலையான மோட்ச வாழ்வைத் தந்தருளுவர் எ–று.

"வரம்பு அலவன் செய்யுங் குண்டு அலர் மூடும்" என்பது அக் கல்வளைப் பதியின் நீர்வளத்தை உணர்த்தியவாறு.

**கல்வளைப் பிள்ளையார் தமது அடியார்க்கு வேண்டிய வேண்டியாங்கு அருள்பவராதலின், தமியேனை யும் புறக்கணித் தலின்றி வாழவைப்பா ரென்றபடி.**

**வானஞ் சலஞ்சலத் தீயொலி மண்மயங் காவுயிர்போ**
**வானஞ் சலஞ்சல மந்திடுங் காற்றுயர் மாற்றவரு**
**வானஞ் சலஞ்ச லெனவுரைப் பான்கல் வளைப்பதிவாழ்**
**வானஞ் சலஞ்சலக் கைத்தல மாறன் மருமகனே. (31)**

**வானம் சலம் சலத்தீ ஒலி மண் மயங்கா உயிர் போ
வான் அஞ்சு அலஞ்ச அலமந்திடுகால் துயர் மாற்ற வரு
வான் அஞ்சல் அஞ்சல் என உரைப்பான் கல்வளைப்பதி வாழ்
வான் அம் சலம்சலக் கைத்தல மால் தன் மருமகனே.**

சலம் - நீர், அஞ்சு- ஐம்புலன், அலமந்திடுகால்- கலங்கும்போது சலம்சலம் - பாஞ்சசன்னியம் (சங்கு), மால் - விஷ்ணு.

**இ-ள்: வானம் சலம் சலத்தீ ஒலி மண் மயங்கா** – ஆகாயத்தின் கூறாகிய செவியும் நீரின் கூறாகிய வாயும் வெம்மையுடைய நெருப்பின் கூறாகிய கண்ணும் வாயுவின் கூறாகிய மெய்யும் நிலத்தின் கூறாகிய மூக்கும் ஆகிய ஐம்பொறிகளினின்றும் கலங்கி, **அஞ்ச அலஞ்ச-** ஐம்புலங்களும் அலைவுற, **உயிர் போவான் அலமந்திடுங்கால்-** உடம்பைவிட்டு உயிர் போதற்குச் சுழலுஞ்சமையத்தில் (மரணாவத்தையில்) **கல்வளைப்பதி வாழ்வான்-** கல்வளைப்பதியில் எழுந்தருளியவரும், **அம் சலம்சலக் கைத்தலமால் தன் மருமகன்-** அழகிய பாஞ்சசந்நியமென்னுஞ் சலங்கை தரித்த கரத்தை யுடைய திருமாலின் மருகருமாகிய விநாயகப் பெருமான், **துயர் மாற்ற வருவான்-** அத்துன்பத்தை மாற்றும்வண்ணம் வருவாராய், **அஞ்சல் அஞ்சல் என உரைப்பான்-** அன்பனே பயப்படாதே பயப்படாதே யென்று திருவாய் மலர்ந்தருளுவர் எ—று.

அஞ்சு, ஐந்தென்பதன் போலி; சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்தினையுங் குறித்து நின்றது. அலஞ்ச அலைந்து அலைய என்பதன் றிரிபு. வருவான் வினைமுற்று வினையெச்சம். "புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைம்மேலுந்தி- அலமந்த போதாக அஞ்சேலென் றருள் செய்வான்......." என்னுஞ் தேவாரத்தின் கருத்து இச்செய்யுளில் அமைந்திருத்தல் உணர்தற்பாற்று.

**மரண வேதனையுற்று ஆன்மா வருந்துஞ் சமையத்தில் கல்வளைப் பெருமான் தோற்றி அபய மளித்தருளுவா ரென்பது நிசம் என்றபடி.**

**மகரந் தவள மலர்ச்சோலைப் பொங்கரின் வான்குளிரி
மகரந் தவழ்கல் வளையாகு வாகன வல்லவைவா
மகரந் தவள மருப்பானை வேங்கை மடங்கலெண்கு
மகரந் தவளைபுள் ளானாலு நின்னை மறப்பரிதே. (32)**

**மகரந்த வளமலர்ச்சோலைப் பொங்கரின் வான் குளிர் இ (ம)**
**ம கரம் தவழ் கல்வளை ஆகுவாகன வல்லவை வா (ம)**
**ம கரம் தவளம் மருப்பு ஆனை வேங்கை மடங்கல் எண்கு**
**மகரம் தவளை புள் ஆனாலும் நின்னை மறப்பரிதே.**

மகரந்தம் - தேன், இமகரம்- சந்திரன், ஆகுவாகன-மூஷிகவாகன, வாம- இடப்பாகத்தில், கொண்டவரே , கரம்-கழுதை , தவளம்- வெள்ளை, மருப்பு – கொம்பு, மடங்கல் - புலி, எண்கு – கரடி, மகரம் - மகரமீன், புள்- பறவை.

**இ-ள்: மகரந்த வளமலர்ச் சோலைப் பொங்கரில்-** தேன் பொருந்திய அழகோடு கூடிய சோலையிலுள்ள மரங்களிலே, **வான்குளிர் இமகரம் தவழ்-** பெருமையான குளிர்ந்த சந்திரன் தவழ்ந்து செல்லும், **கல்வளை ஆகுவாகன-** கல்வளைப்பதியிற் கோயில் கொண்ட மூஷிக வாகனரே, **வல்லவை வாம-** வல்லவையென்னுஞ் சக்தியை இடப்பாகத்திற் கொண்டவரே, **கரம் தவளம் மருப்பு ஆனை வேங்கை மடங்கல் எண்குமகரம் தவளை புள் ஆனாலும் -** கழுதை வெள்ளிய கொம்பினையுடைய யானை புலி சிங்கம் கரடி மற்சம் தவளை பறவை என்னுமிவைகளாகப் பிறந்தாலும், **நினை மறப்பது அரிது-** தேவரீரைத் ்மியேன் தியானித்தலின்றி மறந்து விடுதல் முடியாது. எ-று.

பொங்கர், இமகரம், ஆகுபெயர்கள், இக்கவி “புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி யென்மனத்தே – வழுவாதிருக்க வரந்தரவேண்டும்.......” என்ற தேவாரத்தின் பொருளை ஒட்டியிருத்தல் உணரத்தக்கது.

**கல்வளைப் பெருமானே, இம்மானிடப் பிறவி நீங்கி, விலங்கு பறவை நீர்வாழ்வன முதலிய வாகப் பிறந்தாலும் தமியேன் தேவரீரை மறவேன் என்றபடி.**

**அரவம் புலிங்க வனற்கண்ண வென்றரி போற்றச்சிலம்**
**பரவம் புலிபணி கேட்பமன் றாடி யருண்மதலை**
**யரவம் புலியணி கோடீரன் கல்வளை யண்ணல்கண்ணே**
**யரவம் புலிய குணத்தா ரெனினு மவர்முத்தரே. (33)**

**அர அம் புலிங்க அனற் கண்ண என்று அரி போற்றச்சிலம்பு**
**அரவம் புலி பணி கேட்ப மன்று ஆடி அருள் மதலை**
**அரவு அம்புலி அணி கோடீரன் கல்வளை அண்ணல்கண்நேயர்**
**அவம் புலிய குணத்தார் எனினும் அவர் மூத்தவரே.**

அர- அரனே , புலிங்கம்- பொறி, - அனல்- அக்கினி, அரி- விஷ்ணு, அரவம் - ஓசை, மன்று – கனகசபை, அரவு- பாம்பு ,கோடீரன்- சடாமுடியை உடையவன், அவம்புலிய- தீய முத்தர்- சீவன்முத்தர்.

**இ-ள்: அர அம் புலிங்க அனற் கண்ண என்று** – அரனே அழகிய பொறியோடு விரலிய அக்கினிக் கண்ணரே என்று, **அரி போற்றவும்-** விஷ்ணுமூர்த்தி துதிக்க, **சிலம்பு அரவம் புலி கேட்ப-** திருவடிச் சிலம்பினோசையைப் பதஞ்சலி வியாக்கிரபாதர் என்னும் முனிவர்கள் (காதாரக்) கேட்பவும், **மன்று ஆடி அருள் மதலை-** பொன்னம்பலத்தில் அநவரத தாண்டவஞ் செய்தருளும் நடராசப்பெருமான் தோற்றுவித்தருளிய திருக்குமாரரும். **அரவு அம்புலி அணி கோடீரன்-** பாம்பையும் பிறைச்சந்திரனையும் தரித்த சடாமுடியை உடையவரும், **கல்வளை அண்ணல் கண் நேயர்-** கல்வளைப் பெருமானிடத்து அன்பு கொண்டவர், **அவம் புலிய குணத்தார் எனினும் -** தீயகுணத்தை யுடையவராயினும். **அவர் முத்தரே** – அவ்வன்பர்கள் சீவன் முத்தரேயாவர் எ–று.

அரன் (ஆன்மாக்களை இளைப்பாற்றும் பொருட்டுச்) சங்காரஞ் செய்பவர். புலியின் காலை யொத்த கால்களை உடையராதலின் வியாக்கிரபாதர் புலியெனவும், பதஞ்சலி பாம்பு போன்ற கால்களை உடைமையின் பணியெனவுஞ் சொல்லப்பட்டனர். புல்லிய புலிய எனத் தொக்குவந்தது.

**திருமாலுந் துதிக்கும் பரமசிவனது திருக்குமாரராகிய கல்வளைப் பெருமானாருடைய அன்பர்கள் புல்லொழுக்க முடையரேனும் நற்கதிபெறுவரென்றபடி.**

**தரப்பணி யாரம் பலபூண்டு தேர்முதற் றானைதற்சூழ்**
**தரப்பணி யாரைத் தடிந்துல காளலிற் சர்க்கரைசுந்**
**தரப்பணி யார மமுதுசெய் வோன்கல் வளைத்தலத்தா**
**தரப்பணி யார்வத் தொடுஞ்செய்து வாழ்த றகவுடைத்தே. (34)**

**தரப்பணி ஆரம் பல பூண்டு தேர் முதல் தானை தற்சூழ்(தர)**
**தர பணியாரைத் தடிந்து உலகு ஆளவில் சர்க்கரை சுக்**
**தரப்பணியாரம் அமுது செல்வேன் கல்வளைத் தலத் ஆ**
**தரப்பணி ஆர்வத்தொடும் செய்து வாழ்தல் தகவுடைத்தே.**

தரப்பணி- முடி, தானை- சேனை, பணியாளர்- பகைவர், தடிந்து- அடக்கி.

இ-ள்: **தரப்பணி பல ஆரம் பூண்டு-** முடியையும் பல ஆரங்களையும் அணிந்து கொண்டு, **தேர் முதல் தானை தற்சூழ்தர-** தேர் முதலாகச் சொல்லப்பட்ட நால்வகைச் சைனியமுந் தன்னை உடன் சூழ்ந்து வர, **பணியாரைத் தடிந்து உலகு ஆளலில்** - பகைவரைக் கெடுத்து இராச்சிய பரிபாலனஞ் செய்தலைக் காட்டினும், **சர்க்கரை சுந்தரப் பணியாரம் அமுது செய்வோன்,** சர்க்கரை கலந்து ஆக்கப்படும் அழகிய மோதகத்தை உவப்புடன் திருவமுது செய்யும் பிள்ளையார் கோயில் கொண்டருளிய, **கல்வளைப்பதியில்** - கல்வளைத் தலத்திலே, **ஆதரம்பணி ஆர்வத்தொடு செய்து வாழ்தல் தகவு உடைத்து** - ஆராதனை செய்தல் முதலிய திருத்தொண்டு களைப் பத்தியுடன் புரிவது மேன்மையுடைத்து எ-று.

தரம் - தலை. பணி - ஆபரணம், கிரீடம், பணிகாரம், பணியாரமென மருவியது. ஆதரம் - ஆகுபெயர்

**அரசனாக இருந்து இராச்சிய பரிபாலனஞ் செய்தலைக் காட்டிலும் கல்வளைப் பிள்ளையாரைச் சேவித்துக் கதியடைதல் உத்தம மென்றபடி.**

**தகரங் கமழ்குந் தளந்தர ளந்தள வின்னகையீர்**
**தகரங் கமலன் மணக்கோலஞ் செய்த றடாதிருபா**
**தகரங் கமலஞ் சிவந்தோன் மருகன் றவமற்றபா**
**தகரங்கண் மேவருங் கல்வளை யான்மலைச் சாரலிலே. (35)**

**தகரம் கமழ் குந்தளம் தரளம் தகவுஇல் நகையீர்**
**தகர் அங்கம் அலன் மணக் கோல் அஞ்சு எய்தல் தடாது இரு பா -**
**- த கரம் கமலம் சிவந்தோன் மருகன் தவம் அற்ற பா -**
**- தகர் அங்கண் மே அரு கல்வளையான் மலைச் சாரலிலே**

தகரம் - மயிர்ச்சாந்து, குந்தளம் - கூந்தல், தகவு - முல்லை அரும்பு, தகர் - ஆடு. கோல் - அம்பு.

**இ-ள்: தகரம் கமழ் குந்தளம்** - மயிர்ச்சாந்து மணக்கும் கூந்தலையும், **தரளம் தளவு இல் நகையீர்** - முத்தையும் முல்லையரும்பையும் ஒத்த பற்களையுடையீர். **இரு பாத கரம் கமலஞ் சிவந்தோன்** - இரண்டு பாதங்களும் கைகளும் செந்தாமரைப் பூப்போலச் சிவக்கப் பெற்ற திருமாலுக்கு, **மருகன்** - மருகரும். **தவம் அற்ற பாதகர் அங்கண் மே அரு கல்வளையான்** - பூர்வ புண்ணியம் இல்லாத பாவிகள் வசித்தற்கு முடியாத கல்வளைப்பதியிற் கோயில் கொண்டவருமாகிய விநாயகப் பெருமானது, **மலைச் சாரலில்** - மலைச்சாரலிலே, **தகர்** - (வெட்டக் கொணர்ந்த) ஆடு, **அங்கம் அலன் மணக் கோல் அஞ்சு எய்தல் தடாது** - உருவிலியாகிய மன்மதன் செலுத்தும் வாசனை பொருந்திய பூக்களாகிய பஞ்ச பாணங்களைத் தடுக்கப் போவதில்லை எ-று.

மே, முதனிலைத் தொழிற்பெயர். இது பாங்கி வெறி விலக்கியவாறு.

**வெறியாட்டாளனே, கல்வளையான் மலைச்சாரலில் நீ ஆட்டுக்கடாவைக் கொணர்ந்து வெட்டுவதனால் தலைவி கொண்ட விரக வேதனை நீங்கப் போவதில்லை. ஆதலின் வீணே உயிர்க்கொலை செய்யற்க எனப் பாங்கி விலக்கியபடி.**

**இலங்கை யிராவணன் கண்டதுண் டம்பட வெய்சரம்ப**
**யிலங்கை யிராமன் கடதாரை சிந்து மிரண்டிருகோ**
**டிலங்கை யிராவதன் றாழ்கல் வளைய னெனின்முத்திவா**
**யிலங்கை யிராது கடைத்தா டிறப்பிப்ப னேரம்பனே. (36)**

**இலங்கை இராவணன் கண்டதுண்டம் பட எய்சரம் ப-**
**-யில் அம்கை இராமன் கடதாரை சிந்தும் இரு இரண்டு கோடு**
**இலங்கு ஐராவதன் தாழ் கல்வளையன் எனின் முத்திவா**
**-யில் அம் கை இராது கடைத்தாள் திறப்பிப்பன் ஏரம்பனே.**

கடதாரை - மதநீர், கோடு - கொம்பு, ஐராவதன் - ஐராவதம் என்னும் யானைவாகனன், ஏரம்பன் - விநாயகன்.

**இ-ள்: இலங்கை இராவணன் கண்டதுண்டம்பட** - இந்த இலங்கையை ஆண்ட இராவணனானவன் கண்டதுண்டமாம்படி, **எய் சரம்பயில் அம் கை இராமன்** - செலுத்திய பாணம் பொருந்திய அழகிய கையையுடைய ஸ்ரீ ராமபிரானும். **கடதாரை சிந்தும் இரு இரண்டு கோடு இலங்கு ஐராவதன் தாழ்** - மதநீர் சொரிகின்ற நான்கு கொம்புகள் விளங்கப் பெற்ற ஐராவதமென்னம் யானையை வாகனமாகக் கொண்ட இந்திரனும் வழிபடும், **கல்வளையன் எனில்** - கல்வளைப் பிள்ளையாரே என்று சொன்னால், **முத்தி வாயில் அங்கை இராது** - மோட்ச வாயில் திறக்கப்படாது இருத்தல் முடியாது. **ஏரம்பன் கடைத் தாள் திறப்பிப்பான்** - அந்த ஏரம்ப மூர்த்தி அவ் வாயிற் கதவின் தாளை நீக்கித் திறப்பித்தருளுவர் எ-று.

நான்காமடியிலுள்ள அங்கை என்பதை அங்கு என்பதின் ஈறு திரிந்ததென்றேனும் ஐகாரச் சாரியை பெற்று வந்ததென்றேனும் கொள்க. கடை, ஆகுபெயர். கடைத்தாள் இக்காலத்தில் தாழ்ப்பாளென வழங்கும். ஏரம்பன், விநாயகருடைய திருநாமங்களுள் ஒன்றாம்; சிவனது சமீபத்தில் இருப்பவன் எனவும், பக்தர்களை விருத்தியடைவிப்பவன் எனவும் பொருள்படும் வடசொல். இலங்கை இராவணன் கண்ட துண்டம்பட எய்சரம்பயி லங்கையிராமன்.......... தாழ் கல்வளையன்'' என்பதில் ராமன் என்பதற்கு இராமாவதாரத்தை எடுத்த விட்டுணுவும் வணங்கப்பெறும் கல்வளைப் பதியிலுள்ள விநாயகக் கடவுளெனப் பழைய உரையிற் கொள்ளப் பட்டிருக்கின்றது. இராவணனை வதைத்த பிரமகத்தி நீங்கும்படி இக்கல்வளைப் பெருமானை இராமபிரான் வணங்கினார் என்னுங் கொள்கை இந்நூலாசிரியரிடத்து உண்டு ஆதலின் "இராமன்......தாழ்'' என்பதற்கு இராமபிரானும் வழிபடுகின்ற'' என ஈண்டு நேரே பொருள் கொள்ளப்பட்டது. நூலாசிரியர் கொள்கை இ∴தென்பதை இந்நூலில் "கவிநாயகன் றொழும் ராமன் கொலைப்பவங் காய்ந்திடுதுங் - கவிநாயக திருக்கல்வளை வாழுங் கணபதியே'' எனவரும் பதினாலாஞ் செய்யுளானறிக''

**இலங்கையை ஆண்ட இராவணனை வதைத்த இராமபிரானும் ஐராவதத்தை வாகனமாகக் கொண்ட இந்திரனும் வணங்கும் கல்வளைப்பிள்ளையாரின் திருநாமங் களை நாவார ஓதினால், மோட்ச வாசல் அந்தப் பெருமானது திருவருளால் திறக்கப்படும் என்றபடி.**

அம்பலங் காசில் வயல்சூழுங் கல்வளை யைங்கரனாட்
டம்பலங் காசியென் றாய்கேள்வர் பின்செல வாமதலா
யம்பலங் காசின் முலையாணின் கைதந்த வாசறப்பொன்
னம்பலங் காசிசென் றேவா தரவென் னருஞ்சொர்க்கமே. (37)

**அம்பு அலங்கு ஆசு இல் வயல் சூழும் கல்வளை ஐங்கரன் நாட்டு**
**அம்பல் அங்கு ஆசி என்று ஆய் கேள்வர் பின் செல் அவாமதலாய்**
**அம்பலம் காசின் முலையாள் நின் கைதந்த ஆசு அறப் பொன்-**
**-அம்பலம் காசி சென்றே வா தர என் அரும் சொர்க்கமே**

அம்பு - அப்பு - நீர். அம்பல் - அலர்தூற்றல்,

**இ-ள்: அம்பு அலங்கு ஆசு இல் வயல் சூழும் கல்வளை ஐங்கரன் நாட்டு** - நீர்ததும்புகின்ற குற்றமற்ற வயல் சூழ்ந்த கல்வளை ஐங்கரக் கடவுளின் நாட்டிலே. **அம்பல் அங்கு ஆசி என்று ஆய் கேள்வர் பின்செல் அவா மதலாய்** - பலர் அறிந்து அலர்தூற்றத் தமக்கு வாழ்த்தெனமதித்துக் கொண்ட தலைவர்பின் விரும்பிச் சென்ற மகனே, **என் அரும் சொர்க்கந்தர** - எனது அரிய பாலை உனக்கு ஊட்டுதற்கு, **காசின் முலையாள் அம்பலம் நின் கை தந்த ஆசு அற** - (ஒருவர்க்கென வரைவு இல்லாமையாகிய) குற்றம் பொருந்திய தனங்களையுடைய பரத்தை நல்ல பழத்தை உன்கையில் தர நீ(ஏற்றுண்ட) குற்றம் நீங்க, **பொன்னம்பலம் காசி சென்றே வா** - புண்ணிய தலங்களாகிய சிதம்பரம் காசியென்னுமிவை யிரண்டிற்கும் யாத்திரை போய் மீண்டுவருதி எ-று.

"அவர் மதலாய்" என்னும் பாடத்திற்கு அத்தலைவருடைய மகனே எனப் பொருள் கொள்க. தலைவன் தன் மகவைப் பரத்தை வீட்டிற்கு ஒருமுறை கொண்டு சென்றான் என்ற காரணம்பற்றி எழுந்த வெறுப்பைக் குறிக்கும் பொருட்டுத் தன்மதலையென்னாது அவர் மதலையெனத் தலைவி விளித்தனள். இனி, பின்செல ஆம் மதலாய் எனப் பிரித்து, பின் செல்லும்படி பிறந்த மகனே, எனப்பொருள் கொள்ளினுமாம். காசு. சொர்க்கம், பொன்னம்பலம் என்னுமிவைகள் ஆகுபெயர்கள். இது தலைவி பரத்தையைப் பழித்தல் என அகப்பொருளில் வருவது. இரண்டா மடியிலுள்ள அம்பல், சிலர் அறிந்து தம்முட் புறங்கூறல், பழிச்சொல் என்னுங் கருத்தில் வந்தது. சொர்க்கம் (சுவர்க்கம்) - முலை.

**குழந்தாய், நீ உன் அப்பனுடன் கூடிக்கொண்டு பரத்தை வீட்டிற்குச் சென்றவிடத்து அவள் உனக்குத்தந்த பழத்தை ஏற்ற தோஷந்தீர, சிதம்பரம் காசி என்னும் புண்ணியதலங்களைத் தரிசித்து வந்தபின்பே உனக்குப் பாலூட்டுவேன் எனத் தன் மகனுக்குத் தலைவியுணர்த்தியபடி.**

கமண்டலம் பாற்கரன் போலாழி யேந்துங் கடவுளர்நா
கமண்டலம் பாதலங் கைகூப்பு தாளென்று காட்டுவையர்க்
கமண்டலம் பார்க்குமுய் யானம் வளைக்குங் கழனியிற்சங்
கமண்டலம் பாய முழங்கிடுங் கல்வளைக் காரணனே. (38)

**கமண்டலம் பாற்கரன் போல் ஆழி ஏந்தும் கடவுளர் நா-**
**கம் மண்தலம் பாதலம் கை கூப்பு தாள் என்று காட்டுவை அர்க்**
**- க மண்டலம் பார்க்கும் உய்யானம் வளைக்கும் கழனியில் சங்**
**-**
**- கம் மண்டு அலம்பாய முழங்கிடும் கல்வளைக் காரணனே.**

கமண்டலம் - குண்டிகை. பாற்கரன் - சூரியன், ஆழி - சக்கரப்படை அர்க்கமண்டலம் - சூரியமண்டலம், உய்யானம் - சோலை, அலம்பாய கலப்பைதாக்க.

**இ-ள்: அர்க்க மண்டலம் பார்க்கும் உய்யானம் வளைக்கும் கழனியில்** - சூரியமண்டலத்தை அளாவிப் பார்க்கும் (உந்நதமான) சோலை சூழ்ந்த வயலில், **சங்கம் மண்டு அலம்பாய முழங்கிடும்** - சங்குகள் நெருங்கிய கலப்பைதாக்க நாதஞ் செய்கின்ற. **கல்வளைக் காரணனே** - கல்வளையிற் கோயில் கொண்ட சர்வ காரண மூர்த்தியே, **கமண்டலம்** - குண்டிகையையும், **பாற்கரன் போலாழி** -சூரியன் போன்ற சக்கரப்படையையும், **ஏந்துங் கடவுளர்** - முறையே தரித்துள்ள பிரம விஷ்ணுக்களும், **நாகம் மண் தலம் பாதலம்** - விண்ணுலக மண்ணுலக பாதல உலக வாசிகளும், **கைகூப்பு தாள்** - தங்கள் கைகளைக் கூப்பித் தொழும் தேவரீருடைய திருவடிகளை, **என்று காட்டுவை** - தமியேனுக்கு எப்பொழுது தரிசிப்பித்தருளுவீர்.

நரகம் மண்டலம் பாதலம் என்பன ஆகுபெயர்கள்.

**நீர்வளம் நிலவளம் பொருந்திய கல்வளைத் தலத்திற் கோயில் கொண்டருளிய சர்வகாரணக்கடவுளே. பிரம விஷ்ணுக்களும் திரிலோக வாசிகளும் கும்பிடுந் தேவரீருடைய திருவடித்தரிசனத்தைத் தமியேனுக்கு எப்பொழுது தந்தருளுவீரோ அறியேன் என்றபடி.**

காரண வாத திரிசூல பூத கணேசவன்பா
காரண வாததென் கல்வளை நாத கடம்பணிவா
காரண வாத முதலைந் தினைவைத்துக் காத்தழிக்குங்
காரண வாத நடந்தை யுலாவுங் கலகத்திலே (39)

கா ரணவாத திரி சூல பூத கணேச அன்பா
கார் அணவாத தென்கல்வளை நாத கடம்பு அணி வா -
**- கார் அண வாதம் முதல் ஐந்தினை வைத்துக் காத்து அழிக்கும்**
**காரண வாதம் நடந்து ஐ உலாவும் கலகத்திலே**

கா - காத்தருள், ரணவாத - யுத்தச் செயலுக்குரிய, அணவாத - அடைதற்கரிய, அண - அண்ணரே, வாதம் - ஆகாயம், ஐ - சிலேட்டுமம்.

இ-ள்: **ரணவாத திரி சூல** - யுத்தச் செயலுக்குரிய முக்கருப் பொருந்திய சூலப்படையைத் தரித்தவரே, **பூத கணேச** - பூதகணங்களுக்குத் தலைவரே, **அன்பாகார் அணவாத தென் கல்வளைநாத** - பத்தியில்லாதவர்கள் அடைதற்கரிய சிறந்த கல்வளைப்பதி நாதரே. **கடம்பு அணி வாகார் அண** - கடப்பம் பூமாலையைத் தரித்தருளிய முருகக் கடவுளின் அண்ணரே. **வாதம் முதல் ஐந்தினை வைத்துக் காத்து அழிக்குங் காரண** - ஆகாயம் முதலிய பஞ்ச பூதங்களையும் படைத்துக் காத்து ஒடுக்கியருளும் காரண மூர்த்தியே, **வாதம் நடந்து ஐ உலாவும் கலகத்திலே கா** - வாதங் குன்றிச் சிலேட்டுமம் அதிகப்படும் அந்தியகாலத்துன்பத்திலே வந்து தமியேனை இரட்சித்தருள வேண்டும் எ-று.

வாதங் - காற்று, இங்கே காரணகாரிய ஒற்றுமை நயம்பற்றி அதனைத்தரும் ஆகாயத்திற்கானது. திரிசூலம் முதலாம் படைக்கலங்கள் விநாயகப்பெருமானுடைய மூர்த்த பேதங்களுக்கு உண்டு. வாகர் எனற்பாலது வாகார் என நீண்டது. அண்ண என்பது அணஎனத் தொக்கு வந்தது, மரணகாலத்திலே வாதங் குன்றிச் சிலேற்பனம் விருத்தியாகு

மென்பது வைத்திய நூற்கொள்கையாதலின் "வாதம்நடந் தையுலாம் கலகத்திலே" என்றார். காலத்திலே என்றும் பாடம். மரண காலத்தில் சிலேஷ்மம் அதிகப்படுதலை. "புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட் டைமேலுந்தி, அலமந் தபோதாக" எனவும் "ஐயுந்தொடர்ந்து விழியுஞ் சொருகி அறிவழிந்து, மெய்யும் பொய்யாகி விடுகின்றபோது" எனவும் பெரியார் பணித்தவாற்றானுணர்க.

**சூலப்படையைப் பரித்தவரே, பூதகணநாதரே, அன்ப ரல்லாதவர்க்கு அதீதமானவரே, சர்வபூதகாரணரே, அந்திய காலத்தில் தமியேனைப் பாதுகாத்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்தபடி.**

**கலகத் தமரத் திரையின் றுயரைக் களைந்தருள்ச**
**கலகத் தமரக தக்கம்பி யாற்செய் கடுக்கைபுல்ல**
**கலகத் தமரளி வாழ்சோலைக் கல்வளைக் கற்பகவென்**
**கலகத் தமரவிந் தத்திருக் காலெந்தக் கால்வைப்பதே. (40)**

**கலகத் தமரத் திரையின் துயரைக் களைந்தருள் ச**
**கலகத் தமரகதக் கம்பியாற் செய் கடுக்கைப்புல் அ**
**கல கத்து அமர் அளி வாழ் சோலைக் கல்வளைக் கற்பக என்**
**கல் அகத்து அம் அரவிந்தத் திருக்கால் எந்தக்கால் வைப்பது.**

சகலகத்த – சர்வேஸ்வரரே. அகல- மார்பினையுடையவரே, எந்தக்கால் - எப்போது.

**இ-ள் : கலகத் தமரத் திரையின் துயரைக் களைந்தருள் சகலகத்த-** (அன்பர்களுடைய காமம் முதலிய) கலகமாகிய ஒலியினையுடைய கடலால் வருந்துன்பத்தை நீக்கியருளுஞ் சர்வேசுரரே, **மரகதக்கம்பியாற் செய்கடுக்கை புல் அகல** – மரகதக்கம்பியாற் செய்த(காம்பையுடைய) கொன்றைப் பூமாலை பொருந்துந் திருமார்பினை யுடையவரே, **கத்து அமர் அளிவாழ் சோலைக்கற்பக-** ரீங்காரஞ் செய்கின்ற மிகுதியான வண்டுகள் சஞ்சரிக்குஞ் சோலைகள் சூழ்ந்த கல்வளைத் திருப்பதியில் எழுந்தருளிய கற்பகப் பிள்ளையாரே. **என் கல் அகத்து-** பாறைக்கற் போன்ற என்னுடைய (அஞ்ஞானந்தடித்த) உள்ளத்தில், அம் அரவிந்தத் திருக்கால் எந்தக்கால் வைப்பது-

தேவரீருடைய அழகிய செந்தாமரைப்பூவை நிகர்ந்த திருவடி களை எப்பொழுது வைத்தருளப் போகின்றீர் (யான் அறியேன்) எ-று.

கல்வியறிவு ஈசுரபத்தி முதலிய நன்மைகளின்றி அஞ்ஞான இருள் தடித்துச் சடப்பொருளை ஒத்தமனமென்பார் கல்லகத்து என்றார். இது ஆசிரியர் தம்மனநிலையை இழித்துக் கூறியவாறாம், மெய்யன்பர் தம்மிடத்துள்ள பக்தி போதியதன்றென்பதைக் குறிப்பிக்கும் பொருட்டு இப்படிக் கூறுதல் இயல்பாகும். இதனை " செஞ்சுடர் வை வேலுடைய செம்மலடி தீயென், நெஞ்சக அடுக்கலிலும் நின்றுலவு மென்றால்" எனக் கச்சியப்பசிவாச்சாரிய சுவாமிகள் கூறியவாற்றானும் உணர்க. உட்பகை காமக் குரோத லோப மோக மத மார்ச்சரிய மென்பன.

**அன்பர்களிடத்துள்ள காமம் முதலாம் பகைகளைக களைந்தருளும் சர்வேசுரரே, கொன்றைப் பூமாலைத் திருமார்பிற் றரித்தவரே. கல்வளைக் கற்பகவிநாயகரே, வன்கண்ணனாகிய எனக்குத் திருவருள் செய்வது எந் நாளோ என்றபடி.**

**வையத் திருக்கை யறுப்பா னெகினம் வளைமணிக்கு**
**வையத் திருக்கை கயிலைல் வெண்மங்கு னேர்கல்வளை**
**வையத் திருக்கைப் பரியாக்கி பிள்ளைக்கு மானனையார்**
**வையத் திருக்கை யயர்ந்தாளென் றோது மதுகரமே. (41)**

**வையத் திருக்கை அறுப்பான் எகினம் வளைமணிக்கு**
**வையத்து இருக்கை கயிலையில் வெள்மங்கு நேர் கல்வளை**
**வையத்து இருக்கைப் பரிஆக்கிப் பிள்ளைக்கு மான் அனையார்**
**வைய திரு கை அயர்ந்தாளென்று ஓதும் மதுகரமே.**

திருக்கை- தீமைகள், குவையம்- குவியல், மங்கு- முகில் வையம் - தேர், பரி- குதிரை, வைய- பழிக்க, திரு- இலக்குமி மதுகரம் - தேன் வண்டு

**இ-ள்: மதுகரமே** – வண்டுகளே, **வையத் திருக்கை அறுப்பான் -** பூமியிலுள்ள தீமைகளை நீக்கி அருளுபவரும், **வளைமணிக் குவையத்து எகினம் இருக்கை-** சங்கீன்ற முத்துக்குவியலின் மீது அன்னப்பறவை இருத்தல். **கயிலையில் வெள் மங்குல் நேர்-** கைலாச கிரியின் சிகரத்தில் வெண்முகில் படிதலை ஒத்திருக்கப்

பெறும், **கல்வளை** - கல்வளைப் பதியிலெழுந்தருளிய, **இருக்கை வையத்துப் பரிஆக்கி பிள்ளைக்கு** – வேதங்களைத் தேரிற்பூட்டப்படும் குதிரைகளாக்கியருளியசிவபிரானுடைய(மூத்த) திருக்குமாரருக்கு, **மான் அனையார் வைய-** மானை நிகர்த்த நோக்கினையுடைய (தன்னோடொத்த) அயல் மகளிர் பழிக்க, **திரு** - இலக்குமியை 'நிகர்த்த தலைவி, **கையயர்ந்தாள் என்று ஓதும்** - கை (கால்) சோர்ந்தாள் என்று சொல்லும் எ-று.

திருக்கு- குற்றம்: குவையத்து என்பதில் அத்து சாரியை, ஆக்கி வினையாலணையும் பெயர்: ஓதும் முன்னிலை ஏவல், திருக்கை அயர்ந்தாள் என்பதில் ககரம் விரித்தல். இதுகடவுண்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்தபக்கத்து வண்டு விடுதூது.

**வண்டினமே, பூமியிலுள்ளவரின் விக்கினங்களை நீக்குபவரும் சிவ குமாரருமாகிய கல்வளைப்பதித் தலைவரிடம் தூதுசென்று தன்னோடொத்த அயன்மகளிர் பழித்தமையால் தலைவி சோர்வடைந்தனள் என்று புகலுதிர் என்றபடி.**

**கரவடம் பத்தி யிலார்க்களிப் போயிருள் காய்ந்திடும்பாற்**
**கரவடம் பக்தி யெ ளிபாய் முலைச்சங் கரிபெறுமைங்**
**கரவடம் பக்திரக் காறுஞ்சு மான்மரு மாசந்த்ரசே**
**கரவடம் பக்திரட் கல்வளை யாயெனைக் காத்தருளே.** (42)

**கரவடம் பக்தியிலார்க்கு அளிப்போய் இருள் காய்ந்திடும் பாற்**
**கர வடம் பக்தி எளியாய் முலைச்சங்கரி பெறும் ஐங்**
**கர வடம் பக்திரக்கால் துஞ்சும் மால் மருகா சந்திர சே**
**கர அடம் பக்திரள் கல்வளையாய் எனைக் காத்தருளே.**

கரவடம் - விக்கினம், பாற்கர – பாஸ்கர – ஞானசூரியனே, வடம் பக்திரக்கால் - ஆலம் இலைகளில், சேகர- சடாமுடியையுடையவனே. அடம் - அடம்பங்கொடி.

**இ-ள்: பக்தி இலார்க்குக் கரவடம் அளிப்போய்** - அன்பில்லா தவருக்கு விக்கினத்தை ஆக்குபவரே, **இருள் காய்ந்திடும் பாற்கர** – மலவிருளைக் கடிந்தகற்றும் ஞானசூரியரே, **பத்தி வடம்** - நிரையே கோக்கப்பட்ட முத்து மாலையில், **ஒளி பாய்**- ஒளி பாயப்பெற்ற: **முலைச் சங்கரி பெறும் ஐங்கர** - பரஞானம்

அபரஞானம் என்னும் தனபாரங்களையுடைய உமாதேவியார் பெற்றருளிய ஐங்கரக்கடவுளே, **வடம் பக்திரக்கால் துஞ்சும் மால் மருகா-** ஆலமிலையில் அறிதுயில் கொள்ளும் திருமாலின் மருகரே, **சந்த்ர சேகர-** பிறைச்சந்திரனை யணிந்த சடாமுடியை யுடையவரே, **அடம் பத்திரள் கல்வளையாய் -** கூட்டமான அடம்பங் கொடிகள் பரந்துள்ள கல்வளைப்பதியிற் கோயில் கொண்டவரே, **எனைக் காத்து அருள் -** தமியேனைப் பாதுகாத்துத் திருவருள் புரிவீர் எ—று,

கரவடம் - வஞ்சனை, களவு என்னுமிவைகளைக் குறிக்குஞ் சொல்: இங்கே தீமையை உணர்த்தி நின்றது. தம்மை வழிபடார்க்கு விநாயகப் பெருமான் விக்கினத்தை விளைக்கும் மறக்கருணையி னியல்பு இவ்வந்தாதி யுரையில் முன்னர் விளக்கப்பட்டது.

**அன்பிலார்க்கு விக்கினங்கள் நேர விடுபவரே, மலவிருளை யகற்றும் ஞானசூரியரே, உமை யம்மையார் புத்திரரே, திருமான் மருகரே, கல்வளைக் கணபதியே தமியேனைக் காத்தருள்புரிக என்றபடி.**

**அருந்துதிக் கையமில் கற்பீந்த மேனை யசலவரை**
**யருந்துதிக் கைக்கு மகளாய்ப் பிறந்திடு மன்னைவிட**
**மருந்துதிக் கைப்புனை கூறைப் பினாகி யருள்கல்வளை**
**யருந்துதிக் கைக்குன்ற மேயடி யேனுன் னடைக்கலமே. (43)**

**அருந்துதிக்கு ஐயம்இல் கற்புஈந்த மேனை அசல அரை**
**யரும் துதிக்கைக்கு மகளாய்ப் பிறந்திடும் அன்னை விடம்**
**அருந்து திக்கைப் புனை கூறைப் பினாகி அருள் கல்வளை**
**அரும் துதிக்கைக் குன்றமே அடியேன் உன் அடைக்கலம்.**

அருந்துதிக்கு- அருந்ததிக்கு, அரையரும்- மலையரசனும், அசலம் -மலை, பினாகி – பினாகம் என்றவில்லை உடையவரே.

**இ-ள்: அருந்துதிக்கு ஐயம் இல் கற்பு ஈந்த** – வசிட்ட முனிவருடைய பத்தினியாகிய அருந்ததிக்குச் சந்தேகமற்ற கற்பை அருளியவளும், **மேனை அசல அரையரும் துதிக்கைக்கு மகளாய்ப் பிறந்திடும் அன்னை** – மேனையென்பவளும் மலை யரசனும் போற்றும்படி

அவர்களிடத்தில் மகளாய் வளர்ந்த எங்கள் தாயுமாகிய உமாதேவியாரும், **விடம் அருந்து திக்கைக் கூறை புனை பினாகி** – நஞ்சை உண்டவரும் திக்கை ஆடையாகப் புனைந்தவரும் பினாகம் என்னும் வில்லைக் கொண்டவருமாகிய சிவபெருமானும், **அருள்-** பெற்றருளிய, **கல்வளை அருந் துதிக்கைக் குன்றமே** - கல்வளைப்பதியில் எழுந்தருளிய தும்பிக்கையையுடைய மலையை நிகர்த்த கயமுகக்கடவுளே, **அடியேன் உன் அடைக்கலம்** - தமியேன் தேவரீருக்கு அடைக்கலம் எ–று

அருந்துதிக் கையமில கற்பீந்த அன்னை, மேனை யசலவரை யருந்துதிக்கைக்கு மகளாய்ப் பிறந்திடும் அன்னை, எனத் தனித்தனி முடிக்க, " காமரு வடிவாய் எங்குங்காண்பது சக்தி" என்ற பிரகாரம், ஈசுவரியே அழகின் மயமாயுள் ளாளாதலானும் பெண்பாலார்க்குரிய பேரழகும் கற்பு முதலாம் உயர் குணங்களும் இறைவியுடைய அம்ஸமாதலினாலும் "அருந்துதிக் கையமில் கற்பீந்த........ அன்னை" என்றார். அருந்ததி அருந்துதியென வந்தது.

**ஈசுவரிக்கும் ஈசுவரனுக்கும் புதல்வராகத் தோன்றி யருளிய யானைமுகத் தெய்வமே! கல்வளைப்பெருமானே! தமியேன் தேவரீருக்கு அடைக்கலம் என்றபடி.**

**அடைக்கலங் காவென்ற பேர்க்கினி யான்மட வன்னக்கண**
**மடைக்கலங் காரஞ் சினையென் றணைகல் வளைவரைவா**
**யடைக்கலங் காட்டுந் தனத்தீர் விரக மகலப்பொன்னி**
**லடைக்கலங் காக்கவென் றென்றோ குணதிசை யாவதுவே. (44)**

**அடைக்கலம் கா என்றபேர்க்கு இனியான் மட அன்னக் கணம்**
**அடைக்கு அலங்கு ஆரம்சினைஎன்றுஅணைகல்வளைவரைவாய்**
**அடைக்கலம் காட்டும் தனத்தீர் விரகம் அகலப் பொன் இல்**
**அடைக்கல் அம் காக்க என்று என்றோ குணதிசை ஆவதுவே.**

ஆரம் - முத்து, அடைக்கலம் - ஊர்க்குருவி, பொன்இல் - தாமரை.

**இ-ள் : அடைக்கலம் கா என்ற பேர்க்கு இனியான்** - தமியேன் தேவரீருக்கு அபயம் காத்தருள வேண்டும் என்று இரப்பவர்க்கு இதமானவராகிய விநாயகப் பெருமானுடைய, **மட அன்னக் கணம் அலங்கு ஆரம்** - இளமையான அன்னப் பெடைகள் ஒளி செய்கின்ற முத்துக்களை, **சினைஎன்று அடைக்கு அணை** – தாம் இட்ட முட்டையென்றெண்ணி அடைகாக்கச் செல்லப்பெற்ற, **கல்வளை வரை வாய்** - கல்வளைப் பதியிலுள்ள மலைச்சாரலில், **அடைக்கலங் காட்டுந் தனத்தீர்** - ஊர்க் குருவியின் வடிவைக் காட்டும் (திரண்ட) தனங்களை யுடைவரே, **விரகம் அகல** – எனது விரகவேதனை நீங்க, **பொன் இல்** - நுமது வீடாகிய தாமரைப்பூ, **அடைக்கல் காக்க** – அடைத் தலாகிய குவிதலை நீக்க (இதழ் விண்டு அலர), **என்று- சூரியன், குணதிசை ஆவது-** கிழக்குத் திக்கில் உதிப்பது, **என்றோ-** எந்த நேரமோ (அறியேன்) எ–று.

பொன் = இலக்குமி, ஈண்டுத் தலைவியைக் குறித்து நின்றது. 'அடைக்கலம் காக்க' என்புழி அம் விரித்தல் விகாரம். இது பிரிவுழிக் கலங்கலென்னுங் கிளவித் தொகையுள்'' கண்படை பெறாது கங்குனோதல்'' என்னும் அகப் பொருட் டுறையாகும். தனத்தீர்: உயர்வுப்பன்மை. தலைவியை இலக்குமியாகப் புனைந்துரைக்குங் கருத்தால் அவள் தன் வீட்டினின்றும் வெளிப்போ தருதலைக் குறித்து ' தாமரைம லராகிய வீடு திறக்கப்பட்டால் ( பொழுது புலர்ந்தால் என்றபடி) தலைவியைத் தான் சென்றெய்தல் எளிதாகு' மென்னும் உட்கோளால் இவ்வாறு தலைவன் கூறினானென்பது. தலைவி தன்னெதிரில் இல்லையாகவும் தன்னிச்சையால் முன்னிலைப் படுத்திக் கூறுகின்றானாதலின், 'நும்மில்' எனற்பாலது 'பொன்னில்' என அவளைப் படர்க்கைச் சொல்லாற் கூறியது. "ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே" என்னுஞ் சூத்திரத்தாற் போந்த இடவழுவமைதி. அகல காக்க ஆவது எனக் காரியப் பொருளவாகிய வினையெச்சங்களை முறையே முடிக்க.

**இயற்கைப்புணர்ச்சியிற் கூடித் தலைவியைப் பிரிந்து தனித்திருக்குந் தலைவன் இரவில் விரகவேதனையால் தலைவியை முன்னிலைப்படுத்தி இங்ஙனம் தன்னுட் கூறி வருந்தினானென்றபடி.**

**வனத்தா னையன்றொழு மம்மானை யம்புலி மானணிசெவ்**
**வனத்தானை யன்ன வயற்கல் வளைப்பெரு மானைமறை**
**வனத்தா னையனக் கணைமலை மான்மரு மானையைம்பூ**
**வனத்தானை யன்புசெய் வார்முலைப் பாலை மறந்தவரே. (45)**

**வனத்தான் அயன் தொழும் அம்மானை அம்புலி மான்அணிசெவ்**
**வனத்தானை அன்ன வயல் கல்வளைப் பெருமானை மறை**
**வனத்தான் நயனக் கணை மலை மான் மருமானை ஐம்பூ**
**வன் அத்தானை அன்பு செய்வார் முலைப்பாலை மறந்தவரே.**

வனத்தான் - விஷ்ணு , ஐம்பூவன் - மன்மதன்

**இ-ள் : வனத்தான்** - துழாய் மாலையைத் தரித்தவராகிய விஷ்ணு மூர்த்தியும், **அயன்** - பிரமதேவரும், **தொழும் அம்மானை-** வழிபடும் தலைவரும், **அம்புலி மான் அணி செவ் வனத்தானை** – பிறைச்சந்திரனை அணிந்தவரும் செவ்விய திருமேனியை யுடையவரும், **அன்ன வயற் கல்வளைப் பெருமானை-** அன்னப் பறவைகள் சஞ்சரிக்கும் செந்நெல் வயல்களைக் கொண்ட கல்வளைப் பதியிற் கோயில்கொண்ட பெருந்தகையும், **மறை வனத்தான் நயனக் கணை மலை மான் மருமானை** - வேதாரணிய ஈசுவரரும் திருக்கண்களாகிய பாணத் தைப் பொருந்திய பருவதவர்த்தனியும் பெற்றருளிய புதல்வரும், **ஐம்பூவன் அத்தானை-** ஐந்து பூக்களைப் பாணமாகக்கொண்ட மன்மதனுக்கு மைத்துனரும் ஆகிய விநாயகக்கடவுளை, **அன்பு செய்வார்** - பக்தி பாராட்டுபவர்கள், **முலைப்பாலை மறந்தவரே** – தாயின் முலைப்பாலைக் குடிப்ப தனை மறந்தவராவர் எ–று.

"முலைப்பாலை மறந்தவரே" என்பது இனிமேற் பிறவியெடுக்கமாட்டா ரென்பதை உணர்த்தியவாறாம். ஐயன் நையனம் என்பன முறையே அயன், நயனம் என்பனவற்றின் போலியாம்.

**கல்வளைப் பெருமானை வழிபடுபவர் இனிமேற் பிறவியுட் புகமாட்டார் என்றபடி.**

தவராக மாகன கச்சிலை கோலிபொற் றான்பெறமைத்
தவராக மாக விடந்தவன் சாபந் தவிர்த்தவன்மா
தவராக மாகநற் காமுரல் கல்வளைத் தந்திநன்மா
தவராக மாகரன் கண்ணாறு பூங்கொன்றைத் தாமத்தனே. (46)

தவராக மாகனகச் சிலை கோலிப் பொன் தாள் பெற மைத்
த வராகமாக இடந்தவன் சாபந் தவிர்த்தவன் மா
தவ ராகம் ஆக நல்கா முரல் கல்வளைத் தந்தி நல்மா
தவர் ஆகம் ஆகரன் கள் நாறு பூங்கொன்றைத் தாமத்தனே.

தவராக – வில்லாக, வராகம் - பன்றி, ஆகரன் - இருப்பிட மானவன்.

இ-ள்: **தவராக மா கனகச் சிலை கோலி-** வில்லாகப் பெரிய பொன் மலையான மேருவை வளைத்த சிவபெருமானுடைய, **பொன் தாள் பெற** - பொன் போலும் திருவடிகளைத் தேடிக்காணவேண்டி, **மைத்த வராகமாக இடந்தவன்-** கருநிறங் கொண்ட பன்றியாகப் பூமியை அகழ்ந்து சென்ற திருமாலுக்கு, **சாபந் தவிர்த்தவன்-** (ஈசுவரி இட்ட ) சாபத்தை நீக்கியருளியவர் (யாரெனில்) **மா தவ ராகம் ஆக-** வண்டுகள் மிகவும் ராகத்தோடு, **நல்கா மூரல் கல்வளைத் தந்தி** – நல்ல பூஞ்சோலையிலே ரீங்காரஞ் செய்யப்பெற்ற கல்வளைப் பதியிற் கோயில்கொண்டருளிய யானைமுகத் தெய்வமும், **நல்மாதவர் ஆகம் ஆகரன்-** தூயவர்களாகிய முனிவர்களுடைய மனத்தை இருப்பிடமாகக் கொண்டவரும், **கள் நாறு கொன்றைப்பூத் தாமத்தனே** - தேன் மணக்கும் கொன்றைப்பூ மாலையை யணிந்தவருமாகிய கணேசமூர்த்தியே யாவர் எ–று.

மூன்றாமடியிலுள்ள “தவ” மிகுதியைக் குறிக்கும் ஓர் உரிச்சொல் மைத்த வராகமாக இடந்தவன் சாபந் தவிர்த்தவன் என்பதன் வரலாறு: பன்றி வடிவங் கொண்டு பரமசிவனுடைய திருவடியைத் தேடிச்சென்ற திருமால், ஒரு தினம் கைலை யங்கிரியிற் கண்ணுதற் பெருமானைத் தரிசிக்கச் சென்ற விடத்துக் கைலைக் கோபுர வாசலில் எழுந்தருளிய கரிமுகக் கடவுளுக்கு வழிபாடாற்றாது செம்பொற்றிருக் கோயிலுட் சென்று கறைமிடற்றிறைவனையே வணங்கி நிற்றலும், எம்பெருமான் ஒரு திருவிளையாட்டைத் திருவுளத்துக்கொண்டு, இறைவியை

நோக்கித் தம்முடன் கவறாட வரும்படி இயம்பியருளுதலும், இறைவி நாம் கவறாடும்போது வெற்றி தோல்வி சொல்வதற்கு ஒரு நடுவன் வேண்டுமேயென, இறைவர் இத்திருமாலே சான்றாக இருக்குக என்றருளி, அங்ஙனம் அவரைச் சான்றாக வைத்துக் கவறாடியவிடத்து ஈசுவரி வெல்ல ஈசுவரன் தாம் தோல்வியுற்றும் தோல்வியுறவில்லையெனச் சாதித்தருள, எமையாள் உமையாள் உற்றது உரைத்தியெனத் திருமாலைக் கேட்க, இறைவன் தம் பக்கல் சொல்ல வேண்டுமெனத் திருமாலுக்குத் திருவிழியாற் குறிப்புக் காட்ட, அவர், வென்ற இறைவி தோற்றனளென்றும் தோற்ற இறைவர் வென்றாரென்றும் ஓரஞ் சொல்ல, இறைவி சீற்றங்கொண்டு “திருமாலே,நீ கண்ணாரக் கண்டுகொண்டிருந்தும் ஓரஞ் சொன்னாயாதலின் குருட்டுத் தன்மையுள்ள மலைப்பாம்பாகிப் பசி தாகம் வருத்தக் கிடந்து அலமருதி” என அக் காவற் கடவுளைச் சபித்தருளினர். பின்னர்ப் பாம்பு உருவடைந்த திருமால் கைலாசபதி பணித்தருளியபடி தெட்சண பூமியிலுள்ள ஆலவனத்தை யடைந்து அங்குள்ள ஆலமரத்தின் பொந்திற் சிலகாலங்கிடந்து வருந்தி, சப்த கன்னியர் உபதேசித்தபடி மார்கழி மாசத்து விநாயக சஷ்டி விரதத்தை விதிப்படி அநுஷ்டித்து எங்கள் ஐங்கரக் கடவுளைப் பூசிக்க, அப்பெருமான் தேவி இட்ட சாபத்தை நீக்கித் திருவருள் புரிந்தன ரென்பதாம். இவ்வரலாற்றைக் கந்தபுராணம் - கயமுகன் உற்பத்திப் படலம், அநந்தன் சாப நீங்கு படலம் முதலியவற்றிற் பரக்கக் காண்க. இங்கே பசுபதியும் பருவதவர்த்தனியும் ஆடியருளிய கவறு, சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய மானுடர்கள் ஆடும் கவறு, சதுரங்கம் முதலியனபோலல்லாது ஞானக் கருத்தமைந்த தென்பதனை.

**“காயம் பலகை கவறைந்து கண்மூன்றாய்**
**ஆயம் பொருவ தோரைம்பத் தோரக்கரம்**
**மேய பெருமான் இருந்து பொருகின்ற**
**மாயக் கவற்றின் மறைப் பறியேனே.**

என்னும் திருமூலநாயனார் திருவாக்கானுணர்க.

**உமாதேவியார் நாராயணமூர்த்திக்கு இட்ட சாபத்தை நீக்கியருளியவர் கல்வளைப்பதியில் எழுந் தருளிய கயமுகக் கடவுள் என்றபடி.**

மத்தன் பராபரை சீராட்டுப் பிள்ளை மணிமந்தர
மத்தன் பராவிச் சிவந்திடு சேவடி வாய்ந்தபது
மத்தன் பராகவெண் ணீறணி கல்வளை வானவனா
மத்தன்ப ரானவ ரன்றோ கயிலையில் வாழ்பவரே. (47)

மத்தன் பராபரை சீராட்டுப் பிள்ளை மணி மந்தர
மத்தன் பராவிச் சிவந்திடு சேவடி வாய்ந்த பது -
-மத்தன் பராக வெண்ணீறணி கல்வளை வானவன் நா-
மத்து அன்பரானவர் அன்றோ கயிலையில் வாழ்பவரே

மத்தன் - ஊமத்தம்பூவையணிந்தவன், பராபரை - ஈஸ்வரன், மந்தரமத்தன் - மந்தரமலையை மத்தாக்கிய விஷ்ணு, பதுமத்தன் - தாமரைபோன்ற பாதங்களையுடையவன், பராக -துகளாகிய

**இ-ள்: மத்தன்** - ஊமத்தம்பூவை யணிந்த பரமசிவனும், **பராபரை-** ஈஸ்வரியும், **சீராட்டுப்பிள்ளை** - சிறப்புச்செய்தலையுடைய (பாராட்டுகின்ற) பிள்ளையும், **மணி மந்தர மத்தன்** - (பாற்கடல் கடைந்த போது) அழகிய மந்தரமலையை மத்தாகக்கொண்ட திருமால், **பராவிச் சிவந்திடு சேவடி வாய்ந்த பதுமத்தன்** - துதித்து வணங்குதலிற் சிவந்த திருவடித்தாமரையை யுடையவரும், **பராக வெண்ணீறு அணி கல்வளை வானவன்** - உயிர்களின் மலநீக்கத்தின்பொருட்டு (நிர்மலமாகிய தமது திருமேனியில்) துகளாகிய விபூதியைத் தரித்தருளியவருமாகிய கல்வளைப்பெருமானுடைய, **நாமத்து அன்பர் ஆனவர் அன்றோ** - திருநாமங்களை அன்புடன் செபித்தவர்களல்லவா, **கயிலையில் வாழ்பவர்** - கைலாச பதவியில் (தவறாது) இருப்பவர் எ-று.

வாழ்பவர் என்னும் வினை முக்காலத்தையும் உட்படுத்தி நின்றது. திருமால் தமது திருமுடி பெருமானுடைய சீறடியில் உறுத்தும் படி பன்முறை வணங்குவரென்பதை உணர்த்தும் வண்ணம் "பராவிச் சிவந்திடு சேவடி" என்றார்.

**கல்வளைப்பெருமான் திருநாமங்களை யோதுவோர் எக்காலத்தும் நற்கதியுறுவ ரென்றபடி**

பவநம் புயர்தொண்டர்க் கில்லாமை யாக்கும் பரன்கனனீர்
பவனம் புயங்க முடியேந்து மண்விண் படிவன்கருப்
பவனம் புயலளக் குங்கல் வளைப்பதி மீதிலுறை
பவனம் புயன்றொழும் பாதாம்புயனெம் பரதெய்வமே. (48)

பவம் நம்பு உயர் தொண்டர்க்கு இல்லாமை ஆக்கும் பரன் கனல்நீர்
பவனம் புயங்கம் முடியேந்தும் மண்விண் படிவன் கருப் -
- பவனம் புயல் அளக்கும் கல்வளைப் பதிமீதில் உறை -
- பவன் அம்புயன் தொழும் பாதாம்புயன் எம் பரதெய்வமே.

பவம் - பிறவி, கருப்பவனம் - கரும்புச்சோலை, புயல் - முகில், அம்புயன் - பிரமா

**இ-ள் : நம்பு உயர் தொண்டர்க்கு பவம் இல்லாமை ஆக்கும் பரன்** - தம்மை நம்பிய மேலான அடியவர்களுக்குப் பிறவி இல்லாமையைச் செய்கின்ற முதல்வரும், **கனல் நீர் பவனம்** - நெருப்பு தண்ணீர் காற்று, **புயங்கம் முடி ஏந்தும் மண் விண் படிவன்** - ஆதிசேடன் என்னும் பாம்பு தன் தலையிற் சுமக்கும் பூமி ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களின் வடிவைக் கொண்ட வரும், **கருப்பவனம் புயல் அளக்கும் கல்வளைப்பதிமீதில் உறைபவன்** - கருப்பஞ்சோலைகள் முகின்மண்டலம்வரையில் உயரப்பெற்ற கல்வளைப்பதியிற் கோயில்கொண்டவரும், **அம்புயன் தொழும் பாத அம்புயனே** - பிரமதேவரும் வணங்குந் திருவடித்தாமரைகளை யுடையவருமாகிய விக்கினேசுவரப் பெருமானே, **எம்பரதெய்வம்** - எங்கள் முழுமுதற்கடவுளானவர் எ-று.

ஈற்று ஏ தேற்றம்; புயல் - இங்கே முகில் மண்டலத்திற் காகி நின்றது.

**அடியவர் பிறவித்துன்பத்தை ஒழிப்பவரும் பஞ்சபூத வடிவினரும் பிரமாவாற் பூசிக்கப்படுபவருமாகிய கல்வளைப் பெருமானொருவரே எங்கள் முழுமுதற் கடவுளென்றபடி.**

**பரமானந் தக்கன் மழைமாரி காத்திடும் பைங்கனகாம்**
**பரமானந் தக்கந் தரவிந்தி ராணி பதியயனும்**
**பரமானந் தக்கல் வளையத்த னுத்தம பத்தர்சித்தன்**
**பரமானந் தப்பிள்ளை யார்துணைச் சேவடிப் பங்கயமே (49)**

**பரமால் நந்தக்கல்மழை மாரி காத்திடும் பைங் கனக அம் -**
**- பரமால் நந்தக் கந்தர இந்திராணி பதி அயன் உம் -**
**- பர் அமான் அந்தக் கல்வளை அத்தன் உத்தம பத்தர் சித்தன்**
**பரமானந்தப் பிள்ளையார் துணை சேவடிப் பங்கயமே.**

அம்பரம் - பீதாம்பரம், நந்தம் - சங்கு, கந்தரம் - கழுத்து, அமான் - தலைவன்.

இ-ள் : **கல்மழை மாரிநந்த** - கன்மழை பெய்தமையால் நேர்ந்த இடை யூறுகெட, **ஆன் காத்திடும் பைங் கனக அம் பரமால்** - கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்துப் பசுக்களைக் காத்த கிருஷ்ண அவதாரத்தைக் கொண்ட பீதாம்பரத்தை உடுத்தியவராகிய திருமாலுக்கும், **நந்தக்கந்தர இந்திராணிபதி** - சங்கினையொத்த கழுத்தையுடைய இந்திராணியின் நாய கனாகிய இந்திரனுக்கும், **அயன்** - பிரமதேவருக்கும், **உம்பர்** - (ஏனைய) தேவர்கட்கும், **அமான்** - தலைவரும், **அந்தக் கல்வளை அத்தன்** - சிறந்த கல்வளைப்பதியில் எழுந்தருளிய பரமபிதாவும், **உத்தம பத்தர் சித்தன்** - மேலான அன்பர்களின் சித்தத்தில் உறைபவருமாகிய, **பரமானந்தப் பிள்ளையார் துணைச் சேவடிப் பங்கயமே** - பரமானந்தப்பிள்ளையாருடைய இரண்டாகிய திருவடித்தாமரைகளே, **பரம்** - தமியேனுக்குப் பற்றுக்கோடாம் எ-று.

அம்மான் என்பது அமான் எனத் தொக்கு வந்தது. அம்மான் - தலைவன்; கண்ணபிரானோடு மாறுபட்ட இந்திரன் கன்மழை பெய்யும்படி செய்ய அம்மழையினாற் பசுக்கள் இடறுவதை இடையர் போய்க் கண்ணபிரானுக்கு முறையிட, அந்தப் பிரான் கோவர்த்தனமென்னும் மலையை அகழ்ந்தெடுத்துத் தலைகீழாக மாறிக் குடையாகப் பிடித்துக் கன்மழையைத் தடுத்துப் பசுக்களைக் காத்தருளினாரென்பது சரித்திரம்.

**கல்வளைப்பதியிற் கோயில்கொண்டருளிய பரமாநந்தப் பிள்ளையார் திருவடிகளே சரணம் என்றபடி.**

**பங்கைய மாலை யளிக்குழல் வாய்முலை பண்மொழிகோ**
**பங்கைய மாலை யனையாட் குதவரன் பாலன்றடப்**
**பங்கைய மாலை யலர்கல் வளைக்கண் பரிந்தொருகூ**
**பங்கைய மாலையந் தொட்டியற் றாரெப் படியுய்வரே (50)**

**பங்கய அம்மாலை அளி குழல் வாய் முலை பண் மொழி கோ**
**- பம் கயம் ஆலை அனையாட்கு உதவு அரன் பாலன் தடம்**
**பங்கய மாலை அலர் கல்வளைக்கண் பரிந்து ஒரு கூட -**
**- பம் கயம் தொட்டு இயற்றார் எப்படி உய்வாரே**

கோபம் - இந்திரகோபம், கயம் - யானை, தடம் - தடாகம், கூபம் - கிணறு, கயம் - குளம்.

**இ-ள்: அம்மாலை அளிக் குழல்** - அழகிய மாலையைச் சூடிய வண்டுகள் படியுங் கூந்தலை உடையவரும், **வாய் முலை பண்மொழி** - அதரமும் தனங்களும் இனிய சொல்லும், கோபம் கயம் ஆலை அனையாட்கு (முறையே) இந்திரகோபத்தையும் யானைமத்தகத்தையும் கருப்பஞ்சாற்றையும் நிகர்த்த இறைவிக்கு, **பங்கை உதவு அரன் பாலன்** - இடப்பாகத்தைக் கொடுத்த ஈசுரனது புத்திரராகிய விநாயகப்பெருமான் கோயில் கொண்டருளிய, **தடப்பங்கயமாலை அலர் கல்வளைக்கண்** - தடாகங்களில் தாமரைப்பூக்கள் நிரையே மலரப்பெற்ற கல்வளைத்தலத்தில், **பரிந்து ஒரு கூபம் கயம் தொட்டு** - மனப்பூர்வமாக ஒரு (தருமக்) கிணற்றையேனும் ஒரு திருக் குளத்தினையேனும் தோண்டி, **ஆலயம் இயற்றார்** - (அத்) திருக்கோயிலின் திருப்பணியையும் முற்றுவிக்காதவர் (நிறைவேற்றாதவர்); **எப்படி உய்வர்** - எவ்வாறு ஈடேறப் போகின்றார்கள் எ-று.

அம்மாலை என்பது அமாலையென மகரந் தொக்குவந்தது; கோபம் - இந்திரகோபம் (தம்பலப்பூச்சி); ஒரு என்பதைக் கயத்தொடுங் கூட்டுக. எப்படி என்ற வினா எதிர்மறைப் பொருளில் வந்தது; ஒருவாற்றானும் உய்யமாட்டா ரென்பதாம்.

**ஈசுர புத்திரராகிய கல்வளைப் பெருமான் எழுந்தருளிய திவ்விய தலத்தில் ஒரு தருமக் கிணற்றையேனும் திருக்குளத்தையேனும் அமைக்காத வரும் அத்திருக் கோயிற் றிருப்பணியை முற்றுவிக்காத வரும் எவ்வாறு ஈடேறப்போகின்றார் என்றபடி.**

வருந்தும் பிறவி யலைவாரி நீந்த மதுவினைக்க
வருந்தும்பி வீழ் மலர்த் தாட்புணை தாகன்னல் வான்கதிர
வருந்தும் ப்ரகாச மணித்தேர் தடுக்கும் வளக்கல்வளை
வருந்தும்பி மாமுகத் தையாமெய் யாகுண்ட வண்டியனே. (51)

வருந்தும் பிறவி அலைவாரி நீந்த மதுவினைக் க
- வரும் தும்பிவீழ் மலர்த்தாள் புணைதா கன்னல் வான் கதிர
- வர் உந்தும் பிரகாச மணித்தேர் தடுக்கும் வளக் கல்வளை
வரும் தும்பி மாமுகத்து ஐயா மெய்யா குண்ட வண்டியனே

வாரி - கடல், மது - தேன், புணை - தெப்பம், குண்டம் - குடம்.

இ-ள்: **கன்னல் வான் கதிரவர் உந்தும் பிரகாச மணித் தேர் தடுக்கும்** - கரும்புகளானவை அந்தரத்திற் செல்லும் சூரியன் செலுத்தும் ஒளியுடைய அழகிய தேரைத் தடுக்கின்ற, **வளம் கல்வளை வரும் மா தும்பி முகத்து ஐயா** - வளத்தையுடைய கல்வளைப்பதியிற் கோயில் கொண்டருளிய பெருமையாகிய யானைமுகத்தையுடைய தலைவரே, **மெய்யா** - மெய்யர்க்கு மெய்யராயுள்ளவரே, **குண்ட வண்டியனே** - குடம்போன்ற திருவயிற்றையுடையவரே, **வருந்தும் பிறவி அலை வாரி நீந்த** - வருந்துகின்ற பிறவியாகிய அலைகளையுடைய கடலைத் தமியேன் கடப்பதற்கு, **மதுவினைக் கவரும் தும்பி வீழ் மலர்த் தாட்புணை தா** - தேனைச் சேர்க்கின்ற வண்டுகள் படியும் செந்தாமரைப் பூப்போன்ற திருவடியாகிய தெப்பத்தைத் தரல்வேண்டும் எ-று.

**கல்வளைப்பெருமானே, மெய்யர்க்கு மெய்யனே, குடம்போலும் திருவுதரத்தை யுடையவரே, தேவரீருடைய திருவடியையே தெப்பமாகத் தந்து தமியேன் பிறவிப்பெருங்கடல் நீந்தும் வண்ணம் திருவருள்பாலித்தல் வேண்டுமென்றபடி.**

**வண்ட மருங்குலை யான்மரு கன்கல் வளைச்சிலம்பா
வண்ட மருங்குலை ஞாளியு மாறு வருமதர்வாய்
வண்ட மருங்குலை விற்கொண்ட வேட்டுவர் மாவலிது
வண்ட மருங்கு லிளவஞ்சி பாலல்லின் வாரலையே. (52)**

**வண்டு அமரும் குலையான் மருகன் கல்வளைச் சிலம்பா**
**வண் தமரும் குலை ஞாளியும் மாறு வரும் அதர்வாய்**
**வண்டு அமரும் குலைவில் கொண்ட வேட்டுவர் மாவலிது**
**- வண்ட மருங்குல் இள வஞ்சிபால் அல்லின் வாரலையே**

சிலம்பு - மலை, குலை - துளசிப்பூ, தமர் - சுற்றத்தவர், ஞாளி - நாய், அதர் - வழி, மருங்குல் - இடை, அல் - இரவு.

**இ-ள்: வண்டு அமரும் குலையான் மருகன் கல்வளைச் சிலம்பா** - வண்டுகள் படியும் துளசிப்பூமாலையைத் தரித்த திருமாலின் மருகராகிய விநாயகப்பெருமான் கோவில்கொண்டருளிய கல் வளைப்பதியிலுள்ள பொருப்பனே, **வண் தமரும் குலை ஞாளியும் மாறு** - (நீ தலைவியிடம் வரும் விஷயத்தில் இங்குள்ள) வளவிய சுற்றத்தவரும் குரைக்கின்ற நாயும் உனது வருகைக்கு மாறாகும், **வரும் அதர் வாய்** - (அன்றியும்) நீ வரும் மார்க்கத்தில், **வண்டு அமரும் குலைவில்கொண்ட வேட்டுவர் மா (மாறு)** - அம்புபொருந்திய குதையோடுகூடிய வில்லினைக் கொண்டவர்களாகிய வேடர்களும் மிருகங்களும் மாறாகும், **வலி துவண்ட மருங்குல் இளவஞ்சிபால் அல்லின் வாரலை** - (ஆதலால்) கொடியெனத் துவண்ட இடையினையுடைய யௌவனம் பொருந்திய தலைவியிடத்து இரவில் வாராதொழிதி எ-று.

குல்லை வல்லி என்பன லகரந் தொக்கு வந்தன. குரைத்தலைக் குலைத்தலெனல் உலகவழக்கு. வாரலை எதிர்மறையேவல்.

**சுற்றத்தாரும் நாயும் நீ வரும் மார்க்கத்திலுள்ள வேட்டுவரும் மிருகங்களும் நின் வருகைக்கு மாறுதலின் நீ தலைவியிடம் இரவில் வாராதொழி கெனத் தலைவனைப் பாங்கி தடுத்தபடி.**

**வாரிக் கடுக்கை தனையண்டர் சொல்ல வரவெனை நீர்**
**வாரிக் கடுக்கையி னாற்பாவி யீர்கன் மனத்துவைத்தேன்**
**வாரிக் கடுக்கைமென் றான்றுஞ்சு காமயி லாடக்கண்டு**
**வாரிக் கடுக்கைசெம் பொன்றூற்று கல்வளை வாசனையே. (53)**

**வாரி கடுக்கைதனை அண்டர் சொல்ல வர எனை நீர்**
**வாரிக் கடுக்கையினால் பாவியீர் கல்மனத்து வைத்தேன்**
**வார் இக்கு அடுக்கை மென்று ஆன் துஞ்சுகா மயில் ஆடக்கண்டு**
**வாரிக் கடுக்கை செம்பொன் தூற்று கல்வளை வாசனையே.**

கடுக்கை - பழிச்சொல், வாரி - வாயில், அண்டர் - பகைவர், கடுக்கை - சினம், ஆன் - பசு, இக்கு - கரும்பு, கா - சோலை, கடுக்கை - கொன்றைமரம்.

**இ-ள்: அண்டர் கடுக்கைதனை சொல்ல வாரிவர** - பகைவராகிய அயலார் பழிதூற்ற வாயிலில்வர, **நீர் எனை வாரிக் கடுக்கையினால்**- நீவீர் என்னை மிகவுஞ் சினத்தலினாலே; **பாவியீர்** - பாவிகாள், **ஆன் வார்இக்கு அடுக்கை மென்று துஞ்சு கா** - பசுக்கள் நீண்ட கரும்பின் கூட்டத்தைத் தின்று உறங்கல்பெறுஞ் சோலையில், **மயில் ஆடக் கண்டு** - மயில்கள் ஆடுவதைக் கண்டு, **கடுக்கை செம்பொன்வாரித் தூற்று கல்வளைவாசனை** - கொன்றமரங்கள் (தம்மலர்களாகிய) செம்பொன்னை (சந்மானமாக) அள்ளி வீசுகின்ற கல்வளைப்பதியில் எழுந்தருளிய விநாயகக்கடவுளை, **கல்மனத்து வைத்தேன்** - கசிவற்ற கடிதான என்னுள்ளத்திற் சதா தியானிக்கலானேன் எ-று.

**இது தலைவன்மாட்டுத் தலைவி நயந்த பக்கத்து அத்தலைவி தான் இடையறாது துயருற்றமைக்குக் காரணங் கூறியபடி.**

**வாசவ னந்தர நாட்டோர் துதிக்கு மதக்கலுழி**
**வாச வனந்தற்கு ஞானோப தேசம் வழங்குமெய்யா**
**வாசவனந்த வளவளை சேர்கல் வளைப்பதியின்**
**வாச வனந்த ரவிபோலுன் றாடலை வைத்தருளே. (54)**

**வாசவன் அந்தர நாட்டோர் துதிக்கும் மதக் கலுழி**
**- வாச அனந்தற்கு ஞானோபதேசம் வழங்கும் மெய்யா**
**வாச அனம் தவள வளைசேர் கல்வளைப் பதியின்**
**வாச அனந்த ரவிபோல் உன்தாள் தலைவைத்து அருளே.**

வாசவன் - இந்திரன், கலுழி - ஞானமதநீர், அனந்தன்- விஷ்ணு, அநந்தரவி - அனேகசூரியர்.

**இ-ள்: வாசவன் அந்தர நாட்டோர் துதிக்கும் மதக்கலுழி வாச** - இந்திரனும் பொன்னுலகவாசிகளாகிய தேவர்களும் பரவுகின்ற ஞானமத நீரின் வாசனையையுடையவரே, **அனந்தற்கு ஞானோபதேசம் வழங்கும் மெய்யா** - விஷ்ணுமூர்த்திக்கு ஞானோபதேசத்தைச் செய்தருளிய மெய்ப்பொருளே, **வாச அனம் தவள வளைசேர் கல்வளைப் பதியின் வாச** - சிறகையுடைய அன்னங்களும் வெண்மையான சங்கும் பொருந்திய கல்வளைப்பதியை வாசஸ்தானமாகக் கொண்டவரே, **அனந்தரவிபோல் உன்தாள் தலைவைத்து அருள்** - அநந்தஞ் சூரியரை நிகர்த்த ஒளியோடு கூடிய தேவரீருடைய திருவடிகளைத் தமியேன் சிரசின்கண் வைத்துத் திருவருள் செய்தருளுவீர் எ-று.

அனந்தற்கு ஞானோபதேசம் வழங்கியது, தேவியிட்ட சாபத்தினால் விஷ்ணுமூர்த்தி அநந்தன் என்னும் பெயர்கொண்ட பெரிய பாம்பாக ஆலவனத்துள்ள ஆலமரப்பொந்துட் கிடந்து வருந்திய காலத்தில் விநாயகசஷ்டி விரதத்தை யநுட்டித்து ஐங்கரக் கடவுளின் அருளும் பாவவிமோசனமும் பெற்ற காலத்திலாம். மூன்றாமடியில் அன்னமென்பது அனமெனத் தொக்கு வந்தது.

**திருமாலுக்கு ஞானோபதேசஞ் செய்தருளிய கல்வளைப்பெருமானே, தமியேனுக்கும் திருவடிதீக்கை செய்தருளவேண்டு மென்றபடி.**

**அருக்கரைக் கன்ன றொடுங்கல் வளைய னறுகிதழி**
**யருக்கரைக் கன்னங்கை யைத்தந்தை யாயுடைய யான்வினைநே**
**யருக்கரைக் கன்னலிற் றீர்ப்பான் வரைமின் னராமணிப்பை**
**யருக்கரைக் கன்ன நடைக்கென்ற னாவி யகன்றதுவே. (55)**

**அருக்கரைக் கன்னல் தொடும் கல்வளையன் அறுகு இதழி**
**அருக்கரைக் கல் நங்கையைத் தந்தை தாய் உடையான் வினை நே**
**-யருக்கு அரைக் கன்னலில் தீர்ப்பான் வரைமின் அராமணிப்பை**
**அருக்கு அரைக்கு அன்ன நடைக்கு என்தன் ஆவி அகன்றது.**

அருக்கரை - கொன்றைப்பூவை, கல்நங்கை - எருக்கலம்பூ, அரைக்கன்னல் - அரை நாழிகை, அருக்கு - பாம்பின்படம்.

**இ-ள்: கன்னல் அருக்கரைத்தொடும் கல்வளையன்** - கரும்புகள் சூரிய மண்டலத்தைத் தொடும் கல்வளைப்பதியில் எழுந்தருளியவரும், **அறுகு இதழி அருக்கரை கல் நங்கையைத் தந்தை ஆய் உடையான்** - அறுகம் புல்லையும் கொன்றைப் பூவையும் எருக்கலம் பூவையும் சூடுபவராகிய பரமசிவனையும் பருவதவர்த்தனியையும் (முறையே) பிதா மாதாக்களாக வுடையவரும், **நேயருக்கு வினை அரைக் கன்னலில் தீர்ப்பான்** - தமது அடியவர்கட்கு நேரும் தீவினைகளை அரை நாழிகையுள் நீக்கியருளுபவருமாகிய விநாயகப்பெருமானுடைய, **வரைமின்** - மலையிற் பெண்ணினது, **அரா மணிப்பை அருக்கு அரைக்கு** - பாம்பின் இரத்தினத்தோடு கூடிய படத்தையொத்த கடிதடத்திற்கும், **அன்ன நடைக்கு** - அன்னத்தின் நடையை ஒத்த நடைக்கும் (ஆக), **என் தன் ஆவி அகன்றது** - எனது உயிர் போய்விட்டது எ-று.

இரண்டாமடியில் அருக்கு - எருக்கலை; இங்கே பூவுக் காகிநின்றது. கன்னல் - நாழிகை; இருபத்து நாலு நிமிஷங் கொண்ட நேரம். அரை, அன்னம் ஆகுபெயர்கள்; அரைக்கு நடைக்கு என்பனவற்றில் உம்மைகள் தொக்கன. தன் - சாரியை.

**இது தலைவன் தலைவியை நினைத்து வருந்திக் கூறியதென்றபடி.**

**அகம்பத்தர் நெஞ்சமுங் கல்வளைக் கோட்டமு மானவன்றீ**
**யகம்பத்த ரைச்சங் கரித்தோன் மருகன்றண் டாழிவெள்ளி**
**யகம்பத்த ரென்றளி யூதாத பூவிறைத் தன்புருகி**
**யகம்பத்தர் தாம்பெறும் பேறய னாலு மளப்பரிதே. (56)**

**அகம் பத்தர் நெஞ்சமும் கல்வளைக் கோட்டமும் ஆனவன் நீ**
**- ய கம்பத்தரைச் சங்கரித்தோன் மருகன் தண்டு ஆழி வெள்ளி**
**-ய கம்பு அத்தர் என்று அளி ஊதாத பூ இறைத்து அன்பு உருகிய**
**கம்பத்தர் தாம் பெறும் பேறு அயனாலும் அளப்பரிதே**

பத்தர் - அடியார், கோட்டம் - கோயில், கம்பத்தர் - பகைவர், கம்பத்தர் - மெய்விதிர்ப்புடையவர்.

**இ-ள்: பத்தர் நெஞ்சமும் கல்வளைக் கோட்டமும் அகம் ஆனவன்** - அடியாருடைய மனத்தையும் கல்வளைப்பதியையும் கோயிலாகக் கொண்டவர்; **தீய கம்பத்தரைச் சங்கரித்தோன் மருகன்** - கொடியவனும் பத்துத்தலைகளை யுடையவனுமாகிய இராவணனை (இராமாவதாரத்தில்) வதைத்த திருமாலுக்கு மருகர், **தண்டு ஆழி வெள்ளிய கம்பு அத்தர் என்று** - தண்டாயுதம், சக்கரம், வெண்மையாகிய சங்கு என்னுமிவைகளையேந்திய திருக்கரங்களையுடையவரென்று (துதித்து), **அளி ஊதாத பூ இறைத்து** - வண்டுகள் ஊதாத அன்றலர்ந்த பூக்களை வரைவின்றி இட்டு, **அன்பு உருகிய கம்பத்தர் தாம் பெறும் பேறு** - அன்பினால் உள்ளம் உருகும்மெய்விதிர்ப்புடைய அடியவர்கள் பெறும் பேறானது, **அயனாலும் அளப்பு அரிது** - பிரமதேவராலும் அளவிடுதற் கரியதாம் எ-று.

வண்டு படிந்த பூ பூசைக்கு உரியதல்லவாதலின் அளி யூதாத பூவெனப்பட்டது.

**அடியார் உள்ளக் கமலத்திற் கோயில் கொண்ட கல்வளைப் பெருமானைப் பூசித்து வழிபடும் அன்பர் பெறும் பேற்றை அளவிடுதல் பிரமாவாலும் முடியாதென்றபடி.**

**அப்பா தகமல நீக்கிச் சிலம்பிசை யார்த்திடுங்கோ**
**லப்பா தகமலம் பூசித்து நேசிக்க வன்புதவா**
**யப்பா தகமலங் கார்வயற் கல்வளை யாதிபொன்றா**
**தப்பா தகமலந் தாங்குஞ் சடைக்கரு ணாகரனே.** (57)

**அப்பாதக மலம் நீக்கிச் சிலம்பு இசை ஆர்த்திடும் கோ**
**- லப் பாதகமலம் பூசித்து நேசிக்க அன்பு உதவாய்**
**அப்பா தகமலங்கு ஆர்வயல் கல்வளையாதி பொன் தா(து)**
**அப்பாத கமலந் தாங்கும் சடைக் கருணாகரனே.**

தகமலங்கு - மலங்கு மச்சம், தாது - மகரந்தம்.

**இ-ள்: அப்பா** - அப்பரே; **தகமலங்கு ஆர் வயல் கல்வளை ஆதி** - மலங்கு மற்சம் மிகப் பொருந்திய வயலையுடைய கல்வளைப்பதியிற் கோயில்கொண்டருளிய ஆதிக்கடவுளே, **பொன் தாது அப்பாத கமலம் தாங்கும் சடைக் கருணாகரனே**

- கங்கைநீரைத் தரித்துள்ள சடையையுடைய கருணைமூர்த்தியே, **அப்பாதக மலம் நீக்கி** - அந்தப் பாதகமாகிய மலத்தை நீக்கி, **சிலம்பு இசை ஆர்த்திடும்** - சிலம்பின் ஒலி நிகழும், **கோலப் பாத கமலம் பூசித்து நேசிக்க** - தேவரீருடைய அழகிய திருவடித் தாமரைகளைப் பூசைசெய்து அன்பு பாராட்டுதற்கு, **அன்பு உதவாய்** - தமியேனுக்கு அருள்செய்தருள வேண்டும் எ-று.

பொன்றா தப்பாதகமலம் - நீர்; பொன்றாது அப்பிய கமலம் - தாமரை, இங்கே நீர் கங்கையாகும். அவனருளாலே யவன்றாள் வணங்க வேண்டுமாதலின் "பாத கமலம் பூசித்து நேசிக்க அன்புதவாய்" என்றார்.

**கல்வளைப் பெருமானே, கங்காதரரே, தேவரீர் திருவடிகளைத் தமியேன் பூசித்து ஈடேறும் வண்ணம் திருவருள் புரிக என்றபடி.**

**கருவரம் பாயயி னோக்கியர் தூறுகற் றுக்கற்றுப்ப**
**கருவரம் பாயப் படேலன்ன மேகல் வளைக்களிற்றைக்**
**கருவரம் பாய்ந்துகண் டோர்காட்டு தூபத்தின் கற்றையளக்**
**கருவரம் பாயதுண் டாலிக்கு மாலிக் கனமல்லவே. (58)**

**கரு அரம்பாய் அயில் நோக்கியர் தூறு கற்றுக் கற்றுப்ப**
**- கருவர் அம்பாயப்படேல் அன்னமே கல்வளைக் களிற்றைக்**
**கரு வரம்பு ஆய்ந்து கண்டோர் காட்டுந்தூபத்தின் கற்றை அளக்**
**-கர் உவர் அம்பு ஆயது உண்டு ஆலிக்கும் ஆலிக்கனம் அல்லவே**

அரம்பு - அரம், அயில் - வேல், தூறு - பழிமொழி, அம்பாயப்படேல் - துன்பப்படேல், அளக்கர் - கடல், ஆலிக்கனம் - ஆலங்கட்டிமழை.

**இ-ள்: அளக்கர் உவர் அம்பு ஆயது உண்டு** -(அந்தரத்திற் காணப்படுவது) கடலின் உவராகிய நீரை மொண்டு, **ஆலிக்கும் ஆலிக் கனம் அல்ல** - பெய்கின்ற ஆலாங்கட்டி மழையையுடைய முகிலன்று, **கருவரம்பு ஆய்ந்து கண்டோர்** - கருப்பத்தின் (பிறவியின்) எல்லையை ஆராய்ந்து கண்ட ஞானிகள், **கல்வளைக் களிற்றைக்காட்டு தூபத்தின் கற்றை** - கல்வளைப்பதியில் எழுந்தருளிய யானையாகிய விநாயகக்

கடவுளுக்கு இடப்படும் தூபத்தின் (புகைப்) படலமாகும். **அன்னமே அம்பாயப்படேல்** - (ஆதலால்) நடையில் அன்னத்தை யொத்தவளே நீ துன்பப்படாதே, **கரு அரம்பாய் அயில் நோக்கியர்** - கரிய அரத்தால் அராவப்பெற்ற வேல்போலுங் கண்களையுடைய பெண்கள், **தூறு கற்றுக் கற்றுப் பகருவர்** - பழிமொழியைப் பயின்று பயின்று சொல்லுவார்கள் எ-று.

கல்வளைக் களிற்றைக் காட்டு என்பதில் ஐ ஊருபு குவ் வுருபின் றிரிபாம். அம்பாயம் - உபத்திரவம்; துன்பம் (உலகவழக்கு). இ∴து இகுளை பருவமன்றெனல்.

**தலைவியே, ஆகாயவெளியிற் காணப்படுவது ஆலாங்காட்டி பெய்யும் கரிய முகிலன்று கல்வளைப் பெருமானுக்கு அந்தணர்கள் இடும் தூப (புகை) ப்படலமாகு மென இகுளை சொற்றபடி.**

**கனஞ்சஞ் சரித்திடும் வண்டலை தண்டலைக் கல்வளையே**
**கனஞ்சஞ் சலமுறு பாசா டவிவெளி கண்டவனோங்**
**கனஞ்சஞ் சரிசொலும் வேற்க ணிடைக்குக் கருங்குழலுங்**
**கனஞ்சஞ் சரிகங்க ளேநீ ரிருக்கை கடனல்லவே. (59)**

**கனம் சஞ்சரித்திடும் வண்டு அலை தண்டலைக் கல்வளை ஏ**
**கன் நம் சஞ்சலம் உறு பாச அடவி வெளி கண்டவன் ஓங் -**
**- கல் நஞ்சம் சரிசொலும் வேற்கண் இடைக்குக் கருங்குழலும்**
**கனம் சஞ்சரிகங்களே நீர் இருக்கை கடன் அல்லவே.**

கனம் - முகில், தண்டலை - சோலை, அடவி - காடு, கனம் - பாரம், சஞ்சரிகங்களே - வண்டுகளே.

**இ-ள்: கனம் சஞ்சரித்திடும் வண்டு அலை தண்டலைக் கல்வளை ஏகன்** - முகில்கள் படிகின்ற வண்டுகள் ஊடாடும் சோலைகள் பொருந்திய கல்வளைத்தலத்திற் கோயில் கொண்டருளிய ஏகமூர்த்தியும், **நம் சஞ்சலம் உறு பாச அடவி வெளி கண்டவன்** - எம்முடைய துன்பஞ்செறிந்த பாசமாகிய காட்டை (வெட்டிச் சுட்டு) வெளியாக்கியவருமாகிய விநாயகக்கடவுளின், **ஓங்கல்** - மலையில் வாழும், **நஞ்சம் சரிசொலும் வேற்கண் இடைக்கு** - நஞ்சை ஒப்பாகச்

சொல்லுகின்ற வேல்போலும் விழிகளை யுடைய தலைவியினது இடைக்கு, **கருங்குழலும் கனம்** - அவளது கரிய கூந்தலும் பாரமாகும், **சஞ்சரிகங்களே நீர் இருக்கை கடன் அல்ல** - (ஆதலால்) வண்டுகளே நீவிர் அவள் அளகத்திற் படிவது சரியல்ல எ-று.

இது மெய்தொட்டுப் பயிறலாகும். தலைவன் இவ்வாறு வண்டுகட்கு உரைத்து அவற்றை ஒச்சும்போது தலைவியின் மெய்யில் (அபுத்திபூர்வமாகத்) தீண்டுவான்போல் தீண்டினா னென்பதாம்.

**தலைவிக்குப் பேரழகைச் செய்வதும் இன்றியமை யாததுமாகிய அளகமே அவளது நுண்ணிய இடைக்குப்பெரும் பாரமாயிருக்க அவ்வளவோடமையாது நீவிரும் அவள் கூந்தலிற் படிந்து இடைக்குப் பாரத்தை அதிகரிக்கச் செய்தல் முறையன்றெனச் சொல்லி வண்டுகளை ஓச்சுவான் போலத் தலைவியின் மேனியில் மெல்லெனத் தீண்டினா னென்றபடி.**

**கடம்பிடிக் குங்கமஞ் சூன்மா லளந்திடுங் கல்வளையான்**
**கடம்பிடிக் குங்கர டத்தறு கட்சிறு கட்களிறு**
**கடம்பிடிக் குப்புய னீரூட்டு வெற்பருங் காமர்வஞ்சி**
**கடம்பிடிக் குங்கண்கள் காதள வோடிக் கதித்தனவே. (60)**

**கடம்பு இடிக்கும் கமம் சூல் மால் அளந்திடும் கல்வளையான்**
**கடம் பிடிக்கும் கரடத் தறுகண் சிறுகண் களிறு**
**-கள் தம் பிடிக்குப் புயல் நீர் ஊட்டும் வெற்ப நம் காமர் வஞ்சி**
**கடு அம்பு இடிக்கும் கண்கள் காதளவு ஓடிக் கதித்தனவே.**

கமம் - மழைமுகில், கடம்பிடிக்கும் - கதுப்பைச் சார்ந்த, கரடம் மதச்சுவடு, கடு - நஞ்சு.

**இ-ள்: கடம்பு இடிக்கும் கமம் சூல் மால் அளந்திடும் கல்வ ளையான்** - கடப்பமரக் கொம்பர்கள் உரோஞ்சுகின்ற நிறைவாகிய சூற்கொண்ட மேகத்தை அளக்கும் கல் வளைப்பதியில் எழுந்தருளிய விநாயகக்கடவுளுடைய, **கடம் பிடிக்கும் கரடத் தறுகண் சிறுகண் களிறுகள்** - கதுப்பைச் சார்ந்த மதசலச்சுவட்டினையும் தறுகண்மையையும் சிறு கண்களையுமுடைய ஆண்யானைகள், **தம் பிடிக்குப் புயல் நீர்**

**ஊட்டு வெற்ப** - தங்கள் பிடி (பெண்) யானைகளுக்கு முகிலின்கண் உள்ள நீரை (க்கோட்டினாற் குற்றி ஒழுகச்செய்து) ஊட்டுகின்ற பொருப்பனே, **நம் காமர் வஞ்சி கடு அம்பு இடிக்கும் கண்கள்** - நமது அழகிய பெண்ணுக்கு நஞ்சையும் அம்பையும் வென்ற விழிகள், **காது அளவு ஓடிக் கதித்தன** - காதுவரையும் நீண்டு வளர்ந்தன எ-று.

**இது பருவங்கூறி வரைவொடு விலக்கல் என்றபடி.**

**கதிரைக் கடவுள் குறமானை மேவச்செய் கங்கணநா**
**கதிரைக் கடலொலி போன்மள்ள ரார்த்துக் களைந்தசெந்நெற்**
**கதிரைக் கடைசியர் போரேற்று கல்வளை யாய்ககனக்**
**கதிரைக் கடவயிற் றார்ப்பாயென் றால்வருங் கைவலமே. (61)**

**கதிரைக் கடவுள் குறமானை மேவச்செய் கங்கணநா**
**கதிரைக் கடல்ஒலிபோல் மள்ளர் ஆர்த்துக் களைந்த செந்நெற்**
**கதிரை கடைசியர் போர் ஏற்றும் கல்வளையாய் ககனக்**
**-கதிரை கடவற்று ஆர்ப்பாய் என்றால் வரும் கைவலமே.**

கதிரை - கதிர்காமம். கங்கணநா - யானையைக் காவலாக உடையவர், மள்ளர் - உழவர், கடைசியர் - உழத்தியர், கைவலம் - முத்தி.

**இ-ள்: கதிரைக் கடவுள் குறமானை மேவச்செய் நாககங்கண** - கதிர் காமத்து ஐயன் வள்ளிநாயகியைச் சேரும்படி செய்தருளிய நாககங்கணத்தை யுடையவரே, **திரைகடல் ஒலிபோல்** - திரைகளோடு கூடிய சமுத்திரத்தின் பேரொலிபோல், **மள்ளர் ஆர்த்துக் களைந்த செந்நெற்கதிரை** - உழவர்கள் ஆரவாரித்து அரிந்த செந்நெற்கதிர்களை, **கடைசியர் போர் ஏற்று கல்வளையாய்** - உழத்தியர் போராகக் குவிக்கின்ற கல்வளைப்பதியில் எழுந்தருளிய பெருமானே, **ககனக் கதிரை** - ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற சூரியனை, **கடைவயிற்று ஆர்ப்பாய் என்றால்** - குடம்போன்ற திருவயிற்றின்மீது தரித்தவரேயென்று போற்றினால், **வைவலம்வரும்** - முத்தி சித்திக்கும் எ-று.

ஐங்கரத்தெந்தை "கதிரைக்கடவுள் குறமானை மேவச்செய்"த வரலாற்றினைக் கந்தபுராணத்திற் பரக்கக்காண்க. விநாயகப் பெருமான் பரமேசுவரத் திருக்கோலங்கொண்ட

சமயத்தில் சூரியன் அப்பெருமானுடைய திருவயிற்றின்மீது ஒரு இரத்தினம்போல் விளங்கினன் என்பது சரித்திரம். அங்ஙனம் கதிரவன் விளங்கினானென்பதை.

**திகட சக்கரச் செம்முக மைந்துளான்**
**சகட சக்கரத் தாமரை நாயகன்**
**அகட சக்கர வின்மணி யாவுறை**
**விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.**

என்னும் கந்தபுராணக் காப்புத் திருவிருத்தத்தானுணர்க. கைவலம் - மோக்ஷம். "புலியூரனென்றால் வரும் கைவலமே" என மயில்வாகனப்புலவர் தமது புலியூரந்தாதி ருசு-ம் செய்யுளிற் பாடியிருத்தலையும் நோக்குக.

**எம்பெருமானாகிய கந்தசுவாமி வள்ளிநாயகியை மார்ச்சாரசம்பந்தமாக அடிமைகொள்ளும்படி வந்த சமையத்தில் யானையாக வந்து அவளைப் பெருமானோடு சேர்த்தருளிய தந்திமுகத் தெந்தையின் திருவருட்பிரவாகங்களை எடுத்துத் தோத்திரஞ் செய்வார்க்கு முத்தி தவறாது சித்திக்கு மென்றபடி.**

**வரச்சந் திரனெனுஞ் செந்தழற் பந்தம் வழுத்துநற்ற**
**வரச்சந் திரணத்தின் மாற்றுங் கடாசல மங்குலுலா**
**வரச்சந் திரதில கம்வளர் கல்வளை மானுயிர்க**
**வரச்சந் திரவி னடந்தா னுணவென வந்ததுவே. (62)**

**வரசந்திரன் எனும் செந்தழற் பந்தம் வழுத்தும் நல்த**
**-வர் அச்சம் திரணத்தின் மாற்றும் கட அசலம் மங்குல் உலா**
**-வரச் சந்திர திலகம் வளர் கல்வளைமான் உயிர்க**
**-வரச் சந்து இரவில் நடந்தான் உணவென நடந்ததுவே.**

வரச்சந்திரன் - மேலான சந்திரன், திரணம் - துரும்பு, மங்குல் - முகில், சந்திரதிலகம் - சந்தனமரம், சந்து - சமாதானம், தூது

**இ-ள்: வரசந்திரன் எனும் செந்தழற் பந்தம்** - மேலான சந்திரன் என்று சொல்லப்படும் நெருப்புப் பிழம்பு, **வழுத்தும் நல் தவர் அச்சம் திரணத்தின் மாற்றும் கட அசலம்** - தம்மைத் துதிக்கின்ற நல்ல தபோதனர்களுடைய (பிறவிப்பிணிப்)

பயத்தைத் துரும்பெனத் தவிர்த்தருளும் ஞானமதம் பொருந்திய யானையாகிய விக்கினேசுவரரது, **மங்குல் உலாவர சந்திர திலகம் வளர்** - முகில்கள் சஞ்சரிக்கும் வண்ணம் சந்தனமரங்கள் (உயர்ந்து) வளர்ந்துள்ள, **கல்வளைமான் உயிர் கவர** - கல்வளைப்பதியில் வசிக்கும் பெண்ணின் உயிரைக் கவரும்படி, **இரவில் சந்து நடந்தான் உணவு என வந்தது**- நடுயாமத்தில் சுந்தரர்பொருட்டுப் பரவையாரிடத்துத் தூது சென்றருளிய பரமசிவனுடைய உணவாயுள்ள ஆலாகலம் என்னும் நஞ்சு என்று சொல்லும்படி (வெம்மையோடு) உதித்துள்ளது எ-று.

"செந்தழற் பந்தம் ......மானுயிர் கவர...........நடந்தானுணவென வந்தது" என முடிக்க. அசலம் - ஆகுபெயர். திரணத்தின் மாற்றுதல் - இலகுவாக நீக்கிவிடுதல். இரவிற் சந்து நடந்த வரலாற்றையும் நஞ்சு உணவான வரலாற்றையும் முறையே பெரியபுராணம் கந்தபுராண மிவற்றிற் பார்க்குக. இது நிலவு வெளிப்பட வருந்துதலாகும்.

**கல்வளைப்பதியிலுள்ள தலைவிக்குச் சந்திரோதயம் விடம்போல் வெம்மையைத் தந்ததென்றபடி.**

**வந்தனை யன்பர் மனத்தூண் டடைபடு மாதங்கங்க**
**வந்தனை யன்றுகொன் றோன் முக நாபிகண் வாய்கரஞ்சி**
**வந்தனை யன்பணி கல்வளை யான்வரை மன்னவனீ**
**வந்தனை யன்றெனின் மானுயி ரம்புலி மானுண்ணுமே. (63)**

**வந்தனை அன்பர் மனம் தூண் தடைபடும் மாதங்கம் க**
**- வந்தனை அன்று கொன்றோன் முகம் நாபி கண்வாய் கரம்சி**
**- வந்தனை அயன் பணி கல்வளையான் வரை மன்னவன் நீ**
**வந்தனை அன்றெனில் மான் உயிர் அம்புலிமான் உண்ணுமே.**

மாதங்கம் - யானை, கவந்தனை - கவந்தன் எனும் அரக்கனை, மான் - தலைவி.

**இ-ள்: வந்தனை அன்பர் மனம் தூண் தடைபடும் மாதங்கம்** - வழிபாட்டையுடைய அடியவர்களது மனமாகிய தறியினிடத்துப் பிணிக்கப்படுகின்ற யானையும், **கவந்தனை அன்று கொன்றோன்** - கவந்தன் என்னும் அரக்கனை இராமாவதாரத்திற் கொன்ற

வராகிய, **முகம் நாபி கண் வாய் கரம் சிவந்தன்** - முகமும் உந்தியும் கண்களும் அதரமும் கரங்களும் சிவந்துள்ள விஷ்ணுமூர்த்தியும், **அயன்** - பிரமதேவரும், **பணி கல்வளையான் வரை மன்னவன்** - வணங்குகின்ற கல்வளைப்பெருமானுடைய மலைத்தலைவனே, **நீ வந்தனை** - நீ இங்கு (காலதாமதமின்றி) வந்துவிட்டாய்; **அன்றெனில்** - வாராதிருந்தால், **மான் உயிர் அம்புலிமான் உண்ணும்** - தலைவியின் உயிரைச் சந்திரன் தின்றுவிடும் எ-று.

அன்பர் தியானத்தில் எம்பெருமான் அகப்படுதலை:

**உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந் தறிநிறுவி யுறுதியாகத்**
**தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி யிடைபடுத்தித் தறுகட்பாசக்**
**கள்ளவினைப் பசும்போதக் கவளமிடக் களித்துண்டு கருணையென்னும்**
**வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்துவரு வினைகடீர்ப்பாம்.**

என வருஞ் செய்யுளால் இனி துணர்க. கவந்தன் இராமராற் கொல்லப்பட்ட வரலாற்றை இராமாயணத்திற் காண்க. சிவந்தவன், சிவந்தன் என வந்தது. இது வருத்தங்கூறல்.

**தலைவனே நீ இப்பொழுது வாராதொழியின் தலைவி சந்திரனுக்காற்றாது மாண்டிருப்பாளெனக் கூறியபடி.**

**மான வலக்கண் டவாவினைப் பஞ்சினை மாய்க்கும்பவ**
**மான வலக்கண்டை மாவுரி யான்வன சப்பதத்தின்**
**மான வலக்கண் டரித்தோன் புகழ்கல் வளையிற்பெரு**
**மான வலக்கண் டகர்க்கொளிப் பாயென மாலறுமே. (64)**

**மான அலக்கண் தவாவினைப் பஞ்சினை மாய்க்கும் பவ -**
**- மானன் வலக்கண்டை மாஉரியான் வனசப்பதத்தில்**
**மான வலக்கண் தரித்தோன் புகழ் கல்வளையில் பெரு -**
**மான் அவலக் கண்டர்க்கு ஒளிப்பாய் என மால் அறுமே.**

மான - வலிய, அலக்கண் - துன்பம், தவா - வினை, பவமானன் - நெருப்பை ஒத்தவன், வலக்கண்டை மா - வலிய கண்டாமணி கட்டப்பட்ட கயாசுரன், வனசம் - தாமரை, மான - மகிமையான, மால் - அறியாமை.

**இ-ள்: மான அலக்கண் தவாவினைப் பஞ்சினை மாய்க்கும் பவமானன்** - வலிய துன்பமறாத வினையாகிய பஞ்சை யெரிக்கின்ற நெருப்பை யொத்தவரே, **வலக்கண்டை மாஉரியான் வனசப்பதத்தில்** - வலிய கண்டாமணி கட்டப்பட்ட கயாசுரன் என்னும் யானையின் தோலைப் போர்வையாகக் கொண்ட சிவபெருமானுடைய அன்றலர்ந்த தாமரைப்பூப்போன்ற திருவடியில், **மான வலக்கண் தரித்தோன் புகழ் கல்வளையிற் பெருமான்** - மகிமையுள்ள வலக்கண்ணை இடந்து சாத்திய திருமால் போற்றும் கல்வளைப் பெருமானே, **அவலக் கண்டகர்க்கு ஒளிப்பாய்** - தீங்கினைக் கொண்ட கயவர்க்கு ஒளிப்பவரே, **என** - என்று தோத்திரஞ்செய்ய, **மால் அறும்** - அறியாமையானது நீங்கும் (ஞானம் சித்திக்கும்) எ-று.

சுதரிசனமென்னுஞ் சக்கரப்படையை வேண்டி அநுதினமும் ஆயிரந் தாமரைப்பூக்கொண்டு பரமசிவனை அர்ச்சித்துவர, ஒருதினம் பெருமான் றிருவிளையாட்டால் ஒரு பூ குறைய, திருமால் தமது கண்ணை இடந்து பூவாகப் பாவித்துச் சாத்தித் தமது நியதியை முடித்துச் சக்கரப்படையையும் பெற்றாரென்பது சரித்திரம். மால் அறுமெனவே ஞானஞ் சித்திக்குமென்பது உ நத்தாபத்தியாற் பெறப்பட்டது.

**அடியவர் தீவினையை யொழிப்பவரே, திருமாலும் வணங்கும் பெரியோனே, மெய்யர்க்கு மெய்யனே, பொய்யர்க்குப் பொய்யனே எனப் போற்றுபவர்கட்கு அஞ்ஞான மகல மெய்ஞ்ஞானம் உதிக்குமென்றபடி.**

**மாலைய னங்கங் கரியோன் பதம்பெரி தன்றுமன்றின்**
**மாலைய னங்கங்கை வார்சடி லேசன் மதலைகொன்றை**
**மாலைய னங்கங் கணவெங் கணபண வாளரவன்**
**மாலைய னங்கங் குலாங்கல் வளையிரு மாதவர்க்கே. (65)**

**மால் அயன் அங்கம் கரியோன் பதம் பெரிது அன்று மன்றின்**
**மா லயன் அம் கங்கை வார்சடில ஈசன் மதலை கொன்றை**
**மாலையன் அம் கங்கண வெம் கணபண வாள் அரவன்**
**மாலை அனம் கங்குல் உலாம் கல்வளை இரு மாதவர்க்கே**

கரியோன் - இந்திரன், மாலயன் - மேலான நடனத்தை யுடையவன், சடிலம் - சடை.

**இ-ள்: மன்றில் மாலயன் அம் கங்கை வார் சடில ஈசன் மதலை** - பொன்னம்பலத்தில் மேலான நடனத்தையுடையவரும் அழகிய கங்கையைத் தரித்த நீண்ட சடையினையுடையவருமாகிய நடேசப்பெருமானுடைய திருக்குமாரரும், **கொன்றை மாலையன்** - கொன்றைப் பூமாலையை யணிந்தவரும், **அம் கங்கண வெம் கணபண வாள் அரவன்** - அழகிய கங்கணமாகிய கொடிய கூட்டமான படத்தினைக் கொண்ட ஒளியுடைய பாம்புகளைத் தரித்தவருமாகிய விநாயகப் பெருமான் எழுந்தருளிய, **மாலை அனம் கங்குல் உலாம் கல்வளை இரு மாதவர்க்கு** - மாலைக் காலத்தில் அன்னங்கள் வயல் வரம்பிற் சஞ்சரிக்கின்ற கல்வளைப்பதியில் இருக்குந் தபோதனர்கட்கு, **மால் அயன் அங்கம் கரியோன் பதம் பெரிது அன்று** - விஷ்ணு பிரமா கரியமேனியையுடைய இந்திரன் ஆகிய இவர்களுடைய (முறையே வைகுந்தம் சத்திய உலகம் சுவர்க்கம் என்னும்) பதவிகள் மேலானவையல்ல எ-று.

கல்வளைத் திருப்பதியிலுள்ள விநாயகப் பெருமானுடைய அடியவர்களுக்கு வைகுந்த சத்திய சுவர்க்க பதவிகள் அடைதற்கரியனவல்ல என்றபடி.

**இரும்புண் டரவெண் டுகண்மணி மந்திர மெய்தன்பரை**
**யிரும்புண்ட நீரெனத் தற்சேர்க்கு நாதனை யிக்குநெற்ப**
**யிரும்புண்ட ரீகமுஞ் சூழ்கல்வளையனை யெண்ணிப்பன்னி**
**இரும்புண்டருமயிற்றென் றிசைக்கோன்பின்னை யென்செய்வனே. (66)**

**இரும்புண்டர வெண்துகள் மணி மந்திரம் எய்து அன்பரை**
**இரும்பு உண்ட நீர் எனத் தன் சேர்க்கும் நாதனை இக்கும் நெல்பயி**
**-ரும் புண்டரீகமும் சூழ் கல்வளையானை எண்ணிப் பன்னி**
**இரும் புண்தரும் அயில் தென்திசைக்கோன் பின்னை என் செய்வனே**

இரும் - மகத்தான, புண்டர - திரிபுண்டர, வெண்துகள் - வெண்ணீறு, மணி - உருத்திராக்கமணி, மந்திரம் - பஞ்சாட்சரம், இக்கு - கரும்பு.

**இ-ள்: இரும்புண்டர வெண் துகள் மணி மந்திரம் எய்து அன்பரை** - மகத்தான திரிபுண்டரமாகத் தரிக்கப்படும் வெள்ளிய விபூதி உருத்திராக்க மணி பஞ்சாக்கரம் என்னும் சாதனங்கள் பொருந்திய அடியவர்களை, **இரும்பு உண்ட நீர் எனத் தன் சேர்க்கும் நாதனை** - கொல்லன் உலையிற் சிவக்கக் காய்ச்சிய இரும்பானது உறுஞ்சிய நீரைப்போல் தம்மொடு இரண்டறச் சேர்த்துக் கொள்ளும் இறைவரும், **இக்கும் நெற்பயிரும் புண்டரீகமும் சூழ் கல்வளையனை** - கரும்பும் செந்நெற் பயிரும் தாமரைகளும் சூழப்பெற்ற கல்வளைத் தலத்திற் கோயில் கொண்டருளிய பெருமானுமாகிய விநாயகரை, **எண்ணிப் பன்னி இரும்** - மனத்தினால் தியானித்து வாயாரவாழ்த்திக்கொண்டு இருக்குதிர், **புண் தரும் அயில் தென்திசைக்கோன் பின்னை என் செய்வன்** - நிணம் பொருந்திய சூலவேலைக் கொண்ட தென்றிசைக்கிறைவனாகிய யமன் பின்னர் என்ன செய்வான்
எ-று. என்செய்வன் என்றதிலுள்ள வினா எதிர் மறைப் பொருளில் வந்தது.

**சைவசாதனத்தைப் பூண்ட மெய்யடியவர்களைத் தம்முடன் சேர்த்தருளும் கருணைவள்ளலாகிய கல்வளைப் பெருமானைச் சதா தியானித்துத் துதித்துக் கொண்டிருப்பின் யம பயமில்லை யென்றபடி.**

**வன்னி களங்க னரிமா றுதிக்கு மலைமகள்கை**
**வன்னி களங்கனி யென்றெண்ணு கண்டன் மகிழ்ந்துபெற்ற**
**வன்னி களங்கப டற்றோர் பிறவி வலைப்பிணியாம்**
**வன்னி களங்களை யுங்கல் வளைக்கும்ப மாதங்கமே. (67)**

**வன்னி களங்கன் அரி மால் துதிக்கும் மலைமகள் கை -**
**- வன்னி களங்கனியென்று எண்ணு கண்டன் மகிழ்ந்து பெற்ற**
**வன்னி களம் கபடு அற்றோர் பிறவி வலைப் பிணியாம்**
**வல் நிகளம் களையும் கல்வளைக் கும்ப மாதங்கமே**

வன்னி - அக்கினி, களங்கன் - சந்திரன், வன்னி - கிளி, வன்னி - பிரமசாரி, களம் - கள்ளம், நிகளம் - விலங்கு.

**இ-ள்: வன்னி களங்கன் அரி மால் துதிக்கும் மலைமகள் கைவன்னி** - அக்கினிதேவனும் சந்திரனும் சூரியனும் திருமாலும்

போற்றுகின்ற பருவதவர்த்தனியாருடைய திருக்கரத்திலேயுள்ள கிளியானது, **களங்கனி யென்று எண்ணுகண்டன் மகிழ்ந்து பெற்ற வன்னி-** களம்பழம் என நினைக்கும் திருநீலகண்டத்தைக் கொண்ட பரமேசுவரன் உவந்து பெற்றருளிய பிரமசாரியும், **கல்வளைக் கும்ப மாதங்கம்** - கல்வளைப்பதியில் எழுந்தருளிய மத்தகத்தையுடைய யானையுமாகிய விக்கிநேசுவரர், **களம் கபடு அற்றோர் பிறவி வலைப்பிணியாம் வல் நிகளம் களையும்** - கள்ளங் கபடு இல்லாத (பரிசுத்தமுடைய) வர்களுடைய பிறவிப் பிணிப்பாகிய துன்பத்தைத் தரும் வலிய விலங்கை அகற்றியருளுவர் எ-று.

முதல் மூன்றடிகளிலும் வன்னி முறையே அக்கினி, கிளி, பிரமசாரி என்னும் பொருள்களில் வந்தது. நான்காமடியில் வல் + நிகளம் எனப் பதச்சேதஞ் செய்யப்பட்டது. விநாயகப் பெருமான் கொண்ட மூர்த்தங்களுட் சில தேவியில்லாதன வாதலின் வன்னி (பிரமசாரி) யென்றார். கள்ளம் - களம் எனத் தொக்கு நின்றது. பெருமான் திருக்கண்டம் நிறத்திற்களம்பழத்தை யொத்திருத் தலின் பிராட்டியார் திருக்கரத்திற் பொருந்திய கிள்ளை களம் பழமென மயங்கிய தென்க.

**சிவகுமாரராகிய கல்வளைப் பெருமான் தூய சிந்தனையுடைய அன்பர்களின் பிறவிப்பெரும் பிணியை நீக்கி அவர்களை ஈடேறச் செய்வர் என்றபடி.**

**தங்க மலையதி னால்வேதப் போலி தனைவரைமா**
**தங்க மலையச மேழ்காதம் வாசந் தருங்கல்வளை**
**தங்க மலையம் பிகைகும ராவென்று சாற்றிற்சந்த**
**தங்க மலையரும் பாக்கொம் பிரண்டுந் தருவிப்பனே. (68)**

**தங்க மலையதில் நால் வேதப் போலிதனை வரை மா -**
**-தங்கம் மலை அசம் ஏழ் காதம் வாசம் தரும் கல்வளை**
**தங்கு அமலை அம்பிகை குமரா என்று சாற்றில் சந்த -**
**-தம் கமலை அரும்பாக் கொம்பு இரண்டும் தருவிப்பனே.**

மலைஅசம் - மலைச்சந்தனம், வேதப்போலி - மகாபாரதம், தங்கமலை - மகாமேரு

**இ-ள்: தங்க மலையதில் நால் வேதப் போலிதனை வரை மாதங்கம்** - பொன்மலையாகிய மேருவில் நான்கு வேதப் போலியாகிய பாரதத்தை எழுதிய யானையே, **மலை அசம் ஏழ் காதம் வாசம் தரும்** - சந்தனம் ஏழு காத தூரத்திற்கு நறுமணங் கமழுகின்ற, **கல்வளை தங்கு அமலை அம்பிகை குமரா-** கல்வளைப் பதியிற் கோயில் கொண்ட நின்மலையாகிய உமையம்மையார் திருக்குமாரரே, **என்று சந்ததம் சாற்றில்** - என்று தினந்தோறும் ஓதினால், **கமலை அரும்பாக் கொம்பு இரண்டுந் தருவிப்பன்** - இலக்குமி சரசுவதி என்னும் இருதேவியர் மூலமாக முறையே செல்வப் பொருள் கல்விப் பொருள் இரண்டினையும் தருவித்தருளுவார். எ-று.

வேதப்போலி - வேதத்தைப் போல்வது, நான்கு வேதங்களின் ஒற்றுமை பற்றியே பாரதம் ஐந்தாம் வேதமெனப்படும். பாரதம் ஐந்தாம்வேதமென்பதையும் அதனை விநாயகப் பெருமான் மேருமலையாகிய ஏட்டில் தமது திருமருப்பாகிய எழுத்தாணி கொண்டு எழுதினாரென்பதையுங் கீழ்வரும் வில்லிபுத்தூரர்பாரதக் காப்புச் செய்யுளாலுணர்க.

நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபார தஞ்சொன்னநாள்
ஏடாக மாமேரு வெற்பாக வங்கூ ரெழுத்தாணிதன்
கோடாக வெழுதும்பி ரானைப்ப ணிந்தன்பு கூர்வாமரோ

அரும்பாக்கொம்பு - அரிய பாக்களாலாய கலைகட்குத் தெய்வமாயுள்ள பூங்கொம்பை நிகர்த்தவள்; தருவிப்பார், பிறவினை.

**மேருமலையிற் பாரதம் எழுதிய பரம்பொருளே, உமாதேவி திருக்குமாரரே என்பன முதலாம் திருநாமங்களைச் சொல்லிக் கல்வளைப்பெருமானைத் துதிப்போர் கல்வி செல்வம் இரண்டினையும் பெறுவர் என்றபடி.**

**தருமந்தக் காரிடத் தாக்கிடு மாமுகன் சந்தனப்பூந்
தருமந்தக் காலசை கல்வளை வாசன்றன் னாட்டினின்மா
தருமந்தக் காலமுந் தப்பாமற் சாரதி தாரைத்துளி
தருமந்தக் கார்முந்த முன்றோர் கடவுதல் சால்புடைத்தே. (69)**

**தரும் தக்கார் இடத்து ஆக்கிடும் மாமுகன் சந்தனப் பூந்
தரு மந்தக் கால் அசை கல்வளைவாசன் தன்நாட்டினில் மா-
-தரும் அந்தக் காலமும் தப்பாமல் சாரதி தாரைத்துளி
தரும் அந்தக் கார் முந்தமுன் தேர் கடவுதல் சால்பு உடைத்து**

மந்தக்கால் - தென்றல் காற்று, கார் - கார்காலம்.

**இ-ள்: தக்கார் இடத்துத் தருமம் ஆக்கிடும் மாமுகன்** - சற்பாத்திரர்களிடத்தே தருமத்தைச் சேர்த்து வைக்கும் யானை முகத் தெய்வமும், **மந்தக்கால் பூ சந்தனத்தரு அசை கல்வளை வாசன் தன் நாட்டினில்** - தென்றற் காற்றானது பூக்களைக் கொண்ட சந்தன மரத்தை அசையச் செய்கின்ற கல்வளைப்பதியிற் கோயில் கொண்டவருமாகிய விநாயகப் பெருமானுடைய நாட்டிலே, **மாதரும் அந்தக் காலமும் தப்பாமல்** - தலைவியும் (நான் குறித்துச் சொல்லிய) சமையமும் தவறாமல், **சாரதி** - தேர்ப்பாகனே, **தாரை துளிதரும் அந்தக் கார் முந்தமுன்** - மழை நீரைச் சிந்துகின்ற அந்த முகில் முந்திப் போவதற்குமுன், **தேர் கடவுதல் சால்புடைத்து** - நீ தேரை (விரைவாக)ச் செலுத்துதல் தகைமையுடையதாகும் எ-று.

தேர் முந்தாது கார் முந்தினால் தலைவி இறந்துபடுவாளாதலின் "மாதருந் தப்பாமல்" என்றானென்க. இது பாகனொடு கூறலாகும்.

**பாகனே கார் முந்திச் சென்றால் தலைவி வருந்துவளாதலின் நீ தேரை விரைந்து செலுத்துதி யெனத் தலைவன் பாகனுக்குக் கூறியபடி.**

**சாலிக்கு வாலிக்கு வெங்கணை யேவித் தயங்கியபாஞ்
சாலிக்கு வாலிய தூசருள் கோலமுன் றாங்குபொறை
சாலிக்கு வாலிப மார்க்கண்டர்க் கீந்தவன் றந்தமைந்தன்
சாலிக்கு வாலிக்கு வான்றாவுங் கல்வளைத் தானத்தனே. (70)**

**சாலிக்கு வாலிக்கு வெங்கணை ஏவித் தயங்கிய பாஞ் -
-சாலிக்கு வாலிய தூசு அருள் கோலம் முன்தாங்கு பொறை
சால் இக்கு வாலிபம் மார்க்கண்டர்க்கு ஈந்தவன் தன் மைந்தன்
சாலிக் குவால் இக்கு வான் தாவும் கல்வளைத் தானத்தன்**

சாலிக்கு - மராமரங்களுக்கு, தூசு - வஸ்திரம், சாலி - நெற்பயிர், குவால் - கூட்டம்.

**இ-ள்: சாலிக்கு வாலிக்கு வெம்கணை ஏவி** - மராமரங்களுக்கும் வாலியென்னும் குரங்கரசனுக்கும் வெவ்விய பாணத்தைச் செலுத்தி, **தயங்கிய பாஞ்சாலிக்கு வாலிய தூசு அருள் கோலம்** - வருந்திய திரௌபதைக்குத் (தொடர்பாக) வஸ்திரத்தை யுதவிய விஷ்ணுவாகிய பன்றி, **முன் தாங்கு பொறை சால் இக்கு** - முன்னர்த் தாங்கிய பாரமாகவுள்ள இப்பூமியில்; **மார்க்கண்டர்க்கு வாலிபம் ஈந்தவன் தந்த மைந்தன்** - மார்க்கண்டேய முனிவருக்கு (நித்திய) இளமையை யருளிய பரமசிவன் பெற்றருளிய பிள்ளையாரே; **சாலிக் குவால் இக்கு வான் தாவும் கல்வளைத் தானத்தன்** - நெற்பயிர்க் கூட்டமுங் கரும்புகளும் முகின் மண்டலத்தை அளாவும் கல்வளைப்பதியை இருப்பிடமாகக் கொண்டுள்ளவர். எ-று.

"சாலிக்கு வாலிக்கு வெங்கணை ஏவி"யது இராமாவதாரத்திலாகும். இராமபிரானுடைய வலிமையைச் சோதிக்க விரும்பிய குரக்கரசனாகிய சுக்கிரீவன் கிஷ்கிந்தையிலுள்ள ஏழு மராமரங்களை ஓரம்பினால் ஏககாலத்தில் எய்தபூ க்கும்படி கேட்க, இராமபிரான் அங்ஙனஞ் செய்தனரென்பது சரித்திரம். இதன் விரிவையும் வாலியை வதைத்த வரலாற்றையும் இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டத்திற் காண்க. பாஞ்சாலி பாஞ்சால நாட்டு அரசனாகிய துருபதன் மகள்; இவள் இவன்மகளாதலில் துரோபதை யெனப்படுவள். துரியோதனன் சொற்படி அவன் தம்பியாகிய துச்சாதனன் வேத்தவையில் நிறுத்திப் பாஞ்சாலியின் வஸ்திரத்தை உரிய அவள் தன் மானத்தைக் காக்கும்படி கண்ணபிரானை நினைத்து ஓலமிட, அப்பெருமான் அவன் உரியமுடியாது சலிக்கும் வரையும் அவளுக்கு ஆடையை அளித்துப் பாஞ்சாலியின் மானத்தைக் காத்தாரென்பது பாரதம். பிரளய வெள்ளத்தில் அமிழ்ந்திய பூமியைக் காவற்கடவுளாகிய நாராயணமூர்த்தி ஒரு சுவேதவராக வடிவங்கொண்டு வெள்ளத்துட் புகுந்து தமது கொம்பில் எடுத்து வைத்து மேலே கொண்டு வந்து நிறுவினராதலின் "கோலம் முன்றாங்கு பொறை சாலிக்கு" எனப்பட்டது. கு - பூமி பரமேசுவரன் காலனையுதைத்து

மார்க்கண்டேயருக்கு என்றும் பதினாறுவயதீந்த சரித்திரம் வெளிப்படை. குவால் - கூட்டம், குவியல்.

**விநாயகப் பெருமானே கல்வளைப் பதியிற் கோயில் கொண்டருளிய எங்கள் குலதெய்வம் என்றபடி.**

தானவ ரங்கம்பங் கஞ்செய்யுஞ் சாரங்கன் றாழுமுத்தித்
தான வரங்கது வாவேற் குமரன் றமையமழைத்
தானவ ரங்கம் பலத்தான் றருகளி றேகல்வளைத்
தான வரங்க ளுதவாயென் சித்தத் தறியினின்றே. (71)

**தானவர் அங்கம் பங்கம் செய்யும் சாரங்கன் தாழும் முத்தித்**
**-தான அரம் கதுவா வேற் குமரன் தமைய மழைத்**
**-தான அரங்கு அம்பலத்தான் தரு களிறே கல்வளைத்**
**-தான வரங்கள் உதவாய் என் சித்தத்து அறிவில் நின்றே.**

தானவர் - அசுரர்

**இ-ள்: தானவர் அங்கம் பங்கம் செய்யும்** - அசுரர்களுடைய அவயவங்களைச் சிதைக்கும், **சாரங்கன் தாழும் முத்தித்தான** - சார்ங்கமென்னும் வில்லைக்கொண்ட திருமால் வணங்கும் மோட்சமாகிய கொடையை யுடையவரே, **அரம் கதுவா வேற் குமரன் தமைய** - அரத்தினால் அராவப் பெறாத (தெய்வத்தன்மை பொருந்திய) வேற்படையை யுடைய குமாரக் கடவுளுக்குத் தமையனாக வுள்ளவரே, **மழைத்தான** - மழையை யொத்த மதசலத்தைக் கொண்டவரே, **அரங்கு அம்பலத்தான் தரு களிறே** - நாடக மேடையாகிய பொன்னம்பலத்தில் தாண்டவஞ்செய்தருளும் நடராசப்பெருமான் அருளிய யானைக்கன்றே, **கல்வளைத்தான** - கல்வளைப்பதியைத் தலமாகக் கொண்டவரே, **என் சித்தத் தறியில் நின்று வரங்கள் உதவாய்** - எனது உள்ளமாகிய கம்பத்திற் கட்டுண்டு நின்று வரங்களைத் தந்தருளுவீர் எ-று.

சார்ங்கம் திருமால் கரத்திற் பரித்த வில்லின் பெயர்; சார்ங்கன் சாரங்கன் என நின்றது. திடசித்தமென்பதைக் குறிப்பிப்பார் சித்தத்தறியென்றார்.

**திருமாலும் பூசிக்குந் தேவனே அம்பலவாணர் திருக்குமரா, ஆறுமுகனுக்கு மூத்தோனே, கல்வளைப் பெருமானே தமியேனுக்குத் திருவருள் செய்குதி யென்றபடி.**

சித்தம் பரமுத் தலைவேலன் பாம்பரை சிக்கெனவி
சித்தம் பரமுத் தரிகங்கொண் டோன்மைந்தன் செய்யிற்பரி
சித்தம் பரமுத்த நாகொன்று கல்வளைத் தேவையுனனுஞ்
சித்தம் பரமுத்த ராவாருக் காகுஞ் செயத்தம்பமே. (72)

**சித் அம்பரம் முத்தலை வேலன் பாம்பு அரை சிக்கென வி-**
**-சித்து அம்பரம் உத்தரிகம் கொண்டோன் மைந்தன் செய்யில் பரி**
**-சித்து அம்பர முத்தநாகு ஒன்று கல்வளைத் தேவை உன்னும்**
**சித்தம் பரமுத்தர் ஆவாருக்கு ஆகும் செயத்தம்பமே.**

விசித்து - கட்டி, செய்யில் - வயலில், நாகு - சங்கு

**இ-ள்: சித்தம்பர முத்தலை வேலன்** - சிதம்பரத்தின்கண்ணே எழுந்தருளிய முக்கருப் பொருந்திய சூலாயுதத்தைத் தரித்தவரும், **பாம்பு அரை சிக்கென விசித்து** - பாம்பைத் திருவரையிற் கச்சாக இறுகக் கட்டி, **அம்பரம் உத்தரிகம் கொண்டோன் மைந்தன்** - திக்கை ஆடையாகக் கொண்டருளி யவருமாகிய நடராசபெருமானது திருக்குமாரராயுள்ள, **அம்பர முத்த நாகு செய்யில் பரிசித்து ஒன்று கல்வளைத் தேவை உன்னும்** - கடலில் விளைந்த முத்துக்களைக் கொண்ட சங்குகள் வயல்களின்கண் பயின்று படிகின்ற கல்வளைப்பதியிற் கோயில்கொண்ட விநாயகக்கடவுளைத் தியானிக்கும், **சித்தம் பர முத்தர் ஆவாருக்குச் செயத்தம்பம் ஆகும்** - மனத்தினையுடைய மேலாகிய முத்தராயுள்ளார்க்கே (வினைப்பகையை வென்று நாட்டும்) வெற்றித்தம்பம் கைகூடும் எ-று.

சிதம்பரம் சித்தம்பரம் என நின்றது.

**கல்வளைப்பெருமானைத் தியானிக்கும் மேலோரே வினைகளை வென்று ஈடேறுவ ரென்றபடி.**

**தம்பஞ் சுரதஞ்செய் யாதீன்ற சேய்தொழுந் தாளினன்கீ**
**தம்பஞ் சுரமிழற் றுஞ்சோலைக் கல்வளைச் சாரலிற்பா**
**தம்பஞ் சுரத்துப் படச்சேக்கும் பொற்கொடி சர்ப்பத்தினி**
**தப்பஞ் சுருண்டி போன்மொழி தேன்குழ றானெங்குமே. (73)**

**தம்பம் சுரதம் செய்யாது ஈன்றசேய் தொழும் தாளினன் கீ -**
**- தம் பஞ்சுரம் மிழற்றும் சோலைக் கல்வளைச் சாரலில் பா -**
**- தம் பஞ்சு உரத்துப் படச் சேக்கும் பொற்கொடி சர்ப்பத்தின் நி**
**- தம்பம் சுரர் உண்டிபோல் மொழி தேன் குழல்தான் எங்குமே**

பஞ்சுரம் - வண்டு.

**இ-ள்: தம்பம் சுரதம் செய்யாது ஈன்ற சேய் தொழும் தாளினன்** - தூணமானது கூட்டுறவின்றிப் பெற்ற திருமால் தொழுகின்ற திருவடிகளை யுடைய விநாயகக்கடவுளது, **கீதம் பஞ்சரம் மிழற்றும் சோலைக் கல்வளைச் சாரலில்**- பண்ணினை வண்டுகள் பாடுகின்ற சோலைகளைக் கொண்ட கல்வளைப்பதியின் மலைச்சாரலில், **பஞ்சு உரத்திற் படச் சேக்கும் பாதப்பொற்கொடி** - பஞ்சானது உரத்துப் பட்ட மாத்திரத்தே சிவக்கின்ற அழகிய கொடிபோன்ற பெண்ணி னுடைய, **சர்ப்பத்தின் நிதம்பம்** - பாம்பின் படத்தையொத்த கடிதடமும், **சுரர் உண்டிபோல் மொழி** - தேவபானமாகிய அமுதம்போன்ற இனிய சொல்லும், **தேன்குழல்** - தேன் பிலிற்றுகின்ற கூந்தலுமே, **எங்கும்** - எவ்விடத்துங் காணப்படுவன எ-று.

தம்பஞ் சுரதஞ் செய்யாது ஈன்ற சேய் - தூணிடைத் தோன்றிய நரசிம்மமூர்த்தி

**இது தலைவன் தலைவியின் உருவெளித் தோற்றத்தைககண்டு சொல்லியபடி.**

**கும்ப னகத்திய னூலளந் தோகொற்ற வாகல்வளைக்**
**கும்ப னகத்திற் கனகா சுரற்செற்ற கோளரியே**
**கும்ப னகத்தின் சிறகரிந் தோன்றொழுங் கோன்வெற்பின்வாய்க்**
**கும்ப னகத்தின் புவிதாங்கி யோகுறைந் தாய்புயமே. (74)**

**கும்பன் அகத்தியன் நூல் அளந்தோ கொற்றவா கல்வளைக்**
**கும்பன் நகத்தின் கனகாசுரன் செற்ற கோளரி ஏ -**
**- கும்பல் நகத்தின் சிறகரிந்தோன் தொழுங்கோன் வெற்பின்வாய்க்**
**கும் பனகத்தின் புவி தாங்கியோ குறைந்தாய் புயமே.**

கும்பன் - கும்பத்தில் பிறந்த, நகத்தின் - மலையில், பனகம் - ஆதிசேடன்.

**இ-ள்: கல்வளைக் கும்பன்** - கல்வளையில் எழுந்தருளிய மத்தகத்தைக் கொண்டவரும், **நகத்தின் கனகாசுரன் செற்ற கோளரி** - நகத்தினால் இரணியாசுரனைக் கொன்ற நரசிம்ம ராகிய திருமால், **ஏகும் பல் நகத்தின் சிறகு அரிந்தோன்** - பறந்து சென்ற பல மலைகளின் சிறகர்களை அரிந்த இந்திரன் (ஆகிய இருவரும்), **தொழும் கோன் வெற்பில்** - வணங்குகின்ற விநாயகக்கடவுளது மலையில், **கொற்றவா** - தலைவனே, **கும்பன் அகத்தியன் நூல் அளந்தோ** - கும்பத்திற் பிறந்துள்ள அகத்தியமுனிவருடைய தமிழ் நூல்களை ஆராய்ந்தோ, (இன்றேல்) **பனகத்தின் வாய்க்கும் புவி தாங்கியோ** - ஆதிசேடனாற் சுமக்கப்படும் பூமிபாரத்தை வகித்தோ; **புயம் குறைந்தாய்** - புயங்கள் சோர்வடைந்துள்ளனை எ-று.

பன்னகம் பனகம் எனத் தொக்குவந்தது. இது பாங்கன் தலைவனை உற்றது வினாவியவாறாம்.

**கல்வளைப்பதிப் பொருப்பனே, செந்தமிழ் நூலாராய்ச்சியினாலோ இன்றேல் பூபாரஞ் சுமந்தமையினாலோ உன் புயங்கள் சோர்வடைந்தவெனப் பாங்கன் தலைவனை வினவினானென்றபடி.**

**புயங்கந் தரித்தவன் கட்கலன் பூண்டு சிலம்பிசுற்றப்**
**புயங்கந்த மைந்து மடக்கிச் சடம்புற்று மூடவெம்பேய்**
**புயங்கந் தரத்தக்க கானுறை மாதவப் போதர்க்கன்றம்**
**புயங்கந்த நாறிடுங் கல்வளை யானடிப் போதரிதே. (75)**

**புயங்கம் தரித்தவன் கட்கலம் பூண்டு சிலம்பி சுற்ற**
**புயம் கந்தம் ஐந்தும் அடக்கி சடம் புற்று மூட வெம் பேய்**
**புயங்கம் தரத்தக்க கான் உறை மாதவ போதர்க்கு அன்று அம்**
**-புயம் கந்தம் நாறிடும் கல்வளையான் அடிப்போது அரிதே.**

புயங்கம் - பாம்பு, கட்கலம் - உருத்திராக்கம், புயம் - கைப்புயம், புயங்கம் - பேய்க்கூத்து, அம்புயம் - தாமரை மலர்

**இ-ள்: புயங்கம் தரித்தவன் கட்கலம் பூண்டு** - பாம்பைத் தரித்தருளிய பரமசிவனுடைய கண்ணீரிற் றோன்றிய உருத்திராக்கத்தைப் புனைந்து கொண்டு, **புயம் சிலம்பி சுற்ற** - புயங்களிலே சிலந்திகள் தம் நூலினாற் சுற்றிக்கொள்ள, **கந்தம் ஐந்தும் அடக்கி** - பஞ்சேந்திரியங்களையும் அடக்கி, **சடம் புற்று மூட** - தேகத்தைப் புற்று மூடிக்கொள்ள, **வெம் பேய் புயங்கம் தரத்தக்க** - கொடிய பேய்கள் கூத்தாடத்தக்க, **கான் உறை மாதவபோதர்க்கு** - காட்டில் இருக்கின்ற மேலான தவத்தினை யுடைய முனிவர்களுக்கு, **அம்புயம் கந்தம் நாறிடும் கல்வளையான் அடிப்போது அரிதன்று** - தாமரை மலர்கள் வாசனைவீசும் கல்வளைப்பதியில் எழுந்தருளிய பெருமானு டைய திருவடிப்பேறு அரியதல்ல. எ-று.

புயத்திற் சிலந்தி சுற்றுவதும் சடத்தைப் புற்று மூடுவதும் அத்தபோதனர் நீடித்தகாலம் பத்தி வைராக்கியத்தோடு மௌன விரதம்பூண்டு அசைதலின்றி யிருந்து தவஞ்செய்தலைக் குறிப்பனவாம்.

**மகாஞானிகள் யோகிகளா யுள்ளார்க்குக் கல்வளைப்பெருமான் திருவடிப்பேறு அரியதன் றென்றபடி.**

அரியா தவனிந் தளகேசன் வானயி ராவதத்தி
னரியா தவனிறைஞ் சுந்தாட் பதுமவண் டார்பிறப்பை
யரியா தவநி மலக்கல் வளையுறை யத்தபொய்யர்க்
கரியா தவநிலை யார்க்கெளி யாயெ னகப்பொருளே (76)

**அரி ஆதவன் இந்து அளகேசன் வான் அயிராவதத்தின்**
**அரி யாதவன் இறைஞ்சும் தாள் பதும அண்டார் பிறப்பை**
**அரியாதவ நிமல கல்வளை உறை அத்த பொய்யர்க்கு**
**அரியா தவநிலையார்க்கு எளியாய் என்அகப் பொருளே**

அண்டார் - வந்துசரணடையாதார்

**இ-ள்: அரி - அக்கினிதேவன், ஆதவன்** - சூரியன், **இந்து** - சந்திரன், **அளகேசன்** -குபேரன், **வான் அயிராவதத்தின் அரி** - விண்ணுலகத்துள்ள ஐராவதமென்னும் யானையை வாகனமாகக் கொண்ட இந்திரன், **யாதவன்** - விஷ்ணு, **இறைஞ்சும் தாள் பதும** - (ஆகிய இவர்கள்) வணங்குகின்ற திருவடித்தாமரை

களையுடையவரே, **அண்டார் பிறப்பை அரியாதவ** - வந்து சரண் புகாதவர்களுடைய பிறவித் துன்பத்தைக் களையாதவரே, **கல்வளை உறைநிமல** - கல்வளைத் தலத்திற் கோயில் கொண்ட பரிசுத்தரே, **அத்த** - பரமபிதாவே, **பொய்யர்க்கு அரியா - பொய்யொழுக்கங் கொண்டவர்க்கு அதீதமானவரே, தவநிலை யார்க்கு எளியாய்** - தவவொழுக்கத்தைக் கடைப்பிடித் தோர்க்கு எளியவரே, **என் அகப்பொருளே** - தமியேன் மனத்திற் குடிகொண்ட பரம்பொருளே. எ-று.

இந்திரன் முதலாம் தேவர்களாற் பூசிக்கப்படுபவரே, பொய்யர்க்குப் பொய்யராயுள்ளவரே, மெய்யர்க்கு மெய்யரே, கல்வளைக் கணபதியே, தமியேன் தியானப்பொருளாயுள்ளவரே, காத்தருள்க என்றபடி.

**கப்பணத் தந்தமில் வெஞ்சூரட் டோனுடன் கார்விடரா**
**கப்பணத் தந்த வரைக்குற மாதின் கருத்துறவா**
**கப்பணத் தந்தக் கரியாய்வந் தோர்க்கிடங் கஞ்சத்திரா**
**கப்பணத் தந்தவழ் செய்தொறு மாமுரல் கல்வளையே.** (77)

**கப்பணத்து அந்தமில் வெம்சூர் அட்டோன் உடன் கார்விட நா**
**கப் பணத்து அரைக் குறமாதின் கருத்து உறவா -**
**கப் பண தந்தக் கரியாய் வந்தோர்க்கு இடம் கஞ்சத்து இரா -**
**கப் பண் நந்தந் தவழ் செய்தொறு மாமுரல் கல்வளையே**

கப்பணம் - வேற்படை, சூர் - சூரபன்மன், முரல் - பாடும்.

**இ-ள்: கப்பணத்து அந்தம் இல் வெம் சூர் அட்டோன் உடன் -** வேற்படையினாலே எல்லையில்லாத கொடிய சூரபன்மனைக் கொன்றருளிய சண்முகக்கடவுளுடன், **கார் விட நாகப் பணத்து அரை அந்தக் குறமாதின் கருத்து உறவாகப் பண** - கரியவிடம் பொருந்திய பாம்பின் படத்தை நிகர்த்த கடிதடத்தையுடைய அந்த வள்ளிநாயகியின் மனசை உடன்படச்செய்தற்கு, **தந்தக்கரியாய் வந்தோர்க்கு** - கொம்பினையுடைய யானையாக வந்தருளிய விநாயகப் பெருமானுக்கு, **இடம்** - திவ்விய தலமாயுள்ளது, (எதுவென்னில்) **நத்தம் தவழ் செய்தொறும் -** சங்குகள் ஊர்ந்து செல்லுகின்ற வயல்தோறும் பொருந்திய, **கஞ்சத்துமா இராகப் பண்முரல் கல்வளையே** - தாமரைப்

பூக்களிற் சஞ்சரிக்கும் வண்டுகள் இராகமாகிய பண்ணைப்பாடும் கல்வளைத் திருப்பதியேயாகும். எ-று.

உறவாகப் பண என்பதில் பண்ண என்பது பணவென நின்றது.

**கல்வளைத் திருப்பதியே விநாயகப் பெருமான் அமர்ந்த திவ்விய ஷேத்திரமென்றபடி.**

**கல்லார மூரற் பெண் ணாக்குபிண் ணாக்கணைக் கண்ணனெண்ணுங்**
**கல்லாரஞ் செங்கழு நீர்வாவி மேவிய கல்வளையான்**
**கல்லா ரருவியங் குன்றத்தினேற்றுன் கணவர்பொன்னே**
**கல்லாரம் பூமுருக் கென்றா ரறிந்திலன் கான்மயிலே (78)**

**கல் ஆரமூரல் பெண் ஆக்கு பிள் நாக்கு அணைக்கண்ணன் எண்ணும்**
**கல்லாரம் செங்கழுநீர் வாவி மேவிய கல்வளையான்**
**கல்ஆர் அருவி அம் குன்றத்தில் நேற்று உன்கணவர் பொன்னே**
**கல்லார் அம் முருக்குப்பூ என்றார் அறிந்திலன் கான்மயிலே**

கல்லாரம் - நீர்க்குளரி.

**இ-ள்: கல் ஆர மூரல் பெண் ஆக்கு பிள் நாக்கு அணைக் கண்ணன் எண்ணும்** - கல்லை முத்துப்போன்ற பற்களையுடைய பெண்ணாகச் செய்தவரும் பிளந்த நாவினையுடைய சேடனாகிய சயனத்தையுடையவருமாகிய விட்டுணு மூர்த்தி தியானிக்கின்ற, **கல்லாரம் செங்கழுநீர் வாவி மேவிய கல்வளையான்** - நீர்க்குளரியும் செங்கழுநீரும் செறிந்த வாவிகள் பொருந்திய கல்வளையிற் கோயில்கொண்ட பெருமானது, **கல் ஆர் அருவி அம் குன்றத்தில்** - கல்லென்னுமொலியோடு கூடிய அரிவிகள் பாயும் அழகிய மலையிலே, **நேற்று** - நேற்று, **உன் கணவர்** - உனது தலைவர், **பொன்னே** - இலக்குமிபோன்றவளே, **கல்லார் அம் முருக்குப் பூ என்றார்**- படியாதவர்கள் அழகிய முருக்கம் பூவுக்குச் சமமானவர் எனச் சொன்னார். **கான் மயிலே அறிந்திலன்** - கானகத்திற் சஞ்சரிக்கும் மயில்போல்வாளே அவர் அப்படிச் சொன்னதன் காரணத்தை யான் உணர்ந்திலேன். எ-று.

கல்லைப் பெண்ணாக்கியது இராமாவதாரத்திலாகும். கௌதமமுனிவர் தமது பத்தினியாகிய அகலிகையை இந்திரன்

வஞ்சித்துக் கூடிய சமையத்தில் அதனையுணர்ந்து அவனை ஆயிரங்கண்ணனாகவும் அவளைக் கல்லாகவுஞ் சபித்துவிட, அங்ஙனங் கல்லான அகலிகை மிதிலைக்குச் செல்லும் மார்க்கத்திற் கிடக்கும் போது ஸ்ரீ ராமபிரானுடைய அடிப்பொடி பட்டமாத்திரத்தே சாபவிமோசனமாகித் தன் சுவய வடிவத்தைப்பெற ஸ்ரீ ராமபிரான் அவளைக் கௌதம முனிவரிடங் கொண்டுபோய்ச் சேர்த்தாரென்பது இராமாயணம். இஃது ஓதற்பிரிவு தலைமகன் குறிப்பாலறிந்த தோழி தலைமகட் குணர்த்திய தெனப்படும்.

**கல்வளைப் பொருப்பிலுள்ள தலைவனாகிய நின்கணவன் கல்லார் முருக்கம்பூவுக்குச் சமமாவரெனக் குறிப்பாலு ரைத்தான் எனத் தோழி தலைவிக்கு உணர்த்தினளென்ற படி.**

**கானகத் தானத்தி சூழிலங் கேசனைக் காய்ந்துவெண்மை**
**கானகத் தானத்தில் வீழ்த்தரன் சேய்வளை கான்றமுத்தங்**
**கானகத் தானத் திருள்சீக்குங் கல்வளைக் கட்டுபின்னற்**
**கானகத் தானத்தி யென்றேத்தி னென்பவக் கட்டறுமே. (79)**

**கால்நகத்தால் அத்தி சூழ் இலங்கேசனைக் காய்ந்து வெண்மை**
**கால் நகத்தானத்தில் வீழ்ந்து அரன் சேய் வளைகான்ற முத்தம்**
**கால் நகத் தானத்து இருள் சீக்கும் கல்வளைக் கட்டுபின்னல்**
**கானகத்தான் அத்தி என்று ஏத்தின் என்பவக்கட்டு அறுமே.**

அத்தி - கடல், வெண்மைகால் நகம் - வெள்ளொளி வீசும் இமயமலை, கால் நக - வாய்க்காலில் ஒளிவீசி

**இ-ள்: கால் நகத்தால் அத்தி சூழ் இலங்கா ஈசனைக் காய்ந்து** - திருவடிப் பெருவிரல் நகத்தினால் கடல்சூழ்ந்த இலங்கைக் கிறைவனாகிய இராவணனை வருத்தி, **வெண்மை கால் நகத்தானத்தில் வீழ்த்து அரன் சேய்** - வெள்ளொளி வீசுகின்ற கைலாசமலையின் அடியில் வீழ்த்திய பரமசிவனுடைய திருக்குமாரராகிய விக்கிநேசுவரரை, **வளை கான்ற முத்தம் கால் நக**-சங்கீன்ற முத்துக்கள் வாய்க்காலில் ஒளிசெய்து, **தானத்து இருள் சீக்கும்கல்வளை-** அவ்விடத்துள்ள இருளை அகற்றுகின்ற கல்வளைப்பதியில் (எழுந்தருளிய), **கட்டு பின்னல் கானகத்தான் அத்தி என்று ஏத்தின்** - கட்டுகின்ற முறுகிய

சடையாகிய காட்டையுடைய யானைமுகத் தெய்வம் என்று துதித்தால், **என் பவக் கட்டு அறும்** - என்னுடைய பாவமாகிய பந்தம் அறுந்துபோம் எ-று. நக என்பது நக்கு என்பதன் திரிபு.

**சிவகுமாரராகிய கல்வளைப்பெருமானைத் துதிப்பின் தமியேனுடைய பாசபந்தம் நீங்குமென்றபடி.**

**கட்கஞ்ச மள்ளர் களைகளை கல்வளைக் கத்தன்றறு**
**கட்கஞ் சனைவதைத் தோன்மரு கன்வரைக் காவன்மின்னே**
**கட்கஞ் சனப்புயல் பொங்கால கால கடுவடுவேற்**
**கட்கஞ்ச மானம் வரைப்பா யிருதொழில் காட்டரிதே. (80)**

**கள் கஞ்சம் மள்ளர் களைகளை கல்வளைக் கத்தன் தறு -**
**- கண் கஞ்சனை வதைத்தோன் மருகன் வரைக்காவல் மின்னே**
**கட்கு அஞ்சனப்புயல் பொங்கு ஆலகாலகடு வடு வேல்**
**கட்கம் சமானம் வரைப்பாய் இருதொழில் காட்டரிதே.**

கட்கு - கண்ணுக்கு, அஞ்சனப்புயல் - கரியமேகம், கடு - விடம், வடு - மாம்பிஞ்சு, கட்கம் - வாள்.

**இ-ள்: கள் கஞ்சம் மள்ளர் களை களை கல்வளைக் கத்தன்** - தேன்பொருந்திய தாமரை மலரை (உழவர்கள்) களையாகப் பிடுங்குகின்ற கல்வளைப்பதியில் எழுந்தருளிய தலைவரும், **தறுகண் கஞ்சனை வதைத்தோன் மருகன்** - தறு கண்மையுடைய கஞ்சனைக்கொன்ற திருமாலின் மருகருமாகிய விநாயகக் கடவுளுடைய, **வரைகாவல் மின்னே** - மலையில் தினைப்புனத்தைக் காக்கின்ற மின்னிடையாளே, **கட்கு** - உனது விழிக்கு, **அஞ்சனப்புயல்** - கருமையாகிய மேகம், **பொங்கு ஆலகால கடு** - மேலேயெழுந்த ஆலகாலமென்னும் நஞ்சு, **வடு** - மாம்பிஞ்சு, **வேல்** - வேற்படை, **கட்கம்** - வாள், **சமானம்** - (ஆகிய இவைகள்) ஒப்பாகும், **வரைப்பாய் இருதொழில் காட்டரிது** - (ஆயினும் அவை துன்ப இன்பங்களுக்கு) எல்லை யாகிய இரண்டு தொழில்களையுஞ் செய்தலில்லை எ-று.

ஆலகால கடு - ஒரு பொருள் குறித்த பல்பெயர். இது தலைவியைப் புகழ்ந்தவாறாம்.

**கல்வளைப் பொருப்பில் ஏனல் காக்கின்ற பெண்ணே, மேகம் முதலிய பொருள் உன் விழிகட்கு ஒப்பெனச் சொல்லப்படினும் அவை இன்புறுத்தல் துன்புறுத்தல் என்னுமிரண்டினையும் செய்யத் தக்கனவல்ல எனத் தலைவியைத் தலைவன் புகழ்ந்தபடி.**

அரக்கர விந்தறக் கொன்றோன் பெறாவமு தேவெங்கொலை
யரக்கர விந்தம் பயில்வன நீத்தண்மி னோநின்றுகே
ளரக்கர விந்தன் குலத்தோர் மணிகையி னாற்கல்வளை
யரக்கர விந்தம் புனைவோர்க் கொலிக்கு மரவங்களே. (81)

அரக்கர் அவிந்து அறக் கொன்றோன் பெறா அமுதே வெம்கொலையர்
அக்கர விந்தம் பயில் வனம் நீத்து அண்மினோம் நின்று கேள்
அரக்கு அரவிந்தன் குலத்தோர் மணிகையினால் கல்வளையர்
அக்கு அரவு இந்து அம்புனைவோர்க்கு ஒலிக்கும் அரவங்களே.

அக்கு - உருத்திராக்கம், அரவம் - ஓசை.

**இ-ள்: அரக்கர் அவிந்து அறக்கொன்றோன் பெறா அமுதே** - அசுரர்கள் மாண்டு ஒ நங்கு அழியும் வண்ணம் (அச்சமையத்தில் மோகினி வடிவங் கொண்டு உபாயத்தால்) அவர்களை நாசஞ்செய்த திருமால் (பாற்கடலிற்) கடைந்தெடாத அமிர்தமா யுள்ளவளே, **வெம் கொலையர் அக்கர விந்தம் பயில் வனம் நீத்து அண்மினோம்** - கொடிய கொலைஞராகிய வேட்டுவரும் அந்த யானைகளும் சஞ்சரிக்கின்றதாகிய காட்டைக் கடந்து ஊரைக் கிட்டினோம், **அரக்கு அரவிந்தன் குலத்தோர்** - செந்தாமரைப் பூவில் இருக்கின்ற பிரமாவின் குலத்தவர் (பிராமணர்), **கல்வளையர்** - கல்வளைத் தலத்திற் கோயில் கொண்டவரும், **அக்கு அரவு இந்து அம்புனைவோர்க்கு** - உருத்திராக்கம் பாம்பு பிறை கங்கை என்னுமிவைகளை யணிந்தவருமாகிய விநாயகமூர்த்திக்கு, **கையினால் மணி யொலிக்கும் அரவங்கள் நின்று கேள்** - (பூசைக்காலத்திலே) தங்கள் கையினாலே மணியடிக்கும் போது எழும் ஓசையை (தாமதித்து) நின்று கேட்பாயாக எ-று.

பூர்வத்தில் அமிர்தத்தைப் பெற விரும்பிய சுரரும் அசுரரும் திருமாலைத் தலைவராகக் கொண்டு பாற்கடலைக் கடைந்த சமையத்தில் அமிர்தம் பிறக்க, திருமால் அசுரருக்கு

அந்த அமிர்தத்தைக் கொடாது வஞ்சிக்க நினைந்து தாம் ஒரு அழகிய மோகினி வடிவத்தைக் கொண்டு அசுரர்களை நோக்கி "உமக்கு என்னைவேண்டுமோ? இன்றேல் இவ்வமிர்தம் வேண்டுமோ" என்று கேட்க, அசுரர்கள், "உன்னையே வேண்டும்" என, அங்ஙனமாயின் "உங்களுள் எவன் வலியனோ, அவன் என்னைப் பெறுக" எனத் திருமாலாகிய மோகினி சொல்ல, அவ்வசுரர் ஒருவரோ டொருவர் மாறுபட்டுப் போர்புரிந்து ஒருங்கு மாண்டனரென்பது சரித்திரமாதலின் "அரக்கரவிந்தறக் கொன்றோன்" என்றார். இதன் விரிவைக் கந்தபுராணத்திற் காண்க, விந்தம் இங்கே மலைப்பொது, கரவிந்தம் - கைம்மலை, யானை, "அரவங்கள்" எனப் பன்மையிற் கூறியது கல்வளைப்பெருமானுக்குப் பல காலங்களில் பூசைகள்தோறும் ஒலிக்கப்படும். மணியோசையின் மிகுதிபற்றியதாம், இது தலைவன் தன் பதியடைந்தமையைத் தலைவிக்குணர்த்துதலென்க.

**"தலைவியே கல்வளைப் பெருமானார்க்குப் பலகாலமும் ஆராதனை நடக்கும்போது ஆதிசைவர் அடிக்கும் மணியோசையைக் கேட்பாயாக" எனத் தலைவன் கூறினான் என்றபடி,**

**வங்கங் கணவர் நிதிதேடப் போனதென் வாய்ந்தபில**
**வங்கங்க ணச்சி யுடைக்குங் குடக்கனி வார்ந்தநற**
**வங்கங் கணவி மடைதத்து தென்கல் வளையிலா**
**வங்கங் கணன்கிரி யன்னாள்பொன் னங்க மருவுறவே. (82)**

**வங்கம் கணவர் நிதிதேடப் போனதுஎன் வாய்ந்த பில**
**வங்கங்கள் நச்சி உடைக்கும் குடக்கனி வார்ந்த நற**
**வம் கங்கு அணவி மடை தந்து தென் கல்வளையில் அர**
**வம் கங்கணன் கிரி அன்னாள் பொன் அங்கம் மருவுறவே.**

பிலவங்கங்கள் - குரங்குகள்

**இ-ள்: வாய்ந்த பிலவங்கங்கள் நச்சி உடைக்கும் குடக்கனி வார்ந்த நறவம்** - (அங்குச்) சஞ்சரிக்கும் குரங்குகள் ஆசைப்பட்டுப் பிளக்கின்ற குடம் போன்ற பலாப்பழங்களிற் பெருகும் தேனானது, **கங்கு அணவி மடைதத்து தென்**

**கல்வளையில்-** வரம்புகளை யடைந்து நீர் மடையை மேவிப்பாயப்பெற்ற வளவிய கல்வளைப்பதியில் எழுந்தருளிய, **அரவம் கங்கணன் கிரி அன்னாள் அங்கம் பொன் மருவுற** - சர்ப்ப கங்கணத்தை யணிந்த விநாயகப் பெருமானது மலையில் அத்தலைவியின் மேனியில் பொன்னாபரணங்கள் பொருந்தும் வண்ணம், **வங்கம் கணவர் நிதி தேடப்போனது என்** - மரக்கலத்திலேறிக்கொண்டு தலைவர் பொன்னைத் தேடப்போன தென்னை எ-று.

**இ∴து ஆற்றுமை கூறல் என்றபடி.**

**மருக்காவி னாறிடக் குங்குலு வாலயம் வாசங்கொள்ள**
**மருக்காவி பூம்பண்ணை நாறிடுங் கல்வளை வார்கொன்றைத்தா**
**மருக்காவி யன்னவ னைப்பா டிலர்கவி வாணரென்க**
**மருக்காவின் பாலுகுத் தாலென்னப் பாடுவர் மாந்தரையே.** (83)

**மருகாவில் நாறிடக் குங்குலு ஆலயம் வாசங்கொள்ள**
**மருகாவி பூம்பண்ணை நாறிடும் கல்வளை வார் கொன்றைத்தா**
**மருக்கு ஆவி அன்னவளைப் பாடிலர் கவிவாணர் என்க**
**மருக்கு ஆவின் பால் உகுத்தால் எனப் பாடுவர் மாந்தரையே**

மருகாவில் - மருக்கொழுந்துச் சோலை, குங்குலு - குங்குலியம் தாமருக்கு - (தாமம்)- மாலைஅணிந்தவருக்கு, கமருக்கு - நிலவெடிப்பிற்கு

**இ-ள்: மருகாவில் நாறிட** - மருக்கொழுந்து சோலையிலே பரிமளிக்கவும், **குங்குலு ஆலயம் வாசங்கொள்ள** - குங்குலிய (த்தூப) ம் திருக்கோயிலில் கமழவும், **மரு காவி பூம்பண்ணை நாறிடும் கல்வளை** - வாசனை பொருந்திய காவிமலர்கள் பொலிவான வயல்களில் முளைக்கப்பெற்ற கல்வளைப்பதியில் (எழுந்தருளியவரும்), **வார் கொன்றைத் தாமருக்கு ஆவி யன்னவனை** - நெடிய கொன்றைப்பூ மாலையைத் தரித்த சிவபெருமானுக்கு ஆருயிர் போன்றவருமாகிய விநாயகக் கடவுளை, **கவி வாணர் பாடிலர்** - புலவர்கள் பாடுகின்றிலர், **கமருக்கு ஆவின்பால் உகுத்தால் என மாந்தரையே பாடுவர்** - நிலத்திலுள்ள பிளப்பிலே பசுவின் பாலை ஊற்றினாற்போல் (வீணாக) மனுடர்களையே புகழ்ந்து பாடுகின்றார்கள், **என்** - இ∴தென்ன விபரீதம் எ-று.

புலவர்கள் நரஸ்துதி செய்யாது எம்பெருமானையே பாடவேண்டும் என்பதை "........ பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை புகலூர் பாடுமின் புலவிர்காள்" எனப் பெரியார் பணித்தமையான் உணர்க.

**புலவர்கள் கல்வளைப் பெருமானாரைப் பாடித் துதிப்பதை விடுத்து நரஸ்துதி செய்வது பேதமையின் பாற்படும் என்றபடி.**

**தரைக்குந் ததிக்குங் கனிவா யங்காந்து தயங்கியமந்**
**தரைக்குந்த வாளி தனுவாங்கு மால்பணி தற்பரன்மைந்**
**தரைக்குந் தளக்கஞ்ச மான்மகிழ் கல்வளை தங்கியநா**
**தரைக்குந்தன் முன்னவ னைப்பாட லாற்கொள்வர் சங்கத்தரே. (84)**

**தரைக்கும் தகிக்கும் கனிவாய் அங்காந்து தயங்கிய மந்**
**தரைக்கு உந்தவாளி தனு வாங்கும் மால்பணி தற்பரன்மைந்**
**தரைக் குந்தளம் கஞ்சமான் மகிழ் கல்வளை தங்கிய நாட**
**தரைக் குந்தன் முன்னவனைப் பாடலால் கொள்வர்சங்கத்தரே.**

தகி - தயிர், கஞ்சமான் - தாமரையாசனியான இலக்குமி, குந்தன் - வேலாயுதன்.

இ-ள்: **தரைக்கும் ததிக்கும் கனிவாய் அங்காந்து** - பூமியையும் தயிரையும் உட்கொள்ளும் பொருட்டுக் கொவ்வைக்கனியை நிகர்த்த வாயைத் திறந்தும், **தயங்கிய மந்தரைக்கு வாளி உந்த தனு வாங்கும்** - தடுமாற்றமடைந்த கூனியென்பவட்கு (அவள் கூன் நீங்கும்படி மண்ணாங்கட்டியாகிய) பாணத்தைச் செலுத்தச் சுண்டுவில் வளைத்தும் உள்ள, **மால்பணி தற்பரன் மைந்தரை** - மகாவிஷ்ணு வணங்கும் ஆன்ம நாயகராகிய பரமசிவனுடைய திருக்குமாரரும், **குந்தளம் கஞ்சமான் மகிழ் கல்வளை தங்கிய நாதரை** - கூந்தலையுடைய தாமரை யாசனியாகிய இலக்குமி விரும்பி வதியும் கல்வளையிற் கோயில்கொண்ட தலைவரும், **குந்தன் முன்னவனை** - வேலாயுதக்கடவுளின் தமயனுமாகிய விநாயகக்கடவுளை, **சங்கத்தார் பாடலாற் கொள்வர்** - புலவர்கள் தாம் பாடும் தோத்திரப்பாக்களாற் பெற்றுக்கொள்வார்கள் எ-று.

திருமால் முன்னொருகாலத்துப் பூமியை எடுத்து விழுங்கி உமிழ்ந்தும் கிருஷ்ணாவதாரத்தில் இடைச்சியர் தயிரைத் திருடியுண்டு முள்ளாராதலின், "தரைக்கும் ததிக்கும் கனிவாய் அங்காந்து" என்றார். மந்தரைக்கு வாளி உந்தத் தனுவாங்கியது இராமாவதாரத்திலாகும்; கைகேசியின் பணிப்பெண்ணாகிய மந்தரை யென்பவள் கூனுடையவளாக, இராமபிரான் தமது சிறுபிள்ளைப் பருவத்தில் விளையாட்டாக, மண்ணுண்டையைச் சுண்டுவில்லில் வைத்துப் பிரயோகிக்க, அது அவள் முதுகிற் பட்டமாத்திரத்தே அவளுடைய கூன் நீங்கியது. ஆயினும் உண்டை பட்டு அவட்கு வருத்தம் விளைத்தமையின் அவள் ஸ்ரீ இராமபிரானை வெறுத்துப் பின்னர்ப் பட்டாபி ஷேகத்திற்கு இடையூறு விளைத்தாள், இதன் விரிவை இராமாயணத்திற் காண்க. கல்வளைப்பெருமானைப் புலவர்கள் தம் பாடலாற் பெறுதலென்றது அப்பெருமானுடைய அருளைப் பெறுதலாகும்.

**தமிழ்ப்புலவர்களாயுள்ளார் கல்வளைப்பெருமானைப் பாடி அவர் திருவருளைப் பெற்று ஈடேறுதலாகுமென்றபடி.**

**சங்கர னாட்டத் திரல டஞ்சு நாற்பொறிச் சர்ப்பம்வன**
**சங்கர னாட்டந் தவிர்த்தோன் றுயில்வடந் தண்டரளஞ்**
**சங்கர னாட்டயில் சேர்வஞ்சி கல்வளைத் தந்தியங்கு**
**சங்கர னாட்டன்பி னன்பகண் டாயென் றனதுயிரே.** (85)

**சங்கரன் நாட்டத்து இரண்டு ஐஞ்சு நாற்பொறிச் சர்ப்பம் வன**
**சம்கரன் நாட்டம் தவிர்த்தோன் துயில்வடம்தண் தரளம்**
**சங்கு அரம் நாட்டு அயில் சேர் வஞ்சி கல்வளைத் தந்திஅங்கு**
**சம் கரம் நாட்டு அன்பின் அன்ப கண்டாய் என்றனது உயிரே.**

வடம் - ஆலிலை, கரன் - கரன் எனும் அசுரன்

**இ-ள் : அன்பின் அன்ப** - அன்பினையுடைய பாங்கனே, **கல்வளைதந்தி அங்குசம் கரம் நாட்டு** - கல்வளைப்பதியில் எழுந்தருளிய யானையும் அங்குசத்தைத் திருக்கரத்திற் கொண்டவருமாகிய விநாயகக்கடவுளது திருநாட்டிலே, **சங்கரன் நாட்டத்து இரண்டு அஞ்சு நால்பொறிச் சர்ப்பம்** - பரமசிவனுடைய கண்கள் இரண்டாகிய சந்திரனும் சூரியனும்

பயப்படுகின்ற நான்கு பொறிகளை யுடைய பாம்பின் படமும், **வனசம்** - தாமரைப் பூவும், **கரன் ஆட்டம் தவிர்த்தோன் துயில் வடம்** - (இராமாவதாரத்தில்) கரன் என்னும் அரக்கனது வலிமையைக் கெடுத்த திருமால் நித்திரை கொள்ளும் ஆலிலையும், **தண் தரளம்** - குளிர்ச்சியாகிய முத்தும், **சங்கு** - சங்கும், **அரம் நாட்டு அயில்** - அரங் கதுவப்பெற்ற வேற்படையும், **சேர்வஞ்சி என்தனது உயிர்** - (என்னுமிவைகள்) பொருந்திய ஒரு கொடியே எனது உயிர் எ-று.

பாம்பிற்குக் கண்ணுஞ் செவியும் ஒரேபொறியாதலின் மெய் வாய் மூக்கு என்பவற்றையுஞ் சேர்த்து நாற்பொறி யென்றார். பாம்பின்படம் தாமரைப்பூ ஆலிலை முத்து சங்கு வேல் கொடி என்பன முறையே, கடிதடம் முகம் உதரம் பல் கழுத்து விழி இடை என்னுமிவைகட்கு உவமானமாக வந்தன. இது இவ்விடத்து இவ்வியல்பிற்றென்னல்.

**தலைவியே தன் உயிர் எனத் தலைவன் பாங்கனுக்கு உரைத்தபடி.**

**தனக்காக்கை யன்றி வழங்காரைப் பாடித் தளர்பசிய**
**தனக்காக்கை யுண்ணு முடல்வீக் கிடர்ச்சலித் தேன்சிலைவே**
**டனக்காக்கை போக்கிய நோக்கினன் மைந்ததண் காரினைச்சந்**
**தனக்காக்கை நீட்டுதென் கல்வளை யன்பர் சகாயத்தனே. (86)**

**தனம் காக்கை அன்றி வழங்காரைப் பாடித் தளர் பசி அ**
**தனம் காக்கை உண்ணும் உடல் வீக்கிடச்சலித்தேன்சிலைவேள்**
**தனக்கு ஆக்கை போக்கிய நோக்கினன் மைந்ததன்காரினைச்சந்**
**தனக்கா கைநீட்டு தென் கல்வளை அன்பர் சகாயத்தனே.**

தனம் - செல்வம், சிலைவேள் - மன்மதன், சந்தனக்கா- சந்தனமரச்சோலை.

**இ-ள்: தனம் காக்கை அன்றி வழக்காரைப் பாடி** - திரவியத்தைக் காப்பதேயல்லாமல் சற்பாத்திரத்தில் இடாதவ ராகிய உலோபர் களைப் (புகழ்ந்து) பாடி, **தளர் பசி அதனம் காக்கை உண்ணும் உடல் வீக்கிடச் சலித்தேன்** - தளர்ச்சியைத் தரும் பசிமிகுதிகொண்ட காக்கைகள் உண்ணும் என் உடம்பைப் பெருக்கச் செய்வதற்காகச் சஞ்சலமுற்றேன்,

**சிலைவேள் தனக்கு ஆக்கை போக்கிய நோக்கினன் மைந்த** - (கருப்பம்) வில்லை யுடைய மன்மதனுக்கு அவன் தேகத்தை எரித்த நெற்றிக்கண்ணைக்கொண்ட பரமசிவனது திருக்குமாரரே, **தண் காரினைச் சந்தனக்கா கை நீட்டு தென் கல்வளை அன்பர் சகாயத்தனே-** குளிர்ந்த முகிலைச் சந்தனமரச் சோலைகள் தம் கொம்பராகிய கைகளை நீட்டித் தொடுகின்ற அழகிய கல்வளைப்பதியில் எழுந்தருளியிருக்கும் பத்தர்சகாயமூர்த்தியே எ-று.

தனம் காக்கை யென்றதில் காக்கை தொழிற்பெயர்; அதனம் - அதிகம்; இது அதனு என்பதன் திரிபாகும்.

**மன்மதனையெரித்த கண்ணுதற்பெருமான் றிருக்குமாரரே, பத்தர்சகாயரே, காக்கை உண்ணக் காத்திருக்கும் இவ்வாக்கையைப் போஷிக்க வேண்டி ஈயாத புல்லரைப் பாடி இடர்ப்பட்டேன் எனப் பச்சாத்தாபமடைந்தபடி.**

**காயப் படவு துளங்கிச் சிலேட்டுமக் கால்விசைத்துக்**
**காயப் படவு முடியுதை யோமலர்க் காவணமா**
**காயப் படவுயர் கல்வளை நாத கரியுரியே**
**காயப் படவுமை காதல னீன்ற கரமஞ்சனே.** **(87)**

**காயப்படவு துளங்கிச் சிலேட்டுமக் கால் விசைத்துக் -**
**- காய படவும் முடியுது ஐயோ மலர்க்காவணம் ஆ**
**- காயப்பட உயர் கல்வளை நாத கரி உரி ஏ -**
**- காயப்பட உமை காதலன் ஈன்ற கரமஞ்சனே**

காயப்படவு - உடம்பாகிய தோணி, ஏகாயப்படம் - உத்தரீயம்.

**இ-ள்: சிலேட்டுமக்கால் விசைத்துக் காய** - சிலேட்டுமமாகிய காற்று முனைத்து வருத்த, **காயப்படவு துளங்கிப்படவும் முடியுது ஐயோ** - தேகமாகிய தோணியானது நடுங்கி அழிய நேர்ந்தது ஐயோ, **மலர்க்கா ஆகாயவணம் பட உயர் கல்வளை நாத** - பூஞ்சோலை மேகவர்ணத்தை அடையும் வண்ணம் உயர்ந்துள்ள கல்வளைப்பதியிற் கோயில்கொண்டருளிய தலைவரே, **கரி உரி ஏகாயப்பட உமை காதலன் ஈன்ற கரமஞ்சனே-** யானைத் தோலாகிய போர்வையை யணிந்தவரும் உமாதேவியாருக்கு நாயகருமாகிய சிவபிரான் பெற்றருளிய துதிக்கையினையுடைய யானைக்கன்றே எ-று.

முடிகிறது முடியுதெனத் திரிந்து நின்றது. ஐயோ, இரக்கக் குறிப்பை யுணர்த்துஞ் சொல். வண்ணம் வணமென நின்றது. மலர்க்கா ஆகாயவணம்படுதல் மேகமண்டலத்தை அளாவிநிற்றலாலென்க. ஏகாயப் படம் - உத்தரீயம் ; போர்வை. மஞ்சு - மேகம்; இங்கே மேகம்போன்ற யானையைக் குறித்தது. சிலேட்டுமக்கால் விசைத்தல் சிலேட்டுமம் அதிகப்படுதல் மரண காலத்திற் சிலேட்டுமம் அதிகப்படுமென்பதை, "புலனைந்தும் பொறி கலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட்டு ஐமேலுந்தி - அலமந்தபோதாக...." எனவும், "ஐயுந்தொடர்ந்து விழியுஞ் சொருகி அறிவழிந்து, மெய்யும் பொய்யாகி விடுகின்ற போது.........." எனவும் வரும் பெரியார்கள் திருவாக்கா னுணர்க.

**கரியுரிபோர்த்த கண்ணுதற்பெருமான்மைந்த, கல்வளைப்பெரும, மரணாவஸ்தைப்படும்போது தமியேனைக் காத்தருள்க என இரந்தபடி.**

**மஞ்சரிக் கண்ணிமின் வேணியன் கல்வளை வாசன்மணி**
**மஞ்சரிக் கண்ணிய சாபத்தை மாற்றும் வரதன்வெற்பின்**
**மஞ்சரிக் கண்ணிப் புயத்தாய் மனஙகலங் காயின்றுநீ**
**மஞ்சரிக் கண்ணி நகைக்குடைந் தாயுன் மனத்துரமே** (88)

**மஞ்சு அரி கண்ணி மின்வேணியன் கல்வளைவாசன் மணி**
**மஞ்சு அரிக்கு அண்ணிய சாபத்தை மாற்றும் வரதன் வெற்பில்**
**மஞ்சரி கண்ணி புயத்தாய் மனங் கலங்காய் இன்று நீ**
**மஞ்சு அரிக்கண்ணி நகைக்கு உடைந்தாய் உன்மனத்துரமே.**

மஞ்சுஅரி - வலியசர்ப்பம், மணிமஞ்சு - அழகிய மேகம், கண்ணி மஞ்சரி - மலரம்பு மாலை, மஞ்சு அரிக்கண்ணி - அழகிய செவ்வரி படர்ந்த கண்ணையுடையவள்.

**இ-ள்: மஞ்சு அரி கண்ணி மின் வேணியின்** - வலிய சர்ப்பமாகிய மாலை விளங்குகின்ற சடாமுடியை யுடையவரும், **கல்வளை வாசன்** - கல்வளைப்பதியில் எழுந்தருளியவரும், **மணி மஞ்ச அரிக்கு அண்ணிய சாபத்தை மாற்றும் வரதன் வெற்பில்-** அழகிய மேகவர்ணராகிய திருமாலுக்கு (உமாதேவியாரால் நேர்ந்த) சாபத்தை நீக்கியருளிய வரதரு மான விநாயகக்கடவுளின் மலையில், **கண்ணி மஞ்சரி புயத்தாய்**

**மனம் கலங்காய்** - மலரரும்புகளாலாய மாலையை யணிந்த புயத்தினைக்கொண்ட தலைவனே (முன்பு எக்காரணத்தானும்) மனங் கலங்கிலை, **நீ இன்று மஞ்சு அரிக்கண்ணி நகைக்கு உன் மனத்து உரம் உடைந்தாய்** - நீ இச்சமையத்திற் செவ்வரி படர்ந்த விழிகளையுடைய ஒரு பெண்ணின் புன்முறுவலுக்கு உனது மனத்திடம் அழியப்பெற்றாய் எ-று.

இது கற்றறிபாங்கன் கழறல் எனப்படும்.

**எவ்வகையான இடர்வந்தவிடத்தும் முந்தி மனமுடையாத நீ இப்பொழுது தலைவிநோக்கத்தால் மன முடைந்தமை புதுமையாமெனப் பாங்கன் தலைவனைத் தேற்றியபடி.**

**துரங்கந்தந் தாவளந் தேரா ளெனும்படை சூழ்ந்திடுசா**
**துரங்கந் தரணி படைத்திந்த்ர லோகமுந் துய்ப்பரிதோ**
**துரங்கந் தனிலுறை மாலேத்துங் கல்வளைத் தும்பிகற்சிந்**
**துரங்கந்த வேடுணைக் கன்பான மெய்த்திருத் தொண்டருக்கே. (89)**

**துரங்கம் தந்தாவளம் தேர் ஆள் எனும் படை சூழ்ந்திடு சா**
**துரங்கம் தரணி படைத்து இந்திர லோகமும் துய்ப்பரிதோ**
**துரங்கந் தன்னில் உறை மால் ஏத்தும் கல்வளைத் தும்பிகல்சிந்**
**துஉரம்கந்தவேள்துணைக்குஅன்பானமெய்த்திருத்தொண்டருக்கே.**

தந்தாவளம் - யானை, துரங்கம் - ஸ்ரீரங்கம், கல் - கிரவுஞ்சமலை.

**இ-ள் : துரங்கந்தன்னில் உறை மால் ஏத்தும் கல்வளைத் தும்பி**- பரிசுத்தமான ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளிய விஷ்ணுமூர்த்தி துதிக்கும் கல்வளைத்தலத்திற் கோயில்கொண்ட யானையும், **கல் சிந்து உரம் கந்தவேள் துணைக்கு**- கிரௌஞ்சமலையை (வேற்படையாற்) சிதைத்த கந்தசுவாமியின் தமயனாருமாகிய பிள்ளையாரிடத்து, **அன்பான மெய்த் திருத்தொண்டருக்கு** - பத்தியுள்ளவராகிய உண்மையடியவர்களுக்கு, **துரங்கம் தந்தாவளம் தேர் ஆள் எனும் சூழ்ந்திடு சாதுரங்கப்படை** - குதிரை யானை தேர் காலாள் என்னும் சூழ்ந்துள்ள நால்வகைச்சேனைகள், **தரணி படைத்து** - பூமி ஆகிய

இவைகளைப் பெற்று, **இந்திரலோகமும் துய்ப்பு அரிதோ**- இந்திரலோக போகங்களையும் அனுபவித்தல் அரிதாமோ எ-று.

சதுரங்கசேனை இராச்சியம் என்னுமிவைகளை இம்மையிலும் இந்திர லோகபோகத்தை மறுமையிலும் பெறுவரென்க. ஈற்று ஓகாரம் எதிர்மறைப் பொருளில் வந்தது.

**கல்வளைப்பெருமானாரைப் பூசித்துப் போற்றும் மெய்யடியாருக்கு இம்மை மறுமைப் போகங்கள் இலகுவிற் கிடைக்குமென்றபடி.**

அருமந்த மாருதத் தேரோற்கு மைத்துன னானபிரா
னருமந்த மாமுகன் கல்வளையான் வெற்பி னாடவரை
யருமந்தக் கார்குழன் மாலையும் வாடினதையமில்லை
யருமந்த மானுக் கிருப்புவெள் ளேறுடை யான்வையமே. (90)

**அருமந்த மாருதத் தேரோற்கு மைத்துனன் ஆனபிரான்
அரும் மந்த மாமுகன் கல்வளையான் வெற்பின் ஆடவர் அ
யரும் அந்தக் கார் குழல் மாலையும் வாடினது ஐயம் இல்லை
அருமந்த மானுக்கு இருப்பு வெள்ளேறு உடையான் வையமே.**

அருமந்தமானுக்கு- அருமருந்தன்ன பெண்ணுக்கு

**இ-ள்: அரு மந்த மாருதத் தேரோற்கு மைத்துனன் ஆன பிரான்** - நுண்ணிய இளந்தென்றலாகிய தேரையுடைய மன்மதனுக்கு மைத்துனராகவுள்ள பெருமானும், **அரும் மந்த மாமுகன்** - அருமையாகிய யானை வதனத்தை யுடையவரும், **கல்வளையான் வெற்பில் அருமந்த மானுக்கு**- கல்வளைப் பதியில் எழுந்தருளியவருமாகிய விநாயகக்கடவுளின் மலை யிலுள்ள அருமருந்தன்ன பெண்ணுக்கு, **ஆடவர் அயரும் அந்தக் கார் குழல் மாலையும் வாடினது** - (கண்ட) ஆடவர்கள் சோர்வடையும் அழகினையுடைய முகில்போன்ற கூந்தலிலுள்ள மாலையும் வாடியது, **இருப்பு** - (ஆதலால்) இப்பெண்ணின் வாசஸ்தானம், **வெள் ஏறு உடையான் வையமே** - வெண்ணிறமான இடபத்தை வாகனமாகவுடைய பரமசிவன் தேராகக்கொண்ட இப்பூவுலகமேயாகும், **ஐயமில்லை** - (இதிற்) சந்தேகமில்லை எ-று.

மத்தமா மந்தமா என மெலிந்துநின்றது. வையமே இருப்பு எனக் கூட்டி முடிக்க, வையம் என்பது பூமியையும் தேரையும் குறிக்கும் ஒரு சொல். பூமியைத் தேராகப் பரமசிவன் கொண்டது திரிபுரதகனத்திலாகும். மாலையும் என்ற உம்மையால், கண்ணிமைத்தல் முதலியனவுமுண்டென்பது பெறப்பட்டது.

**மாலை வாடியிருத்தல் முதலிய தன்மையால் இவள் மானுடப்பெண்ணெனத் துணியப்பட்டாளென்றபடி.**

**வைப்பர சத்தி யுரியா னிடத்தின் மகிழ்தருபார்**
**வைப்பர சத்தி திருமுலைப் பாலுண்ட வாயன்மத**
**வைப்பர சத்தி செறிந்திடுங் கல்வளை வானவர்கோ**
**வைப்பர சத்தினம் பெற்றாரற் றார்துயர் மானிலத்தே** **(91)**

**வை பரசு அத்தி உரியான் இடத்தில் மகிழ்தரு பார் -**
**- வைப் பரசத்தி திருமுலைப்பால் உண்டவாயன் மத -**
**- வைப்பு அரசு அத்தி செறிந்திடும் கல்வளை வானவர் கோ -**
**- வைப் பரசத்தினம் பெற்றார் அற்றார் துயர் மாநிலத்தே.**

பரசு - கைக்கோடரி, மதவைப்பு - மிகுதியாக, வை - கூரிய, பரச - துதிக்க.

**இ-ள்: வை பரசு அத்து உரியான் இடத்தில் மகிழ்தரு பார்வைப் பரசத்தி** - கூரிய கோடரிப்படையையும் யானைத்தோலையும் (முறையே ஆயுதமாகவும் போர்வையாகவும்) தரித்தருளிய சிவபிரானது இடப்பாகத்திலுள்ள கிருபா கடாட்சத்தோடு கூடிய உமையம்மையாரது, **திருமுலைப்பால் உண்ட வாயன்** - திருமுலைப்பாலை யருந்திய வாயினையுடையவரும், **மத வைப்பு அரசு அத்தி செறிந்திடும் கல்வளை வானவர் கோவை** - மிகுதியாகத் தன்னிடத்தில் அரச மரமும் அத்திமரமும் பொருந்தப்பெற்ற கல்வளைத் தலத்திற் கோயில்கொண்ட தேவதேவராகிய விநாயகப்பெருமானை, **தினம் பரசப் பெற்றார்** - நாள் தோறும் துதிக்கும் பாக்கியத்தைப் பெற்றவர்கள், **மாநிலத்தே துயர் அற்றார்** - பெரிய பூமியின்கண்ணே (இம்மையிலே) தம் துயரனைத்தும் ஒழியப் பெற்றவராவர் எ-று.

**கல்வளைப் பெருமானைத் தினமும் வணங்கித் துதிப்போர் எவ்வகையான கிலேசமும் ஒழியப் பெறுவரென்றபடி.**

மாவா ரணமெனக் கொண்டோன் விழிப்பட்டு மாய்ந்தவெங்கா
மாவா ரணங்க ளொருநாலு மேத்தி வணங்குமந்த
மாவா ரணங்கல் வளையான்றந் தான்கொன்றை மாலையெங்கண்
மாவா ரணங்கினை யென்செய்கு வாய்மலர் வாளிகொண்டே (92)

மாவாரணம் எனக் கொண்டோன் வழிபட்டு மாய்ந்த வெங்கா -
- மா ஆரணங்கள் ஒரு நாலும் ஏத்தி வணங்கும் அந்த
மா வாரணக் கல்வளையான் தந்தான் கொன்றை மாலை எங்கள்
மா ஆரணங்கினை என்செய்குவாய் மலர் வாளி கொண்டே

காமா - மன்மதனே, வாரணம் - போர்வை.

இ-ள்: **மா வாரணம் எனக் கொண்டோன் விழிபட்டு மாய்ந்த வெம்காமா** - யானைத் தோலை மேற்போர்வையாகத் தரித்த சிவபெருமானுடைய கட்பார்வை பட்டு மாண்ட கொடிய மாரனே, **ஆரணங்கள் ஒருநாலும் ஏத்தி வணங்கும்** - வேதங்கள் நான்கும் துதித்து வணங்குகின்ற, **அந்த மா வாரணக் கல்வளையான்** - பெரிய யானையாகிய அக்கல்வளையிற் பிள்ளையார், **கொன்றை மாலை தந்தான்** - கொன்றை மாலையைத் தந்துள்ளார், **எங்கள் மா ஆரணங்கினை மலர் வாளி கொண்டு என் செய்குவாய்** - இலக்குமியை நிகர்த்த எங்கள் தலைவியைப் பூங்கணைகளைக்கொண்டு நீ என்ன செய்குவாய் எ-று.

மா வாரணம் எனக்கொண்டோன் விழி என்பதில் மா, விழி, ஆகுபெயர்கள். மா ஆரணங்கு - இலக்குமியாகிய பெண். என் செய்குவாய் என்ற வினா உன்னால் ஏதுஞ் செய்ய முடியாதென்ற எதிர்மறைப்பொருளில் வந்தது. இது புறப்பொருளில் கடவுண்மாட்டு மானுடப் பெண்டிர் நயந்த பக்கத்தைச் சார்ந்தோர் கிளவி.

**தலைவிக்கு விநாயகப்பெருமான் கொன்றை மாலை யொன்றை யுதவியதனால் அத்தலைவியை அம்மதன் வருத்தல் முடியாதென மதனுக்குத் தெருட்டியபடி.**

**வாள முருக்கிதழ் வல்லவை சேர்கல் வளையிற்பிர**
**வாள முருக்கித வேணியன் வெற்பின் மதித்தசக்ர**
**வாள முருக்கு முலையாய் மலர்க்கரங் கொண்டுகர**
**வாள முருக்கயி னேர்வாரி பொத்துதன் மற்றரிதே.** (93)

**வாள முருக்கு இதழ் வல்லவை சேர் கல்வளையில் பிர -**
**- வாளம் உருக்கு இத வேணியன் வெற்பில் மதித்த சக்ர -**
**- வாளம் முருக்கும் முலையாய் மலர்க்கரங் கொண்டு கர -**
**- வாளம் உருக்கு அயில் நேர் வாரி பொத்துதல் மற்றரிதே.**

வாள - வாள் - ஒளி, பிரவாளம் - பவளம், சக்ரவாளம் - ஒருபறவை, கரவாளம் - வாள்.

**இ-ள்: வாள முருக்கு இதழ் வல்லவை சேர்** - ஒளியையுடைய முருக்கம்பூவை யொத்த அதரங்களையுள்ள வல்லவை பொருந்தப்பெற்ற, **கல்வளையில் பிரவாளம் உருக்கு இதவேணியன் வெற்பில்** - கல்வளைப் பதியிற் கோயில்கொண்ட பவளத்தை உருக்கினாற் போன்ற செய்ய சடையினையுடைய விநாயகக்கடவுளின் மலையில், **மதித்த சக்கரவாளம் முருக்கும் முலையாய்** - (புல்வர் ஒப்பாக) மதித்த சக்கரவாளப் பறவையை வென்ற தனங்களையுடைய தலைவியே, **கரவாளம் உருக்கு அயில் நேர்வாரி மலர்க்கரம் கொண்டு** - வாட்படை யையும் உருக்கினாலியன்ற வேற்படையையும் ஒத்த கண்ணைப் பூப்போன்ற கையினால், **பொத்துதல் அரிது** - பொத்துதல் அரிதாகும் எ-று.

வாரி - நீரையுடையது; இங்கே கண்; கரவாளம் - வாள்; மற்று அசைநிலை, இ∴து இடையூறு கிளத்தலாகும்.

**தலைவியே உன் விழி கைக்கடங்காவென்ற படி.**

**மற்கடந் தாவருங் காமேவு கல்வளை வாசன்வெங்கா**
**மற்கடந் தார்புக ழைங்கரன் வெற்பில்வன் பார்த்தனுடன்**
**மற்கடந் தான்கட் டழல்குளிர் தீச்சுர வாரியென்னா**
**மற்கடந் தாங்கிய கொங்கையெவ் வாறு மருவினளே** (94)

**மற்கடம் தாவரும் காமேவு கல்வளை வாசன் வெங்கா -**
**- மற் கடந்தார் புகழ் ஐங்கரன் வெற்பில் வன் பார்த்தனுடன்**
**மற்கள் தந்தான் கண் தழல் குளிர் தீச்சுரவாரி என்னா**
**- மல் கடந் தாங்கிய கொங்கை எவ்வாறு மருவினளே.**

மற்கடம் - குரங்கு, கடம் - குடம்

**இ-ள்: மற்கடம் தாவரும் காமேவு கல்வளை வாசன் -** குரங்குகள் தாவிப் பாய்கின்ற சோலைகள் பொருந்திய கல்வளைப் பதியைக் கோயிலாகக் கொண்டவரும், **வெம் காமற் கடந்தார் புகழ் ஐங்கரன் வெற்பில் -** கொடிய மன்மதனை வென்ற முனிவர்கள் போற்றும் ஐங்கரக் கடவுளுடைய மலையில், **வல் பார்த்தனுடன் மற்கள் தந்தான் கண் தழல் குளிர் தீச்சுரவாரி என்னாமல் -** வலிய அருச்சுனனோடு மல்யுத்தங்களைச் செய்த கைலாசபதியின் நெற்றிக்கண்ணிலுள்ள அக்கினிதானுங் குளிருகின்ற நெருப்பைக் கொண்ட பாலைவன மார்க்கமென்றுஞ் சிந்தியாமல், **கடந் தாங்கு கொங்கை எவ்வாறு மருவினன் -** குடத்தினியல்பை யொத்த தனங்களை யுடைய எமது மகள் எவ்வாறு சென்றாள் எ-று.

காமற் கடந்தார்-பெண்ணாசையைக் கடந்த முனிவர்கள்: பார்த்தனுடன் மற்கள் தந்த வரலாற்றைப் பாரதம் -அருச்சுனன் றவநிலைச் சருக்கத்திற்காண்க. கண் தழல் குளிர் தீ - நெற்றிக் கண்ணிற் பொருந்திய நெருப்புங் குளிரென்று சொல்லத்தக்க வெம்மையுடைய தீ. கடம் ஆகு பெயர். இது தன்மகள் மென்மைத் தன்மைக் கிரங்குதலாகும்.

**கொடிய பாலைவனத்தைக் கடந்து மகள் எவ்வாறு சென்றாளெனத்தாயிரங்கியபடி.**

**மரக்கணி யார்தம் மலரே டவிழ்த்து வயினிடத்த**
**மரக்கணி யாரெனச் சோதிடஞ் சொல்லினர் வாளரிச்ச**
**மரக்கணி யாதுசெய் வாணம் விதிவசம் வல்லவைவா**
**மரக்கணி யார்மைந்தர் கல்வளை வாசர் மலையகத்தே. (95)**

**மரக் கணியார் தம்மலர் ஏடு அவிழ்த்து வயினிடத்து அ-**
**-மர் அக்கணியார் என சோதிடம் சொல்லினர் வாள்அரி ஆ-**
**-மரம் கணி யாது செய்வாள் எம் விதிவசம் வல்லவை வா-**
**-மர் அக்கு அணியார் மைந்தர் கல்வளைவாசர் மலையகத்தே**

மரக்கணி- வேங்கை மரம் அக்கணியார் - அக்கணிச்சாதியார் கணி - கண்ணி, அக்கு - என்புமாலை

**இ-ள்: வல்லவை வாமர்** - வல்லபையை இடப்பாகத்திற் கொண்டவரும், **அக்கு அணியார் மைந்தர்** - என்பு மாலையாகிய அணியினையுடைய பரமசிவனது திருக்குமாரரும். **கல்வளை வாசர் மலையகத்து** - கல்வளைத் தலத்து எழுந்தருளியவருமாகிய விநாயகக்கடவுளின் மலையில், **மரக்கணி யார்** - மரமாகிய கணியார், **தம் மலர் ஏடு அவிழ்த்து** - தமது மலரேட்டை அவிழ்த்து, **வயினிடத்து அமர் அக்கணியார் என** - இத் தலத்தின்கண்ணே வசிக்கும் அக்கணிச் சாதியார்போல, **சோதிடஞ் சொல்லினர்** -(தினை விளைந்ததென்று) சோதிடங் கூறினா், **வாள் அரி சமரம் கணியாது செய்வாள்** - (முன்னொருபோதும் தலைவரைப் பிரியாத)வாள் போலும் இரேகைகள் பொருந்திய போர் புரியும் விழிகளையுடைய தலைவி இனி என்ன செய்யப்போகின்றாள், **எம் விதி வசமே** - இப்படி நேர்ந்தமை எம் விதி வசமாகும். எ-று.

மரக்கணி - வேங்கைமரம். மலரேடு - பூவிதழ். மூன்றாமடியிற்கண்ணி கணி யெனத் தொக்கது. இ∴து சிறைப் புறமாகச் செறிப்பறிவுறுத்தலாகும்.

**வேங்கை பூத்தமையே தினை முற்றியமைக்கு அறிகுறியாக தினைப்புனைத் தலைவி காத்தல் அதன் மேல் இல்லையாக அவள் சிறுகுடிலிற் செறியவேண்டி நேர்ந்தமையின் தலைவனைப் பிரிந்தறியாத் தலைவி இனிப்பிரிவாற்றாது வருந்துவளே யெனப் பாங்கி அவள் பொருட்டு இரங்கியபடி..**

**கத்தாறு காலிசை யார்க்குங் குழற்கரும் பேயுயர்மா**
**கத்தாறு காலக் கருமாரி வந்தது கன்னியம்பூ**
**கத்தாறு காலுங் கனியள்ளி யாரங் கரைசிந்திவே**
**கத்தாறு கால்வருங் கல்வளை வாழைங் கரன்வெற்பிலே. (96)**

**கத்து ஆறுகால் இசை ஆர்க்கும் குழற் கரும்பே உயர் மா -**
**- கத்து ஆறு காலக் கருமாரி வந்தது கன்னியம் பூ -**
**- கத்து ஆறு காலும் கனி அள்ளி ஆரம் கரைசிந்தி வே -**
**- கத்து ஆறு கால்வரும் கல்வளைவாழ் ஐங்கரன் வெற்பிலே.**

ஆறுகால் - வண்டு, மாகத்து - ஆகாயத்து, பூகத்து - கமுகில், ஆரம் - முத்து.

**இ-ள்: கத்து ஆறுகால் இசை ஆர்க்கும் குழற்கரும்பே** - ஒலி செய்யும் வண்டுகள் கீதம்பாடும் கூந்தலையும் கருப்பிரசம் போன்ற இனிய சொல்லையுமுடையவளே, **கன்னியம் பூகத்தாறுகாலும் கனி அள்ளி** - இளமையாகிய கமுகின் குலைகள் உதிர்த்த பழப்பாக்குக்களை அள்ளிக்கொண்டு, **ஆரம் கரை சிந்தி** - முத்துக்களைக் கரையிலொதுக்கி, **வேகத்து ஆறுகால் வரும்** - வேகமாக நதி வாய்க்காலின்வழியே வருகின்றது, **கல்வளைவாழ் ஐங்கரன் வெற்பிலே** - (ஆதலால்) கல்வளைப்பதியில் எழுந்தருளிய ஐங்கரக்கடவுளுடைய மலையிலே, **உயர்மாகத்து ஆறு** - உயர்ந்த ஆகாயமார்க்க மாக, **காலக்கருமாரி வந்தது** - கார்காலத்துக் கருமேகம் வந்தது (போலும்) எ-று.

ஆறுகால் - அறுபதம், வண்டு. இ∴து தலைவி அறியாள் போன்று குறியாள் கூறலென்க.

**நதிபிரவாகித்துப் பாய்தலின் கார்காலத்துக் கருமுகில் மேலே வந்தது போலும் என்றபடி.**

**கரனா கராமுனி மாதுள மேந்திய கல்வளையான்**
**கரனா கராவற நேமிப் படைக்கல மேவிவரு**
**கரனாக ராசன் பணிபெரு மான்புகழ் கற்றிடச்சி**
**கரநாக ராதிப னாபிர நாப்பெற்ற காரணமே.** (97)

**கரன் நாகு அரா முனி மாதுளம் ஏந்திய கல்வளையான்**
**கரன்நாகரா அற நேமிப் படைக்கலம் ஏவி வரு**
**கரன் நாகராசன் பணி பெருமான் புகழ் கற்றிட சி -**
**கர நாகர் ஆதிபன் ஆயிரம் நாப்பெற்ற காரணமே.**

நாகு - சங்கு, முனி - வில், நேமி - சக்கரப்படை, நா - நாகராசன்.

**இ-ள்: கரன் நாகு அரா முனி மாதுளம் ஏந்திய கல்வளையான்** - திருக்கரங்களில் சங்கையும் சர்ப்பத்தையும் வில்லையும் மாதுளம்பழத்தையும் தரித்த கல்வளைப்பெருமானும், **கரன் கரா நா அற நேமிப் படைக்கலம் ஏவி வரு கரன்** - கரன் என்னும் அரக்கனும் முதலையும் நடுவறச் சக்கரப்படையைத் தூண்டிய கையினையுடைய திருமால், **நாகராசன் பணி பெருமான்** - விண்ணுலக அரசனாகிய இந்திரன் (ஆகிய இவர்கள்) வணங்கும் பெருமானாகிய விக்கினேசுவரமூர்த்தியின், **புகழ் கற்றிட** - திருப்புகழைப் படிப்பதற்கே, **சிகர நாகர் ஆதிபன்**

**ஆயிரம் நாப் பெற்ற காரணம்** - உயர்ச்சியாகிய சர்ப்பங்களுக்குத் தலைவனாகிய ஆதிசேடன் ஆயிரம் நாக்களைக் கொண்ட காரணமாகும் எ-று.

முனி - வில்லு. நா - நடு; கரன் இராவணனுக்குத் தம்பி முறை பூண்ட அரக்கன்; திருமால் இராமாவதாரத்தில் இவனை வதைத்தனர். கரா - இங்கே கயேந்திர ஆழ்வான் என்னும் யானையைப் பிடித்த முதலை.

**ஆதிசேடன் ஆயிரம் நாக்களைப் பெற்றிருத்தல் கல்வளைப்பெருமான் திருப்புகழைப் பாடுதற்குப்போலும் என்றபடி.**

**காரப் பிணைவிழி வல்லவை பாலமர் கல்வளையான்**
**காரப் பிணையென வெங்குநின் றோன்வெற்பிற் காமரந்த**
**காரப் பிணையற் சுருள்வஞ்சி போற்கன்னி யீர்பொறியா**
**காரப் பிணையொன்று வந்ததுண் டோசொல்லுங் கண்டதுண்டே (98)**

**கார் அப்பு இணை விழி வல்லவைபால் அமர் கல்வளையான்**
**கார் அப்பு இணையென எங்கும் நின்றோன் வெற்பில் காமர் அந்த -**
**- காரப் பிணையல் சுருள் வஞ்சிபோல் கன்னியீர் பொறி ஆ -**
**- காரப் பிணை ஒன்று வந்ததுண்டோ சொல்லுங் கண்டதுண்டே**

அப்பு - அம்பு, நீர், அந்தகாரம் - இருள், பொறி - புள்ளி.

**இ-ள்: கார் அப்பு இணை விழி வல்லவைபால் அமர் கல்வளையான்** - கரிய அம்பினையொத்த இருகண்களையுடைய வல்லபையென்னுந்தேவி இடப்பாகத்தில் விருப்பத்தோடு இருக்கப்பெற்ற கல்வளைப் பெருமானும், **கார் அப்பு இணை என எங்கும் நின்றோன் வெற்பில்** - முகிலில் நீர்போல எங்கும் வியாபித்திருக்கின்றவருமாகிய விநாயகக்கடவுளின்மலையிலே, **காமர் அந்தகாரப் பிணையற்சுருள் வஞ்சிபோற் கன்னியீர்** - அழகிய இருளை நிகர்த்த மாலையை யணிந்த கூந்தலை யுடைய வஞ்சிக்கொம்பு போன்ற கன்னிமீர், **பொறி ஆகாரப்பிணை ஒன்று வந்ததுண்டோ** - புள்ளிவடிவினையுடைய மான் ஒன்று (இந்த மார்க்கமாக) வந்ததோ, **கண்டதுண்டே** - நீவிர் பார்த்ததுண்டோ, **சொல்லும்** - சொல்லுவீர் எ-று. இது கெடுதி வினாதல்.

**கல்வளைப்பெருமான் வெற்பிற் கன்னிமீர், ஒருபுள்ளிமான் இந்தமார்க்கமாக வந்தமையை நீவிர் கண்டதுண்டோ என வினாவியபடி.**

கண்டால முண்ட பெருமா னுதவிய கான்முளைபுன்
கண்டால மாந்தர்க் ககற்றாகு வாகனன் கல்வளையின்
கண்டால நேருங் கரத்தானைக் காணத் தொழப்புகழக்
கண்டாலங் கைத்தலம் பெற்றேனற் றேனென் கனதுயரே. (99)

**கண்டு ஆலம் உண்ட பெருமான் உதவிய கால்முளை புன் -**
**கண் தால மாந்தர்க்கு அகற்று ஆகுவாகனன் கல்வளையின்**
**கண் தாலம் நேரும் கரத்தானைக் காணத் தொழப் புகழக்**
**கண் தாலம் கைத்தலம் பெற்றேன் அற்றேன் என் கனதுயரே**

கால்முளை - மகன், தால - பூமி, புன்கண் -துன்பம், ஆகு - பெருச்சாளி, தாலம் - பனை, நாக்கு

இ-ள்: **கண்டு ஆலம் உண்டபெருமான் உதவிய கால்முளை** - (தேவர்கட்குத் துன்பஞ்செய்யவந்தமையைக்) கண்டு ஆலாகலம் என்னும் அந்நஞ்சை உண்டருளிய பரமசிவன் பெற்ற பிள்ளையாரும், **தாலமாந்தர்க்குப் புன்கண் அகற்று ஆகவாகனன்** - இப்பூமியில் (தம்மை வழிபடும்) மனிதருக்கு நேரும் விக்கினங்களை நீக்கியருளும் பெருச்சாளிவாகனக் கடவுளும், **கல்வளையின் கண் தாலம் நேரும் கரத்தானை** - கல்வளைத் தலத்திற் கோயில் கொண்ட பனையைப்போன்ற தும்பிக்கையினையுடையவருமாகிய கணேசமூர்த்தியை, **காணக் கண்** - தரிசிக்கக் கண்களையும், **தொழக்கைத்தலம்** - கும்பிடக் கைகளையும், **புகழத்தாலம்** - (வாயார) வாழ்த்த நாவினையும், **பெற்றேன்** - பெற்றுக்கொண்டேன்; **என் கனதுயர் அற்றேன்** - அதனால் என்னுடைய மிக்க துன்பம் ஒழிந்தேன் எ-று. கான்முளை, இருபெயரொட்டு, தலம், தாலமென நீண்டது.

**கல்வளைப்பதியிற் கோயில்கொண்ட கணேசமூர்த்தியைத் தரிசிக்கக் கண்களையும் கும்பிடக் கரங்களையும் வாழ்த்த நாவையும் பெற்றுள்ளேனாதலின் என்துயர் நீங்க எக்குறைவுமின்றி வாழலானேனென்றபடி.**

கனகந் தரநிற மால்சாபந் தீர்த்திடுங் காரணவென்
கனகந் தரநெஞ்சிற் றோன்றுபுன் மாலைகைக் கொள்வைசெங்கோ
கனகந் தருமலர் கோவைசெய் நாருங் கவினுமன்றோ
கனகந் தரள மணிமாடக் கல்வளைக் கற்பகமே. (100)

**கன கந்தர நிறமால் சாபந் தீர்த்திடும் காரண என்**
**கல்நகம்தர நெஞ்சில் தோன்றும் புல்மாலை கைக்கொள்வை செங்கோ**
**-கனகம் தரும் மலர்க் கோவை செய் நாரும் கவினும் அன்றோ**
**கனகம் தரளம் அணி மாடக் கல்வளைக் கற்பகமே.**

கந்தரம் - கருமை, கல்நகம்தர - கல்மனம் நெகிழ, புல்மாலை - புன்மையாகிய பாமாலை, செங்கோகனகம் - செந்தாமரை

**இ-ள்: கன கந்தர நிறமால் சாபந் தீர்த்திடும் காரண** - மேகம்போலும் கரிய நிறத்தையுடைய நாராயணமூர்த்திக்கு நேர்ந்த சாபத்தை நீக்கியருளிய சர்வகாரணரே, **கனகம் தரளம் அணி மாடக் கல்வளைக் கற்பகமே** - பொன்னும் முத்தும் அலங்காரத்தைச் செய்கின்ற மாளிகை கொண்ட கல்வளைத் தலத்திற் கோயில் கொண்டருளிய கற்பகப் பிள்ளையாரே, **என் கல்நகம் தர நெஞ்சில் தோன்றும் புல்மாலை கைக்கொள்வை** - என்னுடைய கற்பாறை போன்ற (கடினமான) உள்ளத்திலிருந்து கிளர்ந்த புல்லிய இந்த (அந்தாதியாகிய) பாமாலையை ஏற்றருளல்வேண்டும். **செம்கோகனக்கந்தரும் மலர்கோவை செய் நாரும் கவினும் அன்றோ** - செவ்விய தாமரையிற் பூக்கும் மலரைத் தொடுக்கின்ற நாரும் அழகை யடையுமல்லவா எ-று.

திருமாலுக்குத் தேவியால் நேர்ந்த நீக்கமுடியாத சாபத்தை நீக்கியருளிய தேவரீருக்குத் தமியேனுடைய துன்பங்களை நீக்குதல் ஒருபொருளல்ல வென்பதைக் குறிப்பாலுணர்த்துவார். "கன கந்தர நிறமால் சாபந்தீர்த்திடுங் காரண" என்றார். கல்நகந்தர நெஞ்சில் - இரக்கம் முதலாம் நல்லியல்புகளில்லாத உள்ளத்தில் "நெஞ்சக அடுக்கலில்" என்றார் கச்சியப்பசிவாசாரிய சுவாமிகளும்; பூவோடுகூடிய நார் கவினுறுதல் போல, தேவரீருடைய திருவருட் பிரவாகத்தைத் தொடர்ப்படுத்திப் பாடுதற்கு ஏதுவாயிருத்தலின் என் பாடலும் புன்மை நீங்கி நன்மையுறுமென்பது கருத்து. இச்செய்யுள் தாம் பாடிய இவ்வந்தாதியை அக்கல்வளைப்பெருமானுக்கு அர்ப்பணஞ் செய்தவாறாகும்.

**கல்வளைப்பெருமானே, தமியேன் தேவரீர்மீது பாடிய இவ்வந்தாதியைத் தேவரீர் திருச்செவி மடுத்தருளித் தமியேனுக்குக் கிருபாநோக்கஞ் செய்தல் வேண்டுமென நூலாசிரியர் அப்பெருமானை இரந்தபடி.**

**கல்வளையந்தாதி மூலமும் உரையும்**
**முற்றுப்பெற்றன.**

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
அழகாண்மை வல்லவ முதலி பாடிய
கல்வளை விநாயகர்

# திரு ஊஞ்சல்

## காப்பு

சீர்கொண்ட மதியிதழி சடையிற் சூடுஞ்
சிவபரனார் தந்தகண பதியுன் மீதில்
ஏர் கொண்ட தமிழிசையா லூஞ்சல் பத்து
மெழியேன்யான் பாடுதற்கே யின்பமாகப்
பேர்கொண்ட வபிராமி சுதனாஞ் சித்ரப்
பேழைவயிற் றைங்கரத்தே ரம்ப னான
கார்கொண்ட கயமுகக்கல் வளைவாழ் ஞானக்
கற்பகத்தின் பொற்பாதங் காப்ப தாமே.

## திருவூஞ்சல்

மேருகிரி பொதியகிரி தூண தாக
விளங்கியவே தண்டகிரி விட்ட மாக
ஏருலவு சதுர்வேதங் கயிற தாக
இத்தரையே இனியதொரு பலகையாகச்
சீரணவு மெழுமுனிவர் வடந்தொட் டாட்டத்
திருமகளுங் கலைமகளும் புகழ்பா ராட்ட
காரணவுங் கோபுரக்கல் வளைவாழ் ஞானக்
கற்பகமே யற்புதமா யாடீரூஞ்சல்

வனமருகு மிந்திரன்வெண் கவிகை தாங்க
வாயுதே வன்கரத்திற் கவரி யோங்கத்
தனமருவு மிருநிதிக்கோ னடைப்பை வாங்கச்
சலபதிபொற் களாசிகொண்டு தருக்கின்
இனமருவு ஞானியர்பே ரின்பம் தேங்க(வீங்க)
இசைநிறையு முரசுமுதலியங்க ளோங்கக்
கனமருவு மதில்சூழ்கல் வளைவாழ் ஞானக்
கற்பகமே யற்புதமா யாடீ ரூஞ்சல்

சீரேறு மலரயன்கைத் தாளம் போட
திருமால்மத் தளவோசை செறிந்து நீட
ஏரேறு கந்தருவர் சுருதி கூட
இதமே றுந் தும்புருநா ரதர்பண் பாட
வாரேறு முலையரம்பை மாத ராட
மயிலேறு மறுமுகவன் மகிழ்ந்து நாடக்
காரேறு கயமுகக்கல் வளைவாழ் ஞானக்
கற்பகமே யற்புதமா யாடீ ரூஞ்சல்

ஊனமிலா வியக்கர்தொழு துவகை யார
உளமுருகிவிஞ்சையர்கள் கண்ணீர் சோரத்
தானவரெல் லோருமருந் தவத்தைச் சாரச்
சந்திரசூ ரியரடைந்து சரணஞ் சேர
வானுலவுங் குரவர்மறை யுணர்விற் கூர
மகிமையுறு சிவசமய மெவருந் தேர
கானுலவு பொழில்சூழ்கல் வளைவாழ் ஞானக்
கற்பகமே யற்புதமா யாடீ ரூஞ்சல்

புலனிறையும் பூசகர்பூ சித்துத் தாழப்
பொறைநிறையு மடியவர்கள் பரிவினாழத்
தொலைவரிய பூதகண நாதர்சூழத்
தொண்டர்குழாந் தொழுதுமல விருளைப் போக்க
வலனுயர்வேல் விழிவலவை மருங்கில் வாழ
வானவரா னேர்பொழியு மலர்கள் வீழக்
கலையறியும் புதருறைகல் வளைவாழ் ஞானக்
கற்பகமே யற்புதமா யாடீ ரூஞ்சல்

பன்னுமரு மறையவரா சார மேறப்
பாராளு மரசர்மநு நீதி தேற
மன்னுநிதி தனையீட்டி வசியர் வீற
மகிதலத்தே ருழவர்களெல் வளத்தின்மீறத்
துன்னுதொழி லாளரெலாந் துயர மாறத்
துகளறுதொன் முனிவர்க ளாசி கூறக்
கன்னல்கமு கெனவளர்கல் வளைவாழ் ஞானக்
கற்பகமே யற்புதமா யாடீ ரூஞ்சல்

மங்கையுமை கண்குளிர வளரு நேச
மயூரேச மங்களஞ்சேர் வரவி லாச
பைங்கணர வம்பூண விக்ந ராசா
பாலச்சந்த்ர மூலபல பாச நாச
எங்களுயிர்க் குயிராகி யிருக்குந் தேச
எவரெவர்க்கு மீசகயி லாச வாச
கங்கைதரு கதிமுகக்கல் வளைவாழ் ஞானக்
கற்பகமே யற்புதமா யாடீ ரூஞ்சல்

செஞ்சடையி லணிந்தவொரு கங்கை யாடத்
திருவிதழி மலைசங்கக் குழையோ டாட
விஞ்சுருசெங் கரமிளிரும் படைக ளாட
விசையமுறு மூஷிகவா கனமு மாட
மஞ்சுயரு துதிக்கையொரு மருப்பு மாட
வங்கி வளர் சமரகன் னங்க ளாட
சஞ்சமலர் தடஞ்சூழ்கல் வளைவாழ் ஞானக்
கற்பகமே யற்புதமா யாடீ ரூஞ்சல்

மதிமலியுஞ் சடாதரரே யாடீ ரூஞ்சல்
வளமலியுந் தராதரரே யாடீ ரூஞ்சல்
துதிமலியுங் கணேசுரரே யாடீ ரூஞ்சல்
சொல்லரிய குணேசுரரே யாடீ ரூஞ்சல்
விதிமலியு மகோதரரே யாடீ ரூஞ்சல்
விறற்குமர சகோதரரே யாடீ ரூஞ்சல்
கதிமலியுங் காசிபகல் வளைவான் ஞானக்
கற்பகமே யற்புதமா யாடீ ரூஞ்சல்

சீர்வாழி சிவசமயம் வாழி வாழி
திறவரசும் விப்பிரரு மாவும் வாழி
ஏர்வாழி கவிவாணர் வாழி வாழி
யிணங்கிய தொண்டர்க ளென்றும் வாழி
ஊர்வாழி யழகாண்மை வல்லவன் சொல்
உசிதமுறு தமிழுஞ்ச லுலகில் வாழி
கார்வாழி சண்டிருப்பாய் வாழி வாழி
கல்வளைவாழ் கற்பகமும் வாழி தானே.

திருச்சிற்றம்பலம்

துர்கா அச்சகம் கொம்பியூட்டர் ஓவ் (f)செற் பிறின்ட்
138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (நாவலர் பாடசாலை முன்பாக) T. P. 2881



1995 இல் வெளிவீதியில் அமர்ந்திருக்கும்
கல்வளைப் பிள்ளையார்

K. செல்லையா

செயலாளர்

கலைவளை பிள்ளையார் கோயில்

சண்டிலிப்பாய்

021 225 5286

30-06-1995

0778019106



இத்திருத்தேர் திரு.சபாபதி பொன்னம்பலம் அவர்களால் 1985ம் ஆண்டு அமைக்கப்பெற்று பிள்ளையாரின் உபயமாக்கப்பெற்றது